

பல்சுவை
நாவல்
விலை
ரூ.50/
ஸ்பெஷல்
புத்தம்புதிய மெகா நாவல்
கங்கை கொண்ட சோழன் 2
பாலகுமாரன்

## பாலகுமாரன்



# கங்கை கொண்ட சோழன்–2



# 11

"கர்ப்பம் கலைந்ததா, வீரமாதேவிக்கா. அப்படி ஒரு விஷயம் சொல்லப்படவே இல்லையே. அப்படி ஒரு விஷயம் உடம்பில் இருப்பதாய் அவள் வெளிக்காட்டவே இல்லையே. இவ்விஷயத்தை வேறு யாரிடமாவது சொல்லியிருந்தாளா" அவசரமாக இராஜேந்திர சோழர் வீரமாதேவியின் அறையை நோக்கி நடந்தார்.

அந்த அரண்மனையிலுள்ள மிகப்பெரிய கூடம் ஒன்று பல அறைகளாக தடுக்கப்பட்டிருந்தது. மிக உயரமான மேல் தளம் கொண்ட அந்த கூடத்திற்கு பல்வேறு இடத்தில் வெப்பக்காற்று உள்ளே போவதற்கான வட்ட சாளரங்கள் இருந்தன. அந்த வட்ட சாளரங்கள் வழியாக வெளிச்சம் வந்தது. அது தவிர ஒவ்வொரு அறைக்கும் மிகப்பெரிய கம்பி சாளரங்கள் இருந்தன.

அறைக்குள் பெரிய கட்டிலும் உட்காருவதற்குண்டான மர நாற்காலிகளும், உணவுப் பண்டங்களை வைப்பதற்குண்டான உயர்ந்த பீடமும், துணிமணிகளை அடுக்கி வைப்பதற்குண்டான மூடிபோட்ட மர கூண்டுகளும் இருந்தன. குடிநீர் பானைகள் இருந்தன. ஒவ்வோர் அறையிலும் கதவு திறந்தால் வெளிப்பக்க கழிவறைகள் இருந்தன.

இராஜேந்திர சோழர் வீரமாதேவியை நோக்கி போகும் போது அதிகாரிகளில் சிலர் பரபரப்பாக துணிகளோடு வெளியே வந்தார்கள். அந்த துணி முழுவதும் இரத்தம் இருந்தது. இராஜேந்திர சோழர் அதிர்ந்து போனார். கிட்டத்தட்ட கையை வெட்டினால் என்ன இரத்தம் இருக்குமோ அந்த இரத்தம் துணிகளில் இருந்தது.

"என்ன இது?" அவர் வாங்க முற்பட அதிகாரிச்சிகள் அவர் தொடவிடாமல் பின்னே நகர்ந்து கொண்டார்கள்.

"யாருக்கு இவ்வளவு இரத்தம், வீரமாதேவிக்கா" அவர் உள்ளே போக, அவருடைய முக்கியமான மனைவியான முக்கோகிழானடி வேண்டாம் என்று தடுத்து விட்டார்.



"ஏன்? நான் உள்ளே போனால் என்ன?"

"இப்பொழுது நீங்கள் வீரமாதேவியை பார்க்கக் கூடாது"

"ஏன் பார்த்தால் என்ன?" அவர் கொஞ்சம் கோபத்தோடு கேட்டார்.

இப்பொழுது நீங்கள் வீரமாதேவியை பார்த்தால் பிறகு உங்களுக்கு அவளை பார்க்கவே தோன்றாது. வீரமாதேவிக்கு இந்த நிலையில் நீங்கள் அவளை பார்ப்பது சிறிது கூட விருப்பம் இருக்காது"

"ஒருவேளை இது அவளுக்கே தெரியவில்லையோ"

"இல்லை, அவளுக்கு தெரிந்திருக்கிறது"

"எதை வைத்து சொல்கிறாய்"

"பச்சை மாங்காய் துண்டுகள் நறுக்கி உப்பிட்டு வைத்திருக்கிறாள். அடிக்கடி உண்கிறாள். தினமும் விடியற் காலையில் மூன்று, நான்கு துண்டுகள் மென்று மென்று தின்கிறாளாம். இதற்கு என்ன அர்த்தம். வாய்க்கு அவ்வளவு புளிப்பு தேவைப்படுகிறது. வயிற்றில் குழந்தை உண்டாகும் பொழுது ஏற்படும் இரசாயன மாற்றம் அது. குமட்டல் வரும். அந்த குமட்டலை நீக்கவும் இந்த புளிப்பு உதவி அவசியம்"

"எனக்கு இந்த விஷயங்களை எல்லாம் புரிந்து கொள்ளவே முடியவில்லை. எதற்காக இரகசியமாக, வீரமாதேவி இந்த விஷயத்தை வைத்துக் கொள்ள வேண்டும்"

"பிற்பாடு சொல்லலாம் என்று நினைத்திருக்கலாம்"

"அப்படி இருக்கிறவள் எதற்காக கீழைச் சாளுக்கியம் போக வேண்டும்"

"நீங்கள் கட்டளை இட்டதால் போயிருக்கலாம்"

"இப்படி இருக்கிறாள் என்று தெரிந்தால் நான் கட்டளை இடுவேனா"

"வேறு யாரும் அந்த வேலையில் ஈடுபட்டு தவறாகச் செய்து அதனால் உங்களுக்கு அவமானம் வரக்கூடாது என்ற எண்ணமாக இருக்கலாம்".

"ஆக சோழ தேசத்தில் ஒரு வேலை செய்வதற்கு வீரமாதேவியை விட்டால் வேறு ஆளே இல்லை. அப்படித்தானே. இது அதிசப்பிரசங்கித் தனமாக இல்லை. கர்வத்திறுடைய உச்ச கட்டமல்லவா இது. போரில் ஈடுபட தெரிந்து விட்டது என்றால் அதை எந்நேரமும் பிரகடனப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டுமா. என்னிடம் சொல்லக்

கூடாதா. நான் அருண்மொழியைத் தான் அனுப்ப வேண்டும் என்று நினைத்திருந்தேன். இவள் தான் உள்ளே புகுந்து நானே போகிறேன் என்று சொன்னாள். அதற்கு ஆயிரம் காரணங்கள் வேறு கற்பித்தாள். இப்பொழுது இந்த அவஸ்தை.

"வலி இருக்குமா?"

"இது என்ன கேள்வி"

"அதிகம் வலி இருக்குமா"

"போதும். நீங்கள் தயவுசெய்து போய் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்"

"எனக்கு ஏது ஓய்வு. ஓய்வு என்றால் மல்லாக்க படுத்துக் கொள்வதா. இல்லை. ஓய்வு என்றால் உள்ளுக்குள்ளே கொதிக்கின்ற சிந்தனை இல்லாதிருத்தல், எப்போது நான் அரச பதவியை ஏற்றேனோ அன்றிலிருந்து இன்றுவரை கொதிக்கின்ற பிரச்சனைகள் தான் என்னைச் சுற்றி இருக்கின்றனவே தவிர யாராலும், எவராலும் நான் நிம்மதியாக இல்லை. இருக்க முடியவில்லை.

எனக்கு தங்கை ஒருத்தி, பிசாசாக வந்து வாய்த்திருக்கிறாள். முட்டாளாக ஒருவன் மாப்பிள்ளையாக மருமகன் இருக்கிறான். நண்பன் என்று சொல்லி என்னை ஏமாற்றுகின்ற ஸ்ரீ விஜயத்து மன்னன் இருக்கிறான். புத்தபிட்க என்ற பெயரில் நாகையில் வந்து உளவாளிகளாக செயல்படுகின்ற ஒற்றர்கள் இருக்கிறார்கள். எல்லா விதங்களிலும் ஒரு அரசன் ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்க, வீட்டுக்குள்ளும் அவன் ஏமாற்றப்படுகிறான் என்றால் இதைவிடப் பெரிய வேதனை ஒரு மனிதனுக்கு என்ன இருக்க முடியும்.

என்னுடைய மனைவியே என்னிடம் விஷயங்களை மறைக்கிறாள் என்றால் நான் யாரிடம் போய் அழுவது. வீரமாதேவியை அடிக்க வேண்டும் போல் இருக்கிறது"

"இன்று ஒருநாள் அமைதியாக இருங்கள். நாளை சரியாகி விடும். கருவிலுள்ள மொத்த திசுக்களும் வெளியே வந்து விட்டால் வயிறு சுத்தமாகி விடும். கருப்பை சுத்தமாகி விட்டால் நன்கு தூங்க ஆரம்பித்து விடுவாள். பிறகு போஷாக்கான உணவுகளை கொடுத்து, நல்ல மருந்துகள் கொடுத்து சீர் செய்து விடலாம்"

"இங்கு வைத்தியர் வேண்டுமா?"

"அதிகாரிச்சிகள் பலபேருக்கு இந்த வைத்தியம் தெரியும். குந்தவை அத்தைக்கு நான் செய்தி அனுப்பி இருக்கிறேன். அவர் தக்க வைத்தியரை அனுப்புவார்.

வைத்தியர் வருவதற்குள் இந்த இடத்தையும், அவளையும் சுத்தப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் வேகமாக செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்பொழுது உள்ளே வரவே வராதீர்கள். பரவை என்ன நிற்கிறாய். கூட்டிக் கொண்டு போ" முக்கோகிழானடி பல் கடித்து கோபித்துக் கொள்ள, பரவை அவர் புறுத்தை பிடித்து இழுத்தாள். அவருக்கு பரவை மீது கோபம் வந்தது.

"ஒரு நாள் நீ அடிவாங்கப் போகிறாய். யார் மீதோ இருக்கின்ற வெறுப்பை உன்மீது காட்டப்போகிறேன். என்னை உன் வழிக்கு இழுத்துக் கொண்டு போய் விடலாம் என்று ஒரு பெரிய கர்வம் உன்னிடம் இருக்கிறது. அதை என்னிடம் செலுத்தாதே. எனக்குப் பிடிக்காது"

"நீங்கள் அடிப்பதற்கெல்லாம் பயந்துவிட மாட்டேன். உங்களுக்கு எங்கள் மீது பிரியம் மிக அதிகம். மிக மிக அதிகம். அதுதான் கோபமாக வருகிறது. உங்கள் கொஞ்சல் எவ்வளவு வேகமாக இருக்குமோ அதே போல உங்கள் கோபமும் வேகமாக இருக்கிறது. நீங்கள் எங்களை மட்டும் இப்படி நேசிக்கவில்லை. இந்த மொத்த சோழ தேசத்தையும் நேசிக்கிறீர்கள். உங்கள் நேசிப்பு முரட்டுத்தனமானது. அதை புரிந்தவர்கள் பாக்யசாலிகள். நான் மிகப் பெரிய பாக்யசாலி. எனக்குத் தெரியும். என்னைவிட வீரமாதேவி மிகப்பெரிய பாக்யசாலி. அவருக்கும் புரியும். எனவே இப்போது வாருங்கள்"

"என்ன பாக்யசாலி என்கிறாய். இது மிகப்பெரிய தொந்தரவை ஏற்படுத்தாதா?"

"ஒரு தொந்தரவும் ஏற்படுத்தாது. மூன்று மாதத்தில் முற்றிலும் குணமாகி விடுவார்கள். இப்பொழுது தேவை முரட்டுத்தனமல்ல. கோபமல்ல. ஆறுதலான வார்த்தை"

"அதற்கும் நான் விடமாட்டேன் என்று சொல்கிறீர்களே"

"இப்போது அந்த வார்த்தையும் சொல்ல முடியாது. அவர்கள் மொத்தமும் சுத்தப்படுத்தப்பட்ட பிறகு, அவர்கள் ஒரு முறை தூங்கி எழுந்த பிறகு, அவர்கள் தெளிவான பிறகு நீங்கள் அருகே உட்கார்ந்து தலையை தடவி ஏன் இப்படி செய்தாய் கண்ணே என்று சொன்னால் போதும். உங்களை கட்டிக் கொண்டு அழத் துவங்கி விடுவாள். என்ன சொல்ல வேண்டும், எப்படி சொல்ல வேண்டும் என்று நான் சொல்லித் தருகிறேன்"

"சகிக்க முடியாதபடி திமிர். எனக்கு நீ சொல்லித் தருகிறாயா?"

"ஆமாம். எல்லா இடங்களிலும் உங்கள் முடிவே இறுதி முடிவாக இருக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். சில இடங்களில் உங்களுக்கு எதுவும் தெரியாது. சில விஷயங்களை உங்களால் புரிந்து கொள்ள முடியாது"

"இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை"

"சொல்ல வேண்டும் என்று வந்திருப்பார்கள். சொல்வதற்கு முன்பு பிரச்சனைகள் பெரிதாக வந்திருக்கும். சொல்வதை பின்னால் சொல்லிக் கொள்ளலாம். பிரச்சனையை தீர்த்து விடலாம் என்று துணிந்திருப்பார்கள்"

"இந்த நேரத்தில் குதிரைப் பயணம் கூடாது என்பது அவளுக்கு தெரியாதா"

"குதிரைப் பயணம், யானைப் பயணம், பல்லக்கு பயணம் என்று பல தூரம். பலவிதமான பயணம் மேற்கொண்டு ஒழுங்காக திரும்பி வந்து குழந்தை பெற்றவர்கள் பலர் உண்டு. அப்படி அவர்களும் நினைத்திருக்கலாம். இது விதி, தலை எழுத்து. அவர்களுக்கு தங்கவில்லை. நகர்ந்து விட்டது"

"உன் பதில் எனக்கு சமாதானம் ஆகவில்லை"

"நான் சமாதானப்படுத்த சொல்லவில்லை. நான் சொன்னது மிக அழகான வார்த்தை. இது விதி. தலையெழுத்து. மௌனமாக ஏற்றுக் கொள்ளுங்கள். பிரியமாக நடந்து கொள்ளுங்கள். கர்ப்பம் கலைய வேண்டுமென்றா ஆசைப் பட்டிருப்பார்கள். யோசித்துப் பாருங்கள். தன் கர்ப்பத்தை தானே கலைத்துக் கொண்டிருப்பார்களா. அப்படி இல்லையே.

உங்களுக்கு உதவி செய்வதில் பரபரப்பாக இருந்தார்கள். உங்கள் துயரை துடைப்பதில் முக்கியமாக இருந்தார்கள். உங்களுக்கு வரும் பிரச்சனைகளை தான் முன் நின்று தீர்க்க வேண்டும் என்று ஆசைப் பட்டார்கள். அதில் இந்த கோளாறு வந்து விட்டது.

அதீத அன்பு. இதுதான் அவர்களிடம் இருக்கிறது. உங்களிடமும் அதுதான் இருக்கிறது. இந்த அதீதமான அன்பு கோபமாக வெளியே வருகிறது. நீங்கள் கொஞ்சுவதும் வேகம். கோபப்படுவதும் வேகம். வீரமாதேவியை நீங்கள் மிகவும் நேசிக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். அதனால் தான் கோபப்படுகிறீர்கள்.

இன்று முழுவதும் நீங்கள் அமைதியாக இருங்கள். நாளை காலை கட்டிக் கொண்டு கொஞ்சலாம். அவர்களும் அதற்கு தயார் ஆகி விடுவார்கள். இப்பொழுது வேண்டாம்"



"இப்பொழுது என்னதான் செய்வது?"

"ஒரு விஷயம் சொல்வேன். செய்வீர்களா?"

"சொல்லுங்கள்"

"ஏதேனும் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்"

"பிரார்த்தனை என்றால்"

"தஞ்சை பிரகதீஸ்வரர் கோவிலுக்குள்ளே தடாலடியாக நுழைந்தீர்கள் அல்லவா. கருவறையை சுற்றி வந்தீர்கள் அல்லவா"

"ஆமாம்"

"அது தவறோ என்று தோன்றுகிறது"

"நான் அரசன். அரசன் புக முடியாத இடம் உண்டா"

"ஒரு கருவறைக்குள் நுழைவதற்கு அரசனுக்கும் உரிமை இல்லை என்றுதான் ஆகமவிதிகள் சொல்கின்றன. நீங்கள் நுழைந்தது தவறோ என்று தோன்றுகிறது. அதன் விளைவோ இது என்று தோன்றுகிறது"

இராஜேந்திரர் திடுக்கிட்டு பரவை நாச்சியாரைப் பார்த்தார்.

"நான் சொல்வதற்கு கோபித்துக் கொள்ளாதீர்கள். அப்படி எல்லாம் இல்லை என்று முரட்டுத்தனமாக என்னிடம் விவாதம் செய்யாதீர்கள்"

"என்னோடு வந்தியத் தேவரும், அருண்மொழிப் பட்டனும் வந்தார்களே, அவர்களுக்கு ஒன்றும் நேரவில்லையே"

"நேரவேண்டும் என்பது நம்முடைய பிரார்த்தனை அல்ல. அவர்கள் அவர்களாக நுழையவில்லை. நீங்கள் உத்தரவிட்டீர்கள். நுழைந்தார்கள். இதற்குக் காரணம் நீங்களே. உங்களுக்கு அந்த உரிமை இல்லை. நீங்கள் உரிமை மீறியதால் உங்களுக்கு ஒரு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பது என்னுடைய எண்ணம். நீங்கள் ஏற்றாலும் சரி, ஏற்காமல் போனாலும் சரி, இந்த நிந்தனைக்கு பதிலாக ஏதேனும் பிரார்த்தனை செய்து கொள்ளுங்கள்"

"என்ன பிரார்த்தனை?"

"அதை நீங்களே முடிவு செய்யுங்களேன். எல்லாவற்றிற்கும் நான் ஏன் பதில் சொல்ல வேண்டும்"

"பரவை, மிகுந்த சாமர்த்தியத்தோடு பேசுகிறாய், நான் பலவீனமாக இருக்கும் போது காட்டுத்தனமாக தாக்குகிறாய்"

"ஒரு போதும் இல்லை. நீங்கள் இன்னும் விவேகமாக இருக்க வேண்டும் என்பதற்காக, இந்த இடத்தில் அதிகம் பேசக்கூடாது

என்பதற்காக, எங்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதற்காக நான் சில விஷயங்களை சொல்கிறேன். ஆணுக்கு எல்லாம் புரியாது. பெண்ணின் அந்தனை வேதனையும் புரியாது. பெண்ணை முற்றிலும் புரிந்து கொண்ட ஆண் மிக மிக குறைவு"

"ஆணினுடைய பாதுகாப்பில் தான் பெண் உயிர் வாழ்கிறாள்"

"அப்படி ஒரு கற்பனை உண்டு. யாருடைய பாதுகாப்பிலும் யாரும் உயிர் வாழவில்லை. கடவுளுடைய பாதுகாப்பில் தான் அத்தனை பேரும் உயிர் வாழ்கிறோம்.

ஆணுடைய வடிவு பெண்ணை அடங்கி இருக்க தூண்டுகிறது. ஆணினுடைய அடக்கு முறை பெண்களை பின்னடையச் செய்கிறது. இப்பொழுது உங்களுடைய மனைவி வீரமா தேவியாருக்கு பிரச்சனை. அந்த பிரச்சனை தீர இறைவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள். மாமன்னர் இராஜேந்திரர் மிகுந்த வலுவுடையவர் தான். ஆனால் உலகத்தை மாற்றிவிடக் கூடியவர் அல்ல. வந்த விதியை திருப்பி விடக் கூடியவர் அல்ல. அவருக்கும் எல்லை உண்டு. அவருக்கும் சில இடங்களில் திகைத்துப் போய் நிற்பது உண்டு.

இப்போது நீங்கள் திகைத்து நிற்கிறீர்கள். என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கிறீர்கள். இறைவனிடம் சரணடையுங்கள். இறைவனை நோக்கி பிரார்த்தனை செய்ய வேண்டிய நேரத்தில் வெறும் கோபத்தை, கூச்சலை வெளிக் காட்டாதீர்கள்"

"புரிகிறது பரவை" நீண்ட பெருமூச்சோடு இராஜேந்திரர் பதில் சொல்ல, பரவை அவரை தனியாக உட்கார வைத்தாள்.

அரண்மனை வைத்தியர் வந்து கும்பிட்டு நிற்க இராஜேந்திர சோழர் எழுந்து கேட்ட போது, "நான் பார்த்துக் கொள்கிறேன். சிறிதளவும் கவலைப்படாதீர்கள்" என்று சொல்லிவிட்டு, வீரமாதேவியின் அறையை நோக்கி விரைந்தார்.

குந்தவை தேவியார் காவல் தாண்டி வீட்டிற்குள் நுழைவது தெரிந்தது.

"என்ன இராஜேந்திரா, வீரமாதேவிக்கு சிக்கலாமே" என்று சொல்ல, அவர் மௌனமாக உட்கார்ந்திருந்தார்.

"நான் பார்த்து விட்டு வருகிறேன்" என்று அவருடைய உத்தரவுக்கு காத்திராமல் குந்தவை தேவியார் வேகமாக வீரமாதேவியின் அறைக்குள் நுழைந்தார்.

இராஜேந்திரர் மறுபடியும் தனியாக விடப்பட்டார். அவருக்கு



எதிரே பழங்கள் வைக்கப்பட்டன. சூடான உணவும், கதம்பக் கூட்டும் வைக்கப்பட்டன. அதை பிரட்டி எடுத்து அவருக்கு பரவை ஊட்ட முயன்ற போது வேண்டாம் என்று தடுத்தார். தானே பிசைந்து வேகமாக சாப்பிட்டார். நீர் குடித்தார். தட்டில் கை கழுவிக் கொண்டார். வாய் துடைத்துக் கொண்டார். மறுபடியும் கிழக்கு நோக்கி அமைதியாக உட்கார்ந்து கொண்டார்.

சட்டென்று உள்ளுக்குள்ளே ஒரு பாடல் தோன்றியது. உள்ளே எண்ணங்கள் ஏதும் இல்லாத போது சட்டென்று ஏதோ ஒரு இடம் தெளிவாகி மலர்ந்தது. அந்த மலர்ந்த இடத்திலிருந்து சில வரிகள் ஞாபகம் வந்தன. அந்த வரிகள் உள்ளுக்குள் பாட்டாக பொங்கின.

"மறையுடையாய் தோலுடையாய் வார்ச்சடை மேல் வளரும்;
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்று உனைப் பேசி னல்லால்;
குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த;
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.
நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக்கருத;
உன்னடியார் உயிரை வவ்வேல் என்றுஅடர் கூற்று தைத்த;
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர் சுமக்கும்;
நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே.

அவர் பாட முக்கோனகிழானடி, பஞ்சவன் மாதேவியும், பரவை நாச்சியாரும் தொலைவிலிருந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மெல்ல அவர் கண்ணில் நீர் திரண்டது.

பிரகதீஸ்வரா, அந்து மீறி உன் சன்னதியில் நுழைந்தது தவறு. நானும், என் மனைவியும் பரவை நாச்சியாரும் வீரமாதேவியின் நலன் பொருட்டு தோளில் நீர் சுமந்து, கைகளில் பூ ஏந்தி உன்னை நோக்கி வருகிறோம். கோவில் வாசலிலிருந்து நான், என் மனைவி நீர் சுமந்து வருகிறோம். என் அன்புக்கினிய மனைவி வீரமாதேவியின் உடல் நலத்திற்கு எந்த கேடும் வராமல் காப்பாயாக, மறுபடியும் அவள் என்னோடு பயணம் செய்யும்படி உற்சாகமாக மாற்றுவாயாக என்று வேண்டினார்.

கண் திறந்தார். சரக்கென்று கண்களிலிருந்து நீர் வடிந்தது. அவர்கள் அருகே ஓடி வந்தார்கள். சுற்றி நின்றார்கள். நெஞ்சு தடவினார்கள். அணைத்துக் கொண்டார்கள். முகத்தை தங்கள் மார்பில் பதித்துக் கொண்டார்கள். முத்தமழை பொழிந்தார்கள்.

ஆனால் ஸ்ரீ இராஜேந்திரர் ஒரு துறவியைப் போல அங்கு

அமர்ந்திருந்தார். அவர் நினைவு முழுவதும் வீரமாதேவியிடம் இருந்தது.

"மிக அற்புதமான பாட்டு, மிக அற்புதமான பாட்டு. இந்த பாட்டுக்கு நான் நடனமாடி இருக்கிறேன். 'பூவொடு நீர் சுமக்கும்' என்ன அற்புதமான வரிகள், 'பொன்னடியே பரவி நாளும் நீர் சுமக்கும் நின்னடியார் இடர்களையாய்' வீரமா தேவியார் நீரும், பூவும் சுமந்தாரா தெரியவில்லை. ஆனால் அவருக்காக நாம் சுமப்போம். நாம் நான்கு பேரும் பூவும், நீரும் எடுத்துக் கொண்டு பிரகதீஸ்வரர் கோவிலுக்கு போய் அவருக்கு அபிஷேகம் செய்வோம்"

"எந்த நீர்?"

"காவிரி தான். அரசலாறோ, குடமுருட்டியோ, அந்த இடத்திலிருந்து கூட நீர் எடுத்து வரலாம். அதுவும் காவிரி தானே. நமக்கு நீர் என்றால் காவிரி நீர் தானே இருக்கிறது" என்று முக்கோகிழானடி கேட்டாள்.

"ஏன்? ஒரு முறை கங்கை நீரையும் கூட நம் பிரகதீஸ்வரருக்கு அபிஷேகம் செய்யலாம். உள்ளே போய் சுற்றி வந்து அட்டகாசமாய் பேசி சிரித்து எழுந்தது தவறு தான்.

வீரமாதேவியாரை வைத்து சொல்லவில்லை. நான் என்னுடைய சமுத்ராத்திற்காக அங்கு அடி எடுத்து வைத்து விட்டேன். அதை நான் கங்கையில் நீர் ஊற்றி மெல்ல அந்த சம்பவத்தை துடைப்பேன்.

கங்கை வரை போய் நீர் கொண்டு வருவேன், பிரகதீஸ்வரா. உடன் இரு. உதவி செய். கை கூப்பினார். அவர்களும் கை கூப்பினார்கள்.

அந்த மூன்று பெண்மணிகளுக்கும் அவர்களுடைய கணவரை மிகவும் பிடித்திருந்தது. மெல்ல நகர்ந்து வீரமா தேவியாரிடம் போய் உலுக்கி எழுப்பி, அடியேய், உன் புருஷன் உனக்காக என்ன வேண்டியிருக்கிறான். தெரியுமா?" என்று சொன்னால் போதும். முகம் முழுவதும் குப்பென்று வியர்க்கும். கண்களில் நீர் பொங்கும். கண்ணீர் வழியும்.

புருஷன் இங்கே மனைவியை நினைத்துக் கொண்டு அழுகிறான். அங்கே மனைவி புருஷனை நினைத்துக் கொண்டு அழுவாள். பார்ப்பதற்கே சந்தோஷமாக இருக்கும் என்று மூவரும் பரபரத்தார்கள்.

வீரமாதேவி அறையை நோக்கி ஓடினார்கள்.

**வே**ங்கி தேசத்து அரண்மனையில் விமலாதித்தன் தூக்கம் வராமல் தவித்தான். மகனும், மனைவியும் தப்பித்து போய் விட்டார்கள் என்பது நிம்மதியாக இருந்தாலும் மிகப் பெரிய இழிவாக பேசப்பட்டது.

"இராஜேந்திரனே வந்தாரா, வந்திருக்க மாட்டார். யாராவது ஆளை தான் அனுப்பி இருப்பார்"

"தேர் ஏறி வந்தானா குதிரை ஏறி வந்தானா"

"எப்படி வந்தால் என்ன, இரவு படுக்கும் பொழுது பதினைந்து ஆண்களுக்கு நடுவே தானே படுக்க வேண்டும். மாத்தடி இருட்டில் இராஜேந்திரனுடைய தங்கை குந்தவை தேவியார் சுற்றி பதினைந்து வீரர்களுக்கு நடுவே படுத்துக் கொண்டிருப்பது கண்கொள்ளா காட்சி தான் என்று சொல்ல, விமலாதித்தன் அதட்டி மிரட்டினான்.

ஒரு பெண்ணின் கற்பை பற்றி சொல்லாதே. அவள் குரங்கு தான். ஆனால் அசிங்கம் பிடித்தவள் அல்ல. அசிங்கம் பிடித்த பெண்களெல்லாம் எங்கிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியும். என்னை பேச வைத்து விடாதீர்கள் என்று சீறலாகச் சொன்னார்.

சபை மௌனமாகியது.

ஆனால் நமட்டுச் சிரிப்பும், குசுகுசுப்பும் குறையவில்லை. அவை விமலாதித்தன் நெஞ்சை குடைந்தன.

எவ்வளவு மோசமான நேரம் இது, எத்தனை கடினமான நேரம் இது. எவ்வளவு சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும். இப்படி சட்டியை உடைத்தது போல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செய்கிற பெண்ணை வைத்துக் கொண்டு சொச்ச காலம் எப்படி வாழ்வது, ஒதுங்கி விடலாமா, வேண்டாம் என்று ஒதுங்கி விடலாமா.

ஆனால் இராஜநரேந்திரன் விவேகமுள்ளவன். தெளிவுடையவன். சிவ பக்தன். இராஜேந்திர சோழருடைய சாயல் அவனிடம் அதிகம் உண்டு.

விமலாதித்தன் எனக்கு அப்பா, இராஜேந்திர சோழர் எனக்கு தெய்வம் என்று பலமுறை அவன் கை கூப்பியிருக்கிறான். அவனுக்காக இந்த அசிங்கங்களை பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும்.

இந்தப் பக்கம் இருக்கின்ற விஷ்ணுவர்தன் என்கிற மகா மட்டமானவன். அந்தப்புரம் முழுவதும் துணியில்லாது சுற்றி வருகிறானாம். சேடி பெண்கள் மட்டுமல்லாது யாரைப் பார்த்தாலும் இறுக்க தழுவிக் கொள்கிறானாம். இப்படியே போனால் நோய் பிடித்து விடும் என்று வைத்தியர்கள் எச்சரித்தும் அதுபற்றி கேட்காமல் இருக்கின்றானாம்.

இப்பொழுதே கை, கால் நடுங்குகின்றன. கத்தி பிடித்து எதையும்

தாக்கத் தெரியவில்லை. மணல் மூட்டையை கயிற்றில் கட்டி வேகமா(க) விட்டால் தடுத்து நிறுத்தத் தெரியாது. கைகளால் திசை மாற்றாது திரும்பி நின்று பின் மண்டையில் அடி வாங்குகிறான்.

“இவ்வளவு வேகமாக விடுகிறாயே” என்று வீரனை கடிந்து கொள்கிறான்.

மேலை சாளுக்கிய அரசியோ அலங்கார பிரியை. எந்நேரமும் தலையை அவிழ்த்துக் கொண்டு தூபம் போடுவதும், உடம்புக்கு எண்ணெய் தடவிக் கொள்வதும், முகத்திற்கு பாலும், முட்டையும் தடவி கொண்டு பொழுதை கழிக்கிறாள். 'நாற்பது வயதிலும் இ(ப்படி) அழகாய் இருப்பாய் என்று நினைக்கிறாயா' என்று கேட்டால், 'நிச்சயம் இருப்பேன்' என்று சவால் விடுகிறாள். அதனால் தான் புருஷனுக்கு அருகே வருவதே இல்லையாம். அழகு தான் முக்கியமாம்.

[illegible] அமைவதற்கு ஒரு மனிதன் தனியாக வரம் வாங்கி வர வேண்டும். இராஜராஜர் வாங்கி வந்திருக்கிறார். வானவன்மாதேவி அற்புதமான மனைவி. பஞ்சவன் மாதேவி கொடி கட்டி பறந்தாள். இராஜராஜன் கொடியும் அவளால் பறந்தது.

என் இராஜேந்திர சோழனுக்கு என்ன குறை. அவனுக்கு வீரமாதேவி [illegible] எல்லாவற்றிலும் [illegible] உள்ளே நுழைந்த [illegible] தாங்கி வந்து விட்டாள். அழகுக்கு பரவை. வீரத்துக்கு வீரமாதேவி. கெட்டிக்காரத்தனத்துக்கு முக்கோகிலானடிகள், தாயைப் போல அன்பு செலுத்துவதற்கு பஞ்சவன் மாதேவி. இராஜேந்திர சோழன் கொடுத்து வைத்தவன்.

இதையெல்லாம் விட வியந்து போகிற ஒரு சிறப்பு வந்தியத் தேவர் தான். இராஜகம்பீரம் மிக்க குந்தவை பிராட்டி என்ற அந்த பெண்மணிக்கு புருஷனாக வர அவர் என்ன தவம் செய்திருக்க வேண்டும். அந்த அம்மையாருக்கு புருஷன் மேல் கொள்ளை பிரியம். வந்தியத் தேவருக்கோ குந்தவை பிராட்டி என்றால் பெரும் மதிப்பு. அரசவையில் அவர்கள் இரண்டு பேரும் நடந்து வரும் பொழுதே 'ஆஹா ஆஹா' என்று சபை ஆரவாரிக்கும். எங்கு போனாலும் தனியாகத் தெரிகிறார்கள்.

நான் இரண்டு பக்கமும் இரண்டு எருமைகளிடம் மாட்டிக் கொண்டு அல்லாடுகிறேன்”

“வரம் மட்டுமல்ல சாபமே வாங்கி வந்திருப்பேன் போலிருக்கிறது”

இந்நேரம் இராஜேந்திர சோழனிடம் போய் குந்தவை சேர்த்திருப்பாள். என்ன சொன்னாளோ, ஏது சொன்னாளோ, என்னைப்



பற்றி என்ன குறையெல்லாம் சொன்னாளோ, நல்லது சொன்னாளோ, கெட்டது சொன்னாளோ. அதனால் இராஜேந்திர சோழருக்கு ஒரு இரகசிய ஓலை அனுப்பி விட வேண்டும்”

சிறு விளக்கில் அவர் ஓலை எழுத ஆரம்பித்தார்.

'எனக்கு உன்னை எதிர்க்கின்ற திறனோ, திடமோ அறவே இல்லை. எதிர்க்க வேண்டும் என்ற எண்ணமும் இல்லை. உன் தங்கையோடு நான் குடித்தனம் செய்வது பேரவஸ்தை. அவளுடைய நடவடிக்கைகள் முற்றிலும் தவறானவை. பல்வேறு இடத்திலிருந்து செய்தி சேகரிக்க தெரிந்த உனக்கு அவள் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதை அறிந்து கொள்ள நேரமாகாது. ஆனால் இராஜ நரேந்திரன் உத்தமமான பையன், சீரான குணம். உன்னைப் போன்ற சாயல். உன் மீது தேவதா விசுவாசம். அவனுக்கு என்னை பிடிக்கும். ஆனால் நீதான் அவன் வணங்குகின்ற தெய்வம். எனக்காக இல்லாது போனாலும் அவனுக்காக வேங்கியை நோக்கி வா. நான் மறுபடியும் சொல்கிறேன். உனக்கு நான் எதிரியல்ல.

நீ வேங்கியை அழிக்க வேண்டியது அவசியம், ஒட்டர்களையும், மேலைச் சாளுக்கியரையும் அடித்து துரத்த வேண்டியது அவசியம். வேங்கியின் மக்கள் நல்லவர்கள். அவர்களுக்கு தீங்கு செய்து விட வேண்டாம். உன் வருகையை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்'

விமலாதித்தன் என்று கையெழுத்திட்டார். யோசனை செய்தார். வேறு ஒரு ஓலை எழுதினார். சுருட்டினார். ஒரு நம்பிக்கையான காவல் வீரனை அழைத்தார்.

“இவைகளை கொண்டு போய் இன்னாரிடம் கொடு” என்று காதோரம் சொன்னார். நிறைய காசு கொடுத்தார். அவன் வாங்கிக் கொண்டான்.

“எனக்கு குந்தவை தேவியார் ஓய்வு கொடுத்து விட்டார்கள். நான் சோழ தேசம் நோக்கி போகிறேன்” என்று பாடி காவலில் சொன்னான். பாடி காவலில் அவனை ஓரமாக உட்கார வைத்தார்கள். வேகமாக சோதனை இடப்பட்டான். அவன் இடுப்பிலிருந்து ஓலை உருவப்பட்டது. ஓலையை அவர்கள் விளக்கொளியில் படித்தார்கள். உள்ளுக்குள்ளே போய் அதிகாரிகளிடம் பேசினார்கள். வேகமாக வெளியே வந்தார்கள்.

“இந்தா, உன் ஓலையில் ஒரு செய்தியும் இல்லை. நலம். நலம் அறிய ஆவா என்று தான் எழுதப்பட்டிருக்கிறது. கொண்டு இராஜேந்திரனிடம் கொடு” என்று சொல்லி அவனிடம் வீசினார்கள்.

அவன் வாங்கி வணக்கம் செய்து விடை பெற்றான். மூன்றரை நாட்களில் தஞ்சையை அடைந்தான். மாமன்னர் இராஜேந்திரரை வணங்கினான். ஓலையை நீட்டினான். ஓலை படிக்கப்பட்டது.

இராஜேந்திரா, உன்னால் ஒன்றும் செய்ய முடியாது, நான் தான் இந்த இடத்தின் மன்னன். நான் தீர்மானிப்பது தான் இங்கு தீர்ப்பு. உன்னுடைய மருமகனான இராஜ நரேந்திரனுக்கு பட்டம் அளிக்க முடியாது. அதற்கு காரணம் உன் தங்கை, அவள் குரங்கு புத்தி. என்னுடைய இன்னொரு மகன் விஷ்ணுவர்தன் விஜயாதித்தனுக்கு நான் இளவரசு பட்டம் கட்டி விட்டேன். அவனையே நான் மன்னனாக தேர்ந்தெடுப்பேன். நீ படை எடுத்து வரக்கூடும். நான் தயாராக இருக்கிறேன். அவசியமெனில் நாம் யுத்த களத்தில் சந்திப்போம். உண்மையாகவே உனக்கு புத்தி இருந்தது எனில் நீ விலகி நில். இதற்குள் தலையிடாதே.

விமலாதித்த மாமல்லன் என்று எழுதி இருந்தது. அருள்மொழி படித்து விட்டு வந்தியத்தேவரிடம் நீட்டினார். வந்தியத்தேவர் அரையன் இராஜராஜனிடம் நீட்டினார். அரையன் இராஜராஜன் படித்து விட்டு ஓலையை அலட்சியமாக ஒரு வீரனின் கையில் போட்டார்.

"இது விமலாதித்தர் எழுதிய ஓலை அல்ல, அவருடைய கையெழுத்து அல்ல. அவர் அவருக்கென்று சில வார்த்தை பிரயோகங்களை வைத்திருக்கிறார். அது இங்கு இல்லை. மேலும் சிறு சொருக்கப்பட்ட அந்த குறிகளெல்லாம் தவறாக இருக்கின்றன"

"ஆமாம். இது விமலாதித்தர் ஓலை அல்ல. என்ன ஆயிற்று தம்பியே" இராஜேந்திரர் வினவினார்.

"என்னை பாதி காவலில் மடக்கி ஓலையை பிடுங்கி கொண்டார்கள், உள்ளே போய் அதிகாரிகளிடம் பேசினார்கள். வெளியில் வந்து இந்த ஓலையில் ஒன்றும் இல்லை, கொண்டு போய் இராஜேந்திரனிடம் கொடு. வெறும் நலம் நலமறிய அவா என்றுதான் இருக்கிறது என்று தூக்கிப் போட்டார்கள். வாங்கிக் கொண்டு வந்து விட்டேன்"

"இந்த ஓலை அவருடைய ஓலை அல்லவே"

"எனக்கும் அந்த சந்தேகம் இருந்தது. இருப்பினும் எது கொடுக்கப்பட்டதோ அதை உங்களிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்தேன். எனக்கு ஒரு ஓலை அல்ல. இரண்டு ஓலை



கொடுத்தார். இது விமலாதித்தர் கொடுத்த ஓலையின் இன்னொரு பிரதி என்று சொல்லி வேட்டி நுனியை தடவி ஒரு நூல் பிரித்து ஒரு ஓலையை உருவி, வந்தியத் தேவரிடம் நீட்டினான்.

வந்தியத் தேவர் மன்னரிடம் நீட்ட, மன்னர் தடவி படித்தார்.

"அடேய், இது விமலாதித்தன். இதுதான் விமலாதித்தன். இந்த சொற் பிரயோகங்கள் அவருடையது. இந்த கையெழுத்து அவருடையது.

எனவே நம்முடைய வேலை எளிதாயிற்று. எப்பொழுது படை எடுக்கலாம் என்பது பற்றி உங்களுக்குள் பேசி முடிவு செய்யுங்கள். நான் போய் காவிரிக் கரையில் குளித்து விட்டு பிரகதீஸ்வரர் கோவிலுக்கு போகப் போகிறேன். முடிந்தால் நீயும், வந்தியத் தேவரும் கலந்து கொள்ளுங்கள்"

"என்ன?"

"பூவொடு நீர் சுமக்கும்" என்று ஒரு வரி ஓடிற்று. கருவறைக்குள் நுழைந்தோம் அல்லவா. நமக்கு ஒரு தீங்கும் வரக்கூடாது. காவிரியிலிருந்து நீர் சுமந்து, பூக்கள் சுமந்து பிரகதீஸ்வரருக்கு சமர்பிக்கலாம் என்று ஒரு எண்ணம் ஏற்பட்டது"

"புரிகிறது மன்னா. ஏன் சொல்கிறீர்கள் என்று புரிகிறது. நாங்களும் வருகிறோம்"

செய்தி பரவிற்று.

ஒன்று, இரண்டு, மூன்று என்று பல்வேறு இடங்களுக்கு போயிற்று. பொதுமக்களுக்கும் எட்டியது.

"வீரமாதேவியார் உடல்நலம் சரியில்லாமல் இருக்கிறார். குந்தவையை மீட்டு வரும் போது காயம் பட்டு விட்டது. அதனால் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவருக்கு நேர்ந்து கொள்வதற்காக மாமன்னர் காவிரி நீர் எடுத்து பிரகதீஸ்வரர் கோவிலுக்கு போகிறார். எனவே நாமும் போவோம்" என்று சொன்னார்கள்.

ஒரு பெரிய கூட்டம் காவிரிக் கரையை அடைந்து குளித்து மூழ்கியது.

இராஜேந்திர சோழர் மூழ்கி எழுந்தார். நீரை தோளில் வைத்துக் கொண்டார்.

வீரமாதேவியார் சுகம் அடைய வேண்டுமென்று ருத்ரம், சமகம் ஓதப்பட்டது. தேவார, திருவாசகங்கள் தனியாக பாடப்பட்டன. 'ஓம்

நமச்சிவாயா' என்று சொல்லியபடி ஈரத் துணியோடு பொதுக்கள் மன்னரை பின் தொடர்ந்தார்கள்.

முக்கோகிழானடிகளும், பரவையும், பஞ்சவன் மாதேவியும், பொதுமக்களோடு நடந்து வந்தார்கள். பாதுகாவலர்களும் ஈரம் சொட்ட நடந்து வந்தார்கள். குதிரைகளின்றி, யானைகளின்றி வெறும் ஈரத்துணியோடு மன்னரும், மன்னரின் துணைவியரும், தளபதிகளும், பொதுமக்களும் நடந்து போகும் காட்சி பரவசமூட்டியது.

"பொன்னடியே பரவிநாளும் பூவொடும் நீர்சுமக்கும்;

நின்னடியார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்று பாடப்பட்டது. காவிரி நீர் பிரகதீஸ்வரருக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. கொண்டு வந்த பூக்களை, காட்டு மலர்களை, செம்பருத்தியை, மல்லியை, முல்லையை அவருக்கு சாத்தினார்கள். சில குடங்களில் சந்தனம் கரைத்து சந்தனமாகவும் அபிஷேகம் செய்தார்கள். செண்பகப் பூக்களை முக்கி நீரில் கலக்கி அந்த வாசனையையும் ஊற்றினார்கள்.

அபிஷேகம் செய்தார்கள். கருவறை முழுவதும் கசீர் என்று சுகந்தமான வாசனை பரவியது. செண்பகப்பூ கிறுகிறுக்க வைத்தது.

"என்னால் அவர் சுகப்படவேயில்லையே" என்று வீரமாதேவி வருத்தமுற்றாள்.

"நன்றாக இருக்கிறது உங்கள் அழுகை. உங்களுக்காக அவர் அழுகிறார். அவருக்காக நீங்கள் அழுகிறீர்கள். நல்ல மனைவி நல்ல கணவன். அற்புதமாக இருக்கிறது இந்த காட்சி" என்று அதிகாரிச்சிகள் கேலி செய்ய அவள் முகம் சிவந்தாள்.

வீரமாதேவி குணமாகி விட்டார் என்று கருவறைக்கு அருகே இருந்த இராஜேந்திர சோழர் மனதுக்குத் தெளிவாகத் தெரிந்தது.

"நன்றி ஐயனே" கை கூப்பினார்.

"என் அந்துமிறலை மன்னித்துக் கொள்ள வேண்டும்" குனிந்து வணங்கினார். திருநீறு தரப்பட்டது. "சிவாய நமஹ" நெற்றியில் இட்டுக் கொண்டார். திரும்பினார். மக்களுக்கு வணக்கம் சொன்னார். நன்றி சொன்னார். சில பேர் முகத்தை தடவினார். தேர் ஏறி மனை வியரோடு அரண்மனை திரும்பினார்.

www.palsuvainovel.com





# 12

உடனடியாக தஞ்சைக்கு வந்து அரசரை சந்திக்க வேண்டும் என்ற ஓலை ஸ்ரீ விஜய தூதுவருக்கு நாகை விகாரத்தில் வைத்து கொடுக்கப்பட்டது. அவர் புறப்படத் தயாரானார். துணைக்கு நாங்களும் வருவோம் என்று சில புத்த பிட்சுக்கள் எழுந்தார்கள். அவர் வேகமாக எழுந்தார். அவருக்கு அறுபது வயதிருக்கும்.

"வேண்டாம். நீங்கள் இதில் தலையிடாதீர்கள். இப்பொழுது நிலைமை நன்றாக இல்லை. இராஜேந்திர சோழருக்கு நம்மீது கோபம் வந்து விட்டது. அதை விசாரிக்கப் போகிறார். அப்படி விசாரித்தால், என்ன நிலைமை இருக்கிறதோ அதை தெள்ளத் தெளிவாக நான் அவரிடம் சொல்வேன்"

"நான் ஒரு தவறும் செய்யவில்லை. ஸ்ரீ விஜய மன்னர் ஆணையின் படி இங்கு வந்து இருக்கிறேன். இராஜேந்திர சோழருக்கு நல்ல விதமாக அறிமுகம் செய்யப்பட்டேன். என்னுடைய வேலைகளை செவ்வனே செய்து கொண்டிருக்கிறேன். என் மீது எந்த தவறும் இல்லை என்று சொல்ல முயற்சிக்கிறேன். மாறாய் என்னை தண்டித்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் ஒருபோதும் இதில் சிக்கிக் கொள்ளாதீர்கள்"

"ஸ்ரீ விஜயத்து மக்கள் செய்வது தவறு. அந்த மன்னரும் அதிகாரிகளும் முட்டாள்தனமாக நடந்து கொள்கிறார்கள். சோழ தேசத்தின் வலிமை புரியாமல் இருக்கிறார்கள். இருபது இருபத்தைந்தாயிரம் வீரர்கள் வருவார்கள். வெட்டி வீழ்த்தி விடலாம் என்று அவர்கள் கொக்கரிக்கிறார்கள். உள்ளுக்குள்ளே இரண்டரை இலட்சம் வீரர்கள் யானைகளோடும், குதிரைகளோடும் இறங்குவார்கள் என்று அவருக்கு தெரியவில்லை.

இதை நான் போய் அங்கு சொன்னால் அங்கும் குற்றவாளி ஆவேன். சோழ தேசத்திற்கு பரிந்து பேசுகிறேன் என்று என்னை கசையால் அடிக்கலாம். அப்படி போனாலும் ஆபத்து. இப்படிப்

போனாலும் ஆபத்து. அப்படிப் போய் அடி வாங்குவதை விட இப்படிப் போய் சிறையில் இருக்கலாம். நிறைய புத்தர் நாமத்தை சொல்லிக் கொண்டிருக்கலாம்" அவர் விடைபெற்றார்.

அவர் தஞ்சை நோக்கி புறப்பட்ட அந்த பிற்பகல் நேரத்தில் ஸ்ரீ விஜயத்தில் இருட்டத் துவங்கியது. விளக்குகள் ஏற்றப்பட்டன. கடற்கரை ஓரமுள்ள சிறிய குடைகளில் உள்ள விலை மாதர்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள தொடங்கினார்கள். அந்த அலங்கரிப்புக்கு நடுவே காமக் கூச்சல் அதிகம் இருந்தது. நடந்து போகும் ஆடவரை அவர் அவர்கள் ஒருவருக்கொருவர் சீண்டிக் கொண்டும், சிரித்துக் கொண்டும், கட்டி கொஞ்சிக் கொண்டும் மற்றவருக்கு வேடிக்கை பெருமளவு காட்சியளித்தார்கள். நெடுங்காலமாக அந்த இடம் விலை மாதர்களின் இடமாக இருந்தது என்பதை உற்றுப் பார்த்தவர்களுக்கு புரியும். விலை மாதர்கள் அந்த பகுதியின் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தார்கள். கும்பல் கும்பலாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். உரத்த குரலில் சண்டையிட்டார்கள். அலட்டலாய் பேசினார்கள். சில பேர் ஒருவரை ஒருவர் தழுவி காமவெறி தாளாது முத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள் அப்படி நடப்பதால் மற்றவர்களுடைய கவனத்தை ஈர்க்க முடியும் என்பதற்காக செய்து கொண்டிருந்தார்கள். சில ஒன்றிரண்டு பெண்கள் தலைமயிரை பிடித்து இழுத்து அடித்துக் கொள்ள எல்லோரும் சுற்றி நின்று வேடிக்கை பார்த்தார்கள். ஆபாசமான வார்த்தைகள் வெட்கமின்றி அங்கு இறைக்கப்பட்டன. தமிழிலுள்ள கெட்ட வார்த்தைகளும் அங்கு சொல்லப்பட்டன. வந்த மாலுமிகளிடம் தமிழில் என்ன கெட்ட வார்த்தை உண்டு என்று கேட்டு தெரிந்து கொண்டு அதை திரும்பத் திரும்ப சொல்லி, உரத்த குரலில் அதை சந்தோஷமாக கூவுவது அந்த விலை மாதர்களின் வழக்கம். அதில் ஒரு குரூர திருப்தி.


விலைமாதர்கள் தவிர, அவர்கள் நடமாட்டத்தால் அங்கு தின்பண்டக் கடைகள் அதிகம் இருந்தன. குறிப்பாய் மாமிச வகையான உணவுகள் மிகுமிஞ்சி இருந்தன. அந்த பெண்கள் எல்லோரும் சீன தேசத்திலிருந்து துரத்தப்பட்ட நாடோடிகளாக இருந்தார்கள். சிறிய கண்கள், சிவந்த உடல் மெல்லிய தலைமயிர். உடம்பு உருவி விட்டது போல இருந்தது. பெயருக்கு சிறு மார்பகங்கள் இருந்தன. ஆனால் அவர்கள் வேலை தெரிந்தவர்களாக இருந்தார்கள். எப்படி மயக்க வேண்டும் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தது. அவர்கள் வெள்ளையாய் சிரித்தார்கள். ஆனால் உள்ளே விஷமம் இருந்தது.

"பாம்பு கொடு" என்று ஒருவள் காசு நீட்ட, தண்ணீர்



தொட்டிக்குள் தலையை மட்டும் நிமிர்த்திக் கொண்டிருந்த பாம்புகளில் ஒன்றை அவன் சட்டென்று எடுத்தான். ஆணியில் வைத்து தலையை அழுத்தினான். கொன்றான். மேல் தோலை சரட்டென்று உருவி கிழித்து உள்ளே இருக்கிற சதையை மட்டும் வட்டமாக உருட்டி எடுத்து விட்டு, அதன் மீது உப்பும், மிளகுத் தூள் போட்டு இலையோடு சிறிது நேரம் ஆவியில் வேகவைத்து அவளிடம் நீட்டினான். சுடச்சுட காரமும், மணமுமாக இருந்த பாம்பை அவள் விரும்பி கடித்து உண்டாள். அதில் பங்கு கேட்க பல விலைமாதர்கள் வந்தார்கள்.


பாம்பு மட்டும் இல்லாது வெட்டுக்கிளி, தென்னை மரத்து வண்டு, கடல் வகை நண்டு இருந்தன. பல பேர் தென்னை மரத்து வண்டுகளைத் தான் நறநறவென்று சப்தத்தோடு உண்டார்கள். புரதச் சத்து எல்லாவற்றிலும் அதிகமாக இருப்பது அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. கொஞ்சம் தென்னை மரத்து வண்டும், கொஞ்சம் சாராயமும் சாப்பிட்டால் போதும். அன்று மாலை மிக உற்சாகமாகக் கழியும் என்று அவர்களுக்குத் தெரியும். அதிகமான உஷ்ணத்தோடு காணப்பட்ட அவர்களை சுற்றி சீன தேசத்து மாலுமிகள் வந்தார்கள். போட்டி போட்டுக் கொண்டு பெண்கள் அவர்கள் முன்பு ஆடினார்கள். அதிகமான காசு அதிகமான சேவை என்ற சொற்றொடர் அங்கு அடிக்கடி பேசப்பட்டது.



நடுநிசியில் இந்த கும்பல்கள் குறைந்தன. மக்கள் உறங்கப் போனார்கள். விடிந்து வெகு நேரம் கழித்தும் அந்த இடம் தூக்கம் கலையாமல் வெறுமே இருந்தது.

இரண்டு புத்த பிட்சுக்கள் அந்த தெருவின் வழியாக நடந்து கடற்கரை விளிம்பில் துறைமுகத்தின் எல்லையில் வந்து நின்று கொண்டார்கள். அங்கு மிகப் பெரிய சீனத்து நாவாய் ஒன்று கட்டப்பட்டு இருந்தது. சீன மாலுமிகள் என்ன வேண்டும் என்று கேட்க, அவர்கள் தங்களுடைய கப்பரைகளைக் காட்டினார்கள். சீன மாலுமிகள் மேலிருந்து கீழே இறங்கி வந்து தானியங்களை அந்த கப்பரைகளில் கொட்டினார்கள். விழுந்து வணங்கினார்கள். வேறு ஏதேனும் வேண்டுமா என்று கேட்டபொழுது, வேண்டாம் என்று மறுத்து விட்டு புத்த துறவிகள் நகர்ந்து போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

தானம் வாங்கிய தானியங்களை பைகளில் கொட்டிக் கொண்டு காலி கப்பரைகளோடு போனார்கள். வேறொரு இடத்தில் அவர்களுக்கு பால் கொடுக்கப்பட்டது. அந்த பாலை வாங்கி ஊற்றி உறிஞ்சி குடித்தார்கள். இன்னும் தொடர்ந்து நடந்து துறைமுகத்தில் வேறு பகுதிக்கு போனார்கள். அது சோழ தேசத்து கப்பல்கள் இருக்கின்ற இடம். அது வெறுமையாய் இருந்தது. சோழக் கப்பல்கள் இங்கு வந்து வெகு நாளாகி விட்டன. அந்தத் தவறு இன்னும் அந்த துறைமுகத்தில் உள்ளவருக்கு தெரியவில்லை. இன்று வரும், நாளை வரும், நாளை மறுநாள் வரும் என்று சோழக்கப்பல்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால்





கப்பல்கள் வராது என்று அந்த துறவிகளுக்குத் தெரியும்.

அவர்கள் பார்ப்பதற்கு இலங்கையைச் சேர்ந்தவர்கள் போல் தென்பட்டார்கள். ஸ்ரீலங்காவிலிருந்து தான் புத்த பிட்சுகள் பல்வேறு திக்குகளுக்கு பரவினார்கள். ஸ்ரீலங்காவில் உள்ள பெரிய புத்த மடங்கள் இளம் துறவிகளை வெவ்வேறு ஊர்களுக்கு கப்பலேற்றி அனுப்புகின்றன. புத்த மதத்தை பற்றி பிரசாரம் செய்ய அனுப்புகின்றன. அப்படி வந்தவர்கள் தான் இந்த துறவிகள். ஆனால் அவர்களுக்கு தேசத்தை பற்றிய அக்கறை அதிகம் இருந்தது. ஸ்ரீ விஜயத்தின் தலை எழுத்து நன்றாக இல்லை என்று அவர்களுக்குத் தெரிந்தது.

என்ன செய்வது என்று உரக்க யோசித்தார்கள். அவர்கள் தனியே உட்கார்ந்து கொண்டு ஏதோ விவாதம் செய்வது போல தொலைவே இருப்பவர்களுக்கு தெரிந்தது. ஆனால் அதிக நேரம் அவர்கள் அரசியலைப் பற்றியே பேசினார்கள்.

"என்ன ஆகும் என்று நினைக்கிறீர்கள்" சுத்தமான சோழ நாட்டு தமிழில் ஒரு புத்த பிட்ச கேட்க, "என்ன ஆகும். யுத்தம் வரும்" சேர தேசத்து தமிழில் இன்னொரு புத்த பிட்ச பேசினார்.

"யுத்தம் எப்போது வரும்?"

"எப்போது வேண்டுமானாலும் வரும்"

"அப்போது ஸ்ரீ விஜயத்தினர், என்ன ஆவார்கள்?"

"உதைபடுவார்கள்"

"சோழர்கள் ஸ்ரீ விஜயத்து படைகளை விட பலம் வாய்ந்தவர்களா?"

"வெகு நிச்சயமாக"

"கடல் கடந்து இத்தனை தூரம் எத்தனை வீரர்கள் வந்து விட முடியும்"

"இப்பொழுது இராஜராஜன் இல்லை. இது இராஜேந்திரன். சுடும் கோபமுடையவன், அவனுடைய போர்முறை முற்றிலுமாக அழிப்பது, முடமாக்குவது, அடுத்த ஐம்பது வருடங்களுக்கு எழுந்திருக்க முடியாமல் செய்வது. இன்று மதுரையும், சேர தேசமும் அப்படித்தான் இருக்கிறது. மதுரையை எரியூட்டி விட்டான், சேர தேசத்தை சிதறடித்து விட்டான். சேர தேசத்து கிராமங்களில் ஒரு கிராமத்திற்கு ஐந்து பேர், ஆறுபேர்தான் எஞ்சியிருக்கிறார்கள். நாஞ்சில் நாடு மட்டும் தப்பிப் பிழைத்தது. ஏனெனில் நாஞ்சில் நாட்டில் உள்ளவர்களுக்கும் சேர தேசத்தவர்களை பிடிக்காது. அவர்களுடைய

தாக்கம் இவர்கள் வாழ்க்கையில் அதிகம். அவர்களுடைய ஆணவம் இவர்களை பலமுறை தலைகுனியச் செய்திருக்கிறது.

ஆகவே சோழரால் சேர தேசம் தண்டிக்கப்பட்டதால் நாஞ்சில் நாட்டு மக்கள் சந்தோஷமடைந்தார்கள். இது இராஜேந்திரனுக்கு தெரிந்து போயிற்று. எனவே நாஞ்சில் நாட்டை வெறுமே வார்த்தையால் மிரட்டுவதோடு நகர்ந்து விட்டான். சேர தேசத்தில் இப்பொழுது நாஞ்சில் நாடு தான் செழிப்போடு இருக்கிறது. சேரர்கள் தங்கள் வீட்டு நல்லவைகளையும், வெண்கல உருளிகளையும், பாத்திர பண்டங்களையும், நாஞ்சில் நாட்டிற்கு வந்து விற்று அரிசியும், பருப்பும் வாங்கிப் போகிறார்கள்.

யானைகளுக்கும், பசுக்களுக்கும் போட்ட வாழைப்பழந்தான் எல்லாம் இப்போது சேர தேசத்தில் மிகப்பெரிய விலையாக போய்க் கொண்டிருக்கிறது.

"சேர தேசத்து மரக்கலன்கள் காந்தளூர்ச் சாலையை அழித்த பிறகு என்னவாயின என்று யாருக்காவது தெரியுமா?"

"தெரியவில்லையே, காணோமே"

"ஆம். காணோம் என்று நீங்கள் சொல்லிக் கொண்டிருங்கள். ஆனால் அவை எங்கு போய் சேர வேண்டுமோ, எந்த இடத்தில் பதுங்கி இருக்க வேண்டுமோ அங்கு அழகாக இருக்கின்றன.

ஆனால் சேர தேசத்து நாவாய்கள் நமதை விட சிறியவை. ஆனால் விரைவானவை. இங்கே வரி வசூலித்தது கூட சரி. ஆனால் வணிகர்களின் கையை சீவி ஒட்டக் கட்டி அடித்து துரத்தினார்கள் பாருங்கள். அதுதான் மிகப் பெரிய கொடுமை. அதுதான் எல்லாவற்றுக்கும் தலையாய வம்பாக வரப்போகிறது. தன்னை அவமானப்படுத்திடதாக இராஜேந்திர சோழர் நினைக்கப் போகிறார். வணிகர்களின் கால் கட்டை விரலை வெட்டி, கைகளை வெட்டி ஒட்டியது இதெல்லாம் கொடூரமான செயல். .. வணிகர்களுக்கு சண்டை போடத் தெரியாது. அவர்கள் வியாபாரம் பேச வந்தார்கள். அவர்களை சிறைக் கோடு சேர்த்து விட்டு இரண்டு பேரிடமும் காசு வாங்கிக் கொண்டு அழகாக பிழைத்திருக்கலாம்.

எந்த வணிகர் வந்தாலும் இதோ இந்த பேய்ப் பெண்கள் கூட்டம் காசு சம்பாதிக்கும். இவர்களிடம் காசு புரண்டால் என்னென்ன விதமாகவோ ஊருக்குள் வரும். எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டோம்"

"இன்னொரு விஷயம். இந்த இரண்டு பேருடைய வருகையால்



இந்த ஊர் ஒழுக்கங்கெட்ட ஊராக போயிற்று"

"என்ன செய்வது. உங்களிடம் வேறென்ன இருக்கிறது. விளை நிலங்களா, அப்படி இருந்தால் நீங்கள் உழுது பயிரிட்டு நீங்கள் விளைச்சல் பார்த்து விடுவீர்களா, உட்கார்ந்து தூங்குவீர்கள். சாராயம் குடித்து விட்டு சேற்றில் விழுந்து புரள்வது தான் உங்கள் ஆண்களில் பல பேருக்கு இயல்பு. பெண்களை வைத்து சம்பாதிப்பது தான் அவர்களுடைய குறிக்கோள்.

இந்த தேசத்தில் வேறு என்ன வருமானம் இருக்கும். கடற்கரை பட்டினம், தேசத்தினுடைய கிழக்கு பக்கம் சீன தேசம். தேசத்தினுடைய மேற்கு பக்கம் சோழ தேசம். இரண்டு பேரும் பெரிய நாவாய்களில் நம்மில் வந்து தங்கி பாதி தூரம் பயணம் போதும் என்று புரிந்து கொண்டு இங்கேயே வியாபாரம் செய்ய போகிறார்கள்"

"என்ன தவறு. இது என்ன ஒரு அற்புதமான வருமானம். இதை சீ செய்ய இங்குள்ள அதிகாரிகளுக்கும், அரசருக்கும் ஏன் தெரியவில்லை. இங்கு உள்ள புத்த பிட்சுக்களுக்கே தெரியவில்லை. இங்கு உள்ள மடாலயங்களே தாங்களே ஆட்சி செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றன. மாறன் விஜயோத்துங்க வர்மனை தன் கைகளுக்குள் போட்டுக் கொண்டிருக்கின்றன. அவன் வெறும் குடிகாரனாக இருக்கிறான்.

வெண்கலச் சிலை செய்து அனுப்பிவிட்டால் சோழன் மகிழ்ந்து விடுவான் என்று நினைக்கிறான். அதற்கெல்லாம் சோழன் மசிய மாட்டான். இங்கிருந்து ஆட்கள் அங்கு போய் உட்கார்ந்து கொண்டு எல்லாம் நல்லபடியாக நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இங்குள்ள வணிகர்களை அப்படி அவமானப்படுத்தி அனுப்பி இருக்கிறீர்களே, சித்ரவதை செய்து துரத்தி இருக்கிறீர்களே. இது சோழனுக்கு தெரிந்தால் அது சும்மா போகுமா"

"எப்போது யுத்தம் வரும்"

"போர் இப்போது இல்லை. வடகிழக்கு பருவ காற்று சாதகமாக திகழ வேண்டும். இப்பொழுது தென்மேற்கு பருவக் காற்று அடித்துக் கொண்டிருக்கிறது. சேர தேசத்தில் கடும் மழை. அவ்வப்போது நமக்கும் பெய்கிறது. சோழ தேசத்தில் வறட்சியான கால கட்டம். அவர்கள் அடுத்தபடியான போருக்கு தயார் ஆவார்கள். சோழருக்கு பல்வேறு தலைவலிகள் இருக்கின்றன. பாண்டியரும், சேரரும் மறுபடியும் ஒன்று சேரக்கூடாது என்று முக்கியமாக கருதுகிறான்.

ஈழத்தை துவைத்து எடுத்து விட்டான். அங்கிருந்தும் ஆபத்து வரும் என்று கருதுகிறான். கங்கர்களையும், இராஷ்டிரகூடர்களையும் அவன் மிரட்டியே வைக்க வேண்டிய அவசியம். மேலைச் சாளுக்கியன் அவன் மிரட்டலுக்கு கட்டுப்படாது, குடகு மலையிலிருந்து மனிஜ சோழனுக்கு துணையாக இருக்கிறான். ஆனாலும் எவ்வளவு தூரம் நம்புவது என்ற கேள்வி இருக்கிறது. மேலைச் சாளுக்கியத்து மன்னர்கள் இப்பொழுது கீழைச் சாளுக்கியம் நோக்கிப் போய் அங்கு குழப்பம் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். ஓரளவு வெற்றி பெற்று விட்டார்கள் என்று அங்கிருந்து வந்த செய்திகள் தெரிகின்றன.

பாலூர் துறைமுகம் இப்போது அதிகமான கப்பல்கள் கொண்டிருக்கிறது. அங்கிருந்து வடகிழக்கு நோக்கி நாவாய்கள் நகருகின்றன. தென் மேற்கு பருவக் காற்றால் தள்ளப்பட்டு கங்கை முகத்துவாரத்தை அடைகின்றன"

"அவை யாருடைய கப்பல்கள்?"

"பல வணிகருடைய கப்பல்கள். பல்வேறு தேசத்தை சேர்ந்த கப்பல்கள். ஆனால் வணிகர் என்று வந்து விட்டால் தேசம் முக்கியம் அல்ல. வாணிபம் தான் முக்கியம். அவர்களுக்குள் பரஸ்பரம் உதவி செய்து கொண்டு பயணப்படுகிறார்கள். மொழியோ, தேசமோ பார்ப்பதில்லை"

"பாண்டியர்களும், சோழர்களும் இங்கு ஒற்றுமையா?"

"பெரிதும் பகைமை பாராட்டுவது இல்லை. கப்பல் ஏறிவிட்டாய் அல்லவா. நாவாயில் உட்கார்ந்து விட்டாயல்லவா. நீயும், நானும் நண்பன். ஊர் போய் சேர்ந்து இறங்கும் வரைக்கும் ஒருவருக்கொருவர் உதவி என்று சொல்லிக் கொள்கிறார்கள். இறங்கிய பிறகு கட்சி பிரித்துக் கொள்கிறார்கள்"

"நன்றாக இருக்கிறதே"

"ஏனெனில் சோழ தேசத்து வணிகர்கள் கெட்டிக்காரர்கள். அவர்கள் பேச்சு இராஜேந்திரருக்கு போய் சேருவதற்குத்தான் நேரமாகிறது. போய் சேர்ந்து விட்டால் முடிவு வந்து விடும்"

"நாம் என்ன செய்தால் இது சரியாக இருக்கும்"

"மாறன் விஜயோத்துங்க வர்மனிடம் நேரடியாக நம் தலைவரை விட்டு போக வைக்க வேண்டும். இந்த விஷயம் சரியல்ல என்று நம்முடைய விகாரத்தில் நாம் நம்முடைய தலைமை புத்த பிட்சுவிடம் சொல்ல வேண்டும். அவர் அதை புரிந்து கொள்ள வேண்டும். அவர் இதை எடுத்துக்



கொண்டு போய் மாறன் விஜயோத்துங்க வர்மனிடம் சொல்லி இந்த விஷயத்தை ஒரு கட்டுக்குள் கொண்டு வர வேண்டும்.

இங்கு வந்த சோழ வீரர்களுக்கும் வரி விதித்து. சீன வீரர்களுக்கும் வரி விதிக்கும் போது சீன வீரர்கள் கட்ட மாட்டேன் என்று முரட்டுத்தனம் செய்தார்கள். அடிக்க வந்தார்கள். எனவே இவர்கள் ஒடுங்கி விட்டார்கள். சீனர்களுக்கு வியாபாரம் ஆகாமல் இருக்க என்ன செய்வது, அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா. சோழ வீரர்களை பண்டங்கள் மாற்ற விட்டு அவர்கள் நாவாய்களை தீக்கிரையாக்கி அந்த வீரர்களை படகில் ஏற்றி வைத்து அனுப்பி விட்டார்கள். வெறுமே அனுப்பி வைத்தால் கூட பரவாயில்லை. ஆறு, ஏழு வீரர்களின் கையை வெட்டி ஒட்டக்கட்டி ஒன்றாக பிணைத்து விட்டார்கள். கால் கட்டை விரல்களை தரித்து விட்டார்கள். எனவே இதுதான் மிக முக்கிய செய்தியாக போகப் போகிறது.

சீனர்களுக்கு ஒரு மரியாதை. சோழர்களுக்கு ஒரு மரியாதை என்று இரண்டு பட்சமாக நடப்பது தவறு. இரண்டாவது இப்படி கொள்ளை அடித்தது மிகப்பெரிய பிசகு. மூன்றாவது கைகளை வெட்டி ஒட்டியதும், கால் கட்டை விரலை தரித்ததும் அபத்தம். நான்காவது இதைப் போய் சொல் சோழனிடம் எனக்கு பயமில்லை என்று சொன்னது. அதை விட இன்னொரு கூத்து நடக்கிறது. உனக்கு தெரியுமா?"

"என்ன?"

"சோழன் எனக்கு கட்டுப்பட்டவன், எனக்கு பயந்தவன், நான் அடித்தால் வாங்கிக் கொள்கிறவன் என்று ஸ்ரீ விஜயத்து அதிகாரிகள் சீனர்களிடம் சொல்கிறார்கள். சீனர்கள் நம்புவார்களா, அப்படித்தான் அப்படித்தான் என்று தலை அசைப்பார்களே தவிர சீனர்கள் நம்ப மாட்டார்கள். ஒருவேளை நம்மை மீறி நம்முடைய கணவாய்கள் வழியாக சீனப்படைகள் வணிகர்களோடு சோழ தேசம் நேரிடையாக போய் விடலாம்.

தென்மேற்கு பருவ காலங்களில் சீனப் படைகள் அங்கு போவதற்கு வாய்ப்பிருக்கிறது"

"போக விடுவார்களா?"

"விட மாட்டார்கள். மடக்கி எரியூட்டுவார்கள்" ஆனால் படகில் தப்பித்து சீனர்கள் சோழ தேசம் போய் விட்டால்"

"பெரிய ஆபத்து"

"அப்படி ஏதும் நடந்து விடுமோ"

"நடக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். சீனர்களை சீண்டி விட்டால் போதும். சீனர்கள் பழிவாங்க துடிப்பார்கள். எப்படியாவது பழிவாங்குவார்கள். சீனர்களும், சோழர்களும் கை கோர்த்து விட்டால் ஸ்ரீ விஜயம் தனித்து விடப்படும். மிகக் கடுமையாக இரண்டு பக்கமும் அடிவாங்கும்"

"அப்பொழுது நம்முடைய நிலைமை"

"புத்த பிட்சு என்று உயிரோடு விட்டாலும் விடலாம். கூப்பிட்டு கழுத்தை அறுத்தாலும் அறுக்கலாம். இரண்டுக்கும் தயாராக இருக்க வேண்டும்"

"காம்போஜம் நோக்கி போய் விடுவோமே"

"எதற்கு? அங்கு ஏதாவது பிரச்சனை இருக்கலாம், சாவது என்று தீர்மானித்தால் அது எங்கு வேண்டுமானாலும் வரும். எனவே இங்கிருந்து வேடிக்கை பார்ப்பதே நல்லது"

கொம்பூதும் சத்தம் கேட்டது. அந்த பகுதி பரபரத்தது. புத்த பிட்சுக்கள் விரைவாக கொம்பூதும் இடத்தை நோக்கி போனார்கள். அங்கு முரசு அறிவிக்கப்பட்டது.

ஸ்ரீ விஜயத்தில் வியாபாரம் சரியில்லை என்று சீன நாவாய்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஸ்ரீ விஜயக் கணவாய்கள் வழியாக சோழ தேசம் நோக்கி கூர்மையான அம்புகளுடைய வில்லாளிகளுடன் நகர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த நாவாய்கள் சோழ தேசம் போய் விட்டால் நம்முடைய செயல்கள் வெட்ட வெளிச்சமாகி விடும். அவைகளை போக விடக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது, மாறன் விஜயோத்துங்க வர்மன் இது குறித்த உத்தரவை அனுப்பி வைப்பார். எனவே எல்லோரும் யுத்தத்திற்கு தயாராக இருங்கள் என்று சொல்ல.

அது யுத்தமல்ல, கடற்கொள்ளை என்று புரிந்து கொண்டு கூட்டம் ஆரவாரித்தது. மூன்று நாவாய்களை முப்பதாயிரம் பேர் மடக்கி இழுத்து எரியூட்டி சாமான்களை கொள்ளை அடிப்பது எளிது என்று அவர்களுக்குத் தெரியும். அவர்கள் எல்லோரும் தங்களுடைய வேலையும், வாளையும் தேடிக் கொண்டு போனார்கள்.

எங்கே வாள் என்று தேடுகிறார்களே என்ன ஆயிற்று இவர்களுக்கு. எல்லாவற்றையும் அடகு வைத்து குடித்திருப்பான். இப்பொழுது போய் மீட்டுக் கொண்டு வருவான். வெகு நாளைக்குப் பிறகு விருந்து கிடைக்கிறதல்லவா. எனவே விட மாட்டான். எப்படியும் அந்த கப்பல்களை மடக்கி நிறுத்துவான். இது மேற்கொண்டு தொந்தரவு கொண்டு



வந்து தரும். நிச்சயமாகத் தரும். ஆனால் சோழர்கள் போல் அல்ல. சீனர்கள் கடுமையாக போராடுவார்கள். சோழர்கள் இந்த எதிர்ப்பை எதிர்பார்க்கவில்லை. ஆனால் சீனர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். எனவே அவர்கள் தாக்குவது கடுமையாக இருக்கும். முப்பதாயிரம் பேரில் பத்தாயிரம் பேர்தான் திரும்பி வருவார்கள். இருபதாயிரம் பேர் கடலில் விழுந்து மீன்களுக்கு இரை ஆவார்கள்.

படகுகளில் பலபேர் ஏறி வேகமாக துடுப்பு செலுத்தி கணவாய் வழியாக போகின்ற பாம்புப் படம் போட்ட சீனப் படகுகளை மடக்கி நிறுத்தினார்கள்.. தீப்பந்தங்களை சுழற்றி பாய் மரத்தின் மீது வீசி எறிந்தார்கள். நாவாய்க்கு முன்பு போய் சுக்கானை அடித்து உடைத்தார்கள். மூன்று நாட்களாக தொடர்ந்து அங்கு கலவரம் நடந்தது. பல ஸ்ரீ விஜயத்து படகோட்டிகள் அடிபட்டு குற்றுயிரும், குலையுயிருமாய் திரும்பினார்கள். நாவாயிலிருந்து ஒரு பொருளும் எடுக்க முடியவில்லை என்று தெரிந்ததும், பெரிய எண்ணெய் துணிகளை வேறு படகுகளில் ஏற்றி அங்கு போனார்கள். இப்போது அந்த நாவாய்கள் எரியூட்டப்படும். முதல் நாவாய் எரியூட்டப்பட்டது. கடற்கரையிலிருந்தே தெரிந்தது. கரும்புகை படர்ந்து எழுந்தது.

பீங்கான் கிண்ணங்களும் கரை நோக்கி வந்தன. படகோட்டிகள் அவைகளை ஒட்டு மொத்தமாய் ஏலம்விட ஸ்ரீ விஜயத்து வியாபாரிகள் வாங்கி குவித்தார்கள். பெண்கள் கூச்சல் மறுபடியும் அதிகரித்தது. படகோட்டிகள் காசு பெற்றுக் கொண்டதும் மதுக்கடைகளையும் பெண்களையும் நாடினார்கள்.

மறுபடியும் மிகச் சிறந்த முறையில் வியாபாரம் நடந்ததற்கான பெருங்கூச்சல்கள் அங்கு எழுந்தன.

புத்த பிட்சுக்கள் கவலை ஆனார்கள். அவர்கள் தலைவரிடம் போய் பணிந்து நடப்பதை தெரிவித்தார்கள். அந்த புத்த பிட்சு கவலை ஆனார்.

நாகை விகாரத்தில் உள்ள ஸ்ரீ விஜய அதிகாரிக்கு இந்த செய்தி போக வேண்டுமே. என்ன செய்வது என்று அவர்கள் யோசித்தார்கள். எந்த புத்த பிட்சுக்கள் வந்து தகவல் சொன்னார்களோ அவர்களையே நாகை விகாரத்துக்கு அனுப்பும்படி மன்னரை தலைமை பிட்சு கேட்டுக் கொண்டார்.

"அவரிடம் பேசுவது மட்டுமல்ல. அவரிடமிருந்து படை எடுப்புக்கு வாய்ப்பிருக்கிறதா. சோழன் இந்த பக்கம் வருவானா என்று தெரிந்து

கொண்டு வாருங்கள்" என்று மன்னர் பொற்காசுகள் கொடுத்தார்.

பாய்மரம் உள்ள பெரிய படகில் மூன்று வீரர்கள் உதவி செய்ய, மண் கலயங்களும் தானியங்களும் ஏற்றிக் கொண்டு மூங்கில் குழியில் பொற்காசுகள் நிரப்பிக் கொண்டு அவர்கள் பயணம் துவக்கினார்கள். மூன்று நாவாய்களும் எரிந்து பெரும் பொருள் கொள்ளை அடிக்கப்பட்டு அவை கரை நோக்கி போய் கொண்டிருப்பது தெரிந்தது.

"எங்கடா போகிறீர்கள்?" ஒரு ஸ்ரீ விஜயத்து வீரன் இந்த படகோட்டியை நோக்கி கேட்டான்.

"சோழ தேசம் போகிறோம். வருகிறாயா?" என்று சொல்ல அந்த வீரர்கள் திகைத்தார்கள்.

காற்றுவாகாய் இருந்ததால் அந்த பெரியபடகு மிக விரைவாக சோழ தேசம் நோக்கி பயணப்பட்டது.

"மிக முக்கியமான, இரகசியமான செய்தி" வந்தியத் தேவர் ஸ்ரீ இராஜேந்திரனிடம் காதோரம் சொன்னார்.

"என்ன விஷயம்"

"நிதி நிலைமை பற்றிய விஷயம்"

"சொல்லுங்கள்"

"படை எடுப்பு என்று வந்தால் நமக்கு பொற்காசுகள் வேண்டும்"

"ஆமாம்"

"கையிலே சிறு பொற்கிண்ணங்கள் இருக்கின்றன, உருக்கி விடலாமா"

"தாராளமாக செய்யலாம், இதற்கு என்னை கேட்பானேன்"

"பொற்காசுகள் உருக்குவதற்கு அந்த கிண்ணங்கள் மட்டும் போதாது, கூடுதலாக நமக்கு அங்கே செலவழிக்க காசு வேண்டும். எனவே வேறு சில விஷயங்கள் இருக்கின்றன. அவைகளை உருக்கி காசுகளாக அடிக்கலாமா?"

"என்ன விஷயங்கள்?"

"ஒரு முழ உயர புத்தர் சிலைகள் இரண்டு இருக்கின்றன. இவை இலங்கையில் இருந்து கொண்டு வரப்பட்டன. என்ன செய்வது என்று தெரியாமல் நான் வைத்திருக்கிறேன்"

"இதை என்ன செய்வது. புத்த பிட்சுக்களிடம் கொடுத்தால்



...அடியாக கோவில் எழுப்ப வேண்டும் என்பார்கள். கோவில் எழுப்ப ... கொடு என்பார்கள், விகாரை கட்டுவார்கள். விகாரைக்குள் ... விஜயத்து ஆட்களை கொண்டு வந்து வைப்பார்கள். நம்மை ... பார்ப்பார்கள். எதற்கு இந்த வம்பு. உருக்கி விடுங்கள்"

"மிக அழகான பதுமைகள்"

"புத்த பதுமைகள் எப்படி இருந்தால் நமக்கென்ன?"

"பல பேர் வணங்கிய ஒரு தெய்வமல்லவா?"

"எனக்கு அப்படியெல்லாம் எந்தவிதமான கற்பனை இல்லை. ... தங்கம், உருக்கி நாணயமாக்க வேண்டியது அவசியம். அதை ...க்கி நாணயமாக்கி விடுங்கள்"

"ஒரு முறை நீங்கள் அதை பார்த்தால் உருக்க மனம் தயங்குமோ ...று தோன்றுகிறது"

"தாராளமாக பார்க்கிறேன்"

"இருங்கள்" அவர் கை தட்டினார். இரண்டு ஆட்கள் கனமுள்ள ... பதுமையை கொண்டு வந்தார்கள். அது துணியால் மூடப்பட்டி...ருந்தது. பிரித்து பார்த்ததும் தகதகக்கின்ற ஒரு புத்தர் பொம்மை, மிக ...னமாய், அமைதியாய், உள் நோக்கிய பார்வையாய், எல்லாம் ...ந்தனவாய் தெரிந்தது.

"அழகாய் தான் இருக்கிறது. ஆனால் எனக்கு எந்த விதமான ...டிப்பும் இதன் மீது ஏற்படவில்லை. இது புத்தர் சிலை அல்ல, தங்கம். ...ருக்கலாம். இதுவே என் முடிவு"

"இவ்வளவு வேகமாக முடிவு செய்கிறீர்களே. ஒரு நாள் வேண்டுமானாலும் இது இங்கிருக்கலாமே"

"வந்தியத் தேவரே, உங்களுக்கென்ன புத்தர் மீது இத்தனை ...க்கறை"

"இல்லை. இது ஒரு சமயச் சின்னம். அதற்காகத்தான் தயங்குகிறேன்"

"எனக்கு புத்த சமயத்தின் மீது எந்தவித ஈடுபாடும் இல்லை. இந்த தேசத்திற்கு துரோகம் செய்ய ஸ்ரீ விஜயம் தீர்மானித்து விட்டது. இலங்கையிலிருந்து புத்த பிட்சுக்கள் தான் இந்த போரை நடத்துகிறார்கள். ஸ்ரீ விஜயத்திலும் புத்த பிட்சுக்களே இந்த போரை நடத்தக் கூடும்.

எனவே சைவ சமயத்திற்கு எதிராக புத்த சமயம் இயங்குகிறதோ

என்று தோன்றுகிறது. நமக்கு வேறு சில பிரச்சனைகள் உள்ளே இருக்கின்றன. வெளியிலிருந்து சமயப் பிரச்சனை வர வேண்டா எனவே கூசாமல் உருக்குங்கள்" என்று சொல்லி அந்த புத்தர் சிலையை மல்லாக்க கவிழ்த்து வைத்தார்.

வந்த ஆட்கள் அதை தூக்கிக் கொண்டு போனார் வந்தியத்தேவர் சிரிப்போடு இராஜேந்திர சோழனை நோக்கினார்

நீ ஒரு முடிவு செய்தால் அதிலிருந்து நெல்முனை அளவும் மாட்டேன் என்கிறாய். அந்த உறுதி எனக்கு பிடித்திருக்கிறது.

சோழ தேசத்தை படையெடுப்பின் மூலமாகவோ, சமயத் மூலமாகவோ, கலைகளின் மூலமாகவோ, உறவின் மூலமாக எதிர்த்து விடக் கூடாது என்பதில் தெளிவாக இருக்கிறாய். சோ தேசத்தை நீ காதலிப்பது போல வேறு எந்த அரசனும் காதலிப்பா என்று எனக்குத் தெரியவில்லை.

இராஜேந்திரா வாழ்க நீ" என்று கை உயர்த்தினார்.

இராஜேந்திரர் குனிந்து அவர் வாழ்த்தை ஏற்றுக் கொண்டார். கீழ சாளுக்கியம் நோக்கி சோழப் படைகள் போவதற்கான ஆயத்தங்க ஒவ்வொன்றாய் ஆரம்பித்தன.



# 13

"அக்கச் சாலைக்கு வருகிறீர்களா?" தன் மாளிகையின் ப இறங்கிய அருண்மொழியை நோக்கி கேட்டார் வந்தியத்தேவர்.

மாளிகை நல்ல உயரமாக இருந்தது. மாளிகையின் கீழ்புறத்தி குதிரைகள் கட்டப்பட்டு இருந்தன. அங்கே சில வீரர்கள் தங்கி இரு தார்கள். முன் பக்கம் பதினெட்டு படிகள் வைத்து முதல் தளம் மெ காவல் படை இருப்பிடமாக இருந்தது. தொடர்ந்து இன்னொரு ப னெட்டு படிகள் ஏற அருண்மொழியினுடைய குடியிருப்பு வந்தது. அந் குடியிருப்புக்கு மேலாக போட்டு ஓட்டுக் கூரை எழுப்பி ஒரு சிறி



கூடமாக, வீரர்களோடு இரகசியம் பேசும் இடமாக இருந்தது.

அந்த வீட்டை விடாதே. வந்தியத்தேவர் தான் ஏதோ ஒரு வீடு இருந்தவனுக்கு சட்டென்று விழிப்பு காட்டியது.

"ஏன்? என் தந்தை இங்கு இருந்தார் என்பதாலா"

"இல்லை. உன் தந்தை இருந்ததால் அதற்கு ஒரு மதிப்பு இருக் எனினும் உன் தந்தை மிகச் சரியாக அந்த வீட்டை தேர்ந் த்தார். மனை வாஸ்து பிரகாரம் மிக அற்புதமான இடம்"

"எப்படி?"

"கிழக்கும், வடக்கும் திறந்திருக்கிறது. அதாவது இந்த மாளிகை மூலையில் இருக்கிறது. வெய்யில் வருகின்ற மேற்கு பக்கத்தில் பின் பக்கத்தில் வேறு ஒரு இதே அளவுள்ள அரண்மனை இருக்கிறது. மனையினுடைய தெற்குப் பக்கத்தில் நல்ல இடைவெளி இன்னொரு அரண்மனை இருக்கிறது. கிழக்கும், வடக்கும் திறந் இருப்பதாலே உள்ளுக்குள் காற்றோட்டம் சுழன்று வீசும். மேற்கு மறைந் இருப்பதால் வெய்யிலுடைய தாக்கம் உள்ளே வரவே வராது. மேற் வெய்யிலின் தாக்கம் இல்லாத போது வீடு குளுமையாக இருக் குளுமையான வீட்டில் கோபதாபங்கள் ஏற்படாது. நன்றாக சிந்திக்கலாம். தெளிவாக சிந்திக்கலாம்"

"இதனால் தான் உன்னுடைய தகப்பனார் சொந்த வீடு இருந்த போதும் இந்த இடத்திலேயே வெகு நாள் குடியிருந்தார். மன்னருக்கு அடுத்து இருக்கிறார் என்ற வசதி மட்டும் இல்லாத பல்வேறு விதத்தில் இது மிகச் சௌகரியமான இடம்"

"சில சமயம் கொசுத் தொல்லை மிகச் அதிகமாக இருக்கிறது. கீழே உள்ள குதிரைப் படையை வெளியே அனுப்பி விடலாமா என்று கூட யோசிக்கிறேன்"

"அது சரியாக வராது. கொசுத் தொல்லை நீங்குவதற்கு மாலை வேளையில் புகை போடச் சொல். கொசு உற்பத்தி ஆகும் நேரத்தில் புகை போட்டால் தொண்ணூற்றி ஐந்து சதவீதம் கொசுக்கள் அழிந்து விடும். கிழக்கு பக்கம் தலை வைத்து கால் நீட்டி தூங்கு. போர்த்திக் கொண்டு படு. கிழக்கத்திய காற்று உள்ளே நுழைந்தால் குளிரில் சுகமான தூக்கம் வரும். போர்வையை எடுக்க வேண்டி வராது. போர்வையை நீக்காது தூங்குகிற போது கொசுவும் கடிக்காது"

"இதையெல்லாம் சொல்லிக் கேட்காதே. தந்தை இருந்த வீடு

என்று கேள். உனக்கு கொடுத்து விடுவார்கள். ஆனால் அப்பா பெ... மையாக அந்த விஷயத்தை நடத்தி இருந்தார். அவர் இருக்கும் பொழு... அருண்மொழியையும் அவன் மனைவியையும் குடியேறச் செ... விட்டார். அவர் காலையிலிருந்து பகல் வரை பிற்பகலுக்கு மேல் ... னுடைய இல்லத்திற்கு போய் விடுவார். அது கிருஷ்ணன் ராமன் இட... அருண்மொழி இடமா என்று புரியும் பொழுது. தன்னுடைய பெ... களை எடுத்துக் கொண்டு தன்னுடைய இல்லத்திற்கு போய் விட்ட... பிறகு அது அருண்மொழிப் பட்டனுடைய இடமாக போய் விட்ட...

அரையன் இராஜராஜன் அந்த இடம் தனக்கு வரும் என... நினைத்திருந்தான். ஆனால் அருண்மொழி வந்து தங்கி விடவே அ... பற்றி மெல்லிய மூச்சு கூட விடாமல் சரி என்று பின்வாங்கி விட்டா... ஆனால் அரையன் இராஜராஜன் மனைவிகள் அந்த வீட்டின் மீது பெ... ஆசை வைத்திருந்தார்கள் போலும். குந்தவையின் மூலமாக இராஜேந்... சோழனிடம் இந்த வீடு பற்றிய ஆசையை வெளிப்படுத்தினார்கள்...

சேனாதிபதியின் மனைவிகளுக்கு நாங்கள் வீடு ஒதுக்... வில்லையே. சேனாபதிக்கு மட்டும் தான் ஒதுக்குவோம். அப்படி சேன... பதிக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அவர்கள் அதாவது சேனாபதியி... மனைவிகள் வந்து தங்கிக் கொள்ளலாம். மற்றபடிக்கு ஒவ்வொ... சேனாபதியின் மனைவியும் தனக்கென்று பிடித்த வீடு கேட்டா... தான் என் மனைவியரோடு இருக்கின்ற இடத்தை விட்டு வெளியே... வேண்டியது தான். அரையன் ராஜராஜன் முதிர்ந்த குணமுடையவ... அமைதியானவர். அவருக்கு கெட்ட பெயர் கொண்டு வந்... கொடுத்து விட வேண்டாம் என்று அவர்களிடம் சொல்" என்... சொல்ல விஷயம் வெகுவேகமாய் அடங்கிப் போயிற்று. தன்னை... தெரிந்த கங்கு போல மொத்த சூடும் குறைந்து போயிற்று.

அருண்மொழி கீழே வந்து வந்தியத்தேவர் குதிரையின் சேண... தைப் பிடித்துக் கொண்டான்.

"வாருமே"

"என்ன என்று சொல்லும்" அருண்மொழிப் பட்டன் வினவினா...

"உனக்கு பிடித்தமான புத்தர், மெல்ல மெல்ல கண்மூடி தன்னு... கரைந்து காணாமல் போவதை நீ பார்க்க விரும்புகின்றாயா"

"என்ன கேலி செய்கிறீர்கள்"

"இல்லவே இல்லை. உன் புத்தர் தனக்குள் தானே அமிழ்ந்... போவதை பார்க்கின்ற வாய்ப்பு உனக்கு இது கிடைக்கப் போகிறது... ...று எவருக்கும் இது கிடைக்காது. நீ மட்டுமே பார்க்கலாம். ...வாக பதில் சொல்லும்"

"விரைவாகவா"

"என்னுடைய ஆட்கள் என் கண்களை விட்டு மறையும் முன்பு ...ள் அவர்களை பின்தொடர வேண்டும்"

புத்தர் பதுமையை துணியில் சுற்றி ஒரு உறி கட்டி முன்னும், ...னுமாக இரண்டு வந்தியத் தேவரின் ஆட்கள் அதை தூக்கிக் ...ன்று அக்க சாலைக்கு நடந்தார்கள். அவர்களைத் தாண்டி வந்தியத் தேவரின் குதிரை போயிற்று. அக்க சாலை வாசலில் காத்திருந்தது. ...க்க உறி தாண்டி அருண்மொழிப் பட்டன் வந்தடைந்தான்.

துணி சுற்றப்பட்ட பதுமையை பார்த்து புத்தராக இருக்குமோ ...று எண்ணினான். பிறகு சட்டென்று துணுக்குற்றான்.

"அக்கச் சாலைக்கு புத்தர் வந்திருக்கிறார் என்றால் உருக்கப் ...கிறார்கள் என்று அர்த்தம். கடவுளே, எதற்காக புத்தர் சிலையை ...க வேண்டும். உருக்குவதற்கு வேறு பாத்திரமா இல்லை" ...று மெல்லியதாய் படபடப்பு காட்டினான்.

ஆனால் மனம் எச்சரித்தது. சட்டென்று பின் வாங்கினான்.

நாம் அரசியலில் இருக்கிறோம். நம்முடைய சொந்த விருப்பு ...வெறுப்புகளுக்கு அரசியலில் எந்த மரியாதையும் இல்லை. மேலும் ...இந்த அரசு சைவர்களுடைய அரசு. சிவனுடைய சொத்து என்று ...தன்னை சொல்லிக் கொள்கின்ற அரசு. இங்கே வைஷ்ணவம் ...பேசினால் கூட பொறுத்துக் கொள்வார்கள். அதுவே இரண்டாம் ...பட்சம் தான். பௌத்தம் பேசினால் அது சைவத்திற்கு ... எதிரிடை என்று விலக்கி விடுவார்கள்.

பௌத்தர்களை அந்நியர்களாக அலட்சியப் படுத்துவார்கள். ...தான் எந்த சமயமும் சார்ந்தவனில்லை என்று சொன்னால் அது இன்னமும் மோசம்"

"நாத்திகனா, கடவுளே இல்லை என்று சொல்கிறாயா" என்று ...ரம் கட்டுவார்கள்.

அக்கச் சாலைக்குள் நுழைவதற்கு . பெரும் கெடுபிடிகள் அதிகமாக இருந்தன.

"தயவுசெய்து உங்கள் உடைகளை சுற்றி விட்டு தாங்கள் ...கட்டியிருக்கின்ற இடுப்பு துண்டையும், மேல் துண்டையும் கட்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லி.

இடுப்புத் துண்டையும், மேல் துண்டையும் அருண்மொழிப் பட்டனிடம் நீட்டினார்கள். அருண்மொழிப் பட்டன் தன்னுடைய வேட்டியை அவிழ்த்து மடித்து வைத்து விட்டு அகலமான கோவணத்தோடு நின்றான். இடுப்பு துண்டை கட்டிக் கொண்ட அதே உடையில் வந்தியத் தேவரும் இருப்பது தெரிந்தது.

தேக்கு கட்டைகளையும், புளியங் கட்டைகளையும், காட்டு கட்டைகளையும் சுவர் போல உள்ளுக்குள் அடுக்கி நடுவிலே பிளந்து பிளந்து போட்டுக் கொண்டிருந்தார்கள். ஒரு குழியிலிருந்து ஒரு ஆள் உயரத்திற்கு அடுப்பு சிராய் எரிந்து கொண்டிருந்தது. அந்த குழியின் மீது இரும்பு வாணலி வைக்கப்பட்டது. ஏ மசக்கென்னை தடவி வேகமாக மேல்பக்கம் சுத்தம் செய்கிறார்கள். சுத்தம் செய்த வேகத்தில் நகர்ந்து கொண்டார்கள். அ எண்ணையும் மெல்ல பற்றி எரிந்தது. வாணலி கால், அரைக்கால் நாழிகையில் சட்டென்று சிவந்தது.

"இன்னும் கட்டைகளை போடுங்கள்" என்று சொல்ல, வாணலிக்கு அடியில் கிடைத்த சந்தின் வழியாக சிறுசிறு துண்டுகளைத் தள்ளினார்கள். நெருப்பு கொழுந்து விட்டு வாணலியை சுற்றி எரிந்தது. பல கைகள் அந்த வாணலியை தாங்கிக் கொண்டிருப்பது போல தோற்றம் கொடுத்தது. வாணலி இன்னும் செந்நிறமாக மாறியது.

புத்தர் சிலையை கழுத்தில் சுருக்கிட்டு மூன்று பேர் தூக்கினார்கள். தூக்கிய மரம் வளைந்தது. மெல்ல எடுத்துக் கொண்டு போய் வாணலியில் வைத்தார்கள். மரத்துண்டை கீழே சாய்த்தார்கள். சுருக்குக் கயிறு தளர்ந்தது. கயிறை வெளியே எடுத்தார்கள். விலகிப் போனார்கள். புத்தர் சிலை தீயினுடைய தாக்கத்தால் செந்நிறமாக மாறியது. அடிப்பக்கம் மெல்ல உருகுவது தெரிந்தது. அடிப்பக்க போல தொடைகளும் உருகின. இடுப்பு நகர்ந்தது. நெஞ்சு நகர்ந்தது. தலை மெல்ல முன்பக்கம் சரிந்தது. அருண்மொழிப் பட்டன் திகைப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவர் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

புத்தர் சிலை மெல்ல உட்காரத் துவங்கியது. அமிழத் துவங்கியது. உருமாறியது. வெகு சீக்கிரத்தில் அது நீராக மாறி அந்த வாணலி முழுவதும் தங்க நீராக தகதகத்து கொப்புளத்தோடு எரிந்தது. சில சமயம் கொப்புளங்கள் வெடித்தன. தங்கத் துகள்கள் வெளியே வந்து விழுந்தன.

"தாமிரம் கலந்திருக்கிறது. அதனால் தான் வெடிக்கிறது" என்று



பொற்கொல்லர் கூவினார்.

"தாமிரம் கலக்காமல் பொன்னால் மட்டும் இவ்வளவு உறுதியாக செய்ய முடியாதய்யா" இன்னொரு பொற்கொல்லர் பதில் சொன்னார்.

சில அழகான, அமைதியான, அன்பு ததும்பும் முகத்திலுடைய அந்த ஒரு முழ உயர புத்தர் சிலை முற்றிலும் நீராக மாற அருண்மொழிப் பட்டனை அது ஏதோ செய்தது. ஒரு துக்கத்தோடு அக்க விட்டு வெளியே வந்தான்.

"இரும். எங்கே போகிறீர்கள், புத்தர் என்னவாக மாறுகிறார் என்று பார்க்க வேண்டாமா?"

குழி கரண்டியில் தங்கத்தை மொண்டு அச்சில் ஊற்றினார்கள். வட்டமாக நிறைய குழிகள் இருந்தன. அந்த குழிகளில் தங்கம் ஊற்றப்பட்டது. குழிகளில் தங்கம் கொட்டப்பட்ட உடனேயே இரண்டு ஆட்கள் உட்கார்ந்து கொண்டு ஒருவர் முத்திரையை அழுத்தி இன்னொருவர் அதை அதன் மீது சுத்தியால் ஓங்கி அடித்தார். அடுத்த குழியில் வைக்க மறுபடியும் அடி விழுந்தது. படேர் படேர் படேர் என்று ஒரு தாளகதியில் முத்திரைகள் அடிக்கப்பட்டன. மொண்டு மொண்டு அச்சில் ஊற்றுவதும், அச்சில் ஊற்றியதும் முத்திரை அடிப்பதும் தொடர்ந்து விரைவாக நடந்தது.

மொத்த புத்தர் சிலையும் அச்சு பதித்த தங்க நாணமாய் உறைந்ததும் அச்சிலிருந்து தட்டி பொற்காசுகளை வெளியே எடுத்தார்கள். பொற்காசுகளை ஒன்று திரட்டி நீர் தெளித்தார்கள். நீர் தெளித்த பொற்காசுகளை அள்ளி நீர் மிகுந்த பானையில் போட்டார்கள். சூடு முற்றிலும் தணிந்ததும் எடுத்து வேகமாக தேய்த்து நீட்டினார்கள்.

சரியாக பதிந்திருக்கிறதா என்று வந்தியத் தேவர் பார்த்தார்.

புலிச் சின்னமும், குத்துவிளக்கும் சோழம் என்று எழுத்துக்களுமாய் பளபளத்தது.

சோழ தேசத்தில் ஒரு படையெடுப்பு நடக்கப் போகிறது என்றால் அதற்கு முதல் வேலை காசு அடிப்பது தான். புத்தர் சிலையை துண்டு துண்டாக நறுக்கியா கொடுக்க முடியும். முடியாது. எனவே வீரர்களுக்கு காசு கொடுப்பதற்காக இம்மாதிரி பொன் நாணயம் அடிப்பது வழக்கம்.

பொன் நாணயம் அடிக்கத் துவங்கி விட்டோம் என்று வெளியே தெரிந்தால் ஜனங்களுக்கு படையெடுப்பு நிச்சயம் என்று புரிந்து விடும். இதை மெல்ல கசிய விட்டு விடுவார்கள். இன்னும் இரண்டு

நாளில் சோழ தேசம் முழுவதும் யுத்தத்திற்கு தயார் ஆகி விடும்

அரிசி விலையும், பருப்பு விலையும் அதிகரிக்கும். மன்
இந்த முறை வேறு திட்டம் வைத்திருக்கிறார். அரிசியும், பருப்
தஞ்சையிலிருந்து எடுத்துக் கொண்டு போகாது தஞ்சையினுடை
பொருளாதாரத்தை பாழடிக்காது. இங்கிருந்து ஒரு நெல்மணி அ
கூட எடுக்காமல் தொண்டை தேசத்தில் போய் எடுத்துக் கொள்ளல
என்கிறார். நடுநாடு கூட அவ்வளவு விளைச்சல் இல்லை, தொண்
தேசத்தில் நல்ல விளைச்சல் இருக்கிறது. அரிசி, பருப்பு, கரு
வாழை, வெற்றிலை எல்லாம் தொண்டை தேசத்தில் அமோகம
விளைகிறதாம்.

திருக்கடல்மல்லை தாண்டி உள்ளே போய் விட வேண்டும். செங்
பேட்டை என்ற ஊர் கட்டுமானப் பணிகளுக்கு மிகவும் பிரசித்
மானது. அங்குள்ள களிமண்ணில் சுட்டு செங்கல் அறுப்பது என்ப
தொடர்ந்து நடந்து வருகிறது. அங்குள்ள வயல்கள் வளமானவை. வ
டல் மண் மிருதுவானவை. அங்கே அரிசி நல்ல விலையில் கிடைக்கிற
எனவே வழியில் வாங்கி கொள்ளத்தான் நாம் தீர்மானித்திருக்கிறோ

முதல் இரண்டு நாட்களுக்கு நாம் அரிசி சோறு எடுத்துக் கொண்டா
போதும். அதை வெளியே போய் வாங்க வேண்டிய அவசியம் இல்ல
கோட்டையிலுள்ள தானியக் கிடங்கிலிருந்தே எடுத்துக் கொள்ளலா

தொண்டை நாட்டு அரிசி சாப்பிட்டிருக்கிறாயா. தனி ருசி, அ
வாழைப்பழம் பார்த்திருக்கிறாயா. கனிரென்று தித்திக்கும். வெற்றில
இளந்தளிராக இருக்கும். தஞ்சையைப் போல முரட்டு குண
இல்லை. எல்லாமும் நாசுக்கு. 'தொண்டை நாடு சான்றோருடைத்
என்று சொல்வார்கள். சான்றோர்கள் உள்ள இடத்தில் காரமும், உ
பதிகமாகவும் உணவு இருக்குமா, அதுவும் சாதுவாகத் தான் இரு
கும்" வந்தியத்தேவர் சொல்லச் சொல்ல அருண்மொழிப் பட்ட
அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தான்.

"இன்னும் புத்தரிலிருந்து வெளியே வரவில்லையா"

"இல்லை. மரணபரியந்தமும் வெளியே வரமுடியாது என்று நினை
கிறேன். அப்படி ஒரு காட்சியை இன்று காட்டி விட்டீர்கள். ஏன் இ
காட்டினீர்கள் என்று கோபம் வந்தாலும், இதைப் பார்த்து ஒரு நிம்ம
நிறைவு இருக்கிறது. இதைப் போலத்தான் நானும் மரணமடைய வேண்
டும் என்று விரும்புகின்றேன். புத்தருடைய இறப்பு இப்படித்தான் இரு
திருக்கும்"

"என்ன சொல்கிறாய் அருண்மொழி"



"தனக்குள்ளே தான் ஒடுங்கியிருக்க வேண்டும். தன் உயிர்
இல்லை தன் மனம் மொத்தமும் உயிருக்கு கொண்டு வந்து உயிரால்
மனம் மொத்தமும் உறிஞ்சப்பட்டு மனம் காலியாகி வெறும் உயிர்
மட்டுமே நின்று அதுவே வெளியே பறந்திருக்கும். அது தான்
உன்னதமான சாவு"

"மனம் வேறு உயிர் வேறா"

"வேண்டாம். உங்களுக்கு அது வேண்டாம். மனம் என்பது
புத்தி சொன்னாலே மிகப்பெரிய பாடமாகும். ஆத்மா என்கிற உயிர்
எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கிறது. அதுவே எல்லாவற்றையும்
இயக்குகிறது. அதைவிட தாங்களே முக்கியம் என்று புலன்களும்,
புலன்களால் ஏற்பட்ட புத்தியும், புத்தியால் தூண்டப்பட்ட மனமும்
அலைகிறது. அலைகள் அலைவதை தடுப்பதற்கு ஆத்மா எந்த
முயற்சியும் செய்வதில்லை. அதே சமயத்தில் என்ன அலைந்தாலும்
என்னோடு தான் வரவேண்டும் என்பதாய் ஆத்மா இருக்கும்.

மனதோடு உயிர் பிரிந்தால் மறுபிறவி உண்டு. உயிர் மனதை
உறிஞ்சி தன்னுள் அடக்கிக் கொண்டு அதைக் கபளீகரம் செய்து விட்
டால் அடுத்த பிறவி இல்லை. ஆன்மா ஆன்மாவாகவே இருக்கும்"

"இதையெல்லாம் எங்கு கற்றாய் அருண்மொழி"

"நாகை விகாரத்தில், புத்த பிட்சுக்களோடு விவாதங்களில்
ஏற்பட்டது"

"இதை சொல்லால் சொல்கிறாயே, செயலால் உணர்ந்ததுண்டா,
ஆத்மா ஞாபகத்தை உறிஞ்சுகிறது. ஆத்மா மனதை தின்றது.
கபளீகரம் செய்தது என்பதை அறிந்திருக்கிறாயா"

"சில கணங்கள் உணர்ந்திருக்கிறேன். ஆனால் முழுவதுமாய்
தெரியவில்லை. அறிவேன் என்ற எண்ணம் மட்டும் எனக்குள்
இருக்கிறது.

"சைவ சித்தாந்தம் இதை சொல்லித் தரவில்லையா"

"சொல்லித் தருகிறது. பதி, பசு, பாசம் என்று மூன்றாகப்
பிரித்து பசு பாசம் உடையது. பாசத்தை அறுத்தால் பசு காணாமல்
போகும். பதி மட்டுமே எஞ்சும் என்று சொல்லப்படுகிறது.

"வைணவம் வேறானதோ"

"ஆமாம். என்ன கரணம் அடித்தாலும் ஜீவாத்மா, பரமாத்வோடு
சேர முடியாது. கடைசி வரை ஜீவாத்மா கைகட்டி பரமாத்மாவிற்காக

எங்கி நிற்க வேண்டியது தான் என்பது தான் அவர்கள் கருத்து.

"உன்னை தத்துவம் பேச மட்டும் இங்கு அழைத்து வரவில்லை. நீ விரும்புகின்ற புத்தரை உருக்குகிறேன் பார் என்ற கொடுமை… காட்டவும் உன்னை கூட்டிவரவில்லை.

எந்த காரணம் கொண்டும் குந்தவையிடம் முறைத்… கொள்ளாதே. என்னதான் கடிந்து கொண்டாலும் இராஜேந்… சோழருக்கு தன் தங்கையின் மீது மிகுந்த பாசம் இருக்கிற… அதுவும் அதற்கு அவருடைய மருமகனும் காரணம். நீ நல்ல பெ… எடுக்க வேண்டுமென்றால் குந்தவையினுடைய மகனான இரா… நரேந்திரனை உன் பக்கம் இழுத்துக் கொள். எனக்கு வயதா… விட்டது. என்னால் போர் பயிற்சி சொல்லித் தர முடியாது. என்னா… ஒரு இளைஞனிடம் அமைதியாக பேசுகிற அளவுக்கு பொறும… இல்லை, சூட்சமம் உள்ளவர்களோடுதான் என்னால் பேச முடியு… அவன் கொஞ்சம் சரியாக வளர்க்காத பிள்ளை. ஒரு விஷயத்… மூன்று, நான்கு முறை அவனுக்கு சொல்ல வேண்டி இருக்கிற… அந்த பொறுமை என்னிடம் இல்லை.

அதே சமயம் அவனை சரியாக வளர்க்க வேண்டுமே என்… கவலை இருக்கிறது. கீழைச் சாளுக்கியத்தில் ஒரு சரியான அர… இல்லையெனில் நமக்கு எந்நேரமும் தொந்தரவு தான். பரதகண்ட… இருக்கும் வரை மேலை சாளுக்கியத்திற்கும், சோழ தேசத்திற்கு… சண்டை இருக்கத் தான் செய்யும். காரணம் நம்முடைய அடிப்படை… யான குணங்களே வேறு. தங்களைச் சிறந்த சைவர்கள் என்று அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். சிவலிங்கத்தை நெஞ்சில் கட்டிக் கொண்டால் சைவனாகி விட முடியுமா"

"பதி, பசு, பாசம் என்று சொன்னாயே, அது அற்புதமான விஷயம், சைவ சித்தாந்தம் மனித வேரை அசைத்து பார்க்கின்ற விஷயம். அவர்கள் சிவன் என்ற விஷயத்தை விஷ்ணுவாக மாற்றி வெறும் ஆராதனை செய்வதிலேயே தங்களுடைய கவனத்தை செலுத்தி விட்டார்கள்.

சிவன் அபிஷேகப் பிரியன். அலங்காரப் பிரியன் என்று சொல்லி மும்முரமாய் பாலும், தயிரும் ஊற்றுவதிலேயே குறிக்கோளாய் இருக்கிறார்கள். சைவம் தத்துவரீதியாக அழிந்து வெறும் பக்தி பரவசமான விஷயமாக மாறும். வெறும் சோற்றுப் பட்டாளமாகப் போகும்.

மேலைச் சாளுக்கியத்தில் உணவு வகைகள் அதிகம். உணவு உண்பது அதிகம். பல போர்களங்களில் வேறு எதுவும் உண்ணக்



…கொள்ளாமல் வெறும் நீர் ஊற்றி அரிசி சோறு சாப்பிட்டு விட்டு …இருக்கிறேன். வெறும் மாமிசம் மட்டும் கூட வைத்து சாப்பிட்டு …டு போயிருக்கிறேன். மேலைச் சாளுக்கியத்து படை வீரர்களுக்கு …வெஞ்சினங்களோடு சாப்பாடு போட வேண்டும். எப்படி சண்டை …டுவோன், தந்திரம் தான் அதிகமாகும். அதனால் தான் மேலைச் …சாளுக்கியத்திலிருந்து நேரிடையான படையெடுப்பு இல்லாமல் சுற்றி …ந்தே படையெடுப்பு நடக்கிறது. சற்று அசந்த போது தாக்குதல் …து நடைபெறுகிறது.

சேர தேசம் அப்படி அல்ல. சாப்பாட்டுக்கு மிகப்பெரிய முக்கியத் …வம் சேர தேசத்து நம்பூதிரிகள் கொடுத்ததே இல்லை. நாமாவது …உணவு சாப்பிடுகிறோம். அவர்கள் அரிசி உணவை பிசைந்து …அதிகம் நேரம் உட்காராமல் தேங்காய் சிரட்டையில் எடுத்து …வீட்டு தொட்டுக் கொள்ள ஒரு வெஞ்சினம் சாப்பிட்டு விட்டு …விடுகிறார்கள். பதினைந்து நிமிடத்தில் இரைப்பையை விட்டு …போய் விடுகிறது. நிறைய பழங்கள் சாப்பிடுகிறார்கள். …கறிகள் சாப்பிடுகிறார்கள். மீன் நல்ல புரதச் சத்து உள்ள உணவு, …அதிகம் பேர் மீன் சாப்பிடுகிறார்கள். நம்பூதிரிகள் நிறைய தேன் சாப் …பிடுகிறார்கள். மருந்தே உணவு, உணவே மருந்து.

ஆனால் அருண்மொழி சோழ தேசம் இதுவரை இல்லாத …வகையில் வெறும் சாப்பாட்டு கடையாக மாறிக் கொண்டு வருகிறது. அது கவலையாக இருக்கிறது. இவ்வளவு வகையான தின்பண்டம் ஒரு மனிதருக்கு தேவையில்லை.

"எதற்கு இவ்வளவு பேசுகிறேன் தெரியுமா. என்னுடைய கேள்வி வேறு"

"ஸ்ரீ விஜயத்தில் பௌத்தருடைய ஆட்சி நடக்கிறது. மன்னன் பௌத்த பிட்சுக்களுக்கு அடங்கி நடக்கிறான். ஆனால் இன்னது தான் சாப்பிட வேண்டும் என்று இல்லாது வகை வகையாக ஏதேதோ மாமிசம் சாப்பிடுகிறார்கள். இது எப்படி? கொள்கை ஒரு பக்கம் செயல்கள் ஒரு பக்கம் என்று ஜனங்கள் பிரிந்திருக்கிறார்களே. இது எதனால்? இந்த இடத்தில் எப்படி பௌத்தம் ஊன்றியது. ஒரு வேளை பிட்சுக்களும் மாமிசம் சாப்பிடுவார்களோ. அப்பொழுது புத்தருடைய கொள்கை என்னவானது. புத்தன் பன்றி மாமிசம் சாப்பிட்டு இறந்தார் என்று சொல்லப்படுகிறதே"

"அப்பொழுது புத்தரும் மாமிசம் சாப்பிடுகிறவர் தானா, ஆடுகளை பலியிடக் கூடாது என்று தடுத்தது நாடகம் தானா.

உணவில் கவனம் செலுத்தாத ஒரு சமூகம் ஜெயிக்காது"

"ஏன் மௌனமாக இருக்கிறாய் அருண்மொழி?" வந்தியத்தே கேட்டார்.

"பசிக்கு உணவு. இவ்வளவு தான் பௌத்தருடைய என்ன அது இலையாக இருக்கலாம். கனியாக இருக்கலாம். சோற இருக்கலாம். சிறிய துண்டு மாமிசமாக இருக்கலாம். பசிக்கு உண அதோடு முடிந்து போயிற்று.

"உணவை உல்லாசமாக விவரிக்கிற பொழுது பல்வகைப்பட் விஷயங்கள் உல்லாசமாகி விடுகின்றன. உலகம் முழுவதும் உல் மாகிறது. உல்லாசமான உலகத்தில் கடவுள் இல்லை"

"கடவுள் என்கிற விஷயம் மிகத் தெளிவானது. எந்த விருப்போ, வெறுப்போ இல்லாதது. அதனால் மிகவும் வெறுமை யானது. அந்த வெறுமைக்குள் இருக்கின்ற அமைதி அலாதியானது கடும் வெப்பத்தில் புத்தர் சிலை உருகி, தன்னுள் ஆழ்ந்து, அமிழ்ந் கரைந்து தீராவது நிச்சயம் கண் கொள்ளாக் காட்சி. உங்களுக் நன்றி சொல்கிறேன்"

"எனக்குள்ளும் அந்த நான் என்ற அகந்தை. என் திமிர். உள்ளே குழைந்து காணாமல் போக வேண்டும் என்று வேண்டிக் கொள்கி றேன். வேண்டுவது கூட ஒரு தவறான விஷயம் தான். இடையறாது இந்த விஷயத்தை சிந்தித்துக் கொண்டிருந்தால் நானும் அவ்விதமே மாறி விடுவேன். தேனி புழுவை கொட்டி கொட்டி குளவி ஆக்குவது போல் என் மனம் திரும்பத் திரும்ப இந்த விஷயத்தை சிந்தித்து அதுவாகவே மாறி விடும்"

"அருண்மொழி, கிருஷ்ணன் ராமனுக்கு நீ எப்படி மகனாக பிறந்தாய். அவர் தத்துவம் எல்லாம் பேசுவார். ஆனால் அநியாயத்துக்கு தந்திரக்காரர். ஒரு வாய்ப்பு இருப்பின் அந்தணர் அரசாளலாம் என்று ஒரு விதி இருப்பின் வெகு நிச்சயம் அவர் இராஜராஜரை கவிழ்த்து விட்டு தானே அரசராகி இருப்பார். அவ்வளவு செயல் வேகம் உடையவர். நீயோ உள்ளுக்குள் சூழ்ந்து தவிக்கிறாய். எப்படி இது என்று ஆச்சரியமாக இருக்கிறது"

"உங்களுக்கு என் தந்தையைப் பற்றி தெரிந்தது அவ்வளவு தான். தட்டில் வைத்து கொடுத்தால் கூட அவர் அரச பதவியை ஏற்க மாட்டார். ஏனெனில் இராஜராஜர் தலைக்கு மேல் தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் என்பது அவருக்கு தெள்ளத் தெளிவாகத் தெரியும். அம்மாதிரி இராஜேந்திரர் தலையில் உட்கார



விருப்பமில்லை. உடனே நகர்ந்து விலகி விட்டார். இராஜேந்திரரை நிறுத்த முடியவில்லை. அதனால் வெறும் சேனாதிபதியாக வெற்றிலை, பாக்கோடு உட்கார்ந்து விட்டார். என்னை தள்ளி விட்டார். இப்பொழுது அவருடைய இடத்தை பிடிக்க வேண்டும் என்றால் இராஜேந்திரர் தலையில் உட்கார வேண்டும். எனக்கு அதில் விருப்பம் இல்லை"

"உன் விருப்பம் என்ன? அருண்மொழி"

"சொல்லட்டுமா. வெளியே சொல்லக் கூடாது"

"சொல் அருண்மொழி. நாம் பகைவர்கள் அல்ல. நண்பர்கள். யமாகச் சொல்"

"புத்த பிட்சுவாவது என் இலட்சியம். பரத கண்டத்தை விட்டு போய் குடியேறி அங்கு மொழியற்ற உலகத்தில் வாழ்ந்து புத் சங்கம், தர்மம் என்று உட்கார்ந்து விடுவது தான் என் ஆசை"

"எது உன்னை தடுக்கிறது அருண்மொழி"

"இந்த ஆசை வருவதற்கு காரணமே என் தந்தை. என் படிப்பு, என் அனுபவம், இந்த சோழ தேசம். அதற்கு நன்றி செலுத்தாமல் எதனால் ஊட்டி வளர்க்கப்பட்டேனோ, அதற்கு காணிக்கை நான் வெளியூர் போவதில் அர்த்தமில்லை என்று தோன்றி வாழ்ந்த இடத்திற்கு நன்றி செலுத்தி விட்டு கொஞ்சம் வயதான நான் கடல் கடந்து போய் விடுவேன்"

"அருண்மொழி, துண்டை மெல்லியதாக உதறு"

அவன் அவிழ்த்து துண்டை மெல்லியதாக உதறினான். தங்கத் துகள்கள் கீழே உள்ள கருப்புத் துணியில் படர்ந்தன. அவைகளை தொட்டு ஒற்றி எடுத்தார்கள்.

அவன் நகர்ந்து போய் தன்னுடைய துணிகளை எடுத்துக் கொண் டான். அங்கச் சாலை தாண்டி வாசலுக்கு வந்து குதிரை ஏறினான்.

"எப்பொழுது படை வடக்கு நோக்கி நகரும்"

"இன்னும் ஒரு வாரம் ஆகும் என்று தோன்றுகிறது. வில்லாளிகளுக்கு பரமன் மழபாடியார் தனித்த பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். அரையன் இராஜராஜன் குதிரைகளை எப்படி பிரிந்து ஒன்றாக தாக்க வேண்டும் என்று பயிற்சி கொடுத்துக் கொண்டிருக்கிறார். யானைகளை வெகுதூரம் ஓட்டிக் கொண்டு போகிறார்கள். ஓட வைக்கிறார்கள், யானைகள் ஓடுவதற்கு மட்டும் பழக்கமல்ல. அம்பாரியில் உள்ளவர்களுக்கும் பழக்கம் வர வேண்டும்"

"அரையன் இராஜராஜன் தான் தலைமை தாங்குகிறாரா?"

"ஆமாம். இராஜேந்திரனுடைய மூன்றாவது மகன் வீரஇராஜேந்திரனும் வருவான். ஆனால் தலைமை தாங்குவது அரையன் இராஜராஜன் தான். வீர இராஜேந்திரன் உபசேனாதிபதி மட்டுமே"

"ஆக நமக்கென்ன வேலை"

"கீழைச் சாளுக்கியம் பெரிய படை எடுப்பு அல்ல அருண்மொழி. இந்த படை வருகிறது என்றதுமே அவன் காணாமல் போவான். ஒளிந்து கொள்வான். விஷ்ணுவர்த்தன் விஜயாதித்தன் கைது செய்யப்படுவான். விமலாதித்தன் மகனான இராஜ நரேந்திரனுக்கு பட்டாபிஷேகம் நிச்சயம் நடக்கும். அதற்குப் பிறகு தான் போர் நடக்கும்.

கலிங்க தேசம், ஒட்ட தேசம் என்று நகர வேண்டும். பால வம்சத்து மகிபாலன் இருக்கிறான். கங்கைக் கரையில் அவனை கொல்ல வேண்டும்"

"கங்கை வரை போவோம் என்று நினைக்கிறீர்களா?"

"உள்ளுக்குள்ளே இராஜேந்திர சோழனுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிறது"

"என்ன எதனால் அந்த எண்ணம்"

"என் தந்தை என்ன செய்யவில்லையோ, அதை தான் செய்ய வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உண்டு. அதனால் தான் வெறும் கோவில் மட்டும் கட்டாமல் கோவிலைச் சுற்றி கோட்டை கட்டி கோட்டைக்குள் அரண்மனை கட்டி, ஒரு நகரமே கோட்டைக்குள் இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கிறார். அதற்கு மிகச் சரியான இடத்தை தேர்ந்தெடுத்திருக்கிறார்.

கொள்ளிடத்தில் வெள்ளம் வரும் போது அவை கால்வாய்களின் வழியாக ஊருக்குள் திருப்பி விடப்படும். ஊருக்குள் திருப்பி விடப்பட்ட நீர் குளங்களாகவும், ஏரிகளாகவும் கிணற்றுப் பாசனமாகவும் மாறும். அதே சமயம் கட்டுப்பாடற்ற வெள்ளம் வரும் போது அதை வேறு திசைக்கும் திருப்பி விட முடியும். நகரை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

ஜெயங்கொண்டத்தில் ஸ்தாபிக்கப்படும் நகரம் மேடானது அதே சமயம் மிகவும் நீரோட்டமுடையது. ஈசான்ய மூலையில் கணபதியை நிறுத்தியாகி விட்டது. மிக அழகான கணபதி"

"எப்போது நடந்தது இதெல்லாம்?"

"நீ நாகை விகாரத்தில் இருந்த போது"



"ஆனால் அங்கு எனக்குச் சொல்லப்பட வில்லை"

"புத்த பிட்சுக்களுக்கு தெரியும். சொல்ல மாட்டார்கள். புத்த பிட்சுக்கள் உங்களைப் போன்றவரை மூளைச் சலவை செய்வதிலேயே குறியாக இருப்பார்கள்.

எதற்காகப் போர், எதற்காக சோழ தேசம், நீ யார் என்று கேள்வி உட்கார வைத்து விடுவார்கள். அங்கு மாட்டிக் கொள்ளாதே அருண்மொழி. நீ சொல்வதைப் போல புத்த பிட்சுவாய் மாறி சோழ தேசம் விட்டு வெளியேறி விடு. சோழ தேசத்தில் இருக்கும் வரை சோழ தேசத்திற்கு விசுவாசமுள்ளவனாய் இரு. புத்த பிட்சுவை நெருங்க விடாதே. அவனை பிரம்பால் அடிப்பதற்கு தயங்காதே"

"ஏன் அவ்வளவு துவேஷம் உங்களுக்கு"

"எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த துவேஷமும் இல்லை. ஆனால் ஸ்ரீ விஜயத்து பௌத்த பிட்சுக்களால் தான் இந்த வணிக வீரர்கள் பேரவஸ்தைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். அந்த அஹிம்சாவாதிகளால் தான் இத்தனை கொடுமை எளிதாக நடைபெறுகிறது. எனவே ஸ்ரீ விஜயத்தை கடுமையாக தண்டிக்க வேண்டும். முதலில் நாகை விகாரத்தை தண்டிக்க வேண்டும் என்று ஞாபகம் வைத்துக் கொள். கிழக்கு பக்கம் தளர்ந்திருக்கிறது என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. கிழக்கு பக்கம் சோழ தேசம் தாக்கப்படும் என்று நிசும்பசூதனி சொல்லி இருக்கிறாள். எனவே அந்த இடத்தை உறுதியாக வைத்துக் கொள்வது உன் பொறுப்பாக மாறுகிறது"

"புத்திமதிக்கு நன்றி வந்தியத்தேவரே. நான் வெகு நிச்சயமாக புத்த பிட்சுக்களோடு கை கோர்த்துக் கொள்ளவில்லை. சோழ தேசத்திற்கு விசுவாசமாகத் தான் இருக்கிறேன், சமயம் என்று வருகிற பொழுது பிடிவிலை வருகிறதே தவிர, தேசம் என்று வருகிறபொழுது நான் சோழ தேசத்துக்காரன்"

"இல்லை. சமயம் தேசத்தை ஒதுக்கி விடும். சமயம் தான் முக்கியம் தேசம் பிறகு என்று வந்து விடும். அங்கேயும் கவனமாக இரு"

அக்கச் சாலையிலேயே வந்தியத்தேவர் நின்று கொள்ள அருண்மொழிப் பட்டன் குதிரை ஏறி புறப்பட்டான்.

எங்கேனும் போய் தனிமையில் சிந்திப்பது நல்லது என்று தோன்றியது. இரண்டு லட்சம் வீரர்களுக்கு சோறு வேண்டும் என்றால் எவ்வளவு அரிசி வேண்டும். எத்தனை நாள் தங்கப் போகிறார்கள், அத்தனை பேருக்கும் அரிசி என்ன செய்வது. யோசிக்க

வேண்டும். நடுநாடு போகலாமா, தொண்டை நாடு போகலா உணவுக்கு ஏற்பாடு செய்யலாமா அல்லது ஸ்ரீ விஜயத்து தூதுவ கைது செய்து வரலாமா. ஸ்ரீ விஜயத்து தூதுவனை கைது செ அருண்மொழி ஆட்கள் போதும், அவன் போக வேண்டி இல்லை, தொண்டை மண்டலம் போனால் அரிசி வாங்குவ பற்றியும், அரிசியை பத்திரமாக பாதுகாப்பது பற்றியும், சமைப்பது உண்டான பாத்திர பண்டங்கள் பற்றியும், அங்கே உள்ள கி அதிகாரிகளுக்கு உற்சாகமூட்டுவது பற்றியும் செய்யலாம்.

எந்த வழியாகப் போகிறோம். ஜெயங்கொண்டம் வழியாக அல்லது கடற்கரை ஓரமாக பயணப்பட்டு திருகடற்மல்லையா, தி கடற்மல்லை எளிது. ஆனால் உணவு பற்றி அத்தனை தெளிவ இருக்க முடியாது.

சொல்லிவிட்டு போகலாமா அல்லது நாமாக கிளம்பி விடலாமா திருக்கடற்மல்லை தாண்டி மருந்தீஸ்வரர் கோவில் இருக்கிறது. அ தந்தைக்கு நேர்ந்து கொள்ளலாம். மருந்தீஸ்வரர் தாண்டி மயிலையி திருவல்லிக்கேணி பார்த்தசாரதி என்று ஒரு அழகிய விண்ணகர இருக்கிறது. அங்கே போய் அங்கேயும் தந்தைக்கு வேண்டி கொள்ளலாம். பிறகு திருவொற்றியூர் போய் பாடி இறங்கலாம்.

அரிசி எங்கே வாங்க முடியும்.

திருமயிலையில் தான் வணிகர்கள் அதிகம் இருக்கிறார்கள். அங் போவது உசிதம் தானே. ஒரு வார்த்தை மன்னனிடம் பேசி விட் போகலாமா, அவன் அரண்மனை நோக்கி திரும்பினான்.

அடுத்த வாரம் படைஎடுப்பு எனில் இப்பொழுது இன் எவரேனும் வடதிசை நோக்கி கிளம்ப வேண்டும் என்று கணக் போட்டான்.

**அ**வன் அரண்மனை நோக்கி போகும் பொழுது திருமயிலையில் உள்ள அந்தணர்கள் சீறி எழுந்தார்கள்.

"தஞ்சையிலுள்ள அந்தணர்களின் நிலங்களை பறித்து வேளாண்வகை நிலம் ஆக்கி விட்டால், அதே போல் இங்கேயும் நடக்குமா, நடக்காது. நடக்க விட மாட்டோம். எங்கள் நிலங்கள் எங்களுக்குத் தான் சொந்தம். அது பரம்பரை உரிமை" வேளாளர்களை நோக்கி அந்தணர்கள் சீறினார்கள்.

"நாங்கள் கொடுப்பதை நீங்கள் வாங்கிக் கொள்ள வேண்டும்.



எவ்வளவு கொடுப்பது என்பதை விளைச்சல் பொறுத்து நாங்கள் தீர்மானம் செய்வோம்" என்று அந்தணர்கள் அடித்துச் சொல்ல,

"முடியாது" என்று வேளாளர்கள் தலை அசைத்தார்கள்.

"முடியாது என்றால் போங்கள்"

"அறுப்பு அறுக்க முடியாது என்று சொல்கிறோம். இன்னும் மூன்று நாட்களில் அறுத்தாக வேண்டும். இது முதல் போகம். இதற்குப் பிறகு நீர் விட்டு மறுபடியும் உழுது விதைத்தால் தை மாதம் நமக்கு நெல் கிடைக்கும். இந்த நெல் உங்களுக்கு வேண்டுமென்றால் நாங்கள் அறுத்தால் தான் முடியும். நாங்கள் சொல்கிற அளவுக்கு நீங்கள் வந்தாலொழிய இது நடக்காது"

"என்ன வேண்டும் என்று சொல்லுங்கள்"

"ஐம்பதுக்கு ஐம்பது"

"முடியவே முடியாது. என்ன திமிர். எப்படி கேட்கிறாய். என்னுடைய நிலத்தில் நீ ஐம்பது பகுதியாக. எப்படி?"

"விதைத்தது நான், உழுதது நான், அறுக்கப் போவது நான். எனக்கு ஐம்பது இல்லாமல் வேறு எதற்காக உழுவது, வேறு எதற்காக விதைப்பது. எங்களுக்கு தேவையில்லை. எங்கள் வீட்டு உணவுக்கு எங்களுடைய தானியம் போதும், எங்களால் உழுது கொள்ள முடியும். உங்கள் வீட்டு உணவிற்கு உங்களால் உழுது கொள்ள முடியாது"

"வெளியூரிலிருந்து ஆட்கள் கொண்டு வந்து நாங்கள் விதைப்போம், அறுப்போம்"

"வெளியூரிலிருந்து வேளாளர்கள் தானே வர வேண்டும். அந்தணர்களா வந்து விதைப்பார்கள். அவர்களா அறுப்பார்கள். அந்த வேளாளர்களை வேண்டாம் என்று நாங்கள் வேண்டிக் கொண்டால் வயல் விட்டு எழுந்து வெளியே போய் விடுவார்கள்" அவன் கை கட்டி நின்றிருந்தான். பெயர் சிராளன்.

நாயன்மார் கதைகளில் அதிக ஈடுபாடு உடைய அவனுடைய தகப்பனார் சிராளன் என்று அவனுக்குப் பெயர் வைத்தார். இறைவனே வாய் நிறைய சிராளனே வா. செல்லக் குழந்தையே வா என்று அழைத்தார் அல்லவா. எனவே, சிராளன் என்ற பெயர் அவருக்கு மிகவும் பிடிக்கும். அவனை அழைப்பவர்களுக்கும் அந்தப் பெயர் பிடித்திருந்தது. மற்றவர்களுக்கு பிடிக்கும்படியாக அவனும் நடந்து கொண்டான்.

ஆனால் இந்த கூட்டத்தில் அப்படி நடந்து கொள்ள முடியாது என்று அவனுக்கு தோன்றியது.

"வேளாளர்கள் கேட்டது தவறு" அவன் சொல்ல அந்தணர்கள் சட்டென்று அமைதியானார்கள்.

"ஐம்பதுக்கு ஐம்பது, என்பது தவறு" என்று சொல்ல வேளாளர்கள் திகைத்தார்கள்.

"வேளாளர்களுக்கு அறுபது. வேலை செய்யாத உங்களுக்கு நாற்பது என்று அவன் சொல்ல, மறுபடியும் 'ஓ'வென்று கூச்சல் எழுந்தது. வேளாளர்கள் கை தட்டி சிரித்தார்கள். வேளாளர்கள், வேலை செய்யாதவர்கள் என்று அவன் பிரித்தது அவர்களுக்கு சந்தோஷமாக இருந்தது.

"என்ன சொல்கிறீர்கள், மறுபடியும் அவன் பேச, வேளாளர்கள் திரும்பவும் வாய் விட்டு சிரித்தார்கள். அந்தணர்களுக்கு கோபம் மிகவும் வேகமாக பொங்கியது.

"உன்னுடைய வாய் அதிகம் பேசுகிறது. திமிர் தலைவிரித்து ஆடுகிறது. இங்குள்ளவர்களை தூண்டி விட்டு பின்னாலிருந்து நீதான் இயக்குகிறாய் என்று தெரியும். நான் சொல்வதை கேள். மரியாதையாக இந்த இடத்தை விட்டு போய் விடு. இது நீ பேசக்கூடிய இடம் அல்ல. உன் தந்தையும், உன் மாமனும் மற்றும் பெரியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள்"

"ஐம்பதுக்கு ஐம்பது ஒத்துக் கொள்ளவே முடியாது. அறுபதுக்கு நாற்பது. எங்களுக்கு அறுபது உங்களுக்கு நாற்பது"

"தர முடியாது"

"முடியவே முடியாது" அவன் வேகமாக மறுத்தான்.

"சரி அறுக்காதே போ. நான் மாடு மேயவிட்டு விடுகிறேன்" என்று அந்தணர்கள் சொல்ல, வேளாளர்கள் பின்வாங்கினார்கள். அந்தணர்கள் கலவரப்பட்டார்கள்.

புலிக்கொடியோடு கூடிய ஈட்டிகள் எடுத்து வந்து ஆறு போர் வீரர்கள் மயிலாப்பூரின் உள்ளே நுழைந்தார்கள்.

"வணிகர் தலைவன் யார்?" என்று விசாரித்தார்கள்.

"என்ன விஷயம்"

"இராஜேந்திர சோழர் தூதுவனாக வருகிறோம்" என்று சொல்லி ஒரு மூங்கில் குழலை நீட்டினார்கள்.



மூங்கில் குழல் மீது அரக்கு பதிந்திருந்தது. அரக்கு பதிந்திருந்ததில் மீது தலைமயிர் ஒட்டி இருந்தது. அரசு முத்திரை மிகத் தெளிவாகத் தெரிந்தது. வணிகர் தலைவர் வாங்கி நெற்றியில் ஒற்றிக் கொண்டார். அந்தணர்களை பார்த்தார். வேளாளர்களை பார்த்தார்.

"மெத்த முக்கியமாக ராஜ காரியம் வந்திருக்கிறது. கலைந்து விடாதீர்கள். இருங்கள்" என்று சொல்லிக் கொண்டார். மெல்ல எல்லோரையும் மூங்கில் குழலில் உள்ள முத்திரையை பார்க்க சொல்லிவிட்டு உடைத்து மூங்கில் குழலை திறந்தார். உள்ளே ஓலைச் சுவடிகள் இருந்தன. ஓலை வணிகர்களுக்கு எழுதப்பட்டிருந்தன.

"கிழக்கு நோக்கி திருமயிலை வழியாக அரசப் படைகள் வரும். அவைகளுக்கு திருமயிலையிலும், திருவொற்றியூரிலும் தங்க வைத்து மூன்று நாட்கள் உணவு போட வேண்டிய பொறுப்பு வணிகர்களை சேர்ந்தது. அதற்கு உண்டான காசு கொடுக்கப்படும். தங்கக் கழஞ்சுகளாக இருக்கும் என்று சொல்லப்பட்டது.

இன்னொரு ஓலையில், பாதைகள் சீரமைக்கவும், வீரர்கள் தங்க கொட்டகைகள் போடவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இன்னொரு ஓலையில், ஊருக்குள் ஏதேனும் பிணக்கு இருப்பின் அதை பேசி தீர்த்துக் கொண்டு வரவேற்பு நல்லபடியாக தர வேண்டும். இல்லையெனில் கடுமையாக தண்டனை கிடைக்கும்" என்று எச்சரிக்கப்பட்டிருந்தது.

இராஜேந்திரர் சொல்ல சொல்ல ஓலைநாயகம் அதை எழுத இரண்டு சேனாதிபதிகள் அதில் கையெழுத்திட்டிருந்தார்கள்.

"முடிந்ததா, உங்கள் பிரச்சனையெல்லாம், வேளாளர்களே நீங்கள் நெல் அறுத்தே ஆக வேண்டும். நெல் அறுத்தால் தான் அரிசி ஆக்க முடியும். அந்த அரிசி மொத்தமும் நமது படைகளுக்கு தேவை, நீங்கள் அந்தணர்களுக்கு என்ன கொடுப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அரிசி மொத்தமும் வணிகர்களாகிய நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்".

"நீங்களே கொடுத்து விடுங்களய்யா. என்ன விலை இருக்கிறதோ அதில் ஐம்பது சதவீதம் எங்களுக்கு கொடுத்து விடுங்கள்"

இப்பொழுது அந்தணர்கள் முன் வந்தார்கள்.

"ஐம்பதுக்கு ஐம்பது ஒத்துக் கொள்கிறோம். ஆனால் ஐம்பதுக்கு உண்டான அரிசியை நாங்கள் வாங்கிக் கொள்கிறோம்.

மீதி ஐம்பதுக்கான அரிசியை அரசிடம் கொடுத்து விடுங்கள்" சாமர்த்தியமாக பேசுவது போல பேசினார்கள்.

"ஒரு குண்டுமணி அரிசி கூட இருவருக்குமே கிடைக்காது. அத்தனையும் வணிகர் வீட்டுக்கு வந்து விடும். அவர் தீர்மானிப்பார். எத்தனை படைகள் வருகிறதோ, எத்தனை நாட்கள் இருக்கிறதோ அது போக மிஞ்சி இருப்பதை"

"அறுபதுக்கு நாற்பது" மறுபடியும் அந்தணர் கூவினார்.

"என்ன சொல்கிறீர்கள்?"

"மிஞ்சியதை அறுபதுக்கு நாற்பதாக பிரித்து நாற்பதை அவர்களுக்கும், அறுபதை எங்களுக்கும் தர வேண்டும்"

"ஒன்றும் மிஞ்சவில்லை என்றால் என்ன செய்வது" இப்பொழுது அவன் வேகமாக கூறினான்.

"அறுபதுக்கு நாற்பது, மிஞ்சாத அறுபது அவருக்கு மிஞ்சாத நாற்பது எங்களுக்கு" என்று சொல்ல, வேளாளர்கள் விழுந்து, புரண்டு சிரித்தார்கள்.

அந்தணர்கள் முகம் இருண்டது.

"அவனை அடித்து மிதிக்க வேண்டுமய்யா. ஆள் வைத்து கொன்று போட வேண்டும். மிகவும் அதிகப் பிரசங்கித்தனமாக பேசுகிறான்" இரண்டு மூன்று அந்தணர்கள் அடிக்குரலில் பேசி பல் கடித்தார்கள்.

பார்வைக்குத் தான் அந்தணர்களாக இருந்தார்களே தவிர அவர்கள் எல்லோரிடமும் தடிமனான கோல் இருந்தது. ஊன்றி நடப்பது போல அவர்கள் அதை உபயோகப்படுத்தினார்களே தவிர உண்மையில் அவர்கள் அதை பிரயோகப்படுத்தவும் தெரிந்தவர்கள் என்பது அதை வைத்துக் கொண்டிருந்த சேஷ்டையில் தெரிந்தது.

வேளாளர்கள் பலர் இடுப்பில் உடைவாள் சொருகி இருந்தார்கள். வணிகர்கள் மட்டுமே ஆயுதங்கள் இல்லாமல் மௌனமாய், அமைதியாய் உட்கார்ந்திருந்தார்கள்.

சீராளன் இடுப்பில் துணி கட்டி அந்த துணிக்கு நடுவே நீண்ட வாள் சொருகி இருந்தான்.

"சீராளா, கொஞ்சம் யோசனை செய். கேலி செய்கின்ற நேரமல்ல. மூன்று லட்சம் வீரர்கள் வருவார்கள் என்பது என் கணக்கு. திருவொற்றியூருக்கு நெல் அனுப்ப வேண்டும். இங்கும் வைத்துக் கொள்ள வேண்டும். திருமல்லையில் கூட கேட்கலாம். நாம் என்ன செய்வது, அறுக்க முடியாது என்று மட்டும் சொல்லி



விட்டால் மன்னருடைய கோபத்திற்கு தேவையில்லாமல் இந்த சோழ மண்டலம் ஆளாகும். நம்மை நம்பித் தான் அவர்கள் போர் நடத்துகிறார்கள். இன்னும் தொலைதூரம் போவதற்குக் கூட வீரர்கள் அரிசி வேண்டும் என்று கேட்பார்கள். நாம் கூடைக் கூடையாக அரிசியை மாட்டு வண்டிகளில் ஏற்றி அவர்களை பின் தொடர வேண்டியிருக்கும்"

"எதற்காகப் போர்?" ஒரு வணிகர் ஒரு அந்தணரை கேட்டார்.

"மேலைச் சாளுக்கியம் மறுபடியும் எதிர்த்துக் கொண்டிருக்கிறது. சோழ சாம்ராஜ்யத்து இளவலா அல்லது மேலைச் சாளுக்கியத்து இளவரசருக்கு பட்டம் என்று சூதாடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரம் நாம் உதவிக்கு போகவில்லை என்றால் நமக்கு பல தீங்குகள் வரக்கூடும்"

சிறிது நேரம் அங்கு அமைதி நிலவியது.

அறுபதுக்கு நாற்பதோ, தொண்ணூறுக்கு பத்தோ, என்பதுக்கு இருபதோ எனக்கு கவலை இல்லை. இனிமேல் நம்முடைய வேலை இங்கு உட்கார்ந்து பேசுவது அல்ல. களத்தில் இறங்குவது, அறுவடை செய்வது, கதிர் அடிப்பது, நெல்மணியை சேகரிப்பது, கூடை கூடையாக கொண்டு போய் பத்திரப்படுத்துவது இது தான் முக்கியம். நம்முடைய சண்டையை நம்மால் தீர்த்துக் கொள்ள முடியாவிட்டால் வேறு யாராவது தீர்த்து வைப்பார்கள்" என்று சொல்லிவிட்டு அவன் திண்ணையை விட்டு கீழிறங்கினான். வெளியே நடந்தான்.

"யார் தீர்த்து வைப்பார்கள்" ஒரு அந்தணர் கோபமாகக் கேட்டார்.

"மாமன்னர் இராஜேந்திரரே தீர்த்து வைக்கலாம். அவரிடம் நீங்கள் அறுபது நாற்பது கேட்கிறீர்கள். உழவனுடைய வயிற்றில் அடிக்கிறீர்கள் என்று சொல்லப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு திடமாக நடந்தான். அவனை மற்றவர்கள் பின் தொடர்ந்தார்கள்.

வேளாளர்கள் எல்லோரும் அவனுக்குக் கீழ் ஒன்று திரள்வதை அந்தக் கூட்டம் உணர்ந்தது. வணிகர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவன் சொல்வது தெள்ளத் தெளிவான விஷயம். இராஜேந்திரருக்கு இந்த செய்தி போய் நீங்கள் அதட்டுகிறீர்கள், அட்டகாசம் செய்கிறீர்கள் என்று சொன்னால் உங்களுக்கு எதிராகத் தான் கிளம்புவார். ஏற்கனவே இராஜேந்திர சோழர் உங்களைப் பற்றி நல்ல அபிப்ராயம் கொண்டவர் அல்ல. போர் நேரத்தில் உதவி

செய்யாமல் நீங்கள் பேரம் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிந்தால் அது தவறாக முடியும். உங்களுக்கு தவறு நேர்ந்தால் அது எங்களுக்கு நேர்ந்தது போலத்தான். எனவே உடனடியாக அவரோடு சமாதானத்திற்கு போங்கள். உங்களைப் பற்றி குறை சொல்லும்படி வைத்துக் கொள்ளாதீர்கள்.

ஓலை கொண்டு வந்த வீரர்கள் வெறும் வீரர்கள் அல்ல; உளவாளிகள். அங்கு என்ன நடந்தது என்று வாயைக் கிண்டி தெரிந்து கொண்டார்கள். அவர்களுக்காக திருமல்லையில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு அரசாங்கம் செயல்படும் விதம் எப்படி என்று பொது மக்களுக்கு தெரிவதேயில்லை. அரசாங்கத்தை வெகு சுலபமாக எதிர்த்து விடலாம் என்று நினைக்கிறவர்கள் அத்தனை பேரும் முட்டாள்கள். அரசாங்கம் மிக உயரமானது. மிக அகலமானது. மிக பலமானது. அதற்கு கூர்மையான கண்களும், கூர்மையான காதுகளும் உண்டு.

அது அரசாங்கத்தை முறைத்துக் கொள்வது என்பது முட்டாள் தனமான வேலை. அரசாங்கத்தை முறைத்துக் கொள்ள ஒற்றுமையாக பல லட்சம் பேர் ஒன்று திரள வேண்டும். அப்போது வேறு அரசாங்கம் அமையும்.



# 14

ஆனால் ஓலை எடுத்து வந்தவர்கள் கெட்டிக்காரர்கள். அவர்கள் வெறும் தூதுவர்கள் மட்டுமல்ல. உளவாளிகள்.

அந்த சபையில் என்ன பேச்சு நடந்தது. யார் யார் என்ன பேசினார்கள் என்று மெல்ல மெல்ல வாயை நோண்டி தெரிந்து கொண்டார்கள். தள்ளி நின்று வேடிக்கை பார்த்த பொது மக்களிடம் அதை கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டார்கள்.



அரசாங்கம் என்பது மிக உயரமானது, அகலமானது. இரும்புக்கரம் கொண்டது. அதற்கு செவிகளும், கண்களும் பல்லாயிரக் கணக்காக உள்ளன. ஒரு அரசாங்கம் பொது மக்களை எப்பொழுதுமே கவனமாக பார்த்துக் கொண்டிருக்கும். ஒரு அரசாங்கத்தை எதிர்ப்பது என்பது எளிதான காரியமே அல்ல. சோழ தேசத்து அரசாங்கம் மிகக் கூர்மையாக இருந்ததால் அங்கு பேசிய அந்தணர்களுடைய இலட்சணங்கள் தெளிவாக இராஜேந்திர சோழருக்கு சொல்லப் படுவதற்காக திருமல்லைக்கு அந்தக் குழு போய் உட்கார்ந்து கொண்டது.

தொண்டை மண்டலத்தில் தான் அரிசி வாங்க வேண்டும் என்பது தெளிவாகி விட்டது. அரிசி வாங்குவதில் ஏதேனும் சிக்கல் உண்டா என்று தெரிந்து கொள்வதற்காக கண்டன் மறவன் ஒரு ஆளை பரமன் பழுபாடி ஒரு ஆளையும் அனுப்பி வைத்திருந்தார்கள். இராஜேந்திர சோழர் தன்னுடைய ஆளை எந்த விசாரணையும் செய்யாமல் இவர்கள் விசாரிப்பதை இவர்களிடமே கேட்டு வைத்துக் கொள்ளும்படி இன்னொரு ஆளை அனுப்பி வைத்திருந்தார். ஒருவருக்கு தெரியாமல் ஒருவர் இரகசிய உளவாளிகளாக அந்தக் குழுவில் இருந்தார்கள். திருமல்லையில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

சீராளன் வயலுக்கு போனான், தன்னுடைய ஆட்களை பல பக்கமும் ஏவினான்.

"என்ன வயல் என்ன என்று பார்க்காதீர்கள். நெல் முற்றி இருந்தால் அறுத்து களத்துக்கு கொண்டு வாருங்கள். போரடித்து நெல்லை காய வையுங்கள். காய வைத்த நெல்லை அவித்து அரிசியாகப் பிரியுங்கள். சாணி போட்டு மெழுகிய உயர் கூடுகளில் அரிசி கொட்டப்படட்டும். பெரிய கல்யாண விருந்துக்கு தயார் ஆவது போல இங்குள்ள அத்தனை தானியங்களும் உணவுக்கு தயாராக வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

போன மாதம் தான் அவனுக்கு திருமணம் ஆகி இருந்தது. அது ஆனி மாதம் கடைசி முகூர்த்தம். முகூர்த்தமான அன்று, இரண்டு நாட்கள் அவர்களை தனியாக தூங்குவதற்கு அனுப்பினார்கள். அவள் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தாள். அவன் பயமுறுத்தவில்லை. மாறாக நிறைய பேசினான். தேவார, திருவாசக பாடல்களை பாடி காட்டினான். பயணப்பட்ட இடங்களின் விசித்திரங்களை சொன்னான்.

சாளுக்கிய வயலுக்கும், மயிலை வயலுக்கும், நடுநாட்டு வயலுக்கும், தஞ்சை வயலுக்கும் என்ன வித்தியாசம் என்று சொன்னான். காவிரி நீரின் வேகத்தை, வெள்ளப் பெருக்கை விவரித்தான்.

அவன் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு மயிலையை தவிர வேறு ஊர் தெரியாது. போனதே இல்லை.

நான் அழைத்துப் போகிறேன். பல்வேறு ஊர்களுக்கு போவோம் என்று சொல்லி தூக்கம் வர, அவர்கள் ஒருவரை ஒருவர் தழுவிக் கொண்டு தூங்கினார்கள்.

"இத்தனை அழகா என் மனைவி" என்று அவன் கன்னத்தை ஏந்திக் கொஞ்சினான்.

"இவ்வளவு நல்லவரா நீங்கள்" என்று அவள் தலை வருடி கன்னங்களில் முத்தமிட்டாள்.

அவர்கள் கூடலில் ஈடுபடவில்லை. நிதானமாக ஈடுபட்டுக் கொள்ளலாம் என்று இருந்தார்கள். ஆனால், ஆடிமாதம் வந்து விட்டது. இனிமேல் கூடுவது நன்றாக இருக்காது என்று அவர்களை பிரித்து அழைத்துப் போனார்கள்.

"எங்கே போகிறாய். இதே மயிலையின் மறுகோடிக்குத் தானே. நான் கடற்கரை பக்கம் இருக்கிறேன். நீ மாடுகள் மேயும் புல்வெளி பக்கம் இருக்கிறாய். அவ்வளவு தானே" சீராளன் தன் மனைவியை முத்தமிட்டு வழி அனுப்பி வைத்தான்.

போனதும் அவன் ஊரார் அவனை சூழ்ந்து கொண்டார்கள்.

"இந்த வேலை இப்படி இருக்கிறதப்பா. அதற்கென்ன முடிவு என்று தெரியவில்லை. யோசனை செய்ய வேண்டுமப்பா. இது என்ன, அது என்ன, இது எப்படி, அது எப்படி" என்று ஆயிரம் கேள்விகள் கேட்டார்கள்.

அவன் அந்த ஊருக்கு தலைவன் அல்ல. வேளாளர்களுக்கு முதன்மையாக நின்றான், நன்றாகப் பேசினான். விஷயத்தை தெளிவாக புரிந்து கொண்டான். இளைஞனாக இருந்தாலும் விவேகியாக இருந்தான். அவன் தந்தை அவனைப் பற்றி மிகப் பெருமையோடு பேசுவார். அவனுடைய ஊர் மக்கள், அவனுடைய இனத்து மக்கள் அவனை தங்கள் தலைவன் என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். உண்மையில் அவனுடைய தகப்பன் தான் தலைவன். அவருடைய வம்சம் என்பதால், அவருடைய வழித் தோன்றல் என்பதால் அவன் பேச்சுக்கு அங்கு மிகப் பெரிய மரியாதை இருந்தது.

ஆடிப்பெருக்கு வர நாள் இருந்தது. மேற்கே நல்ல மழை பெய்கிறது என்றும், காவிரியில் நீர் வரத்து அதிகரித்திருக்கிறது என்றும், கல்லணையை திறந்திருக்கிறார்கள் என்றும் அவனுக்கு ஊர்



விட்டு ஊர் செய்தி வந்தது. தென்மேற்கு பருவக் காற்று சில சமயம் திசை தவறி மேகங்களை அனுப்ப இந்த பக்கமும் மழை பெய்தது. கூவம் ஆற்றில் நீர் வேகமாகப் போனது. அப்படிப் போன நீர் திசை திரும்பி செழுங்கழுநீர் ஓடை வழியாக மயிலாப்பூருக்கு வந்தது. அந்த ஓடையில் நீர் ஓட்டம் குறைந்து போனால் பளிச்சென்று நன்றாய் தானே செழுங்கழுநீர் பூக்கள் மலரத் துவங்கும். ஓடாத நீரில் உள்ள அந்த மலர்கள் ஆடி அசைவது அழகாக இருக்கும். கோவிலுக்கு அதை பறித்துப் போவார்கள். சத்திரக்காரர்கள் இலைகளை அறுத்து எடுத்துக் கொண்டு போவார்கள். உணவு பரிமாற உபயோகப்படுத்திக் கொள்வார்கள்.

அந்த ஓடைக்கு அருகே ஒரு சிறிய பிள்ளையார் கோவிலை வேளாளர்கள் கட்டினார்கள். வெறுமே மரத்தடியில் இருந்த அந்த விநாயகர் கோவில் யார் யாரோ உதவி செய்ய சட்டென்று ஒரு சிறிய கற்றளியாகி கலகலப்பான வியாபாரப் பகுதியானது.

அந்த கோவில் விமானம் எழும்பி சீரானதும் அந்தணர்கள் இதில் நாங்கள் தான் நுழையலாம் என்று சொல்லி நுழைந்து விட்டார்கள். மயிலை அந்தணர்கள் நேரத்திற்கு வந்து கதவு திறக்காது போக அவர்களிடமிருந்து வேளாளர்கள் சாவியை பிடுங்கி வேறு ஊரிலிருந்து அந்தணர்களை அழைத்து வந்து அவர்களை நியமித்தார்கள். அப்பொழுதில் இருந்தே மயிலை அந்தணர்களுக்கும், மயிலை வேளாளர்களுக்கும் சண்டை, எதற்கெடுத்தாலும் நடக்கத் துவங்கியது.

"வேளாளர்கள் என்றால் என்ன பெரிய கொம்பா" என்று அந்தணர் கேட்டதற்கு.

"ஆமாம். கொம்பு தான், நாங்கள் இல்லாது இந்த உலகம் நடைபெறாது. எங்களுக்குப் பின்னே தான் உலகம் நடந்து கொண்டிருக்கிறது" என்று காவிய நயத்தோடும், கவிதை உவமானத்தோடும் சொன்னார்கள்.

அந்தணர்களுக்கு ரசிக்கவில்லை.

"அந்தணர்களை எவன் இழித்து பேசுகிறானோ, எவன் பழித்துப் பேசுகிறானோ அவன் குடும்பம் நசுங்கும்" என்று உரத்த குரலில் முழங்கினார்கள்.

"யார் நசுங்குகிறார்கள். நீயா, நானா பார்த்துக் கொள்ளலாம்" என்று வேளாளர்கள் முறைத்தார்கள்.

இருவருக்கும் நடுவே வணிகர்கள் நின்று சமாதானம்

செய்தார்கள். மயிலை என்கிற அந்த ஊர் வணிகர்கள் அதிகம் உள்ள ஊராக பித்தளை பாத்திரங்கள் அதிகம் செய்யும் ஊராக, தானியங்கள் வாங்கி, விற்கின்ற ஊராக அவைகளை நாலாபுறமும் கொண்டு போகும் ஊராக இருந்தது. அவர்களுக்கு அடுத்தபடி திருமல்லை இருந்ததால் மருந்தீஸ்வரர் கோவில் தாண்டி, கோவேறுக் கழுதைகளில், பெண் குதிரைகளில் சிறிய வேகமான மாட்டுவண்டிகளில் வெற்றிலைகளையும், நெல் கூடைகளையும் எடுத்துக் கொண்டு போய் கடற்மல்லையில் விற்றார்கள்.

ஒன்றுக்கு இரண்டாக அங்கு லாபம் சம்பாதித்தார்கள். ஒரு மாடைக்கு ஒரு கவுளி. அங்கு கொண்டு போய் விற்றால் இரண்டு மாடைக்கு ஒரு கவுளி. போக மூன்று மாடை, வர மூன்று மாடை ஆறு மாடை போனால் ஒரு நடைக்கு அறுபது மாடை, எழுது மாடை சம்பாதித்து விடலாம். ஒரு நடையில் அறுபது மாடை என்றால், ஒரு மாதத்திற்கு இருபது நடை எளிதாக போய் வரலாம். சில சமயம் முப்பது நடையும் மூன்று மாட்டு வண்டிகள் வைத்து போய் வரலாம். அப்படி போனால் மிகப் பெரிய லாபம் கிடைக்கும். வெளி தேசங்களுக்கு ஏற்றுமதியாக பாத்திரங்கள் போவதுண்டு. அவை பெரிய மாட்டு வண்டிகளில் போகும். பெரிய பித்தளை குடங்களில் நாவாய்களில் தண்ணீர் பிடித்து வைத்துக் கொள்வார்கள். அவைகளை அங்கு கொண்டு போய் விற்று விட்டு வருவார்கள். கரண்டிகள், தட்டுகள், சிறிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள் என்று பலவகையான பித்தளை பாத்திரங்கள் அங்கு ஓடும். ஒன்றுக்கு மூன்று பங்கு லாபம் கிடைக்கும். நாவாய் வருவது அதிகரிக்க லாபம் கிடைக்கும். நாவாய் வருவது தாமதித்தால் வெற்றிலை வியாபாரம் சுணங்குமே தவிர பாத்திர வியாபாரம் ஒன்று ஆகாது. அது பாட்டுக்கு மூலையில் இருக்கும். நாவாய்கள் வந்தால் உடனடியாக தீர்ந்து போகும்.

ஸ்ரீ விஜயத்திலிருந்து நாவாய்கள் வரும். சோழ நாவாய்கள் ஸ்ரீ விஜயம் போகும். இது ஒரு அற்புதமான விஷயம்.

ஊர் வளம் இந்த நாவாய் வியாபாரத்தில் நன்கு இருந்தது. திருமல்லையிலேயே ஊர் அமைத்து அங்கேயே இருக்கலாம் என்று சில வணிகர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால் மயிலையின் செழிப்பு எங்கும் இல்லை.

பூந்தோட்டங்கள் அமைக்க முடியுமே தவிர காற்றினுடைய வேகத்திற்கு நன்செய் தோட்டங்கள் அமைக்க முடியாது.



அதனாலேயோ மயிலை மேடாக இருந்தது. அதனால் காற்றின் தாக்கம் மேட்டில் அடித்து மேலே உயர்ந்தது. மிகப்பெரிய புல்வெளி இருந்தது. புல்வெளியில் அதிகம் பசுக்கள் மேய்ந்தன. கெட்டி தயிரும், [illegible] கூட விற்பதற்கு அனுப்பப்பட்டன. ஆனால் நெய் வேண்டும் என்று கேட்டால் தான் அனுப்புவார்கள். ஒரே நாளில் நெய் அங்கு போய் சேர்ந்து விடும். மிக உயரமான மண் ஜாடிகளில் நாவாய்களில் ஏற்றுவதற்காக தனித்த முறையில் அவை வைக்கோல் பிரியால் சுற்றப்பட்டு மிக கவனமாக உள்ளுக்குள் கொண்டு போகப்படும்.

எந்த இடத்தில் விளை பொருள்கள் இருக்கின்றனவோ அந்த இடத்தில் வியாபாரி இருப்பது தான் நல்லது. மற்றபடிக்கு விற்கின்ற இடத்திற்கு வியாபாரி நடந்து போய் விற்பனை செய்து விட்டு மறுபடியும் எங்கு விளைகிறதோ அங்கு வந்து விடுவது தான் சிறப்பு என்று தீர்மானித்து மயிலையையே தங்களுடைய இடமாக மயிலாப்பூர் வியாபாரிகள் கொண்டு வந்தார்கள்.

மாஇலட்டிகள் என்பது அவர்களுக்குப் பெயர். மாஇலட்டி என்றால் வியாபாரி. எண்ணெய் மாஇலட்டி, பித்தளை மாஇலட்டி, நெல்மா இலட்டி என்று தனித்தனியாக இருந்தார்கள். இந்த மாஇலட்டிகளால் வேளாளர்கள் சுகமாக இருந்தார்கள். விவசாயம் செய்த பொருளுக்கு உடனடியாக அவர்களுக்கு காசு கொடுக்கப்பட்டது அல்லது துணி கொடுக்கப்பட்டது.

வெளி தேசத்திலிருந்து வந்து இறங்கிய மரச்சாமான்கள், ஆயுதங்கள் விற்பனைக்கு வந்தன. பீங்கான் பானைகளை வாங்கி வைத்தார்கள். அங்கிருந்து புளித்த திராட்சை ரசம் கூட விற்பனைக்கு வந்தது. பழ ரசம் குடிக்க பலர் வீட்டில் பீங்கான் கிண்ணங்கள் இருந்தன. உடைந்த பீங்கான் துண்டுகளை, களிமண் தரையில் அழுத்தி பெண்கள் கோலமாக போட்டார்கள். அதை பல பேர் வியந்து பார்த்தார்கள். அலங்காரமான விளக்குகள் வந்தன. அந்த வெண்கல விளக்குகள் பல பேர் வீடுகளில் மாட்டி வைக்கப்பட்டன. முகம் பார்க்கும் கண்ணாடி, விளக்கு எரிகின்ற கண்ணாடிக் கூண்டு போன்றவைகள் கவனமாக வந்தன. அவைகளும் மிருதுவாக கையாளப்பட்டு மயிலையில் விற்கப்பட்டன.

தொலைதூரத்திலிருந்து வந்து மயிலையில் இந்த பொருள்களை வாங்கிப் போகின்ற வணிகர்களும் உண்டு. மயிலை ஒரு முக்கியமான இடமாக இருந்தது. அதில் மாஇலட்டில் மிகக் கவனமாக பார்த்து வந்தார்கள். வேளாளர்கள் கடுமையாக உழைத்து வந்தார்கள்.

அந்தணர்களுக்கு இவர்கள் இரண்டு பேரையும் தாண்டி அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. கோவிலை மையமாக வைத்து 'கோவிலுக்கு கொடு கோவிலுக்கு கொடு' என்று சொல்லியும் கோவிலில் 'இந்த பூஜை, அந்த பூஜை' என்று சொல்லியும் அவர்கள் வணிகர்களை தொந்தரவு செய்தார்கள்.

வைதீகமான அந்தணர்களுக்கு வரவேற்பு இல்லை. வெறுமே கணக்கு எழுதுகிற அந்தணர்களுக்குத் தான் மதிப்பு. தங்களுக்கு உண்டான பிரிவை சொன்னார்கள். ஹோமம், யாகம் விடாது செய்வதால் தான் மயிலை சுபிட்சமாக இருக்கிறது என்று உரத்த குரலில் அறிவித்தார்கள். மக்களும் நம்பினார்கள். அந்த குழுவில் தெளிவான, நல்ல, அமைதியான அந்தணர்கள் இருந்தார்கள்.

இது வேளாளர்கள் தேசம். இங்கு ஆட்சி செய்வது வணிகர்கள். அண்டி பிழைக்கத் தான் நாம் வந்திருக்கிறோம் என்று அமைதியாக இருந்து அண்டிப் பிழைக்க வேண்டும். இல்லை எல்லாமும் எனக்குத் தெரியும் என்று திடமாக இறங்க வேண்டும். அவர்களை வேலை செய்ய விட்டு, ஆட்சி மட்டும் நான் செய்கிறேன் என்றால் அது எப்படி சரியாக இருக்கும். எதற்கு ஆட்சிப் பொறுப்பு நமக்கு. நாம் பாட்டுக்கு வேதம் ஓதிக் கொண்டு போகலாம். அவர்கள் கொடுப்பதை வைத்துக் கொண்டு நிம்மதியாக வாழலாம். தேவை இல்லாமல் அவர்களுக்கு நான் தான் தலைமை ஏற்பேன் என்று ஏன் எகிறுகிறீர்கள்.

தலைமை ஏற்கின்ற அளவுக்கு உங்களுக்கு தகுதி இருக்கிறதா. நாளை பெரும் படையோடு, மேலைச் சாளுக்கியமோ, கீழைச் சாளுக்கியமோ வந்தால் தடுத்து நிறுத்துகின்ற போக்கு உண்டா. போய் வெண்கலப் பானையோடு எதிரே நின்று 'வருக, வருக' என்று கூப்பிடுவீர்கள். அது அவமானம் இல்லையா. நம்மை இந்த ஊர் இழிவாக கவனிக்காதா. அப்படி செய்ய வேண்டாம்" என்று சொல்ல.

அதில் பாதி பேர் சரி என்று தலை அசைத்தார்கள்.

"இல்லை, நமக்கு உண்டான மூளை, அவர்களுக்கு இல்லை" என்று எதிரியவர்களும் பாதி பேர் இருந்தார்கள்.

ஆடி மாதம் இரண்டு வெள்ளிக்கிழமை அவன் அவளை பார்ப்பதற்காக வந்திருந்தான். பகல் பொழுது மட்டுமே வந்து பார்க்க வேண்டும் என்று கட்டளை இருந்ததால், விடியற்காலையில் வந்து அவளை எழுப்பி, அவளை குளிப்பாட்டி, சோறு போட்டு



அவளோடு பேசி கொஞ்சி விட்டு போனான்.

அடுத்த வெள்ளிக்கிழமை வந்து வீட்டை சுத்தம் செய்து பெருக்கினான். வீட்டின் கொல்லைப் புறத்தில் பத்து, பதினைந்து அரச மரங்கள் ஒன்றாக இருக்கின்ற ஒரு திடல் இருந்தது. அதற்கு அருகே கற்பலகைகள் போட்டிருந்தார்கள். எப்போதேனும் பிற்பகலில் அமர்ந்து தூங்குவதற்கு பெரியவர்கள் அதை பயன்படுத்திக் கொண்டார்கள். எப்போதும் ஒரு சலசலப்பு இருந்து கொண்டே இருக்க அந்த இடத்திற்கு வர குழந்தைகள் பயப்படுவார்கள். ஆகவே அந்த இடத்திற்கு இவர்கள் இரண்டு பேரும் போய் உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்கில் பேசுவார்கள்.

அந்த அரச மரத்துக்கு அருகே பெரிய கேணி ஒன்று இருந்தது. வெகு நாளைக்கு முன்பு தோண்டப்பட்ட கேணி. விவசாயம் செய்வதற்கு என்று உண்டான கேணி. ஏற்றம் இறைப்பதற்கான பாதைகள் அதில் இருந்தன. அந்த கேணியிலிருந்து சற்றுத் தள்ளி இன்னும் இரண்டு கேணிகள் இருந்தன.

"என்ன இந்த ஆடி மாதம். இரவு நீ இல்லை என்றதும் எனக்கு சித்த வேதனையாகி விட்டது. செத்துப் போய் விடலாமா என்று நினைத்தேன்" என்று சொல்ல, அவள் வாயைப் பொத்தினாள்.

"தயவு செய்து அப்படியெல்லாம் பேசாதீர்கள். என்ன இது விளையாட்டு. இந்த ஆடிமாதம் முடிந்தால் ஓடி வரப் போகிறேன்" என்று சொன்னாள்.

"இல்லை, எனக்கு மனம் ஒடிந்து விட்டது. நீ இரவு நேரம் வர வேண்டும். வராவிட்டால் நான் இறந்து விடுவேன்" என்றான்.

"எப்படி வருவது, வீட்டில் உள்ளவர்கள் அசிங்கமாக நினைக்க மாட்டார்களா. அது தவறல்லவா. எனக்கு மரியாதை குறைவல்லவா"

"நீ வரப்போகிறாயா இல்லையா"

"தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வரவே முடியாது" என்று சொல்ல, "சரி. எனக்கு நீ வேண்டாம்" என்று சொல்லி வேட்டியை உருவி சுழற்றி போட்டு விட்டு சட்டையை வீசி எறிந்து விட்டு, சடேல் என்று கோமணத்தோடு அந்த கிணற்றில் குதித்தான்.

"எனக்கு நீச்சல் தெரியாது" அவன் கீறிருந்தபடி சொன்னான். அவள் பயந்து போய் அணிந்த ஆடையுடன், நகைகளுடன் நீரில் குதித்தாள். அவனை அள்ளிக் கொண்டாள். அவனும் அவளை

தழுவிக் கொண்டான். மெல்ல இரண்டு பேரும் அந்த கிணற்றை சுற்றி வந்து ஒரு உறை வாசலில் நின்றார்கள். அந்த உறை ஒரு ஆள் உயரம் இருந்தது. கழுத்தளவு ஜலம் இருந்தது.

"என்னோடு வா" என்று சொல்லி அவள் அவன் கையை பிடித்துக் கொண்டே போக, அவன் அவள் பின்னே போனான். மூச்சு விட்டுக் கொண்டே அவர்கள் இருவரும் அந்த கிணற்றை தாண்டி அடுத்த கிணற்றுக்கு போனார்கள். அடுத்த கிணற்றில் இதே மாதிரி வேறு ஒரு உறை காட்டினாள். அதற்குள்ளும் நுழைந்தார்கள். அதில் இடுப்பளவு ஆழம் தான் இருந்தது. அதைத் தாண்டி மூன்றாம் கிணறுக்கு போய் அங்கிருந்து படிக்கட்டில் மேலே நின்றார்கள். மேலேறி வந்து ஈரம் சொட்டச் சொட்ட ஆடிக் கொண்டே போய் உடைகளை எடுத்து உடுத்திக் கொண்டார்கள். சிரித்தாள். கோபித்துக் கொண்டான். சந்தோஷமானான்.

"நன்றாக இருக்கிறது இந்த கிணறு" என்று ஆவலோடு எட்டிப் பார்த்தான்.

அவர்கள் இருவரும் அப்படி ஜலக்கிரீடை செய்வதை அந்த வீடு கவனித்துக் கொண்டது. மறுநாள் அவளிடம்.

"நீ இங்கு அடிக்கடி வர வேண்டாம். ஆடி மாதம் முடிந்து வந்தால் போதும்" என்று எச்சரித்தது.

அவர்கள் இரண்டு பேரும் முகத்தை தொங்கப் போட்டுக் கொண்டு வலம் வந்தார்கள். ஆனால் பரஸ்பரம் ஒருவர் மீது ஒருவருக்கு உண்டான அன்பு, அக்கறை குறையவே இல்லை.

அவர்களுடைய வீட்டைச் சுற்றி வெற்றிலை தோட்டம் இருந்தது. இன்னொரு பக்கம் பெரிய வயல்வெளி இருந்தது. அரசங்காடு பக்கம் உட்கார்ந்து கவிதை எழுதி, வெற்றிலைகளுக்கு நடுவே அதை அனுப்பி வைத்தான். நெல் கூடை அனுப்பும் போது அதிலும் ஓலை சொருகி வைத்தான். ஆடிப்பிரிவு என்கிற விஷயத்தை அவர்கள் மிகப்பெரிய சந்தோஷமாக காட்டிக் கொண்டார்கள். ஒருவர் மீது ஒருவர் அளவு கடந்த காதலோடு இருந்தார்கள். ஆடி மாதம் முடிந்து ஆவணி துவங்குகின்ற நேரம்தான் இராஜேந்திர சோழன் படை எடுத்து இந்தப் பக்கம் வரப் போகிறார் என்ற செய்தி அவனுக்கு கிடைத்தது.

ஆவணி இரண்டாம் தேதி அவன் இந்த வீட்டிற்கு வருவதற்கு ஏற்பாடு செய்திருந்த பொழுது, சோழ தேசத்திலிருந்து ஏதோ ஒரு வீரன் வந்து நின்றான். முத்திரை மோதிரம் காண்பித்தான்.



"உங்களை உடனடியாக தஞ்சைக்கு வரச் சொல்லி ஸ்ரீ இராஜேந்திரர் உத்தரவிட்டிருக்கிறார்"

"என்னை என்றால் என் பெயர் எப்படி அவருக்குத் தெரியும். நான் சாதாரண ஆள் தானே"

"உங்களை என்றால் உங்கள் பெயரை அல்ல, வேளாளர் தலைவர் யார் என்று கேட்டார். நாங்கள் விசாரித்தோம். உங்களைத் தான் சொன்னார்கள். நீங்கள் தான் வர வேண்டும்"

"எதற்காக வரவேண்டும்?"

"உணவு விஷயம் பேசுவதற்காக, அவர் இங்கு வருவதாக இருக்கிறார். என்ன உணவு தயார் செய்ய முடியும். எவ்வளவு அனுப்ப முடியும். தானியங்களை எவ்வளவு தொலைவு அனுப்புவதற்கு வசதி இருக்கிறது என்பதெல்லாம் கேட்பார் என்று நினைக்கிறேன். அந்த விஷயங்களை உங்கள் மக்களோடு பேசிக் கொண்டு நீங்கள் வருவதற்கு தயாராக இருங்கள், நாளை நாம் கிளம்புகிறோம்" என்று சொன்னான்.

அவன் வீடு வந்து சேர்ந்ததும் அவர்கள் இருவரும் எல்லோரையும் நமஸ்கரித்தார்கள்.

"நாளை சோழ தேசம் போக வேண்டும்" என்றதும் அவள் இருண்டு போனாள். அவனுக்கும் துக்கமாகத் தான் இருந்தது. அந்த இரவு அவன் பயணத்திற்கு வேண்டிய விஷயங்களை பேசுவதற்காக மற்ற வேளாளர்களை பார்ப்பதற்குப் போனான். விடியற்காலையில் குதிரை ஏறி சோழ தேசம் நோக்கிப் போனான். போகும் பொழுது "சீக்கிரம் வந்து விடுவேன்" என்று சொல்லிவிட்டு போனான்.

எவ்வளவு சீக்கிரம் என்பது இரண்டு பேருக்குமே தெரியவில்லை.

"சீராளன் என்பது பெயரா, மயிலையில் எந்த இடம்?" அரண்மனை வாசலில் மடக்கி ஆயிரம் கேள்விகள் கேட்டார்கள். நிற்க வைத்தே பேசினார்கள். எல்லா கேள்விகள் கேட்டு திருப்தியான பிறகு உட்காரச் சொல்லி, "மது வேண்டுமா" என்று கேட்டார்கள்.

அவன் மறுத்து விடவே, பழரசமும், மோரும் கொடுத்தார்கள்.

"சிறிது நேரம் காத்திரும். கடக்கட உணவு வந்து விடும்" என்று சொன்னார்கள். உணவு வந்தது. உணவு வந்த அரை நாழிகையில் அரண்மனையிலிருந்து அழைப்பு வந்தது.

இராஜேந்திர சோழரை நேரிடையாக அவன் சந்திக்க வேண்டும் என்று இருந்தது. அவன் மல்லாக்க படுத்து ஓய்வெடுத்தான். சிறிது

நேரத்தில் தூங்கிப் போனான். உறங்கும் போது மிகக் கவனமாக அவனது உடைகள் சோதனையிடப் பட்டன. சோழ தேசத்து முத்திரையோடு கூடிய சோனாதிபதிகளின் ஓலைகள் அவனிடம் இருப்பதை பார்த்து அவர்கள் சந்தோஷமானார்கள்.

"சரியான ஆள் தான் வந்திருக்கிறான். இந்த ஓலை இவனிடம் இருக்கிறது என்றால், இவன் தானே அங்கு தலைவன். ஆனால் சிறு வயதாக இருக்கிறானே" என்று சந்தேகப்பட்டேன். ஆனால் பையன் கெட்டிக்காரனாக இருக்கிறான்" என்று ஒரு உபதளபதி சொல்ல,

அவனை பிற்பகல் நேரத்தில் எழுப்பி, முகம் கழுவக் கொடுத்து சூடான கஞ்சி கொடுத்து அவனை அரண்மனைக்கு அழைத்துப் போனார்கள். இராஜேந்திர சோழரின் மாளிகையில் படியேற்றினார்கள். வாசலில் நிற்க வைத்தார்கள்.

இராஜேந்திர சோழர் அவனை உள்ளே அழைப்பதாக செய்தி வந்தது. உள்ளே சபை கூடி இருந்தது. அவன் போய் நீண்ட நெடுஞ் சாண் கிடையாக விழுந்து வணங்கினான். கை கூப்பினான். கண்களில் நீர் கொப்பளித்தது. அருகே நின்று மறுபடியும் அவர் கால்களில் நெற்றி பட வணங்கி, "உங்களை என் வாழ்க்கையில் முதல் முதலில் சந்திக் கிறேன். நீங்கள் நீடூழி வாழ வேண்டும் என்று மயிலை கபாலீஸ்வரரை வேண்டுகின்றேன். கற்பகத் தாயை வணங்குகின்றேன்.

அவர்கள் இருவரும் சக்தி வாய்ந்தவர்கள், உங்களுக்கு எல்லா வெற்றிகளையும் கொடுப்பார்கள். உங்களுக்கு அரசாட்சியில் சோழ தேசமும், நடுநாடும், தொண்டை தேசமும் சிறப்பாக இயங்கிக் கொண்டி ருக்கின்றன. தொண்டை தேசத்து அந்தணர்கள் இங்கு வேலை செய்கிறார்கள். அவர்கள் எல்லோரும் எங்கள் ஊருக்கு வரும்பொழுது உங்களைப் பற்றி கதை கதையாக சொல்கிறார்கள்.

சோழ தேசத்தினுடைய பெருமை எல்லாம் அந்த அந்தணர்கள் சொல்வதால் எங்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரிந்திருக்கிறது" என்று விவரித்தான்.

அவன் பேசி முடிக்கும் வரை சபை அமைதியாக இருந்தது. அவன் கோர்வையாகவும், செம்மையாகவும் பேசுவதை வியப்போடு கவனித்தது.

"சரி, சோழ தேசம் பற்றி நிறைய தெரிந்து கொண்டிருக்கிறாய் இல்லையா"

"ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேன்"



"இந்த சபையில் இருப்பவர்கள் யார் யார் என்று உங்களால் சொல்ல முடியுமா" ஒரு சிரிப்போடு ஸ்ரீ இராஜேந்திரர் கேட்டார். அந்த சபையும் சிரித்தது.

"முயற்சி செய்கிறேன். யார் யார் எப்படி இருப்பார்கள் என்று எங்களுக்கு சொல்லப் பட்டிருக்கிறது. அதோ பெரிய மீசையோடு இருப்பவர் உத்தம சோழ மிலாடுடையார். இதோ வயதாகி தளர்ந்து, கண்ணில் சுருக்கம் விழுந்தும் அதை இழுத்துக் கட்டிக் கொண்டிருப்பவர் பரமன் மழபாடி. அதோ பருமனாக நெற்றியில் ஸ்ரீவைஷ்ணவ நாமம் இருப்பதை பார்த்த உடனேயே கிருஷ்ணன் ராமன் என்று தெரிகிறது. அவருக்கு என் வணக்கங்கள்" ஒவ்வொருவரையும் குறிப்பிட்டு வணங்கினான்.

"தீர்க்காயுஷ்மான் பவஹ, தீர்க்காயுஷ்மான் பவஹ, தீர்க்காயுஷ்மான் பவஹ" என்று எல்லோரும் வாழ்த்தினார்கள்.

"இவர் சுந்தர புருஷனாக இருக்கிறார். இவர் வந்தியத் தேவராக இருக்க வேண்டும். இது யார் என்று எனக்கு தெரியவில்லை. ஆனால் இவர் உட்கார்ந்திருக்கும் தோரணமும், இவர் கையில் இருக்கும் முத்திரை மோதிரமும் இவர் பெரிய சேனாபதி என்று தெரிகிறது. அவர் அருண்மொழி என்றால் இவர் அரையன் இராஜராஜனாக இருக்க வேண்டும்.

அருண்மொழி என்பவர் கிருஷ்ணன் ராமருடைய சாயலில் இருக்கிறார். அவருடைய மகனாக இருக்க வேண்டும். ஆனால் அரையன் இராஜராஜன் இந்த ஊர் பகுதி மக்கள் முகமாக இல்லை. வேறு முகமாக இருக்கிறது. எனவே அரையன் இராஜராஜன் அவர்களுக்கு என் நமஸ்காரங்கள்" மறுபடியும் விழுந்து வணங்கினார்.

அரையன் இராஜராஜன் அருகே அழைத்து அவன் தலையில் கை வைத்து ஆசீர்வதித்தார்.

"இவர் அருண்மொழி, எனக்கு நன்றாகத் தெரியும். சரி தானே" என்று கேட்டுக் கொண்டான்.

"சரி" என்று அருண்மொழி தலை அசைத்தான். அந்த சிறுவனுடைய துடிப்பை, ஆவலை, எல்லோரையும் விழுங்குவது போல் பார்ப்பதை அந்த சபை சுவாரஸ்யமாக கவனித்தது.

"அருண்மொழி எங்களுக்கெல்லாம் காதலர்"

"என்ன?"

"அருண்மொழி எங்களுக்கெல்லாம் காதலர், நான் சிறுவயதில்

இடுப்பில் வேட்டி கட்டிக் கொண்டு, மேலே மூன்றாம் துண அணிந்து கொண்டு அதற்கு மேல் பூணூல் போட்டுக் கொண மூன்றாம் துண்டில் உடைவாள் சொருகிக் கொண்டு அதாவது மூன பட்டை சொருகிக் கொண்டு, தலைப்பாகை கட்டிக் கொண்டு ந அருண்மொழி என்று கைதட்டிக் கொண்டிருப்பேன். காதுகள தொங்கட்டான் போட்டுக் கொள்வேன். நெற்றியில் ஒரே ஒரு சூர்ணம் இட்டுக் கொள்வேன். நாங்கள் நிறைய பேர் அருண்மொ வேடம்தான் போட்டுக் கொள்வோம்.

அருண்மொழி மிகப்பெரிய வீரர் என்றும், அதே சமயத் அந்தணர் என்றும் எங்களுக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அவர் சா கள் பலதும் நாங்கள் அந்தணர்கள் மூலமாக கேள்விப்பட்டிருக்கிறோ என்று சொல்ல சபை ஆரவாரித்து சிரித்தது. கை தட்டியது.

அருண்மொழி வெட்கப்பட்டான்.

"அருண்மொழியாருக்கு என்னுடைய நமஸ்காரங்கள்" அவ தலையை அருண்மொழி காலில் வைத்து தேய்த்தான். முகத் தேய்த்தான். பாதங்களில் முத்தமிட்டான். அவன் கால்களை கட் கொண்டான்.

"என்னை உங்கள் சீடனாக ஏற்பீர்களா" என்று கட்டிய கா இன்னும் நெஞ்சில் இறுக்கிக் கொண்டு அவனைக் கேட்டான்.

தர்ம சங்கடத்தோடு அருண்மொழி ஸ்ரீ இராஜேந்திரரை பார இராஜேந்திரர் "சரி, சரி" என்று சைகையில் சொல்ல,

"நீ சீடன் அல்ல" என்று சொன்னான். அவன் திகைத் போக, "நீ என் நண்பன்" என்று கை நீட்ட, அவர்கள் இருவ இறுக்க கை பற்றிக் கொண்டார்கள்.

"என்ன பாக்கியம். என்னை விட முப்பது வயது பெரியவரா நீங்கள் என்னை நண்பன் என்று கூப்பிடுகிறீர்களே எவ்வள பெரிய பாக்கியம். நான் போன ஜென்மத்தில் ஏதோ நல்ல செய்திருக்க வேண்டும். உங்களுக்கு நண்பனாக மாறி விட்டே என்று சொல்லி முகம் பொத்திக் கொண்டு அழத் துவங்கினான்.

சபை அவனுடைய உணர்வு கூத்துகளை கவனமாக கேட்டு பிறகு கேள்வி கேட்கத் துவங்கியது.

தானிய சேமிப்பு பற்றிய எல்லா கேள்விகளுக்கும் அவன் பதி சொன்னான்.

நெல்மணிகளை அரிசியாக மாற்றி விட்டதும், அவைக



...யில் இருப்பதும், அவைகளை மிக ஜாக்கிரதையாக கோவில் ...பகளில் சேர்த்து வைத்திருப்பதையும், எலிகள் வராமல் இருக்க ...னைகள் வளர்ப்பதையும், பூனைகளுக்கு பால் கொடுப்பதையும் வேப் ...போட்டு கூடைகளை தடுத்திருப்பதையும் அவன் சொன்னான்.

"அந்தணர்களோடு பிணக்காமே. என்ன காரணம்" கிருஷ்ணன் ... கேட்டார்.

"பெரிய பிணக்கு ஒன்றும் இல்லை ஐயா, விவாதங்கள் ...பெறுறன. அவ்வளவு தான்"

"பெரிய பிணக்கு என்று கேள்விப் பட்டேனே. ஏன் மறைக்கிறீர்கள்?"

"எதையும் மறைக்கவில்லை ஐயா. அவர்கள் ஒரு விதமாக ...கிறார்கள். நாங்கள் ஒரு விதமாகச் சொல்கிறோம்"

"என்ன கேட்கிறார்கள்?"

"அறுபதுக்கு நாற்பது"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்"

"ஐம்பதுக்கு ஐம்பது"

"அதற்கு அவர்கள் என்ன சொல்கிறார்கள்?"

"ஒப்புக் கொள்ள முடியாது. அறுபதுக்கு நாற்பது கொடுத்தே ஆக வேண்டும் என்று சொல்கிறார்கள்"

"நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்?"

"வேலை பளு அதிகம். காலை ஆறு மணிக்கு ஆரம்பித்து, இரவு ...வரை வேலை செய்தால் தான் முடியும். படுத்து தூங்கு ...தான் வீட்டிலுள்ள பெண்களுக்கும், ஆண்களுக்கும் நேரம் இருக்கிறதே தவிர வேறு எந்த வேலையும் செய்ய முடியவில்லை. அந்தணர்கள் நாலா பக்கமும் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் எந்த வேலையிலும் ஈடுபட மாட்டேன் என்கிறீர்களே' என்று கேட்டதற்கு.

'எங்களுடைய வேலை எல்லா வேலையிலும் ஈடுபடுவதல்ல. மந்திரங்கள் ஓதுவது தான்' என்று சொல்கிறார்கள்.

நாங்கள் அதை சரி என்று ஏற்றாலும், பாதிக்கு பாதி , என்ற கொள்கையை விட்டுக் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். எங்களுக்கு கூலி அதிகம் வேண்டும் என்பதைத் தான் ஐம்பதுக்கு ஐம்பது என்று சொன்னேன். ஆனால் அவர்கள் அறுபதுக்கு நாற்பது

என்பதிலேயே உறுதியாக இருக்கிறார்கள்"

"கடைசியில் பேச்சு எப்படி முடிந்தது"

"பத்துக்கு தொண்ணூறு கொடுத்தாலும், இருபதுக்கு என் [illegible] கொடுத்தாலும் அது பற்றி அக்கறை எதுவும் இல்லை. இந்தப் பக் [illegible] சோழப் படை வரப்போகிறது. எனவே எங்கள் வேலையில் நாங் [illegible] ஈடுபடுகிறோம் என்று சொல்லி, அந்த விஷயத்தை அப்படியே விட் [illegible] விட்டு நாங்கள் அறுவடைக்கு இறங்கி, போராடித்து, கதிர் பிரி [illegible] தூசு தட்டி, நெல்லை வேக வைத்து, உரலில் இடித்து, உமி நீ [illegible] அரிசியாக்கி வைத்திருக்கிறோம்.

உங்களுக்கு சரியான தானியம், மிக உயர்ந்த தானியம் தயார [illegible] இருக்கிறது. நீங்கள் எப்பொழுது வருகிறீர்கள், எத்தனை பே [illegible] வருகிறீர்கள் என்று முன்கூட்டியே தகவல் தெரிவித்தால் அதற்கேற் [illegible] படி எல்லாம் தயாராக இருக்கும்"

"காய்கறிகள் இருக்கின்றனவா?" பரமன் மறுபடி கேட்டார்.

"எதற்கும் காய்கறிகள் இருக்கின்றன. சத்தி உள்ள எல்ல [illegible] ஊர்களிலும் காய்கறிகள் போடச் சொல்லி இருக்கிறேன். அவர்க [illegible] காய்கறிகளோடு தயாராக இருக்கிறார்கள்.

பீர்க்கங்காய், புடலங்காய், அவரைக்காய், கொத்தவரைக்கா [illegible] இவை தயாராக இருக்கின்றன"

"அதைத் தவிர வேறு என்ன தயார் செய்திருக்கிறீர்கள்?"

"பூண்டு வகைகள், மருந்துக்கென்று உபயோகப்படுத்துகின் [illegible] சில மூலிகைகள், குப்பை மேனி கீரை என்றும் தனியா [illegible] வளர்கிறோம். கடுக்காயும் அவைகளை இடித்து, பொடித் [illegible] சூரணமாக்கி சிறிய குளிகைகளாக உருட்டிப் போட்டிருக்கிறார்கள் [illegible] வெய்யிலில் காய்ந்திருக்கிறது"

"அவை எதற்கு உபயோகம்?"

"வயிறு சரியாகும். போகிற வழியில் எதையாவது சாப்பிட்டு [illegible] வயிறு சரியில்லை எனில் அதைப் போட்டால் செரிமானம் சீராக [illegible] இருக்கும். உடம்புக்கு உற்சாகத்தை கொடுக்கும் திரிபலா சூரணம் [illegible] என்று பெயர்.

"ஆமாம். கேள்விப்பட்டிருக்கிறேன். எவ்வளவு தயாராக [illegible] இருக்கும்"

"கிட்டத்தட்ட மூன்று இலட்சம் பேருக்கு திரிபலா சூரணம் [illegible] பெரிய பெரிய ஜாடிகளில் வைத்திருக்கிறார்கள்"



[illegible] ஜாடிகள் எது?"

"[illegible] இலங்கையில் இருந்து இறங்கியவை. அவைகளை [illegible] கொடுத்து வைத்தியர்கள் வாங்கி வைத்திருக்கிறார்கள்"

"[illegible] சாளுக்கியத்திலிருந்து ஏதேனும் தொந்தரவு வருகிறதா?"

"இல்லை எந்த தொந்தரவும் வருவதில்லை"

"[illegible] நாட்டை தாக்குவது தானே எளிது. [illegible] திருவொற்றியூரை எப்பொழுது வேண்டுமானாலும் தாக்குவார்களே [illegible] இல்லை?"

"ஒரு காரணம் இருக்கிறது. திருவொற்றியூரை தாக்கி விடலாம். [illegible] மயிலையை தாக்க முடியாது. திருவொற்றியூருக்கும், மயிலைக்கும் [illegible] கூவம் ஆற்றினுடைய கடை மடை இருக்கிறது. அந்த கடை [illegible] கடற்கரையின் மணல் உள்ளே வந்து நின்று சேறாக [illegible] இருக்கிறது. அந்த சேற்றுக்கு நடுவே கருவேலி மரங்கள் [illegible] வளர்ந்திருக்கின்றன. அடர்த்தியான காடாக இருக்கிறது [illegible] கருவேலி மரங்கள் கை பிடித்துக் கொண்டு உள்ளே நுழைந்தால் [illegible] ஆழம் சேறு உங்களை சிதைத்து விடும். அதை ஒருக்காலும், [illegible] மனிதர்கள் தாண்டி வர முடியாது. ஆனால் [illegible] களால் தொந்தரவு உண்டு"

"என்ன தொந்தரவு ஓநாய்களால்"

"ஆடுகளை அடித்து கொன்று விடும். அதனால் மனிதர்களையும் [illegible] று விடும். அவை நூறு, இருநூறு என்று கூட்டமாக வரும். [illegible] தீப்பந்தங்கள் எரிந்து நாங்கள் விரட்டுவதும் உண்டு. அந்த [illegible] தொந்தரவு தான் மயிலையை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

ஆனாலும் அந்த மிரட்டலுக்கு அஞ்சாமல் அது இருக்கட்டும் [illegible] விட்டு விடுகிறோம். வடக்கே முழுவதும் அந்த சேறு [illegible] பாதுகாக்கிறது. ஓநாய்கள் காவலாக இருக்கின்றன. [illegible] ஓநாய்களைத் தாண்டி, கருவேல முட்களைத் தாண்டி, சேறு [illegible] எந்த படையும் உள்ளே வர முடியாது. மேற்கே மிகச் சிறந்த [illegible] பாடி காவல் இருக்கிறது. அந்த பாடி என்ற நகரத்தில் உள்ள [illegible] களை தாண்டி, மயிலை நோக்கி எவரும் வர முடியாது.

தெற்கே நீங்கள் இருக்கிறீர்கள். எங்களுக்கு எந்த கவலையும் இல்லை. கிழக்கே கடல் இருக்கிறது. கடல் அன்னை எங்களை [illegible] காப்பாற்றுகிறாள். மீனவர்கள் வலுவுள்ளவர்களாக இருக்கிறார்கள். [illegible] மீன் வியாபாரம் நடக்கிறது. மீனவர்கள் வருடத்திற்கு ஒரு

காச போட்டு சதய நட்சத்திரம் அன்று மாமன்னர் இராஜரா
பிறந்த நாளை இன்றளவும் கொண்டாடி வருகிறார்கள்.

திருமல்லையில் ஆரம்பித்த இந்த பழக்கம் இப்பொழு
திருமயிலை வரை நிற்கிறது. வருடத்திற்கு ஒரு முறை அவருடை
நட்சத்திரத்திற்கு மட்டுமே பூஜை செய்வார்கள். இப்பொழு
ஒவ்வொரு சதயத்திற்குமே அவர்கள் பொங்கலிடுகிறார்கள்"

சண்ட அவன் சொல்வதை விவரமாக கேட்டுக் கொண்டிருந்த

"போர் செய்வீரா?" பரமன் மழபாடி கேட்டார்.

"இல்லை. நான் இதுவரை போர் செய்ததில்லை. எவரை
வெட்டி கொன்றதில்லை"

"இடுப்பில் இவ்வளவு பெரிய கத்தி வைத்திருக்கிறீரே?"

"ஒரு தற்காப்புக்காகத் தான் கத்தி வைத்திருக்கிறேனே த
எனக்கு போரில் பழக்கம் இல்லை. பயிற்சி இல்லை. நான் உழவ

மன்னர் இராஜேந்திரர் மிகச் சந்தோஷமாக அவனைப் பார்த்த

இன்னும் சில தினங்களில் தொண்டை நாட்டை நோக்கி போவோ
அங்கே சில தினங்கள் இருந்து வேங்கியைத் தாக்கப் போகிறோம். எனவ
எப்பொழுது வரப் போகிறோம் என்பதை சொல்லி அனுப்புகிறே
நீங்கள் வந்து சிரம பரிகாரம் செய்து கொண்டு, அருண்மொழியே
தங்கி இந்த ஊரை சுற்றி பார்த்து விட்டு போங்கள்.

உங்களுக்கு திருமணம் ஆகி விட்டதா"

"ஆகிவிட்டது"

"எப்போது திருமணம் ஆனது. கையில் மஞ்சள் கயி
இருக்கிறதே" என்று கிருஷ்ணன் ராமன் கேட்க, "எனக்கு போ
மாதம் தான் திருமணம் ஆனது"

"அடேய், நடுவே ஆடி மாதம் அல்லவா"

"ஆமாம். பிரித்து வைத்தார்கள். ஆயினும் தாங்கள் பே
சொல்வது வழக்கம்"

"பேசுவது மட்டும் தானா"

"ஆமாம். வேறு எதுவும் செய்ய அனுமதிக்க மாட்டார்கள்"

"இப்பொழுது ஆவணி வந்து விட்டதே. இங்கு வந்
விட்டீர்களே"

"ஆமாம். அரசாங்க காரியம் என்று சொல்லி விரைவாக இங்



...ந்து விட்டேன்"

"சரி. விரைவாக தஞ்சையை சுற்றி பார்த்து விட்டு நீங்கள்
... சேரலாம். தஞ்சைக்கு வருவது இது தான் முதல் முறை
..."

"ஆமாம். இது தான் முதல் முறை"

"பெரிய பிரகதீஸ்வரர் கோவிலை பாருங்கள். அருண்மொழி
... அழைத்துக் கொண்டு போ, இன்னும் என்ன தகவல் பெற
... என்று பார்"

"...மல்லையின் தலைவர் யார்?"

ஒரு அந்தணர் பெயரை பரமன் மழபாடி சொன்னார். ஸ்ரீ
...ஜேந்திரர் தலைகுனிந்து யோசித்தார்.

"...ற்ற வேண்டும்" ஒற்றை வார்த்தையில் சொன்னார். அது
...க்கு மட்டுமே கேட்டது.



# 15

'தாமரைச் செல்வி, என் இனிய தாமரைச் செல்வி உன்னை
... தஞ்சைக்கு அழைத்து வந்திருக்க வேண்டுமடி. இங்கு வந்து
... காட்டியிருக்க வேண்டும்'

அவன் இராஜராஜேஸ்வரத்தை பார்த்து விட்டு திகைத்துப்
... மனதுக்குள் பெரிதாய் அரற்றினான்.

'விட்டுவிட்டேனே. உன்னை விட்டு விட்டேனே. உன்னை
விட்டு விட்டு நான் மட்டும் தனியாக இங்கு ஏதோ மிகப் பெரிய
...யம் சாதிப்பது போல் வந்திருக்கிறேனே. தஞ்சையின் நெடிய
... வயல்களை கண்ணுக்கு எட்டிய தூரம் வரைக்கும் தலை
...டும் நெற்கதிர்களை, சலசலத்து ஓடும் காவிரியை, ஓடைகளை
உனக்கு காட்டியிருக்க வேண்டும்.

கொழுத்த பசுக்களையும், துள்ளுகின்ற ஆடுகளையும், கனுக் அளவு கால்வாயில் நீந்தி ஓடுகின்ற வாளை மீன்களையும் காட்டியிரு வேண்டும், வாளை மீன்கள் ஒரு கை நீளம் இருக்கின்றன. பிடிக் போனால் சடேர் என்று எகிறுகின்றன. மறுபடியும் தண்ணீரில் து குதித்து ஓடுகின்றன. எங்கும் ஒரு வைக்கோல் மணம். எங்கும் அவிக்கும் மணம். கரும்பு ஆலையின் மணம். நீ படித்திருக்கிறா

'உழவர் ஓதை மதகோதை
உடைநீர் ஓதை தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி'

நான் இதை அனுபவித்தேன். தொலைதூரம் உழவர்கள் மாடு ஓட்டிப்போகின்ற சத்தங்கள் கேட்கின்றன. ஆறு பேர்கள், பத்து பேர் ஒன்றன் பின் ஒன்றாக ஏர் அழுத்தி, மாடுகளை ஓட்டி வளை வளைத்து உழுகிறார்கள். ஆழ உழுகிறார்கள் என்று அவர்கள் நின்று அழுத்துவதிலேயே தெரிகிறது.

உழுதவயலை பாதி மூழ்கி இருக்கிறது. மண் பிரண்டு தத்தள கிறது. சிறிய மதகுகளிலெல்லாம் தண்ணீர் பொங்குகிறது. தபதபவெ சத்தம் கேட்கிறது. குழந்தைகள் குதித்து நீராடுகிறார்கள். பெரிய கூச் போடுகிறார்கள். நதிநீர் சலசலத்து ஓடுகிறது. அந்த சப்தமும் கேட்கிற காது கொடுத்து கேட்டால் குளிரக் குளிர கேட்டுக் கொண்டிருக்கலா

பூமியின் இந்த பகுதி மிகச் செழிப்பாக மிகச் சுத்தமாக, மி கம்பீரமாக, செல்வ வளம் மிக்கதாக இருப்பதை நான் கண் குளி காதுகுளிர, உடம்பு குளிர அனுபவித்தேன்.

நீ அருகில் இருப்பின் நாம் இரண்டு பேரும் ஓயாது பேசி பேசி அனுபவிப்போம். ஏன் உன்னை விட்டு விட்டேன் என் எனக்குத் தெரியவே இல்லை' அவன் புலம்பினான்.

கேரளாந்தகன் வாயிலும், இராஜராஜன் வாயிலும் கடந்து போகு போது குபீர் என்று எழுந்த விமானம் பார்த்து அவன் திகைத்து போனான். அவன் திகைப்பை அருண்மொழிப் பட்டன் அ பவித்தான்.

இராஜேந்திரருக்கு பதிலாக அங்கு வந்து அந்த கோவிலி நிலைமையை சீர் செய்ய வேண்டிய அவசியம் அவனுக்கு இருந்த இது இராஜேந்திரசோழன் உத்தரவாக இருந்தது. அதை மேற்கொள்ளு போது இந்த இளைஞனையும் அழைத்துப் போகலாமே என்



சீராளனை அழைத்து வந்தான். சீராளன் திகைப்பதை ஆவலோடு பார்த்தான்.

கிராமத்து பக்கத்திலிருந்து வந்தவன் நகரத்தை பார்த்து வியப்பது இயல்பு. அவன் பல இடங்களில் வியந்து வியந்து இருப்பதை அவன் மனத்தில் உள்ள வெள்ளைத்தனத்தை, அவன் கண்களில் உள்ள [illegible] மிகவும் கவனமாக குறித்துக் கொண்டான்.

இவன் நல்லவன், கெட்டிக்காரன், நல்லவர்கள் கெட்டிக்காரர்களாக இருப்பது என்பது மிகவும் அரிது. இவனை இப்படியே பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். ஆட்களை அனுப்பி கோவில் நிர்வாகிகளை கூட்டினான்.

என்ன வருமானம், என்ன செலவு என்ற கணக்கை முதலில் பார்த்தார். வருமானம் அதிகமாகவே இருந்தது. கிராமத்து ஜனங்கள் கூடை கூடையாக நெல் கொண்டு வந்து குவித்துக் கொண்டு தான் இருந்தார்கள். அரச குடும்பத்தினர் கொடுத்த நகைகளெல்லாம் மிகச் சுத்தமாக இருந்தன. பதுமைகள் எல்லாம் புளி போட்டு தேய்க்கப்பட்டு பளபளப்பாக இருந்தன. கோவிலுள்ள எல்லா மூலைகளும் ஒட்டடை அடிக்கப்பட்டு, தரை மெழுகப்பட்டு, கோலமிடப்பட்டு இருந்தது.

கோவிலுள்ள பாகசாலை செவ்வனே நிர்வகிக்கப்பட்டு இருந்தது. அவ்வப்போது சமையலுக்கு உண்டான சாமான்கள் வாங்கப்பட்டு இருந்தன. அரிசிக் குதிர் முக்கால்வாசி நிரம்பி இருந்தது. கேட்டபோதெல்லாம் அரசிடமிருந்து, மக்களிடமிருந்து தானியங்கள் வருகின்றன என்று சமையற்காரர் சொன்னார்.

சிவனுக்கு வெறும் அன்னமும், நெய்யும் தினசரி படைப்பதாகவும் அந்த வருவோருக்கு விநியோகிப்பதாகவும் விவரித்தார். கோவிலுக்கான நிதி நிலைமை மிக சௌகரியமாக இருந்தது. பல கிராமங்கள் கோவிலுக்கென்று உள்ள நிதியிலிருந்து கடன் வாங்கி அதற்கு வட்டி செலுத்திக் கொண்டிருந்தார்கள். அநேகமாக எல்லா கிராமங்களும் நீர் நிலைகளை சரி செய்வதற்காகவும், வரப்புகளை உயர்த்துவதற்காகவும் கடன் வாங்கி இருந்தார்கள்.

தஞ்சையிலுள்ள விவசாயிகள் காய்கறிகள் அனுப்பினார்கள். பசுவின் பால் அபிஷேகத்திற்காகவும், தயிருக்காகவும் காசு கொடுத்து வாங்கப்பட்டது. ஆடுகள் பல குழுக்களாக நிவந்தங்கள் அளிக்கப்பட்டு அந்த ஆட்டின் பாலிலிருந்து நெய் எடுக்கப்பட்டு அந்த நெய் விளக்கு ஏற்ற பயன்பட்டது. நன்றாக கடும் கொழுப்பாக இருக்கின்ற அந்த நெய் விளக்குகள் எரிப்பதற்கு உவப்பாக இருந்தது.

உள்ளே கருவறைக்குள்ளே ஆறேழு தீபங்கள் பெரிதாக எ[illegible] கொண்டிருந்தன. நாலு பானை நெய் கைவசம் இருந்தது.

ஒரு மேடையில் உட்கார்ந்து எல்லா கணக்குகளையும் பார்த்த அருண்மொழி கிளம்பலாம் என்று முயற்சித்த போது அவ[illegible] நோக்கி தேவரடியார்கள் வந்தார்கள். எல்லோரும் எழுந்து நி[illegible] கை, கால்கள் தட்டி அவருக்கு நடனமாக வணக்கம் சொன்னார்[illegible]

"என்ன விஷயம், ஏதோ கேட்க விரும்புகிறீர்கள் போலிருக்கிற[illegible]

"ஆம் ஐயன். நாங்கள் மட்டும் அல்ல. இங்குள்ள அத்த[illegible] கோவில் பணியாளர்களும் ஒன்று கேட்க வேண்டும்"

"என்ன சொல்லுங்கள்"

"இந்த இடத்தை புறக்கணித்து விட்டு மாமன்னர் இராஜேந்[illegible] சோழர் ஜெயங்கொண்டத்தில் தனியாக அரண்மனையும், கோவி[illegible] கட்டுவதாக கேள்விப்பட்டோம். இதற்கென்று இங்கு வாழ்க்கைப்ப[illegible] எங்களுடைய நிலைமை என்ன ஆகும். இதை இராஜேந்திர[illegible] நீங்களோ யோசித்து பார்த்திருப்பீர்களா. என்னுடைய ஊர் வே[illegible] அவளுடைய ஊர் வேறு. இவளுடைய ஊர் வேறு. இப்படி ஒவ்வொ[illegible] ஊரையும் விட்டு விட்டு நாங்கள் இங்கே இந்த இடத்தில் நடனம[illegible] வேண்டும் என்ற அரசருடைய கோரிக்கையை ஏற்று இங்கு வந்தோ[illegible] எங்களுக்கு வீடுகள் தரப்பட்டன. நாங்கள் இருந்தது மாளிகையி[illegible] கொடுத்த வீட்டில் நாங்கள் சந்தோஷமாக இருந்தோம். சிவ[illegible] பணி என்று இருந்தோம். நிறைய பாடல்கள் பாடினோம். நிறை[illegible] நடனங்கள் ஆடினோம். ஜனங்களை மகிழ்வித்தோம். இறைவனுக்[illegible] தொண்டு செய்தோம். இந்த இடத்தை சுத்தமாக வைத்திருக்க எல்[illegible] முயற்சிகளும் எடுத்துக் கொண்டோம். ஆனால் இப்பொழுது தி[illegible] என்று இந்தக் கோவிலை புறக்கணித்து விட்டு வேறு இடத்திற்[illegible] மன்னர் போனால் என் மகள் என்ன ஆவாள். அவளுக்கு பிறகு[illegible] மகள் என்ன ஆவாள் எங்கு போய் நடனம் செய்வது.

நான் ஊரைவிட்டு தஞ்சைக்கு வந்தபோது எப்படி தி[illegible] முக்காடி இருந்தேனோ அதே போல என் மகள் இங்கிருந்து கிளம்[illegible] ஜெயங் கொண்டத்திற்கு போய் அங்கு விழித்துக் கொண்டு நி[illegible] வேண்டுமா. எங்களுக்கு ஊர் என்று ஒன்றுமே கிடையாதா. தஞ்ச[illegible] மண் எங்கள் சொந்த மண் அல்லவா. இந்த மண்ணில் நாங்க[illegible] வேரூன்றிய பிறகு இப்பொழுது வேரோடு பிடுங்குகிறீர்களே இ[illegible] சரியா. தேவரடியார்களாகிய நாங்கள் மட்டும் இல்லை.

சமையற்காரர், வீணை வாசிப்பவர், குழல் வாசிப்பவர், ஓதுவா[illegible]



[illegible]கொட்டுபவர், முரசு அறிவிப்பவர் என்று பலருக்கும் இந்த [illegible] தான்.

எங்களுக்கு எது ஊர். அரசர் போகின்ற ஊரெல்லாம் எங்கள் ஊராக [illegible] கொள்ள வேண்டுமா. எங்கள் ஊர் ஜெயங்கொண்டம் என்று [illegible] நினைத்துக் கொள்ள வேண்டுமா, ஜெயங்கொண்டத்தில் [illegible] நாங்கள் எங்கு தங்குவது, மரத்தடியிலா, மன்னருடைய [illegible] போல் எங்களுக்கு இன்னொரு அரண்மனை வேண்டும் [illegible] கேட்டால் மரியாதையா. இப்பொழுது நான் பலவேறு [illegible]களுக்கு பிறகு தஞ்சை மண்ணில் நாங்கள் நிரந்தரமாயிருக் [illegible] இப்பொழுது கிளம்பு, கிளம்பு என்று சொன்னால் என்ன [illegible], எங்களுக்குத் தெரியும் நீங்கள் யாரும் எங்களை கிளம்பு [illegible] சொல்லவில்லை. எங்களுக்கு வயதாகி விட்டது. இதோ நான் [illegible] ஏழு அகவை. அவள் ஐம்பத்திரண்டு. அவள் அறுபது. [illegible] அறுபத்தி ஒன்று. இளம் பெண்ணாக இங்கு வந்து நடனம் [illegible] எல்லோரையும் மகிழ்வித்து இப்போது வயதான காலத்தில் [illegible] தொலைவு மாட்டு வண்டியில் பயணப்பட்டு அல்லது [illegible] ஏறி நாங்கள் ஜெயங்கொண்டம் வருவது. அங்கு வேரூன்ற [illegible]. எங்கள் குழந்தைகள் அங்கு கற்றுக் கொள்ள முடியுமா. இப்பொழுது மிகப் பெரிய நடனசாலை இருக்கிறது. நாங்கள் இந்த கோவில் வளாகத்திலேயே நடனம் கற்றுக் கொள்கிறோம்.

அங்கு கோவில் உருவாகி, அங்கு வளாகம் ஏற்பட்டு அங்கு நடனம் கற்றுக் கொள்வதற்கு எத்தனை நாளாகும். எனவே எங்களை நிர்கதியாக விட்டு விட்டு மன்னர் கிளம்புகிறார் என்பது மிகுந்த துக்கத்தை கொடுக்கிறது. அழுது புலம்பினாலும் யாரும் கேட்பார் இல்லை, எங்களைப் பற்றி யாரும் யோசிப்பார் இல்லை. கோவிலில் பணி, சிவன் தொண்டு என்று வந்த எங்களைப் பற்றி யாரும் எதுவுமே நினைக்காமல் திடீரென்று கை கழுவி விட்டு போனது போல் இருக்கிறது. என் இளமையை முழுக்க நான் இங்கு தான் செலவழித்தேன். இந்த சிவனுக்காகத் தான் நடனமாடினேன். இப்போது இரண்டு காலும் குடைச்சல் வலி. இந்த வலியோடு நான் எவ்வளவு தொலைவு நடக்க. என் மகளுக்கு இன்னும் நாட்டியம் முழுமையாக கற்றுத் தரவில்லை. அவள் எங்கு போய் கற்றுக் கொள்வாள்.

என் மகன் மத்தளம் வாசிக்கிறான். அவன் பயிற்சி பெற இன்னும் ஐந்து வருடங்கள் ஆகும். அவன் யாரிடம் போய் கற்றுக் கொள்வான். ஜெயங்கொண்டம் எப்படிப்பட்ட ஊர், அங்கு மத்தளம்

கற்றுக் கொடுக்கவோ, திருத்தம் கற்றுக் கொடுக்கவோ, சமை
கற்றுக் கொடுக்கவோ, மூரக இழுத்து அடிக்க கற்றுக் கொடுக்க
ஆட்கள் உண்டா, புதிய ஊரில் நாங்கள் போய் என்ன செய்வ

இப்படி ஒவ்வொரு அரசரும் இடம் பெயர்ந்தால் மக்களுடை
நிலைமை என்ன. இதைப் பற்றி மாமன்னருக்கு அருகே உ
நீங்களெல்லாம் சிந்திக்கவே மாட்டீர்களா.

தலைநகரை இடம் பெயர வைப்பது என்பது சரிய
செயல் அல்லவே. அது அரசாங்கத்திற்கு மிகப்பெரிய இடைஞ்
அல்லவா. மக்களுக்கு மிகப் பெரிய தொந்தரவல்லவா. எங்க
புறக்கணிப்பதாக நாங்கள் நினைக்கிறோம். எங்களை இ
படுத்துவதாக நினைக்கிறோம்.

நான் என் மனக் குமுறலை, இத்தனை பேர் மனக்குமுறலை நா
என் வாயால் சொல்லி விட்டேன். நீங்கள் இதை இராஜேந்திரரி
சொன்னாலும் சரி, சொல்லாது போனாலும் சரி.

நீங்கள் எல்லோரும் தஞ்சையை விட்டு படைக்கலன்களோ
நகரும் பொழுது நாங்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவோ
ஐயா, அருண்மொழிப் பட்டரே என் நெஞ்சில் உள்ளதை, இ
இங்கு சுற்றி உள்ளோர் நெஞ்சில் உள்ளதை என்னால் வார்த்தையா
முடிந்தது. என்னால் வார்த்தையாக்கி உங்களிடம் சொல்ல முடிந்த
அதுவே சிவனுடைய செயல். இதை நீங்கள் சீர்தூக்கி பார்த்
நான் தவறு என்றால் என்னை பிரம்பால் அடியுங்கள். சரி என்றா
இதில் உள்ள உண்மையை தயவுசெய்து மன்னரிடம் எடுத்து
சொல்லுங்கள்.

நீங்கள் எல்லோரும் தஞ்சையை விட்டு நீங்கும் பொழு
நாங்கள் எல்லாம் நெஞ்சில் அடித்துக் கொண்டு அழுவதைத் தவி
வேறு வழி தெரியவில்லை. இந்த வயதான காலத்தில் வேறு ஊருக்
குடிவர தயவு செய்து எங்களுக்கு கட்டளை இடாதீர்கள். எங்களா
வர இயலாது. தஞ்சையை விட்டு வர முடியாது. இந்த கோவிலை
விட்டு நகர முடியாது. பிரகதீஸ்வரரை தினந்தோறும் நமஸ்கரிக்க
விட்டால் எங்களுக்கு பொழுது போகாது. எல்லா நாட்களிலு
பெண்கள் உள்ளே வர முடியாது. பெண்கள் வர முடியாத நாட்களி
நாங்கள் வாசலில் நின்று கோவில் விமானத்தை நமஸ்கரித்
விட்டுப் போவோம். எவ்வளவு பிரேமை, எங்களுக்கு பிரகதீஸ்வா
மீது. எங்கள் உயிர் அவர். அவரை விட்டு வரச் சொல்லாதீர்கள்.

இப்படி ஒவ்வொரு அரசனும் தங்கள் தலைநகரை மாற்றி



கொண்டிருந்தால் அது மக்களுக்கு எவ்வளவு பெரிய கேடு. எத்தனை பெரிய அவலம். இதை ஏன் நீங்கள் புரிந்து கொள்ள ...ட்டேன் என்கிறீர்கள். உங்களுக்கு ஆயிரம் காரணம் இருக்கலாம். ஆனால் வேரோடு குடிபெயரும்படி நீங்கள் சொன்னால் எங்களால் ...படி கேட்க முடியும்.

உங்களோடு மறவர்கள் வந்து விடுவார்கள். உங்களோடு அந்த ...ர்கள் வந்து விடுவார்கள். இங்கு இருக்கின்ற உழவு மக்கள் விவசாயி ...ள் என்ன செய்வார்கள். இந்த நிலத்தை விட்டு எங்கே வருவார்கள். அவர்களை விட்டு விட்டு போகப் போகிறீர்களா, இங்குள்ள ...வர்களும், இங்குள்ள கருந்தச்சர்களும், இங்குள்ள மரத்தச்சர்களும் என்ன செய்வார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு போனால் அவர்கள் வீடுகளிலெல்லாம் யார் குடியிருப்பார்கள்.

எங்களை எல்லாம் இங்கேயே விட்டு விட்டு போகப் போகிறீர்களா அல்லது அங்கே அழைத்துக் கொண்டு போய் அந்த ...த்தில் நடனமாடு என்று சொல்லப் போகிறீர்களா. என் மகளுக்கு ந...னம் முழுவதும் கற்றுக் கொள்ளும்வரை, இந்த இடத்தை விட்டு நான் நகருவதாக இல்லை.

இனி உங்கள் உத்தரவுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

சீராளன் திகைத்துப் போனான்.

என்ன தைரியமாக பேசுகிறாள் இந்தப் பெண்மணி. சோழ தேசத்தில் இவ்வளவு எளிதாக ஒரு அரச அதிகாரியிடம், அதுவும் பட்டத்தரசருக்கு நிகரான ஒரு அதிகாரியிடம் ஒரு பெண்மணி இப்படி பேச முடியும் என்றால் என்ன அற்புதம் இது. இம்மாதிரி பேசுவதற்குத் தானே மயிலையில் முயற்சி செய்தோம்.

வாயை மூடு. வாயை மூடு என்றல்லவா அந்தணர்கள் சொல்கிறார்கள் இந்த ஒரு கேள்விக்கு, இவளுடைய ஆதங்கத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் அருண்மொழிப் பட்டர்.

ஆவலாக காத்திருந்தான்.

"குடந்தையிலிருந்து இடம் பெயர்ந்து தஞ்சை வந்தோமே. குடந்தை அழிந்தா போயிற்று. பழையாறை கோட்டையை அப்படியே விட்டு விட்டு தஞ்சைக்கு வந்து புதிதாக அரண்மனை கட்டிக் கொண்டோமே சோழர் குலம் அழிந்தா போயிற்று.

ஒரு தேசம் பெரிதாக எல்லைகள் விவரிக்கப்படுகிற பொழுது அதனுடைய தலைநகரம் அதன் எல்லைகளுக்கேற்ப நடுநாயகமாக

இருக்க வேண்டும். சோழ தேசத்தில் வடக்கு எல்லை விரிவடை
விட்டது. கீழைச் சாளுக்கியம் வரை நம்முடைய கொடி பறக்கிற
மேலைச் சாளுக்கியத்தில் எதிர்ப்பு இருக்கிறது. கங்க தேசமு
இராஷ்டிர கூடமும் நமக்கு அடிபணிந்து இருக்கின்றன. குடகுமலை
நம்முடைய சாம்ராஜ்யமாக இருக்கிறது. சேரர்கள் காணா
போனார்கள். மதுரை மண்ணோடு மண்ணாயிற்று. இலங்கை
எரியூட்டி பாண்டியருடைய மணிமுடியும், செங்கோலையும் பறித்
கொண்டு வந்தாகி விட்டது.

தஞ்சை தான் என்னுடைய மண் என்று உட்கார்ந்
கொண்டிருந்தால் வடக்கே இருந்து மேலைச் சாளுக்கியம் கீழை
சாளுக்கியத்தின் வழியாக திருவொற்றியூரை தாக்குவா
திருவொற்றியூர் தான் நம் எல்லை இப்போதைக்கு அது இன்னு
விரிவாக்கப்படும். மயிலையும், திருவல்லிக்கேணியும் அடிபடு
திருமல்லை அவர்கள் வசப்படும். காஞ்சிபுரம் நோக்கியும் அவர்க
வரலாம். காஞ்சிபுரம் தாண்டி எசாளம், எண்ணாயிரம் என்று
பரவலாம். அங்கிருந்து நடுநாட்டிற்கு வரலாம். அங்கிருந்து தஞ்சை
ஒரு நாள் பயணம். எனவே மூன்று நாளில் தஞ்சையை எதிரிக
எட்டி விடலாம். அதற்காக தலைநகரை மாற்றி வடக்கிலே
எதிரிகளை தடுத்து நிறுத்தும் வண்ணம் ஒரு புதிய அரண்மனையை
மிக வலுவான கோட்டையை நல்ல எண்ணத்தோடு இராஜேந்திர
கட்டிக் கொண்டிருக்கிறார்.

வெறும் அரண்மனை கட்டினால் அது உவப்பாக இருக்காது
என்று, தன் தந்தையைப் போலவே மிகச் சிறப்பான ஒரு கோவி
கட்ட வேண்டும் என்று நினைத்து அதற்கான செயலில் ஈடுபடுகிறார்

தஞ்சையைப் பற்றி இவ்வளவு பெருமையாக நீங்கள் பேசுவது
சந்தோஷமாக இருக்கிறது. உடையார்குடி வந்து பார்த்திருக்கிறீர்களா
வாருங்கள். மிகப் பெரிய ஏரி, கடல் போல ஏரி, மூன்று போகம், அங்கு
வந்து இதைவிட அதிகமான சந்தோஷமாகவும், சௌகரியமாகவும்
நீங்கள் இருக்க முடியும். ஆரம்ப நாட்களில் வீடு அமைவதும்,
வீட்டிற்குள் சௌகரியங்கள் அமைவதும் கொஞ்சம் கடினமாகத்
தான் இருக்கும். இதோ நான் புழங்கிய இந்த தஞ்சையை விட்டு,
என் அரண்மனையை விட்டு நான் நகர்ந்து போகப் போகிறேன்.
என் தகப்பன் இங்கு இருக்கிறார். எடுத்தவுடன் தந்தையையும்,
தாயையும் பிரிந்து விட்டு நான் என் மனைவியோடு போகலாம்
என்று முடிவு செய்திருக்கிறேன். ஒருவேளை மனைவியும் வர
மறுக்கலாம். அப்பொழுது நான் தனியாகப் போவேன். இதற்கு அழு



அரசப்பணி என்று வந்தாகி விட்டது. அரசப் பணி என்று வந்தால் அப்பொழுது இடம் பெயர்தல் என்பது அரசப் பணியாளர்களுக்கு விதித்த முதல் சட்டம். அரசு எங்கு இருக்கிறதோ அங்கு தான் அரசப் பணியாளர்கள் இருக்க வேண்டும். நீங்கள் அரச பணியாளர்கள், மாதா மாதம் நெல்லும், காசும் உங்களுக்கு கூலியாக கொடுக்கப்படுகின்றன. உங்களுக்கு சௌகரியாக இருப்பதற்காக எல்லா வசதியும் செய்து தரப்பட்டு இருக்கின்றன. நீங்கள் இந்த இடம் விட்டு பெயர மறுத்தால், வர முடியாது என்று சொன்னால் உங்கள் மீது அரசர் தண்டனைக்குரிய குற்றம் சாட்டலாம், தண்டனையும் தரலாம்.

அரசர் என்ன தண்டனை தருவார் என்று சொல்வதற்கில்லை. ஆனால் இதையே நான் கொண்டு போய் அரசரிடம் சொன்னால் அரசர் சில விநாடிகள் யோசிப்பார். பிறகு,

இவர்கள் யாரும் வர வேண்டாம். நான் வேறிடத்திலிருந்து நடன மாதர்களை, முரசொலிப்பவர்களை, மத்தளம் வாசிப்பவர்களை, ஓதுவார்களை கூட்டிக் கொண்டு வருகிறேன். எல்லாமே புதிதாக இருக்கட்டும். அரண்மனை புதிதாக இருக்கட்டும். கோவில் பணியாளர்களும் புதிதாக இருக்கட்டும் என்று சொல்லி விடுவார்.

பிறகு மாதாந்திர நெல்லும், பொற்கழஞ்சும் எப்படி கிடைக்கும் என்பது கேள்விக்குறிதான். ஆனால் அரசர் குரூரமானவர் அல்ல. அதற்குண்டான ஏற்பாடுகள் செய்யத்தான் வந்திருக்கிறேன். இங்கு நமக்கு வழக்குகள் சுத்தமாக இருக்கின்றன. தொடர்ந்து இந்த கோவில் பராமரிப்பதற்கு உண்டான, எல்லா வேலைகளையும் செய்து கொள்ள உத்தரவாதம் தருவதற்காக நான் வந்திருக்கிறேன்.

தலைநகரம் மாறப்போவது உறுதி. அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். இந்த கோவில் மீது அன்பு வைத்து இதை விட்டு வர மாட்டேன் என்று சொல்வது மிகச் சரியான வாதம். எனக்கு வயதாகி விட்டது என்று சொல்வதும் ஏற்பதற்குடையதே. நான் என் இளமைக் காலம் முழுவதும் செலவழித்தேனே இதை விட்டு இப்போது எப்படி வருவேன் என்று நீங்கள் கேட்பது உணர்ச்சி மயமானது. அந்த உணர்ச்சியை நான் மதிக்கிறேன்.

தலைநகரை மாற்றக்கூடாது என்ற வார்த்தை எல்லாம் தயவு செய்து நீங்கள் வாயைத் திறந்து சொல்லி விடாதீர்கள். இராஜேந்திரர் கோபத்துக்கு ஆளாகாதீர்கள்.

சோழதேசம் வரை மேலைச் சாளுக்கியம் படை எடுத்து வந்து விட்டால் அப்போது நெல்லும் போயிற்று. கழஞ்சும் போயிற்று. ஆடல் பாடலும் போயிற்று. இந்த கோவில் இருக்குமா என்பது கூட சந்தேகமே. எனவே எதிரி யார், அவனுடைய வலிவு என்ன மன்னர் என்ன செய்தால் எதிரி தயங்கி நிற்பான் என்று புரிந்து கொண்டு பேச வேண்டும். மேலைச் சாளுக்கியத்திற்கும், நமக்கும் உண்டான பகைமை ஊர் அறிந்தது. கீழைச் சாளுக்கியத்தை ஏதாவது ஒரு வகையில் கபளீகரம் செய்து மேலை சாளுக்கியத்தி உள்ளே வர முயற்சிக்கிறார்கள். பல்வேறு விதமான ராஜதந்திரங்கள் நடைபெறுகின்றன.

இவை எல்லாவற்றையும் மாமன்னர் இராஜேந்திரர் முறியடித்துக் கொண்டிருக்கிறார்.

எனவே, அது பற்றியெல்லாம் கவலைப்படாது நீங்கள் இந்த கோவிலை சரியாக பராமரியுங்கள். உங்களுக்கு உண்டான இந்த சலுகைகள், உதவிகள் நிச்சயம் கிடைக்கும். அதற்குண்டான ஏற்பாட்டை இங்கு தலைமை வகித்து, என் தகப்பனார் கிருஷ்ணா ராமன் செய்வார். பரமன் மழபாடியார் இந்த தேசத்தின் பாதுகாப்பை கவனித்துக் கொள்வார். தெற்கே உள்ள பாடிக் காவல்கள் பலப்படுத்தப்படும். எவரிடமிருந்து:\ எந்தவிதமான தொந்தரவும் வராது. இப்பொழுது இருக்கிறபடியே சந்தோஷமாக, சுப்பிரமாக நீங்கள் வாழ்க்கை நடத்தலாம்.

கோவில் என்கிற விஷயத்தை எவ்வளவு பெரிய கொடுங்கோல் மன்னனும் எந்த தொந்தரவும் செய்ய மாட்டான்.

எனவே நீங்கள் அங்கே வருவது உசிதமல்ல என்பதே என் எண்ணம். உங்கள் வயதான காலத்தில் இந்தக் கோவிலை பராமரித்து இருங்கள். உங்களுடைய குழந்தைகளை இங்கேயே வளருங்கள். அவர்கள் விருப்பப்பட்டால் அங்கே அனுப்பி வையுங்கள். ஆனால் அந்த கோவிலிலும் நடன மாதர்கள் இருப்பார்கள். மற்ற எல்லா கலைஞர்களும் இருப்பார்கள் என்பதை கவனித்துக் கொள்ளுங்கள்.

எனவே அங்கே பாடுகிற வாய்ப்பு போயிற்றே. ஆடுகிற வாய்ப்பு போயிற்றே என்று எண்ணாதீர்கள்"

"தலைநகரம் மாறினால் தஞ்சை காலியாகி விடுமே"

"எப்படி காலி ஆகும். தஞ்சையில் உள்ளவர்கள் தஞ்சையில் தானே இருப்பார்கள். நீங்கள் சொன்னது போல உழவர்கள் எல்லாம் நிலத்தை விட்டு போய் விடுவார்களா. இங்கிருந்து மறவர்கள் இடம்



பெயர்வார்கள். இங்கிருந்து அதிகாரிகள் நகருவார்கள். இங்கு உள்ள சில வணிகர்கள் இடம் பெயரலாம். ஆனால் அடிப்படையில் இங்கு என்ன வசதிகள் உண்டோ அந்த வசதிகளை நீங்கள் அனுபவிக்க யார் யார் அவசியமோ அவர்கள் நியமித்து விட்டுத் தான் போவோம்"

"அப்படி சொல்ல முடியாதய்யா"

"என்ன?"

"சோற்றுக் கடை வீதி என்று ஒன்று ஏற்பட்டிருக்கிறது"

"சரி"

"அதில் உள்ள அந்தணர்கள் எல்லாம் எப்போது ஜெயங்கொண்டான் போகலாம் என்று தான் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு மாட்டு வண்டி வாங்கி அதில் எல்லா சாமான்களையும் ஏற்றி, இருந்த வீட்டை விட்டு விட்டு ஜெயங் கொண்டத்துக்கு சோறு சமைக்க போய் விடுவார்கள்"

"அதனால் என்ன, இங்கு வேறு யாரேனும் சமைத்து விட்டு போவார்கள். வேறு யாரேனும் வந்து வாடகைக்கு இருப்பார்கள். இந்த ஆட்கள் நகர்ந்து விட்டால் இங்கு ஆட்களே இல்லையா.

தலைநகரம் மாறுவதால் உங்கள் வாழ்வு ஆதாரம் ஒருகாலும் பாதிக்காது. நீங்கள் சொன்னது போல உழவர்கள் இங்கு உழுது கொண்டு தான் இருப்பார்கள். நெற்பயிர் வளர்ப்பார்கள், வாழை மரம் வளரும், வாழைத் தார் சாயும். மாடுகள் பால் கறக்கும். ஆடுகள் குட்டிகள் போடும். எல்லாம் ஒழுங்காக நடக்கும். இது ஒரு ஊர். முன்பு மன்னர் ஆண்ட ஊர் என்ற அமைப்போடு இருக்கும்.

அதைத் தவிர ஒன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். இன்று இந்த இடத்திற்கு வருபவர்கள் யார், தஞ்சையில் உள்ளவர்களா இல்லை, வெளியூரிலிருந்து கும்பல் கும்பலாக மாட்டு வண்டி கட்டிக் கொண்டு இங்கு வந்து பிரகதீஸ்வரரை வணங்கிய வண்ணம் இருக்கிறார்கள். இப்படி இன்னும் பல ஆயிரம் வருடங்களுக்கு இப்படி வியக்கின்ற மனிதர்கள் பல்வேறு திசையிலிருந்து வருவார்கள். அத்தனை சிறப்பாக இந்த கோவில் இருக்கும் பொழுது உங்கள் வாழ்வு பற்றி என்ன பயம். ஒருகாலும் பயப்பட வேண்டாம்"

"தஞ்சை பாழ்பட்டு போகுமே"

"போகாது. குடந்தை பாழ்பட்டா போயிற்று. முன்னை விட ஜொலிப்பாக இல்லையா, தஞ்சைக்கு வெளியூர் ஆட்கள்

வருவார்கள். இங்கு தங்க முற்படுவார்கள். அவர்களால் தஞ்சை இன்னும் ஜொலிப்பாக மாறும்"

"மன்னரை சந்திப்பது அரிதாகப் போகுமே"

"மன்னரை சந்திக்க வேண்டிய அவசியம் என்ன, இங்கு நிர்வாகம் செய்ய கிருஷ்ணன் ராமன் இருக்கிறார். பரமன் மழபாடி இருக்கிறார். அவருக்கு அடுத்தபடியான அதிகாரிகள் இருக்கிறார்கள்.

எனவே அதுபற்றி எந்த கவலையும் வேண்டாம். தெற்கு பக்கம் பாண்டியர்களுடைய தொந்தரவு எதுவும் வராமல் இருப்பதற்கு மிகப் பலமான பாடி காவல் செய்யப்பட்டு இருக்கிறது. தஞ்சை மிகப் பாதுகாப்பாக இருக்கிறது. எனவே எது பற்றியும் கவலைப்படாது இங்கு இருங்கள்"

"ஆனால் நீங்கள் எல்லாம் இல்லாது போகிறீர்களே என்ற வருத்தம் இருக்கத் தானே செய்யும்"

"ஆரம்பத்தில் இருக்கும். பிறகு ஒரு நிம்மதியே வந்து விடும். மன்னர் வருகிறார் என்று பரபரக்காமல், மன்னருக்காக என்று ஓடி, ஆடி செய்யாமல் நீங்கள் விட்டேத்தியாக இருக்கலாம்.

மன்னர் வடக்கே ஜெயங்கொண்டத்தில் கூட அல்ல. இன்னும் வடக்கே போரிட்டு கொண்டிருப்பார். அவருக்காக இங்கு பிரகதீஸ்வரருக்கு இடையறாது நாமம் சொல்லி, தேவார, திருவாசக பதிகங்கள் ஓதி நடனமாடிக் கொண்டிருக்கலாம். வேத விற்பன்னர்களை கொண்டு வேதம் ஓத வைக்கலாம். எல்லா சதய நாளிலும் செய்வது போல திருவாதிரை திருநாளிலும் நீங்கள் சிவனுக்கு அபிஷேகம் செய்யலாம். திருவாதிரை நம்முடைய மன்னனின் நட்சத்திரம். அவர் சிவ சொரூபம். மன்மத ரூபன்"

ஒரு அதிகாரி அமைதியாகவும், பணிவாகவும், வாயை மூடு என்று சிராமலும், நிதானமாக விளக்க மக்கள் அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக் கொண்டு தான் ஆகவேண்டும் என்கிற மெல்லிய அழுத்தமும் இருப்பதை சீராளன் உணர்ந்து கொண்டான்.

இப்படித்தானே பேச வேண்டும் ஒரு அதிகாரி, நீ என்னடா பேசுவது என்றல்லவா அந்த அந்தணர்கள் குதிக்கிறார்கள். உனக்கு என்னடா தெரியும் என்றல்லவா பேசுகிறார்கள். ஆனால் இவரும் அந்தணர் தான். என்னச் சிறப்பாக இருக்கிறது அந்தப் பேச்சு, மயிலை அந்தணர்களை நிச்சயம் கண்டிக்க வேண்டும். இதுபற்றி அருண் மொழியிடம் பேச வேண்டும் என்று சீராளன் நினைத்துக்



கொண்டான்.

"தலைநகரம் மாறப் போகிறதா"

"ஆமாம்"

"எதற்கு ஜெயங்கொண்டம், இன்னும் வடக்கே வந்து விடலாமா"

"இன்னும் வடக்கே என்றால்"

"மயிலை, திருவல்லிக்கேணியில் தலை நகராகக் கொள்ளலாமே, ... அற்புதமான புல்வெளி. மேடான இடமாக இருக்கிறது, நல்ல ஆறுகள் இருக்கின்றன. அந்த இடத்தில் வந்து நின்று விடலாமே"

"என்ன ஆறு"

"கூவம் என்ற ஆறு இருக்கிறதே"

"அது போதாது. அது மெல்லிய ஓடை போன்றது. மழைக்காலத்தில் ...டும் நீர் வருகிறது. இது கொள்ளிடம். மிகப் பெரிய ஆறு, பல கிளை நதிகள் இருக்கிறது. பல கிளை நதிகளை மேலும் ஏற்படுத்தி காவிரி, ஊருக்குள்ளே கொண்டு வந்திருக்கிறார். கால்வாய்கள் மூலம் எல்லா இடமும் இணைக்கப்பட்டு இருக்கின்றன.

இங்கு நல்ல நீர்வரத்து இருக்கிறது என்பதால் இந்த இடத்தை தேர்ந்தெடுக்கிறார். அதுமட்டுமல்ல அங்கிருந்து ஒரு நாழிகை பயணத்தில் 'உடையார் குடி' என்ற ஊரை அடைந்து விடலாம். வீரநாராயணபுரம் என்ற ஏரி இருக்கிறது, கடல் போல பெரியது, மூன்று போகம் விளைகிறது, எனவே அங்கிருந்து தானியங்களும், அரிசியும் வந்து விடுகின்றன. நல்ல பசுக்கள் அங்கு வளர்க்கப்படுகின்றன. அங்கிருந்து பாலும், வெண்ணையும், நெய்யும் இந்தப் பக்கம் வந்து விடும். அதுவும் தவிர கோட்டைக்குள்ளேயே உழுது பயிரிடவும், காய்கறிகள் விதைக்கவும் மன்னர் வழி செய்திருக்கிறார்.

இப்போதே அங்கு ஆயிரக்கணக்கானவர்கள் தங்கி இருக்கிறார்கள். உறுதியான வீடுகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஆயிரக் கணக்கானவர்கள் வந்தால் அவர்களுக்கும் உறுதியான வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

கூவத்தின் கரையிலுள்ள மயிலை மாமன்னர் இராஜேந்திரரை தாங்காது. அது போகும் வழி. இப்பொழுது உன்னை கூப்பிட்டு அனுப்பியது ஒரு முக்கியமான செயலுக்காக"

"சொல்லுங்கள்"

"போகும் வழியில் நான் நாங்கள் அரிசி கொள்முதல் செய்ய வேண்டும். இங்கிருந்து சிறிதளவு எடுத்துப் போவோம். உள்ளுக்குள்ளே கீழைச் சாளுக்கியம் போகும் பொழுது லட்சோப லட்சம் படை வீரர்களுக்கு உண்டான அரிசியை நீ அங்கு வணிகர்களிடமிருந்து வாங்கித் தர வேண்டும்.

காய்கறிகள், ஆடுகள் என்று பல்வேறு வகையான உணவுகளை நீங்கள் வண்டியில் ஏற்றி அனுப்ப வேண்டும். அதற்கு உண்டான வண்டிகளை நீங்கள் தயார் செய்து கொள்ள வேண்டும். ஒரு கூடை அரிசி இவ்வளவு என்று தீர்மானம் செய்து காசு வாங்கிக் கொள்ள வேண்டும். ஒரு ஆடு இத்தனை என்று சொல்லி காசு வாங்கிக் கொள்ள வேண்டும். காய்கறிகளுக்கு தனி விலை. நெய், எண்ணெய் மற்றும் மருந்து சாமான்கள், காயம் பட்டால் கட்டுவதற்கு உண்டான துணிகள், மாற்று உடைகள், பழுசு, உடைவாள் உடை தோல்வார் போன்றவை பிய்ந்து விட்டால் தைத்துக் கொள்வதற்கு உண்டான தோல் விற்பன்னர்கள், தொழிலாளிகள், ஈட்டிகளையும், வாட்களையும் சரி செய்து கொடுக்கும் கம்மாளர்கள், மரச்சக்கரங்கள் உடைந்து விட்டால் உடனடியாக சரி செய்கின்ற மரத்தச்சர்கள் என்று பலரும் அந்த இடத்தில் தயாராக இருக்க வேண்டும்.

நாங்கள் ஒரு குறிப்பிட்ட கம்மாளர்களோடும், மரத்தச்சர்களோடும், நெசவாளிகளோடும், தோல் விற்பன்னர்களோடும், மருத்துவர்களோடும் வருவோம். ஆனால் அது போதாது. என்னென்ன விதமான மருந்துகள் வேண்டுமென்று உனக்கு ஆதுரச் சாலையில் இருந்து பட்டியல் தருகிறேன். அந்த மருந்துகளை தயார் செய்து வை, மூன்று லட்சம் வீரர்களுக்கு உண்டான அரிசியை சேமித்து வை, எப்பொழுது கேட்டாலும் உடனடியாக அரிசி கொண்டு வந்து சோறாக்கி பரிமாறுவதற்கு உண்டான சமையல் காரர்களையும் ஏற்பாடு செய்.

உன்னால் செய்ய முடியும் அல்லவா"

"நிச்சயமாக செய்ய முடியும், ஆனால், மயிலை, திருவல்லிக் கேணியில் அந்தணர்கள் தான் தலைவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் சொல்வது தான் சட்டமாக இருக்கிறது. அவர்களை எதிர்த்து எதுவும் செய்ய முடியவில்லை. சொன்னால் வேகமாக பேசுகிறார்கள். ஏசுகிறார்கள். சும்மா இரு என்று அதட்டுகிறார்கள். நாங்கள் பார்க்காத அரசியலா, அரசாங்கமா, எங்களுக்குத் தெரியாதா என்று ஏகடியம் பேசுகிறார்கள்.

அவர்களுடைய பேச்சு முரட்டுத்தனமாக இருக்கிறது. என்னால்



வாளை உருவி தாக்கிவிட முடியும். கோல் எடுத்து அடித்து விட முடியும். அப்படி செய்வது தவறு என்று நமக்கு சட்டம் சொல்லுகிறது. அந்தணர்களை கொல்வது பாவம் என்கிறார்கள். அதே நேரத்தில் அந்தணர்கள் என்ன சொன்னாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்ற தலை எழுத்தும் நமக்கு இருக்கிறது"

"ஒரு நாளும் இல்லை. அந்தணர் சொல்வதே கடைசி எண்ணம் என்பது இராஜேந்திரருக்கு பிடிக்காது. இங்கு யார் வேளாளரோ அவரே தானியத்துக்கு பொறுப்பானவர், யார் கம்மாளரோ அவரே ஆயுதங்களுக்கு பொறுப்பானவர். யார் மரத்தச்சரோ அவரே வாகனங்களுக்கு பொறுப்பானவர், யார் தோல் விற்பன்னரோ அவரே மற்ற விஷயங்களுக்கும் பொறுப்பானவர் என்று தெள்ளத் தெளிவாக அவர் உத்தரவிட்டிருக்கிறார்.

வெறுமே பேசும் பிராமணர்களை அவர் மதிப்பதே இல்லை. நீ சொன்னதை அப்படியே சொன்னால் போதும் கூசாமல் அறை விழும். [illegible]தர்மம் சொல்கிற பயமெல்லாம் இராஜேந்திரருக்கு இல்லை. நாளையிலிருந்து உங்கள் அக்ரஹாரங்களை காலி செய்து விட்டு நீங்கள் வெளியேற வேண்டும். அங்கு முழுவதும் வேளாளர்கள் நுழைவார்கள் என்று ஒரே ஒரு வரியில் உத்தரவிட்டு விடுவார். அது உடனே செயல்படுத்தப்படும்"

"இராஜராஜர் வந்ததும் பிராமணர்களைத் தான் முதலில் நாடு விட்டு துரத்தினாராமே. அதுபோலவா"

"அதைவிடவும் மோசமாகவும் இருக்கும். அவர்கள் வேற்று தேசத்தினர். இங்கு வந்து உளவு பார்த்தார்கள். உளவு பார்த்து அதற்கு உண்டான வெற்றிகளை பெற்றார்கள். அவர்களை வெற்றி பெற விட்டது நம்முடைய தவறு. அதனால் திருப்பி அனுப்பினார். இந்த ஊரிலே உட்கார்ந்து கொண்டு இந்த அரசாங்கத்தையே கேலி செய்து கொண்டிருந்தால் முதுகு விரிந்து போகும்"

"இராஜேந்திரர் அடிப்பாரா"

"அவர் பிரம்பு பற்றி கேள்விப்பட்டதில்லையா"

"கேள்விப்பட்டிருக்கிறேன். முகத்தில் கூட அடி விழும் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்"

"ஆமாம். கோபம் வந்து விட்டால் தலை, கால் புரியாது. அன்பு மிகுந்து விட்டால் அவரை விட நல்ல நண்பர் கிடையாது. நீ அவரிடம் நல்ல பெயர் சம்பாதிக்க வேண்டுமென்றால் எது

சொன்னாலும் சரி என்று சொல்லி விடு"

"எதிர்த்து பேசவே கூடாதா"

"குறை இருந்தால் மிக பக்குவமாக எடுத்துச் சொல்"

"அந்த பக்குவம் எப்படி என்ன"

"நீர் கிடைப்பது மிகவும் கடினம். சோறு கிடைப்பது அதனினும் கடினம். ஆனால் கடற்கரை ஓரமாகப் போனால் தென்னை மரங்கள் உண்டு. விளை நிலங்கள் உண்டு. எனவே சோறு கிடைக்கும். அதுவும் தவிர குளிர்காற்று நன்றாக இருக்கும். கடற்காற்று அனுபவித்தபடியே போகலாம்.

கீழைச் சாளுக்கியம் நடுவே வரை உள்ளே போய் விட்டு பிறகு மேற்குப் பக்கம் திசை திரும்பலாம்"

"இதுதான் இதுதான் அவர் கேட்பது. இப்படி காரண காரியத்தோடு நீ பதில் சொல்வாய் என்றால், அப்படியா என்று சிந்திப்பார். அந்த சிந்திப்பில் நீ சரி என்று தெரிந்து விட்டால் நீ ராஜா, மன்னருக்கு உவப்பானவன்"

"நான் தவறு என்றால்"

"அடேய் முட்டாள் சும்மா இரு என்று ஒரு வார்த்தையில் அடக்கி விடுவார். நீ பங்கு பெற்றாய் அல்லவா அதுவே அவருக்கு சந்தோஷம். பங்கும் பெறாமல், குறை சொல்வது தான் அவருக்கு பிடிக்காத விஷயம்"

"இதைத்தானய்யா அந்த மயிலை அந்தணர்கள் செய்கிறார்கள். நேரடியாக பிரச்சனைகள் சொல்கிறபொழுது பிரச்சனையும் தீர்க்க மாட்டேன் என்கிறார்கள். அதே சமயத்தில் பிரச்சனை தீர்க்க நான் பார்த்துக் கொள்கிறேன் என்றால் அதற்கும் வழி விட மாட்டேன் என்கிறார்கள்"

"நான் வந்து அதைப் பார்த்துக் கொள்கிறேன். கவலைப்படாதே. அப்பொழுது மன்னரிடம் நீ இதற்கான பொறுப்பை ஏற்கிறாய் என்று சொல்லவா"

"சொல்லி விடுங்கள்"

"மன்னரை மறுபடி சந்திக்க ஆசையில்லையா"

"பெருத்த ஆசை உண்டு. தந்தை கிருஷ்ணன் ராமன் அவர்களையும் மீண்டும் சந்திக்க ஆசை உண்டு"

"வா, முதலில் என் வீட்டிற்கு போகலாம். என் தந்தையை



பார்த்துவிட்டு மாமன்னரை பார்க்கலாம்"

தொண்டை தேசத்திலிருந்து வந்த அந்த சாதாரண வேளாள இளைஞன், அந்த சோழ சாம்ராஜ்யத்தின் அரசியலுக்குள் அவன் அறியாமல் நுழைந்தான்.

அவன் மனைவி தாமரைச் செல்வி தன் புருஷன் எப்போது வருவான், எப்போது கூடலாம் என்று காத்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கனவு இப்போதைக்கு நிறைவேறப் போவதில்லை என்பது அவனுடைய விதி ஏற்கனவே தீர்மானம் செய்து வைத்திருந்தது.



# 16

பரமன் மழபாடியார் மாளிகை வாசலில் அவர்கள் ஒன்றாக கூடியிருந்தார்கள் நாற்பது, ஐம்பது பேர் கையில் பறைகளோடும், சிறு முரசுகளோடும் அங்கங்கே உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். இடுப்பில் துண்டு கட்டி அதை அடியே வழித்து பின்பக்கம் சொருகி இருந்தார்கள். தலைப்பாகை கட்டி இருந்தார்கள். எல்லோருக்கும் குடுமி இருந்தது. கருத்த மேனியராய், கூரிய கண்கள் உடையவர்களாய் மெல்லிய உடம்பினராய் இருந்தார்கள். அதில் அதிகம் பேர் தாம்பூலம் தரித்தார்கள். பசித்தது. இருந்தாலும் பசி அடக்க தாம்பூலம் போட்டுக் கொண்டார்கள்.

விடியலில் வந்து விடுங்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் விடிந்து வெகுநேரமாகியும் பரமன் மழபாடியார் வெளியே வரவில்லை. உறங்குகிறாரா, என்று கேட்டதற்கு இல்லை உள்ளே ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லப்பட்டது. அவர்கள் காத்திருந்தார்கள். வெய்யில் வெளியேறி பளீர் என்று எல்லா திசையும் தெரியும் போது பரமன் மழபாடியார் வெளியே வந்தார்.

"வந்துவிட்டீர்களா, அவர்களுக்கு உண்டானதை கொடுத்து விடு" என்று கட்டளை இட்டார்.

ஒரு மூங்கில் தட்டில் வெற்றிலை பாக்கும், பொற்கழஞ்சுகளும் வைத்து அவர்களிடம் நீட்டப்பட்டன. மூன்று கூடை அரிசி கொடுக்கப்பட்டது. அவர்கள் மிக ஆவலோடு வாங்கிக் கொண்டார்கள். நல்ல பெரிய கூடை, கூடைக்கு பிடி இருந்தது. கூடையின் மீது அரிசி சிந்தாமல் இருக்க, ஓலைப்பாய் போட்டு தைக்கப் பட்டிருந்தது. அரிசி மணம் மூக்கை துளைத்தது. அவர்கள் மிகுந்த சந்தோஷத்திற்கு ஆளானார்கள்.

"அய்யா" என்று கை எடுத்து கும்பிட்டார்கள். விழுந்து வணங்கினார்கள்.

"யுத்தம் வரப்போகிறதப்பா. கீழைச் சாளுக்கியம் நோக்கி போகிறோம். இராஜேந்திரருடைய மருமகன் இராஜ நரேந்திரன் அங்கு பதவியில் அமருவதற்கு வம்பு செய்கிறார்களாம். நாம் தான் போய் அடக்க வேண்டும். வழக்கம் போல பறை அடித்துக் கொண்டு முன்னே போங்கள். சோழ தேசம் தாண்டுகிற வரையில் ஒரு தொந்தரவும் இருக்காது. பிறகு காட்டு வழி ஆரம்பமாகிவிடும். காட்டு மிருகங்களைக் கண்டால் ஓடிப்போய் வம்புக்கு இழுக்காதீர்கள். நின்று பறை அடித்து விரட்டுங்கள். அங்குள்ள மக்கள் கேள்வி கேட்டால் நான் சொன்ன, இதே விஷயத்தைச் சொல்லுங்கள். கீழைச் சாளுக்கியம் நோக்கி மிகப் பெரிய படை வரப் போகிறது என்று சொல்லுங்கள். நீங்கள் போன மூன்றாம் நாள் நமது படை பின் தொடரும். இரண்டாம் நாள் காடு வெட்டிகளும், காரை வெட்டிகளும், கள்ளி வெட்டிகளும் பின் தொடர்வார்கள். சாலை போடுபவர்கள் வருவார்கள்.

உங்களுக்கு மாட்டு வண்டி இருக்கின்றனவா, கூடைகளை அதில் வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் புறப்படலாம். நீங்கள் வழக்கமான இடத்தில் சாமி கும்பிட்டு விட்டு வடக்கு நோக்கி கிளம்புங்கள். இன்று நாள் நன்றாக இருக்கிறது என்று கிருஷ்ணன் ராமன் சொல்லியிருக்கிறார். எந்த நேரம் வேண்டுமானாலும் கிளம்பலாம். நீங்கள் போய் வாலாம். ஒவ்வொரு நாளும் உங்களை சோழ வீரர்கள் வந்து சந்திப்பார்கள். நமது திட்டம் பற்றி சொல்லுவார்கள்" என்று சொல்ல, அவர்கள் மறுபடியும் விழுந்து வணங்கினார்கள்.

அரைவட்டமாக நின்று கொண்டார்கள். பறைகளை எடுத்து கைகளில் வைத்துக் கொண்டார்கள்.

"ஆரம்பிக்கிறோமய்யா" என்று உத்தரவு கேட்டான்.

"சரி" என்று அவர் தலையசைத்தார்.



பறை முழங்கத் துவங்கியது. ஒரே நேரத்தில் முப்பது பறைகள், முப்பது சிறு முரசுகள் ஒன்றாக ஒரே விதமாக தாளகதியில் இயங்கின. ஆடுபவர்கள் மெல்ல அசைந்தார்கள். அரைவட்டமாக ஆடினார்கள். அந்த ஆட்டத்திற்கும், அந்த தாளத்திற்கும் மிக அழகாக இருந்தது. அவர்கள் போகலாம் என்று தன்னுடைய மேல் துணியை உதறி பரமன் மழபாடியார் காட்டினார்.

அவர்கள் அப்படியே அவரை நோக்கி வந்து விழுந்து வணங்கிவிட்டு பின்னடைந்தார்கள். அவர் மாளிகையை விட்டு வெளியே வந்தார்கள். தெருவில் பறை அடித்துக் கொண்டு போனார்கள். பறை ஒலி இராஜேந்திர சோழருக்கு கேட்டது.

"நல்லது. முதல் அங்கம் நகர ஆரம்பித்து விட்டதா, அற்புதம். பரமன் மழபாடியார் துடிப்பாக இருக்கிறார் என்று அர்த்தம். அடுத்தது என்ன?"

"காடுவெட்டிகள், நமது வீட்டு வாசலில் குழுமி இருக்கிறார்கள். யானைகள், உண்டா, அம்பாரி என்ன உயரம் என்று கேட்டிருக்கிறார்கள்.

"எத்தனை யானைகள் அரையரே" என்று அரையன் இராஜராஜரை பார்த்து இராஜேந்திரர் கேட்டார்.

"அறுபது யானைகள், கூடாரமான அம்பாரி ஆறுதான். மற்றதெல்லாம் ஆயுதங்கள் சுமக்கவும், அரிசி சுமக்கவும் தான் பயன்படுகின்றன. கூடாரங்களை எடுத்துப் போக பதினைந்து யானைகள் அழைத்து போகிறோம். ஆக ஒரு யானை அதற்கு மேல் ஒரு கூம்பு அம்பாரி என்று சொன்னால் ஒன்றரை கோல் உயரம் இருக்கும்"

"அவர்களுக்கு அளவு சொல்லி விடு" என்று உத்தரவு இட, அரையன் இராஜராஜன் வெளியே வந்தார்.

கோடாரிகளுடன், நீண்ட வாட்களுடன் இராஜேந்திரர் மாளிகைக்கு வெளியே உட்கார்ந்திருந்த அந்த அறுபது பேர் கூட்டம் எழுந்து நின்றது.

"பட்டத்து யானை ஒன்றரை கோல் உயரம், மன்னர் யானை மீது வருவார்" ஓலைநாயகம் என்கிற அதிகாரி அறிவித்தார்.

அவர்கள் ஒரு மூங்கில் கழியை எடுத்து உயர்த்தினார்கள். அது ஒன்றரை கோல் உயரத்தை விட நாலு முழங்கை அதிகமாக இருந்தது.

"மிகச்சரி இது தான் அளவு" என்று அரையர் சொல்ல, அவர்கள் குனிந்து வணங்கினார்கள்.

"நாங்கள் கிளம்ப உத்தரவு தர வேண்டும்" என்றார்கள். அவர்களுக்கும் ஒரு மூங்கில் தட்டு கொண்டு வந்து கொடுக்கப்பட்டது. அந்த தட்டில் வெற்றிலை, பாக்கும், வாழைப்பழங்களும், பொற் கழஞ்சுகள் நிறைந்த பையும் இருந்தது. அவைகளை கொண்டு போய் ஒரு வீரன் அவர்களிடம் நீட்டினான்.

"அரிசி ஆறு கூடை" என்று சொல்ல,

ஆறு கூடை அரிசி மூங்கில் பிரம்பால் பின்னப்பட்டது. மேலே ஓலை தடுக்கால் மூடப்பட்டது அவர்களிடம் கொடுக்கப்பட்டது. அவர்கள் வலுவானவர்கள். அதை தோளில் தூக்கிக் கொண்டார்கள்.

"மேலைச் சாளுக்கியம் நோக்கிப் போகிறோம். வேங்கிதான் நமது எல்லை. இராஜேந்திரருடைய மருமகன் இராஜராஜ நரேந்திரன் அங்கு பட்டம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும். மேலைச் சாளுக்கியம் தொந்தரவு செய்கிறார்கள். எனவே மிகக் கவனமாக நடந்து கொள்ளுங்கள். சந்தேகப் படும்படியாக யாராவது இருந்தால் மடக்கி நின்று தலையில் போட்டு கட்டிப் போடுங்கள். மரங்கள் அகற்றி செப்பனிடுங்கள், பள்ளம் நிரப்பவும், மேடுகள் சரி செய்யவும், புற்றுகள் நீக்கவும், குதிரைப் படை நடந்து போவதற்கு உண்டான வசதிகள் ஏற்படுத்தவும் அங்கங்கே புல்வெளியில் கூடாரங்கள் அமைக்கவும் நீங்கள் உதவி செய்ய வேண்டும். படைகள் தங்குவதற்கு வழக்கம் போல நீர் உள்ள கரையில் இடம் போடுங்கள். நீர் கரையை ஆட்கள் வந்து காவல் காக்கும்படி தகவல் அனுப்புங்கள். நீங்களும் ஒரு கண் வைத்திருங்கள்" என்று அரையன் கட்டளை இட, அவர்கள் "சரி, சரி" என்று தலை அசைத்தார்கள். தட்டுகளை வாங்கிக் கொண்டார்கள். விழுந்து வணங்கினார்கள்.

கையிலுள்ள கோடாரியையும், வாளையும் உயர்த்தி பிடித்தார்கள்.

"சோழம், சோழம், சோழம்" என்று கத்தினார்கள்.

"மாமன்னர் இராஜேந்திரர் வாழ்க" என்று கத்தினார்கள். மன்னருக்கு காதுகுளிர அந்த சப்தம் வந்து விழுந்தது. அவர் புன்னகை செய்தார்.

அடுத்தபடி சாலை செப்பனிடுவோர் போக வேண்டும். ஒரு வகையினர் இதற்கு மிகச் சரியான ஆட்களாக இருப்பார்கள். அவர்கள் தயாராக இருப்பார்கள் என்று நினைக்கிறேன் என்று



மனதுக்குள் நினைத்துக் கொள்ள.

அரையன் இராஜராஜன் வந்து நின்றார்.

"கல் தச்சர்களை அனுப்பி விடலாமா"

"நிச்சயம். உடனடியாக அனுப்புங்கள்" என்று மறுமொழி சொல்ல, அவரிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு அரையன் இராஜராஜன் மறுபடியும் வாசலுக்கு வந்தார்.

இந்த முறை நூற்றுக்கும் அதிகமான ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் தட்டுகட்டாக வேட்டி கட்டியிருந்தார்கள். கால்களில் செருப்பு அணிந்திருந்தார்கள், தோளில் துண்டு போட்டிருந்தார்கள். தலைப்பாகை இறுக்கக் கட்டியிருந்தார்கள். அரையனை பார்த்தவுடன் வேட்டியை அவிழ்த்து விட்டு கைகட்டி நின்றார்கள்.

அவர்களிடம் விதம் விதமான கருவிகள் இருந்தன. மண் வெட்டிகளும், பல், பல்லாக இருக்கின்ற மண்ணை சுரண்டி எடுக்கின்ற விசையங்களும், திமிசு கட்டைகளும் இருந்தன. நீண்ட கடப்பாறையை பலபேர் தோளில் சாத்தி இருந்தார்கள்.

"ஒரு லட்சம் குதிரை வீரர்கள் வருவார்கள். அடர்த்தியாகத் தான் வருவார்கள். எனவே சாலை அகலமாக இருக்க வேண்டும். உறுதியாக இருக்க வேண்டும். நீர் நிறைந்த இடத்தை தாண்டுவதற்கும் நீங்கள் உதவி செய்ய வேண்டும். நீர் நிறைந்த இடங்களில் பள்ளங்களில் குதிரைகள் நொடிக்காமல் இருப்பதற்கு மிகச்சரியாக கும்பலாகப் போய் அந்த இடத்தை சோதனை செய்யுங்கள். பள்ளங்களை நிரப்புங்கள், நிரப்ப முடியாவிட்டால் குதிரைகள் போவதற்கு உண்டான மாற்றுப் பாதையை தேர்ந்தெடுங்கள்.

நீங்கள் வேலை செய்த மறுநாள் குதிரைப் படை உள்ளே நகர்ந்து விடும். மேலைச் சாளுக்கியம் நோக்கி நகருகிறோம். இராஜராஜ நரேந்திரனுக்காக இந்த போர் நடைபெறுகிறது. மற்றவற்றை சோழ வீரர்கள் உங்களுக்குச் சொல்வார்கள்" என்று சொல்ல, அவர்கள் கூலிப் பணமும், ஒரு வண்டி அரிசியும் வாங்கிக் கொண்டு நகர்ந்தார்கள்.

மாட்டு வண்டி முழுக்க பல கூடைகள் அடுக்கப்பட்டிருந்தன. மாட்டு வண்டி அவர்கள் பக்கம் திரும்பி அவர்களோடு வெளியே போயிற்று.

தோல் உரித்து, ரோமம் நீக்கி, உலர்த்தி முரசு செய்பவர்களும், எருமைத் தோலில் நீண்ட வார்கள் செய்பவர்களும் சேணம், லகான்

ஆகியவற்றை செப்பனிடுகிறவர்களும் வீரர்களுடைய காலணிகளை பழுது பார்த்து தருபவர்களும், புதிய காலணிகளை செய்து தயாராக வைத்திருப்பவர்களுமான தோல்வார் ஆட்கள் உள்ளே நுழைந்தார்கள்.

அவர்கள் இருபது பேர் இருந்தார்கள்.

"போதுமா, ஆட்கள் குறைவாக இருக்கிறார்களே"

"இதுவே அதிகம் அய்யா. கிளம்புவதற்கு முன்னதாகவே நாங்கள் போய் எல்லா சேணங்களையும் சரி பார்த்து விட்டோம். இப்பொழுது கூட போய் சேணங்களையும், கடிவாளங்களையும் சரி செய்யப் போகிறோம். எனவே, குதிரைப்படை கிளம்புவதற்கு முன்பு நாங்கள் போய் நின்று விடுவோம். எந்த கவலையும் வேண்டாம். இருபது பேர் போதும்" என்று சொல்ல.

அவர்களுக்கும் மூங்கில் தட்டில் பொன் கழஞ்சு தரப்பட்டது. ஆறு கூடை அரிசி தரப்பட்டது.

அவர்கள் ஆடுகள் வேண்டுமென்று கேட்டபோது, வாங்கிக் கொள்ளச் சொல்லி இன்னும் கூடுதலாக காசு தரப்பட்டது.

"கொழுத்த ஆடுகள் உணவுக்காகவும் ஆகும். தோல் வாருக்காகவும் ஆகும். அது தவிர பொதி சுமந்தபடி எருமைகளும், எருதுகளும், கழுதைகளும் வரும். அவைகளில் ஏதேனும் நொடித்துப் போனால் உடனே அறுத்து விடலாம்" என்று பேசிக் கொண்டார்கள்.

பொற்காசுகளும், அரிசியும் வாங்கிக் கொண்டு வெளியேறினார்கள்.

"டேய் தம்பி, எல்லோருக்கும் வண்டி வண்டியாக அரிசி போகிறது. அரிசி கூடையை எடுத்து உள்ளே வை, மட்ட ரக அரிசியை முன்னே வை, நல்ல அரிசி கேட்டால், இல்லை அரசர் வாங்கி விட்டார் என்று சொல்" என்று சொல்ல, உடனே அந்த கடை ஆட்கள் தங்களுடைய பணியை செவ்வனே நிறைவேற்றினார்கள்.

பழுப்பாய், குண்டாய் இருக்கிற அரிசி தான் முன்னே கடையில் இருந்தது. வாங்க பொதுமக்கள் வந்த போது அவர்கள் இதைத்தான் காட்டினார்கள். பொதுமக்கள் சீறத் துவங்கினார்கள்.

"நேற்று இருந்தது இங்கே அரிசி, இப்போது இல்லை என்கிறாரே, உன்னிடம் வந்து அரசர் அரிசி வாங்கினாரா, பொய் சொல்லாதே, ஏமாற்றாதே. பொதுமக்களை ஏமாற்றி எப்படி வாழப் போகிறாய்" என்றெல்லாம் வேகமாய் பேசினார்கள். வணிகர்கள் அசரவில்லை.



"இருந்தால் தர மாட்டேனா" என்று பவ்யமான குரலில் சொன்னார்கள்.

மக்கள் நொந்து கொண்டார்கள்.

பாண்டியன் ஸ்ரீவல்லபன் குதிரை ஏறி போர் பயிற்சி நடக்கும் இடத்திற்கு போனார். வீரர்கள் மிக வேகமாக கத்தியை சுழற்றிக் கொண்டு, உரக்கக் கத்திக் கொண்டு குவித்து வைத்திருந்த மண் மேட்டின் மீது ஏறி அங்கு நிற்க வைக்கப்பட்டிருந்த வாழை மரங்களை வெட்டி சாய்த்தார்கள். அந்த இடத்திலேயே உலைக்களம் அமைக்கப்பட்டிருந்தது. துருத்தி வேகமாக அசைய நெருப்பு கொழுந்து விட்டு எரிந்தது. கம்மாளர்கள் சுற்றி உட்கார்ந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு வீரருடைய வாளையும், ஈட்டியையும் கூர் பார்த்துக் கொடுத்தார்கள். பிடிகளை உறுதி செய்தார்கள். வளைந்த கத்திகளை அடித்து நிமிர்த்தினார்கள்.

"மரம் வெட்டினால் உடைந்து போகிறது. இன்னும் கெட்டியாக செய்து கொடு" என்று ஒரு வீரன் சொல்ல.

அந்த வாளை அடுப்பில் போட்டு ஒரு கம்மாளர் பழுக்க காய்ச்சினார். அவருக்கு அருகே ஒரு கல் தொட்டியில் எண்ணெய் இருந்தது. அந்த எண்ணெயில் மேலும் எண்ணெய் கொட்டினார். பழுக்க காய்ச்சிய வாளை இடுக்கியில் பிடித்துக் கொண்டு வேகமாக ஓடி அந்த எண்ணெயில் மூழ்கினார். 'படீர், படீர்' என்று எண்ணெய் சூடு தாங்காமல் வெடித்தது. அவர் நகர்ந்து கொண்டார். இரண்டு, மூன்று துளிகள் அவர் கையில் விழுந்தன. அவர் அதை பொருட்படுத்தவில்லை.

சிறிது நேரம் உள்ளேயே கத்தி இருந்தது. அதை வெளியே எடுத்து எண்ணெயை துடைத்து சம்பந்தப்பட்ட வீரரிடம் கொடுத்தார்.

"இப்பொழுது பார். கத்தியே கனமாக இருக்கும். என்ன செய்தாலும் உடையாது. இதில் அடித்துப் பார்" என்று ஒரு கேடயத்தை தாங்கிக் கொண்டார். அவன் வேகமாக அந்த கேடயத்தை வெட்ட அந்த வெட்டை கேடயம் தடுத்தது. கத்தி அடித்து பின்வாங்கியது.

"ஆஹா, அருமையாக இருக்கிறது. உங்கள் வேலை, கெட்டியாக இருக்கிறது என்பது கைக்கு தெரிகிறது" என்று சொல்லி அவன் உடைவாளை தன்னுடைய உறையில் சொருகிக் கொண்டு இடுப்பில் கட்டிக் கொண்டான்.

"மிக்க நன்றி அண்ணா"

"போய் வா. வெற்றியோடு திரும்பி வா" என்று அவனை கம்மாளர் ஆசீர்வதித்தார்.

முனை முறிந்த ஈட்டிகள் சரி செய்யப்பட்டன. அம்பில் பொருத்துவதற்கு மெல்லிய கூரான கம்புகளை அவர்கள் அதிகம் வைத்திருந்தார்கள். அதையும் காய்ச்சி அடித்து அம்பில் பொருத்தி சுத்தியால் அடித்துக் கொடுத்தார்கள். மூங்கில் பிரம்பு நுனியில் அந்த அம்புகள் மிகச் சரியாக பொருந்தின.

சில வீரர்களுக்கு மார்புக்கு நடுவே இரும்புச் சங்கிலிகள் இருந்தன. அந்த இரும்பு சங்கிலிகளை இடது கையால் பிடித்துக் கொண்டு வலது கையால் கத்தி வீசுவது வழக்கம். மார் மீது வேறு வாள் தாக்காது இருக்க அந்த இரும்புச் சங்கிலி உதவும். இடதும், வலதுமாக அசைக்கிற பொழுது மார் முழுவதும் அந்த இரும்புச் சங்கிலி காப்பாற்றும். அவர்கள் அதை வேகமாக அசைத்து காட்டிய போது அதனுடைய நுனிகள் உடம்பில் கிறாமல் இருப்பதற்காக அரம் போட்டு கம்மாளர் அதை சரி செய்து கொடுத்தார்.

அதையும் நெருப்பில் பழுக்கக் காய்ச்சி எண்ணையில் முக்கி திடம் செய்து கொடுத்தார்.

ஒரு சிறுவன் ஓடி வந்தான்.

"அரையன் இராஜராஜரிடமிருந்து அழைப்பு வந்து விட்டது. நம்மை உடனே வரச் சொல்லுகிறார்" என்று சொல்ல, கம்மாளர்கள் அத்தனை பேரும் வேலையாக இருக்கிறார்கள் என்று அரையருக்கு சொல்லப்பட்டது.

வந்து நின்ற கிழவரிடம், அவர் வெற்றிலை, பாக்கோடு பொற்கழஞ்சுகள் நிரம்பிய பையை வைத்தார்.

"ஒரு மாட்டு வண்டி நெல், உங்களுக்குத் தரப்படும். எப்போது வேண்டுமானாலும் வந்து வாங்கிப் போகலாம்" என்று சொன்னார்.

"குதிரைப் படை கிளம்புவதற்கு முன்பு கிளம்பி விட வேண்டும். சிறிய குதிரைகளையும், கோவேறு கழுதைகளையும் அரசாங்கத்திடமிருந்து வாங்கிக் கொள்ளுங்கள். வெளியில் இருந்தும் வாங்கிக் கொள்ளுங்கள். உங்களுக்கு தேவையானவற்றை அதன் மீது வைத்துக் கொள்ளுங்கள். போர் கடுமையாக இருக்கும். நிறைய கருவிகள் சேதமாகும். அது தவிர அங்கிருந்தும் கருவிகள் கொண்டு வர வேண்டியிருக்கும். அப்போது உங்களுக்கு தனித்த மாட்டு வண்டிகள் தரப்படும்.



வெற்றி பெற்ற தேசத்திலிருந்து கொண்டு வந்த ஆயுதங்களை சரி செய்வதோ அல்லது உருக்கி வேறு செய்வதோ உங்கள் விருப்பம். உங்களுக்கு இந்த வருடம் முழுவதும் வேலை அதிகம் இருக்கும். அதற்கேற்றபடி சன்மானம் தரப்படும். கவலை வேண்டாம்.

மேலைச் சாளுக்கியத்தின் வெற்றி நமக்கெல்லாம் நல்ல வாழ்க்கை தரப்போகிறது" என்று சொல்ல, அந்தக் கிழவர் சந்தோஷமாக தலை அசைத்தார்.

அந்த செய்தியை ஆங்காங்கே வேலை செய்து கொண்டிருந்த கம்மாளர் குழுவிடம் தெரிவித்தார். அவர்கள் சந்தோஷமானார்கள். வேகமாக உலையிலிருந்து இரும்பு எடுத்து கடுமையாக தாக்கினார்கள். தீட்டி கூர் செய்தார்கள்.

"குதிரைக்கு லாடம் அடிக்க வேண்டுமே, எங்கு அடிப்பது?" பாண்டியன் ஸ்ரீ வல்லபன் கேட்டார்.

"அது தஞ்சை பிரம்படியில் செய்கிறோமய்யா. இந்த இடத்தில் செய்தால் பல பேருக்கு அதனுடைய விஷயம் புரியவில்லை. பொது மக்கள் பார்த்து விட்டு 'குதிரையை சித்ரவதை செய்கிறீர்களே சண்டாளர்களா, பாபிகளா' என்றெல்லாம் ஏசுகிறார்கள்.

எனவே, நாங்கள் பெரிய தட்டி கட்டி மறைப்பு ஏற்படுத்தி அதற்கு நடுவே குதிரைகளை அழைத்துக் கொண்டு போய் படுக்க போட்டு, கால்களை கட்டி அதற்குண்டான அளவு எடுத்து லாடம் செய்து அங்கேயே அடித்து விடுகிறோம்.

குதிரை இரண்டு நாள் தவிக்கிறது, பிறகு சரியாகி விடுகிறது. குதிரை கொடுத்து விட்டு போங்கள். நாங்கள் லாடம் கட்ட ஏற்பாடு செய்கிறோம்" என்று சொல்ல, அவர் சந்தோஷமாக குதிரையிலிருந்து கீழ இறங்கினார்.

அவருக்கு வேறு குதிரை கொடுக்கப்பட்டது.

அவருடைய குதிரையை பிடித்துக் கொண்டு ஒரு கம்மாளர் முன்னே நடந்தார்.

எங்கோ தவறான இடத்திற்கு அழைத்துப் போகிறார்கள் என்று குதிரைக்கு உணர்ந்து விட்டது போலும். மிரள மிரள, எகிறி எகிறி அந்த குதிரை அவருக்கு பின்னே நடந்தது.

இராஜேந்திரருடைய மகன் வீர இராஜேந்திரன் தேர்களுக்கு நடுவே நின்றான். ஒவ்வொரு தேரையும் சாய்த்து, சக்கரத்தை சுழற்றி பார்த்தான். உறுதியை சோதித்தான். அவன் சோதித்த

பிறகு, அவன் சொன்னதற்கேற்ப மசக்கென்னையை அச்
அச்சிலே ஊற்றினார்கள். மறுபடியும் சுழற்றினார்கள். அந்த சக்கரம்
என்ணையால் வேகமாக சுழன்றது. ஒரு சக்கரம் இடதும், வலதும்
ஆடாது இருக்க வேண்டும். உறுதியாக இருக்க வேண்டும்.

"மரத்தச்சர்களை கூப்பிடு, இந்த சக்கரம் நாலாதிசையிலும் அலைகிறது பார்" என்று சொல்ல, மரத்தச்சர் ஓடி வந்தார்.

"ஒரே ஒரு ஆப்பு, சரி செய்து விடலாம்" என்று சொல்லி சக்கரத்தை கூர்மையாக பார்த்தார். எந்த இடத்தில் ஆப்பு அடிக்க வேண்டும் என்று முன்னும், பின்னும் சுழற்றினார். ஒரு இடத்தில் கை வைத்து, கையிலுள்ள சுண்ணாம்பு கட்டியால் அந்த இடத்தை குறித்துக் கொண்டார்.

முன்பக்க ஆதாரங்கள், சட்டங்கள், தேரில் கால் வைத்து ஏறும் இடம் எல்லாம் மிகச் சரியாக இருந்தன. ஒரு வில் வண்டி குப்புறப் போடப்பட்டு அதன் அச்சு சோதிக்கப்பட்டது. மெல்லியதாகவும், அதே சமயம் உறுதியாகவும் அந்த அச்சு இருந்தது. கடையாணிகள் சுழற்றப்பட்டு மறுபடியும் செருகப்பட்டன. குதிரைகள் சில தேர்களில் பூட்டப்பட்டன. அவைகளை ஓட்டச் சொல்லி வீரஇராஜேந்திரர் வேடிக்கைப் பார்த்தார். மண் தரையில் குதிரைகள் சொகுசாக வலம் வந்தன. ஏர்கால் இணைப்பை சரி செய்யவும், வெறுமே பிருஷ்டத்தை வைத்து உட்கார்ந்து கொள்ளவும் உண்டான வசதியும் சில தேரில் இருந்தன. மேலே உள்ள கொடிக் கம்புகள் மறுபடியும் இணைக்கப்பட்டு புலிக்கொடி பறக்க விடப்பட்டது.

எக்காளம் ஊதியதும் சட்டென்று அந்த தேர்களிலெல்லாம் குதிரைகள் பூட்டப்பட்டன. மறுபடியும் எக்காளம் ஊதியதும் ஒன்றன் பின் ஒன்றாக வலம்வரத் துவங்கின. பிறகு அணி வகுத்து நின்றன.

வீர இராஜேந்திரர் முன்னூறுக்கும் மேலான தேர்கள் அப்படி அசைந்து, அசைந்து வரிசை வரிசையாக நிற்பதைக் கண்டு பூரித்துப் போனார்.

வேங்கியை துவம்சம் செய்து விட வேண்டும் என்று மனதுக்குள் கருவிக் கொண்டார். அவர் சந்தோஷமாக இருக்கிறார் என்று வீரர்களுக்கு தெரிந்து, தேரோட்டிகளும் சந்தோஷமானார்கள்.

ஒவ்வொரு தேரோட்டிக்கும் தனித்தனியே பொற்கழஞ்சுகள் கொடுக்கப்பட்டன. வெற்றிலை, பாக்கு வைத்து பொதுவாக ஒரு தட்டு தரப்பட்டது. தேரோட்டிகள் எல்லோரும் அம்பு மேலே தைக்காமல் இருப்பதற்கு தோளில் கவசம் அணிந்திருந்தார்கள்.



புலிச்சின்னம் வரைந்திருந்தார்கள். அதே நேரத்தில்
நிலத்தில் மஞ்சள் நிற புலிக்கொடியோடு தேர்கள் அசைந்து
ஆனந்தமான காட்சியாக இருந்தது.

நிச்சயம் வந்து விட்டது என்பதை அந்த சிறு தேர்கள்
எடுத்துரைத்தன.

தஞ்சை புறம்படியில் தட்டி கட்டி நூற்றுக் கணக்கான
அடைத்திருந்தார்கள். பாண்டியன் ஸ்ரீ வல்லபன்
புதிய குதிரையோடு அந்த குதிரை வீரர்கள் இருக்கும்
போனார். எல்லோர் கையிலும் ஈட்டி இருந்தது.
குதிரையாக சவுக்கால் சொடுக்கி இழுத்து, சேணம்
அதன் மீது ஆசனம் வைத்து அழுத்தி, வாய்க்குள் கம்பி
சொருகி, பிறகு கடிவாளத்தை எடுத்து பிடித்துக்
ண்டார்கள். வீரர்கள் தாவி ஏறி கடிவாளத்தை வாங்கிக்
ண்டார்கள். சேணத்தில் கால் வைத்து அழுத்திக் கொண்டார்கள்.
நின்று பார்த்துக் கொண்டார்கள். குதிரைகள் முன்னும்,
அலைந்தன. மிரண்டன. சிறுநீர் கழித்தன. அந்த இடம்
மாறியது. முதுகில் அம்பறாத் துணியும், கையில் வில்லும்
வீரர்களுக்கு மிகச் சிறந்த குதிரைகள் தரப்பட்டன. குதிரை
தாவி ஏறி வேகமாக குதிரை ஓட்டியும், சட்டென்று நின்றும்,
நின்று கொண்டு வில்லால் அம்பு தொடுத்து குறி பார்த்து
த்தும் சில பயிற்சிகளை மேற்கொண்டார்கள். அவர்கள் தனித்த
யாக நின்றார்கள்.

வீர இராஜேந்திரன் சந்தோஷமானார்.

இந்தப் படையை தாங்குவானா, மேலை சாளுக்கியத்துக்கு
றாத காலம், அடிபடப் போகிறான். நம் விமலாதித்தன் மாட்டிக்
ண்டு முழிக்கிறார். ஊருக்குள் புகுந்தால் போதும் சர்வ நாசம்
று மனதுக்குள் நினைத்துக் கொண்டார்.

சற்று குள்ளமான பெண் குதிரைகளில் ஈட்டியோடு கூடிய
ர்கள் உட்கார்ந்து கொண்டார்கள். வில் வீரர்களுக்கு பின்னால்
நின்று கொண்டார்கள். முன்னூறு பேர் கொண்ட அந்த
திரைப்படை முன்னும், பின்னும் அலையத் துவங்கியது.

"தஞ்சை நகரை சுற்றி வாருங்கள்" என்று பாண்டியன் ஸ்ரீ
ல்லபன் உத்தரவு இட, தேர்கள் போன வழியே குதிரைகள்
ின. தஞ்சை நகரம் பரபரப்பாகியது.

சேனாதிபதியை தனியே அழைத்து ஆளுக்கு ஐந்து கழஞ்சு

பொன் என்று கணக்குச் சொல்லி ஒரு பெரிய மூட்டை... வல்லபன் கொடுத்தார். வெற்றிலை பாக்கு பரிமாறப்பட்டது.

"உணவு பற்றி கவலைப்படாதே. உனக்கு பின்னால் ... நீ போய் இறங்கும் இடத்தில் சமையல் ஆகி இருக்கும். ... சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொள். அடுத்தபடி எப்பொ... எழுந்து போக வேண்டும் என்ற எண்ணத்திலேயே இரு" ... சொல்ல, அந்த சேனாபதி தலை அசைத்தான். பல் தெரிய சிரித்...

வெற்றிலை, பாக்கு ஒரு மரியாதை, பொன் கழஞ்சு ச... தேர்படையும், குதிரைப் படையும் தஞ்சை நகரை கடைறுத்துப் ... பிரகதீஸ்வரர் கோவிலை ஒரு சுற்று சுற்றி விட்டு வந்து நின்று...

"ஓய், இனி சோற்றுக் கடை எல்லாம் சோற்றுக் கடை... விடும். எல்லா வீரர்களும் இந்த இடத்தை விட்டு நகர்ந்து விட்... யாருக்கு விற்பீர். இன்னும் இரண்டு நாளில் தஞ்சாவூர் பாழடை... பட்டினம் போல் ஆகப் போகிறது.

பறை அடிப்பவர்கள் நகர்ந்து விட்டார்கள். காடு வெட்டி... நகர்ந்து விட்டார்கள். இன்னும் தேர்படையும், குதிரைப் படை... தான் பாக்கி. அவைகளுக்கு முன் யானைகள் போய் விடும் எ... நினைக்கிறேன்" உணவு உண்டு கொண்டே ஒருவர் அறு... கொள்ள அங்குள்ள அந்தணர்கள் என்ன செய்வதெ... வருத்தத்தோடு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"கடையை தூக்க வேண்டியது தான்" என்று ஒரு வண... சொல்ல பலர் அதை ஆமோதித்தார்கள்.

கோயில் பணியாளர்கள் வந்தார்கள். வீணை வாசிப்பவ... தாளம் தட்டுபவரும் சாப்பிட வந்து விட்டு திகைத்துப் போனார்...

எல்லோரும் போய் இந்த கடைகளும் போனால் எங்கு ந... உணவு கிடைக்கும் என்று யோசித்தார்கள்.

"பாழடைந்த ஊராக தஞ்சை போய் விடுமோ" என... வருத்தப்பட்டார்கள். அவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்... கொண்டார்கள்.

பல்வேறு விதமான உணர்ச்சி கொந்தளிப்பில் தஞ்சை நக... மூழ்கி இருந்தது.

"சீராளா, என்னோடு வா" அருண்மொழி குதிரை ... உட்கார்ந்து கொண்டான். சீராளன் தாவி ஏறினான். இரண்...



...ப் புறம்படி தாண்டி கரைந்தது சாலை நோக்கிப் போனார்கள். ...ந்த சாலையில் ஒரு மேடு ஏறினார்கள். மூங்கில் தட்டிகளால் ...க்கமாக கட்டப்பட்ட மறைவிடங்கள் இருந்தன. உள்ளிருந்து ...ரைகள் கனைப்பது கேட்டது. ஒரு குதிரை துள்ளி குதித்தபடியே ... வந்தது. அவர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அருண்மொழிப் பட்டன் குதிரையை அந்த தட்டி மறைப்புக்குள் ...த்துப் போனான். குதிரை முன்னும், பின்னுமாக அலைந்தது. ...க்கி முன்னே கொண்டு போனான். பின்னால் சீராளன் வந்தான். ...ண்டு பேரும் ஒரு திடலுக்கு வர சுற்றி தட்டி கட்டி இருப்பது ...ரிந்தது.

கம்மாளர்கள் எழுந்து நின்று வரவேற்றார்கள்.

"இந்த இரண்டு குதிரைகளுக்கும் லாடம் அடிக்க வேண்டும். ...வளவு விரைவாக செய்கிறாயோ அவ்வளவு விரைவாகச் செய்" ...று சொன்னார்கள்.

உடனடியாக அந்த குதிரையின் கால்கள் இறுக்கக் கட்டப்பட்டன. ...திரைகள் முன்னும் பின்னும் தவிக்க சட்டென்று ஒருவன் முதுகில் ... வைத்து தள்ள ஒருவன் கயிறை பிடித்து இழுக்க குதிரை ...ரென்று இடப்பக்கமாக விழுந்தது.

சீராளன் திகைத்துப் போனான்.

அவர்கள் குதிரையின் காலை இறுக நட்டப்பட்ட இரும்பு ...ம்பியோடு கட்டினார்கள். குதிரையை அசையாமல் அழுத்தி ...வைத்துக் கொண்டார்கள். குதிரையின் கால் அளவெடுக்கப் ...பட்டது. வேகமாக முன்னால் செய்திருந்த வளையம் இன்னும் ...அந்த அளவிற்கேற்ப சுருக்கப்பட்டது. சிலது நீட்டப்பட்டது. பழுக்க ...காய்ச்சப்பட்டது. தண்ணீரில் நனைக்கப்பட்டது. அது சூடு ஆறிய ...பிறகு குதிரையின் காலில் பொருத்தினார்கள். ஆணிகளால் ...குதிரையின் கால் குளம்புகளில் வேகமாக அடித்தார்கள்.

சீராளன் தவித்துப் போனான்.

"வலிக்காதா, வலிக்காதா" என்று கேட்டான்.

"வலிக்காது. உன்னுடைய நகத்தை வெட்டினால் வலிக்குமா. அதுபோல குளம்பு வெட்டினால் ஒரு போதும் வலிக்காது. மாறாக குதிரைக்கு சந்தோஷமாகிவிடும். கவலைப்படாதே. முதலில் கொஞ்சம் ...ரளும். பிறகு லாடம் இல்லாமல் அதற்கு நடமாட முடியாது"

"லாடம் எதற்கு?"

"கல்லிலும், முள்ளிலும் நாம் போகும் போதும் கா
செருப்பு போட்டுக் கொண்டு போவதில்லையா? அதுபோல
குதிரைக்கு லாடம் கட்டினால் குதிரை அடிபடாமல் இரு
குளம்பில் இரத்தம் வராமல் இருக்கும். குளம்பு சிதைந்தால் கு
நொண்டத் துவங்கும். நொண்டும் குதிரையை வைத்துக் கொ
ஒன்றும் செய்ய முடியாது. லாடம் கட்டிப் பார்" என்று சொ
அவன் குதிரைக்கும் லாடம் கட்டப்பட்டது.

கொஞ்சம் பரிதாபமாக பார்த்துக் கொண்டிருந்தான்.

குதிரைகள் துள்ளி எழுந்தன. ஒருவழியாக குதிரையை வெ
கொண்டு வந்தார்கள். மெல்ல முன்னும், பின்னும் ஓட விட்டார்
பிறகு தாவி ஏறிக் கொண்டார்கள்.

அருண்மொழி செய்யும் உதவிகளுக்கு எப்படி நன்றி சொல்
என்று தெரியாமல் சீராளன் திகைத்தான்.



# 17

பறை அடிப்பவர்கள் தஞ்சை புறம்படியைத் தாண்
கருந்தட்டான் குடிக்குள் நுழைந்தார்கள். தத்தகம், தடுமம் என்
சப்தத்தில் பறையொலி எழுந்து கொண்டிருந்தது. இருபது பறைக
ஒன்றாக முழங்க அவர்கள் நடந்து போவதை பார்த்து பொதுமக்க
வியந்தார்கள். ஓடிப் போய் உள்ளிருந்தவர்களை எழுப்பி அழைத்
வந்தார்கள். தெரு முழுவதும் கூட்டம் திரண்டது.

அவர்கள் தொலைவில் வருவது தெரிந்து வீட்டிலுள்ள
பெண்கள் சட்டென்று கேணிக்குப் போய் நீர் இறைத்து ஒரு குட
நீர் கொண்டு வந்து வாசலில் தெளித்தார்கள். தெரு முழுவதும்
நீர் தெளித்து தூசு பறக்காமல் மணல் பரப்பை மெத்மெத்தென்
ஆக்கினார்கள். இப்படி நீர் ஊற்றியவரின் வீட்டுக்கு எதிரே பறை
அடிப்பவர்கள் சற்று நேரம் நின்று வேறு தாளகதியில் தங்களுடைய



யை இயக்கினார்கள். நன்றி தெரிவிப்பதாக அந்த தாளம்
ந்தது. தாங்குடுதத்தம் தாங்குடுதத்தம் தைதை தாங்குடுதத்தம்.

மிகப் பெரிய படை ஒன்று தஞ்சையிலிருந்து கீழைச் சாளுக்கியம்
நோக்கி கிளம்பி விட்டது என்று பறை அறிவிப்பவர் மூலமாகவே
தெரிந்து கொண்டார்கள்.

"படை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது" என்று விசாரித்தார்கள்.

"இரண்டு நாள் தூரத்தில் இருக்கிறது" என்று பறை
அறிவிப்பவர்கள் பதில் சொன்னார்கள். ஆக, ஏற்கனவே மக்களுக்கு
அரசாங்கத்தில் என்ன நடக்கிறது என்று தெரிந்து தான் இருந்தது.
இப்பொழுது படை எடுப்பு என்று சொன்னதும், யார், என்ன, எங்கே,
எப்பொழுது என்ற விவரமெல்லாம் இன்னும் வேகமாக அலசப்பட்டது.

"அந்த பொம்பள என்னப்பா, பொசுக் பொசுக்கென்று புருஷ
வீட்டை விட்டு ஓடி வருகிறாள்" என்று ஒருவர் பேச, "சுசு. வாயை
மூடு. யாராவது கேட்கப் போகிறார்கள்" என்று அவன் மனைவி
அதட்டினாள்.

அவன் என்ன என்று திரும்பிப் பார்த்தான்.

"என்ன இருந்தாலும் ராஜாங்கத்துப் பெண்மணி. மரியாதையாகப்
பேசு. ஏக வசனமாக பேசாதே" என்று எச்சரித்தாள்.

அவன் வாய் பொத்திக் கொண்டான்.

அரசாங்கத்தைப் பற்றி பேசுவதற்கு அவனுக்கு துணிவு
இருந்தது. ஆனால் லேசான பயமும் இருந்தது.

"அந்தப் பெண்மணி என்ன செய்வாள். ஆண் சரியாக இல்லை.
இருந்த திமிர் பிடித்திருந்தால் எப்படி அடக்க வேண்டுமோ அப்படி
அடக்கி இருக்க வேண்டும். ஒரு நன்றியில் தானே அந்தப்
பெண்ணை கட்டிக் கொண்டாய். அந்த நன்றிக்கு விசுவாசமாக
இருக்க வேண்டாமா, அப்புறம் அந்த பக்கம் ஒருத்தி, இந்தப் பக்கம்
ஒருத்தி என்றால் இவள் என்னத் தானே செய்வாள்"

"ஆமாம், உங்களில் யார் மூன்று கட்டாமல் இருக்கிறார்கள்" என்று
பேசியவன் மனைவி எகிற, அங்கு மெல்லியதாய் சிரிப்பு எழுந்தது.

"ஒரு வருடமாக வீட்டோடு இருந்து தினசரி என் கை
உணவு சாப்பிட்டுக் கொண்டு இருந்தார், இதோ, வீட்டை விட்டு
கிளம்பி ஐந்து நாள் ஆகி விட்டது. எங்கே இருக்கிறார் என்றே
தெரியவில்லை. இந்தப் பக்கமாகத் தான் போய் ஆக வேண்டும்.
போகும் போது நின்று பேசுவார் என்று நினைக்கிறேன்" என்று

ஆதங்கமாய் ஒரு பெண்மணி சொல்ல, மறவர் வீட்டு வேதனை வெளிச்சத்திற்கு வந்தது.

"பேசாமல் போக மாட்டார் கண்ணே. எல்லாருக்கும் வி... என்றால் ஆசை இருக்கத் தான் செய்யும். ராஜா கூப்பிட்டு விட்... என்றால் குதிரை ஏறி போய்த் தானே ஆக வேண்டும். தே... நன்றாக இருக்க வேண்டுமென்றால் அவர்கள் தான் முக்கியம்"

காடு வெட்டிகளும், கரை வெட்டிகளும் பின் தொடர்... வருவது தெரிந்தது. அவர்கள் கோல் உயரத் தூக்கி அளந்து கிராம... மரங்களின் கிளைகளை தறித்தார்கள். ஒரு வீட்டு வாசலிலிருந்... நான்கு தப்படி தள்ளி ஒரு மாங்கன்று நடப்பட்டு இருந்தது. அதை... சுற்றி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

"எடுத்துவிடு" என்று சொல்ல, ஒரு பெண் ஓடி வந்... "வேண்டாங்கய்யா, நான் ஆசையாக நட்டது" என்று கெஞ்சினாள். வீரர்கள் திகைத்தார்கள்.

"இல்லம்மா. கிளை விட்டிருக்கு, நாலு பக்கமும் பரவி இருக்கு... யானை போகலாம். குதிரைக்கு கஷ்டமாக இருக்கும். அதனா... நாங்கள் இடுப்பு வரைக்கும் அறுத்து விடுகிறோம். மேலே சாண... கொண்டு வைத்து தண்ணீர் ஊற்றி வை. பச்சென்று மறுபடியும் வந்து... விடும். நாங்கள் திரும்புவதற்குள் பெரும் மரமாக பார்ப்போம்" என்று சொன்னான்.

அவர்கள் திரும்புவதற்கு குறைந்தபட்சம் ஒன்றரை வருடமாவது ஆகும் என்று அந்த பேச்சில் தெரிந்தது.

மக்கள் நெட்டுயிர்த்தார்கள். ஒருவரை ஒருவர் ஏக்கமா... பார்த்துக் கொண்டார்கள்.

திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந் தவன் சட்டென்று எழுந்தான். வீட்டிற்குள் போய் மெல்லிய மூங்கிலோடு வெளியே வந்தான். அவன் மனைவி அவனை பார்த்து திகைத்தாள்.

"வேண்டாம், வேண்டாம்" என்றாள். ஆனால் அவன் முடியாது என்று சொல்லி, அவளை விலக்கி விட்டு, வீட்டு வாசலில் அந்த மூங்கிலை அழுத்தி நட்டான். அவன் நவகண்டம் கொடுக்கப் போகிறான் என்பது எல்லோருக்கும் தெரிந்து விட்டது. எல்லோரும் அவனை, "யோசித்து செய்யப்பா, யோசித்து செய்யப்பா" என்று வேண்டினார்கள்.

அவன் உறுதியாக அந்த நவகண்டம் கொடுக்கும் இடத்தில் வாள் ஊன்றி கம்பீரமாக உட்கார்ந்திருந்தான். ஊர் மக்கள்



...னையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மாமரம் இடுப்பு வரை வேகமாக தறிக்கப்பட்டது.

"இழுத்து பின்பக்கம் போடுங்கள்" என்று சொல்லப்பட்டது. ...ளை படர்ந்து நிழலாய் இருந்த அந்த இடம் சட்டென்று வெளிச்சமாகியது. வீதி அகலமானது போல் தோன்றியது.

"அடுத்தபடி பெரு வீதியில் உள்ளவர்கள் மரம் நடும் போது யோசித்து நட வேண்டும்" என்று எச்சரிக்கப்பட்டார்கள்.

வேங்கியின் அரண்மனையில் விமலாதித்தர் காலை உணவு எடுத்துக் கொண்டிருந்தார். மூன்றாவது கவளம் கதம்ப சோறு சாப்பிடும் போது சட்டென்று நெஞ்சில் கத்தியால் குத்தியது போல வலி ஏற்பட்டது. உணவை வாயில் வைத்துக் கொண்டே விழுங்க முடியாமல் அவஸ்தைப்பட்டார். கழுத்து நரம்புகள் புடைத்தன. தலை ...ளீர் என்று வலித்தது. என்ன செய்வது என்று தெரியாமல் மெல்ல எழுந்து கை அலம்பும் இடத்திற்குப் போய் வாயில் உள்ள உணவை துப்பினார். வாய் கொப்பளித்தார். முகம் துடைத்துக் கொண்டார். நிமிர்ந்து இழுத்து மூச்சு விட்டார். இப்பொழுது தேவலாம் என்பது போல் இருந்தது. ஆனால் வந்து உட்கார்ந்ததும் மறுபடியும் நெஞ்சு வலித்தது. என்னால் இங்கே நடக்கக் கூடியது ஒன்றுமே இல்லை என்று வேதனையாக இருந்தது.

ஏன் துப்பி விட்டீர்கள் என்று கேட்பதற்குக் கூட இங்கு ஆள் இல்லை. உணவை வைத்து விட்டு போய் விடுகிறார்கள். குடிக்க நீர் கேட்டால் கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள்.

மற்றபடி யாரும் எந்தவிதமான உபசாரணையும் செய்வதில்லை. அவர்தான் இந்த தேசத்து மன்னர். இராஜேந்திர சோழர் இளவரசு பட்டம் கட்டி தஞ்சை அரண்மனையில் இருந்த போது அவருக்கு மக்கள் செய்கின்ற சிஷ்ருஷை பார்த்து வியந்து போனார்.

அடைப்பைக்காரன் ஒரு பக்கம் வெற்றிலையில் சுண்ணாம்பு தேய்த்து பாக்குகள் மிகச்சிறிய துண்டுகளாகச் செய்து தேனில் ஊறிய தேங்காய் துண்டுகளை உள்ளே வைத்து கிளி போலவும், வளையம் போலவும் மடித்துக் கொடுப்பான். அதை சாப்பிட்டுக் கொண்டே ஓலை நாயகத்திற்கு கட்டளைகள் சொல்வார். உண்டதற்கு ஏற்ப பாத்திரம் நீட்டப்படும். வாய் கொப்பளிக்க இன்னொரு பாத்திரம் எடுத்து வரப்படும். சூடாக குடிக்க வேறு யாரோ எடுத்து வருவார்கள்.

வரச்சொன்னதும் உள்ளே நுழைந்து விதம் விதமான ஆடைகளை விரிப்பார்கள்.

"எத்தனை காழகம் இருக்கிறது?"

"பதினாறு இருக்கிறது"

காழகம் (கரை போட்ட வேட்டி) கொடுத்தவருக்கு ஒரு பெட்டி நிறைய முத்துக்களை இராஜேந்திரர் பரிசளித்தார். உறுதியான பெரிய வெண்முத்துக்கள் அவை. பல தலைமுறையை பார்த்தது என்று அதை தொடும் போதே தெரிந்தது.

மன்னனாக உட்கார்ந்து இருக்கிறோமே தவிர எந்த மரியாதையும் இல்லை. மரியாதையின்மைக்குக் காரணம் குந்தவை, அவனை அனுசரித்து இருந்திருந்தால், அவள் சரியாக இருந்திருந்தால் இந்த இடத்தை கம்பீரமாக ஆட்சி செய்திருக்கலாம். நாலு பேருக்கு முன் அவமானப்படுத்தவே அவள் திரும்பத் திரும்ப முயற்சி செய்தாள். என்ன அவமானப்படுத்துவாளோ என்ற பயத்திலேயே இருக்கும் படியாகி விட்டது. குந்தவையின் மீது பயமில்லை. அடித்து இறக்கி விடலாம். ஆனால் இராஜேந்திர சோழன் அமைதியாய் இருக்க மாட்டான்.

மறுபடியும் நெஞ்சு வலித்தது. அவர் அப்படியே அந்த ஆசனத்தில் சுருண்டு படுத்துக் கொண்டார். யாராவது துணியை மேலே போர்த்தி விட்டால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. ஆனால் அதற்கும் யாரும் வருவதாக தெரியவில்லை.

**கா**டுவெட்டிகள், கரை வெட்டிகள் போனதும் தரையை சமனப்படுத்த கொத்தனார்கள் வந்தார்கள். ஓரத்தில் இருந்த மண்ணை எடுத்து வந்து பள்ளங்களை நிரப்பினார்கள். மணல்களை அதன் மீது கொட்டி கெட்டிப்படுத்தினார்கள். திமிசால் ஓங்கி அடித்தார்கள். முன்னால் நீட்டிக் கொண்டிருந்த வீட்டுப் பந்தலை கால்களை தூக்கி சுழற்றி விட்டார்கள்.

"எடுத்து ஓரமாக வைத்துக் கொள்ளுங்கள். பிற்பாடு போட்டுக் கொள்ளுங்கள்" என்று சொன்னார்கள்.

தெரு அகலமாகியது. ஒருசேர நாற்பது குதிரைகள் அந்த தெருவில் போகலாம். அவர்களோடு பேசுவதற்கு பொதுமக்களுக்கு அதிக சந்தர்ப்பம் கிடைத்தது. குடிப்பதற்கு நீரும், மோரும் கொடுத்தார்கள்.

"எவ்வளவு நாள் போர் இருக்கும்"



"யாருக்குத் தெரியும்"

"நேரே வேங்கிக்கா, இல்லை வேறு எங்கேயாவதா"

"எங்களை வேங்கிக்கு போகச் சொல்லித்தான் உத்தரவு"

"உங்களை வேங்கிக்கு என்றால் வேறு யாரோ வேறு எங்கோ போகிறார்கள் என்று அர்த்தமா"

"அப்படியும் இருக்கக்கூடும்"

"எங்கே? எப்படி?"

"யாருக்குத் தெரியும்?"

"இதற்கு மேல் சாமி சத்தியமாக ஒன்றும் தெரியாதா"

"எதற்கு இவ்வளவு பெரிய வார்த்தையெல்லாம் கேட்கிறீர்கள்? எனக்கு சாமி சத்தியமாக இதற்கு மேல் ஒன்றும் தெரியாது. ஆனால் யூகமாக உங்களிடம் பேச முடியும்"

"யூகமாகத் தான் பேசுங்களேன்"

"படை திருவொற்றியூர் போய் சேர்ந்து இரண்டாக பிரியும்"

"அடடே"

"ஒன்று வடமேற்காக போகும். ஒன்று கிழக்குப் பக்கமாக கடற்கரை ஓரமாகப் போகும். இரண்டு விதங்களாக வளைந்து போய் மேலைச் சாளுக்கியத்தை தாக்கி பிறகு, வேங்கிக்கு ஒரு படை போகும். நேரிடையாக வேங்கியைப் போய் கைப்பற்றி அங்கு உள்ள இப்போதைய இளவரசனை விரட்டி விட்டு நமது இராஜராஜ நரேந்திரனை அரச பதவியில் வைக்கக்கூடும். இதுதான் நடக்கும் என்று நான் நினைக்கிறேன். உண்மை என்னவென்று தெரியவில்லை" என்று பட்டும்படாமல் ஒரு கொத்தனார் பதில் சொன்னார்.

மக்களுக்கு அது போதுமானதாக இருந்தது.

**கா**ல் நீட்டி படுக்கவும் முடியவில்லை. வயிறு புரட்டுகிறது. நெஞ்சை ஏதோ அடைக்கிறது. இடது கை முறுக்கினால் போல வலிக்கிறது. கண்களுக்கு நடுவே வலி இருக்கிறது. சுவாசம் சரியாக விட முடியவில்லை. இழுத்து இழுத்து விட வேண்டியிருக்கிறது. ஏதோ உடம்பில் தப்பு நடந்து விட்டது. என்ன தவறு. வைத்தியரை அழைத்து வரச் சொல்லலாமா, அவர் மணியை அடித்தார்.

வாசலில் உள்ளவன் உள்ளே ஓடி வந்தான்.

"வைத்தியரை அழைத்து வா. உடல் நலம் நன்றாக இல்லை" என்று சொல்ல, அவன் உற்றுப் பார்த்தான்.

"என்ன செய்கிறது?" என்று கேட்டான்.

"வைத்தியரை அழைத்து வாய்யா, இது என்ன கேள்வி"

"இல்லை. என்ன செய்கிறது என்று தெரிந்தால் அதற்கேற்ற வைத்தியரை அழைத்து வரலாம். எலும்பு முறிவா, வயிற்று வலியா ஜுரமா அதுக்கேற்றபடி ஆட்களை அழைத்து வருவேனே"

"நெஞ்சு வலிக்கிறதய்யா" அவர் உரத்த குரலில் சொல்ல அவன் நின்று பார்த்தான். நெற்றியில் கை வைத்தான். திரும்பி தடதடவென்று படிகளில் இறங்கி வெளியே ஓடினான்.

இராஜ நரேந்திரன் அற்புதமான பையன், மிக நிதானமான பையன். ஆனால் அவனுக்கு சரியான போதாக்கு அளிக்கப்படவில்லை. தாயின் பக்கம் தான் இருக்க வேண்டும் என்று அவனுக்கு யாரோ சொல்லி விட்டார்கள். தாயை எதிர்த்தால் இராஜேந்திரர் உதவி கிடைக்காது என்று அவனும் பயந்திருக்கக் கூடும். இராஜேந்திரர் உதவி தான் மிக முக்கியம் என்று கணக்கு போட்டிருக்கக் கூடும்.

மேலைச் சாளுக்கியத்தின் பக்கம் விஷ்ணுவர்த்தன் விஜயாதித்தன் இருப்பதால் இராஜராஜ நரேந்திரன் வேறு வழியின்றி தன்னுடைய தாய்மாமன் இராஜேந்திரரை சரணடைந்திருக்கிறான். அவனை இன்னும் நிதானமாக வைத்திருக்கலாம். நீயே முறைத்துக் கொள். நீயே போர் செய். நீயே வருச்சண்டைக்கு கூப்பிடு. நீயே விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனை அடித்துத் துரத்து என்று சொல்லி இருக்கலாம். ஆனால் அதற்கு வாய்ப்பே கிடைக்கவில்லை.

விரிவாக பேசுவதற்குள் குந்தவை ஓடிப் போய் அரண்மனைக் கதவை தாழ் போட்டுக் கொண்டாள். அவளையும் அழைத்துக் கொண்டாள். அவளோடும் பேச முடியவில்லை. அவளோடும் பேச முடியவில்லை. ஊர் வழித்துக் கொண்டு சிரித்தது. அவமானமாகப் போயிற்று. எல்லா அதிகாரிகளும் பார்க்கும் பொழுதே நமட்டுச் சிரிப்பு சிரித்தார்கள். அந்த சிரிப்பு மனதை குடைந்தது. நெஞ்சை அறுத்தது.

"உடனடியாக விஷ்ணுவர்த்தன விஜயாதித்தனுக்கு என் மகனுக்கு பட்டம் கட்டப் போகிறீர்களா, இல்லையா" என்று இரண்டாம் மனைவி கேட்க, "யோசித்து சொல்கிறேன்" என்று அவர் பதில் சொன்னார்.



ஆனால் "நீ என்ன யோசிப்பது, யோசிப்பதற்கு வேறு ஆட்கள் இருக்கிறார்கள்" என்று அவள் நகர்ந்து விட்டாள்.

ஜெயசிம்மன் அதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறானாம். மேலை சாளுக்கிய மன்னன் சத்யாசிரியன் மகன் இரண்டாம் ஜெயசிம்மன்.

"மூத்தவன் இருக்க இளையவனுக்கு பட்டம் கட்ட வேண்டும் என்று ஏன் துடிக்கிறீர்கள்" ஜெயசிம்மனை முறைப்பாக விமலாதித்தர் கேட்டார்.

"விஷ்ணுவர்த்தன விஜயாதித்தன் எங்களுக்கு ஒன்றும் செல்லப் பிள்ளை இல்லை. அவன் ஒரு பகடைக்காய். இந்த கீழைச் சாளுக்கியத்தை, மேலைச் சாளுக்கியம் ஆட்சி செய்ய வேண்டும். நாங்கள் இந்த இடத்தில் அரசாங்கம் நடத்த வேண்டும். இங்கு அரசாங்கம் நடத்துவதற்கு பொது மக்கள் பார்வைக்கு விஜயாதித்தனை ஏற்படுத்தி விட்டு மற்றதை நாங்கள் பார்த்துக் கொள்வோம்"

"அப்பொழுது என்னுடைய நிலைமை"

"மெல்ல விலகிக் கொள்ளுங்கள். வழக்கம் போல நீங்கள் குதிரை ஏறி திருவாரூருக்கு போய் விடுங்கள். திருவாரூரில் வேறு ஏதேனும் ஒரு கணிகை கிடைப்பாள். அந்த கணிகையோடு ஒழுங்காக குடித்தனம் செய்யுங்கள். எதற்கு குந்தவை எல்லாம்" என்று சொல்லி இடி போல சிரித்தார்.

அவருக்கு வெட்கமாகியது.

போன முறை சத்யாசிரியனிடம் விமலாதித்தன் தோற்றுப் போய் அவரது தலையனாரும், அவரும் தஞ்சைக்கு வந்து திருவாரூரில் தங்கி காத்திருந்த போது தான் குந்தவை ஓடி வந்து காதலித்தாள்.

நான் பார்த்துக் கொள்கிறேன் கவலைப்படாதே என்று இராஜேந்திரர் உறுதி சொன்ன பிறகு தான் அங்கே தங்கி இருந்தார். அவருடைய உதவியால் மறுபடியும் வேங்கியை மீட்க முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதைத்தான் ஜெயசிம்மன் சுட்டிக் காட்டுகிறான்.

என் தந்தையை விரட்டி ஓடினாயே. இப்பொழுது நான் விரட்டுகிறேன் ஓடு என்று சொல்லாமல் சொல்கிறான்.

அவர் திருதிருவென்று முழிப்பதை பார்த்து விட்டு, "கவலைப்படாதீர்கள், உங்களை நாங்கள் துரத்தப் போவதில்லை. உங்கள் மனைவி குந்தவையை துரத்த வேண்டும் என்று

நினைத்தோம். இராஜராஜ நரேந்திரனை தூக்க வேண்டும் என்று நினைத்தோம். அவர்கள் இரண்டு பேரும் தானாக ஓடிப் போய் விட்டார்கள். வெறுமே ஒரு போக்குக்கு படைகளை எல்லைப்புறத்துக்கு அனுப்பி இருக்கிறோம். வெகு நிச்சயம் இராஜேந்திரர் வருவாரல்லவா வழியிலேயே மடக்கி தாக்குவதாக எண்ணம்"

**சா**லையை சமன் செய்த கொத்தனார்கள் போன பிறகு யானைகள் வந்தன. யானைகள் வரும் நேரம் உச்சி வெய்யிலாயிற்று. யானைகள் பொது மக்களை நோக்கி கைகளை நீட்டிய வண்ணம் இருந்தன. ஏதாவது கொடு, ஏதாவது கொடு என்று கேட்டன.

மக்கள் வாழைப் பழங்களையும், பூசணிக் காய்களையும், புடலங்காய்களையும் வைத்தார்கள். அவைகள் ஆசையாக உண்டன. அறுபது யானைகள் புலிக்கொடியோடு நடந்து போவதைப் பார்க்க கம்பீரமாக இருந்தது.

"சோழம் சோழம்" என்று மக்கள் கத்தினார்கள்.

ஓரமாக இருந்த ஒரு மரக் கிளையை யானை இழுத்தது. யானைப் பாகன் அதை அடித்து திருப்பினான்.

"அய்யா, போனால் போகிறது. வெறும் மரக்கிளை தான் யானை எடுத்துக் கொள்ளட்டும்" என்று அந்த ஊர் பெரியவர் சொல்ல, அவன் யானையை நிறுத்தினான். மரக்கிளையை நிதானமாக ஒடித்து யானை மென்று தின்றது. எல்லா யானைகளும் நகர்ந்த பிறகு அந்த யானையும் நகர்ந்தது.

**வை**த்தியர் விமலாதித்தன் நெஞ்சில் கை வைத்து பார்த்து விட்டு "மிகப் பலவீனமாக இருக்கிறார். உணவு சரியாக சாப்பிடுவதில்லையா, உள்ளே ஏதேனும் குமைச்சலா. உள்ளே தெளிவாக இருங்கள், உங்களுக்கு பலவீனம் தான். அதை பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள்" என்று சொன்னார்.

உற்சாகமாக இருப்பதற்கு குளிகைகள் கொடுத்தார். ஆனால் அந்த குளிகைகள் போட்டவுடன் பொங்கி சீறலாக வாந்தி வந்தது. வைத்தியர் திகைத்தார், ஜெயசிம்மனிடமும், விஷ்ணுவர்தன விஜயாதித்தனிடமும் சொல்லும்படி பணித்தார்.

"அமைதியாக தூங்குங்கள், எல்லாம் சரியாகி விடும். நீங்கள் மனதை உழப்பிக் கொள்கிறீர்கள். அதுதான் படபடப்பு அதிகமாக



இருக்கிறது. இரத்தக் கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இரத்தக் கொதிப்பிற்குத் தான் குளிகை கொடுத்தேன். அதை துப்பி விட்டார்கள். மறுபடியும் சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்த குளிகையை கொடுக்கிறேன். எப்பாடுபட்டாவது அதை உள்ளே செலுத்துங்கள். அது உங்களை சுத்தப்படுத்தும்" என்று சொன்னார்.

விமலாதித்தன் அதை காதில் போட்டுக் கொள்ளவே இல்லை. ஏன் இவ்வளவு கேவலமான நிலையை அடைந்து விட்டோம் என்ற வேதனை அவர் நெஞ்சை அறுத்துக் கொண்டிருந்தது.

இத்தனை வேதனை தெரிந்த பிறகும் அவருக்கு சொல்லியிருக்கக் கூடாதா. இளையாள் வந்து பார்த்திருக்க வேண்டாமா. குந்தவை பாசமானவள் தான். ஆனால் இந்நேரம் ஓடி வந்திருப்பாள். இராஜராஜ நரேந்திரன் அருகில் வந்து தோளைத் தொட்டிருப்பான். இங்கு யாரும் வரவில்லை. யாரும் இல்லாமல் அனாதையாக சாகப் போகிறேன் என்ற ஒரு எண்ணம் தோன்றியது.

'மரணமா' அவர் யோசித்தார்.

'ஆமாம்' என்று அடிமனது சொல்லிற்று. மறுபடியும் நெஞ்சில் கை வைத்துப் பார்த்தார். தாறுமாறாக உள்ளிருந்து ஒரு அசைவு இருப்பதை அவர் உணர்ந்தார். மரணம் தான் என்று அவருக்கு புரிந்து போயிற்று. மெல்ல கண்களில் நீர் கோர்த்தது. அழத் துவங்கினார்.

மனிதருக்கு மரணம் வரும் அது இயல்புதான். மரணமில்லா பெருவாழ்வு எவருக்கும் இல்லை. ஆனால் யாரும் துக்கப்பட்டு சாகக்கூடாது. தன்னைப் போல் வேதனைப்பட்டு சாகக் கூடாது. யாருமின்றி, எவர் உதவியும் இன்றி மரணத்தோடு மட்டும் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. யாரிடமாவது பேசினால் மனம் சாந்தமாகும். ஆனால் யாரிடம் பேசுவது. வாயிற்காப்பாளனோடா, வைத்தியரோடா அவர் மனம் வெறுத்தார். யாரிடம் பேச வேண்டுமோ அவர் அருகில் இல்லை என்று உள்ளே நொந்துக் கொண்டார். மௌனமானார். மன உளைச்சல் அதிகமாகியது.

**இ**ரண்டே இரண்டு தேர்கள் மட்டும் வேகமாக கருந்திட்டான் குடிலை தாண்டி அதனுடைய கடைசி பக்கம் போய் நின்றன. அங்கிருந்து இரண்டு சகோதரர்கள் இறங்கினார்கள். அவர்கள் முதுகில் அம்பாரத் துணிகள் இருந்தன. வில்லை வண்டியிலேயே வைத்து விட்டு அவர்கள் வீடு நோக்கி உள்ளே நுழைந்தார்கள்.

தட்டிக் கதவை திறந்தார்கள். சிறிய தோட்டம் தாண்டினார்கள். திண்ணையில் போய் உட்கார்ந்து கொள்ள வீட்டிலிருந்து அவர்களுடைய மனைவிமார் ஓடி வந்தார்கள்.

"வந்து விட்டீர்களா நீங்கள் வர வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொண்டே இருந்தேன். இப்பொழுது தான் உள்ளே விளக்கேற்றினேன். நெய் விளக்கு. வாருங்கள் காலணியை கழற்றி விட்டு வாருங்கள். உள்ளே வந்து சாமி கும்பிடுங்கள் என்று சொல்ல. அவர்கள் காலில் உயரமாக கட்டப்பட்டிருந்த தோல் வார் அவிழ்த்து காலணிகளை கழற்றினார்கள். உள்ளே போனார்கள். வீடு அவர்களை எழுந்து நின்று வரவேற்றது. குழந்தைகள் ஓடி வந்து கட்டின. ஒரு வாலிபன் அவரது மகன் ஓடி வந்து அவரை ஆரத் தழுவிக் கொண்டான். அவரும் அவனை இறுக்கிக் கொண்டார்.

வீட்டின் மத்திய கூடத்தில் சுவரில் பெரிதாய், வட்டமாய் மஞ்சள் எழுதி மஞ்சளின் மீது குங்குமம் வைத்து. குங்குமத்திற்கு எதிரே பெரிய அகல் விளக்கு வைத்து. அகல் விளக்கு நிறைய பசு நெய் ஊற்றி பெரிதாய் திரி இருந்தது. அதுதான் கடவுள். தீபம் தான் தெய்வம்.

"ஓம் நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா
ஓம் நமச்சிவாயா ஓம் நமச்சிவாயா"

அந்த வீடு முழுவதும் கை கூப்பி கடவுளை வேண்டிற்று. அண்ணனும், தம்பியும் ஊறுதை அடையா வண்ணம் மறுபடியும் வரவேண்டும் என்று பெண்கள் அழுது புலம்பி விளக்கை நமஸ்கரித்தார்கள். குழந்தைகள் விழுந்து வணங்கினார்கள். அவர்கள் இரண்டு பேரும் கைகூப்பி விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மறுபடியும் கொண்டு வந்து சேர். இது எதுவும் என் கையில் இல்லை. உன் கையில் இருக்கிறது. என்னை கவனமாக மீட்டுக் கொண்டு வந்து விடு. என் மனைவி, மக்களை பார்க்க வேண்டும். இந்த வீட்டில் நூறாண்டு காலம் வசிக்க வேண்டும் என்று ஆசை இருக்கிறது. அதை நிறைவேற்றுவாயாக. நிறைவேற்றினால் அணையாத தீபத்தை என்றும் நெய் இருக்கின்ற தீபத்தை நான் இங்கு ஏற்றுகின்றேன் என்று வேண்டிக் கொண்டார்.

பையை பிரித்து. இரண்டு கழஞ்சு காசு எடுத்து மனைவியிடம் கொடுத்தார். "இதற்கு நெய் வாங்கிக் கொள். இடையறாது தீபம் எரியட்டும்" என்று சொல்ல அவள் சரி என்று சொன்னாள். அவ்விதமே இரண்டு கழஞ்சு காசு எடுத்து அவருடைய சகோதரர் தன் மனைவியிடம்



...டினார்.

"அக்கா தீபம் ஏற்றட்டும். நீ தினசரி படையல் போடு. ஏதேனும் ஒன்று நைவேத்யம் செய். குறைந்தபட்சம் அவலாவது வை. நீ நைவேத்யம் செய்ய முடியாது என்ற நிலைமை இருப்பின் நீ உன்னுடைய மகனை வைத்து செய் அல்லது அவருடைய மகன் செய்யட்டும். தினசரி நெய் விட்டு விளக்கு எரிய வேண்டும். நைவேத்யம் நடக்க வேண்டும். அது எங்களுக்கு உதவி செய்யும்" என்று சொல்ல, வீடு சத்தியமாக செய்வதாக உணர்ச்சிப் பூர்வமாக சொன்னார்கள். எல்லோரும் ஆரத் தழுவிக் கொண்டார்கள்.

மறுபடி மூத்த மகனை இறுக தழுவிக் கொண்டார்.

"உன்னை நம்பித் தான் போகிறேன். அம்மாவையும், சின்னம்மாவையும் மிகக் கவனமாக பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்ல, அவர் "சரி" என்று தலை அசைத்தான்.

"வெறுமே உட்கார்ந்து கொண்டு ஊர் சுற்றாதே. மாந்தோப்புகள் அலையாதே. உடற்பயிற்சி செய். புஜங்களை உறுதி செய். கைகளை காடு முரடாக்கு. ஒரு மறவன் மெல்லிய உருவத்தினனாய் இருக்கக் கூடாது. நன்றாக சாப்பிடு" என்று சொன்னார்.

பையிலுள்ள மொத்த கழஞ்சுகளையும் எடுத்து மனைவியிடம் நீட்டினார். அதேப் போல சகோதரரும் செய்தார். இரண்டு பேரும் "எங்களிடம் சுத்தமாகக் காசு இல்லை. அது எங்களுக்கு தேவையும் இல்லை. நீங்கள் நலமாக இருக்க வேண்டும். அதுதான் எங்கள் பிரார்த்தனை. விரைவில் வந்து விடுவோம்"

"விரைவில் என்றால்"

"ஒரு வருடமாவது ஆகும் என்பது என்னுடைய அபிப்ராயம்"

"எவ்வளவு தொலைவு பயணம்"

"வேங்கியை நோக்கி பயணம், ஆனால் வேங்கியோடு மட்டும் நிற்காது"

"பிறகு"

"ஒட்ட தேசமும், கலிங்க தேசமும், இலாட தேசமும் போக வேண்டி இருக்கும்"

"அதாவது வங்காளம் வரையிலா" அந்த பையன் புரிந்து கொண்டது போலக் கேட்டான்.

"ஆமாம். கங்கை நதிக்கரை வரையும் இருக்கும்"

"யார் சொன்னார்கள்"

"வேறு வழியில்லை. அவ்வளவு தொலைவு போனால் தா எதிரிகளை அடக்க முடியும். இல்லையெனில் கீழைச் சாளுக்கி இவருடைய ஆதரவில் எதிர்த்துக் கொண்டிருக்கும். மேலை சாளுக்கியத்தை நிர்மூலம் செய்து விட்டு, கீழைச் சாளுக்கியத்தி தொந்தரவு செய்கின்ற அத்தனை பேரையும் அடக்கி விட்டுத் தா திரும்புவோம், அது ஒரு வருடமாவது ஆகாதா" என்று சொல் வீடு "ஆமாம்" என்று சோகமாக தலை அசைத்தது.

அவர்கள் வீட்டிற்கு வெளியே வந்தார்கள். திண்ணையி உட்கார்ந்து கொண்டார்கள். கிராமம் அவர்களை சூழ்ந்து கொண்டது. அவர்கள் செருப்பணிந்து வாரை இட்டும், வலதுமாக போட்டு இறுக்கிக் கொண்டார்கள். எழுந்து நின்றார்கள். கூட்டத்தை விலக்கி தேர் ஏறினார்கள். தொலைவே பெரிய தேர் கூட்டம் வருவது தெரிந்தது.

அந்த இரண்டு வீரர்களை விட்டு விட்டு ஜனங்கள் வரிசையா னார்கள். தேரை வரவேற்க தெளிவானார்கள். மறுபடியும் நீர் தெளித்தார்கள். தூசு எழும்பாமல் இருக்க தரையை சமனம் செய்தார்கள்.

"என்னய்யா ஆயிற்று உமக்கு" சத்யாசிரியன் மகன் மேலைச் சாளுக்கியத்து மன்னன் ஜெயசிம்மன் கம்பீரமாக உள்ளே நுழைந்தான்.

அவனைச் சுற்றி மெய்காவல் வீரர்கள் இருந்தார்கள்.

ஓலை நாயகமும், மந்திரிகளும் உடன் வந்தார்கள். திடீரென்று அந்த அறைக்குள் இருபது, முப்பது பேர் வர, அதுவும் விமலாதித்தனுக்கு சிரமமாக இருந்தது. வெளிச்சம் குறைந்து, காற்று குறைந்து மூச்சுத் திணறுவது போல் ஏற்பட்டது.

"நெஞ்சு வலிக்கிறது" ஒரே வரியில் பதில் சொன்னார்.

"நெஞ்சு என்று ஒன்று உமக்கு இருக்கிறதா. கட்டிய மனைவியும், பெற்ற பிள்ளையும் ஓடி விட்டார்கள். அமைதியாகத் தான் உட்கார்ந்து கொண்டு உணவு உண்டு கொண்டிருக்கிறீர். அப்புறம் வலிக்கிறது என்று சொன்னால் யார் நம்புவார்கள். அவர்களை சுத்தமாக மறந்து விடும். ஓடிப்போன மனைவியை நினைத்து தினந்தோறும் ஏங்காதீர். பிள்ளை நீ வேண்டாம் என்று போய் விட்டான். பிறகு அவன் எதற்காக இங்கு வர வேண்டும், தயவு செய்து நான் சொல்வதைக் கேள்.

இளையராணியை முழு மனதாக ஏற்றுக் கொள். வெறுமே



சிங்காரத்துக்கென்று வைத்துக் கொள்ளாதே. அவளிடம் நீ எந்த விதமாகவும் மரியாதையாக பேசுவதில்லை. வெறும் படுக்கை சுகத்திற்காகத் தான் அவளை வைத்துக் கொண்டிருக்கிறாய். அது எவ்வளவு பெரிய வேதனையை அவளுக்கு கொடுக்கிறது தெரியுமா. அவளை பட்டமகிஷி என்று அறிவி. பிள்ளைக்கு இளவரசு பட்டம் கட்டு. விஷ்ணுவர்தன விஜயாதித்தன் இங்கு இளவரசனாக நியமிக்கப் படட்டும், நாளை காலை அதற்குண்டான வேலையை நான் துவங்கப் போகிறேன். நாளை மறுநாள் விஷ்ணுவர்தன் விஜயாதித்தன் இளவரசனாவான். அதற்குண்டான ஓலைகளை தருகிறேன். கையெழுத்திடும்"

அவன் ஓலைகளை நீட்டினான்.

அவர் ஓலைகளைப் படித்து பார்த்தார். வலது பக்கம் படுக்கையில் வைத்தார்.

"இப்போதைக்கு வேண்டாம். என் உடல்நிலை சரியாகட்டும். பிறகு பேசலாம்"

"உன் உடல்நிலைக்கு என்ன கேடு"

"நெஞ்சு வலிக்கிறதய்யா"

"இந்த இடத்திலா" ஜெயசிம்மன் முஷ்டியை மடக்கி நச்சென்று இடது பக்கம் குத்தினான்.

வலி சுளீர் என்று உடம்பு முழுவதும் பரவியது. தலையில் அடித்தான்.

"அம்மா" என்று விமலாதித்தன் அலறினார்.

"வைத்தியரே என்ன விஷயம்" என்று கேட்க, வைத்தியர் மெல்ல காதில் ஏதோ ஓதினார்.

ஜெயசிம்மன் திகைத்தான்.

"சரி, உமது உடம்பு சரியாகட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம். வாருங்கள் போகலாம். ஒரு வைத்தியரும், ஒரு வீரரும் இங்கு காவல் இருக்கட்டும். விஷ்ணுவர்தன விஜயாதித்தனை நான் அழைத்ததாக உடனே அழைத்து வா. அவனுக்கு வேலைகள் இருக்கின்றன" என்று சொல்லி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

சட்டென்று அந்த இடம் வெளிச்சமாகியது.

அவருக்கு வலி அதிகமாகியது. மூச்சு திணற ஆரம்பித்தது. நாக்கு இழுக்க ஆரம்பித்தது. நெஞ்சில் குத்தியதால் ஏற்பட்ட விளைவு கழுத்து புடைக்க ஆரம்பித்தது. வயிறு குழைந்தது. சிறிதளவு

மலம் வெளியே வந்தது. இறுதி நேரம் என்று விமலாதித்தர் புரிந்து கொண்டார். கை, கால்களை அசைக்க முயற்சித்தார். கையை தூக்கி வைத்தியரை அழைத்தார்.

"மிகவும் வலிக்கிறதே" என்றார்.

"இந்த இடத்தில் குத்தலாமா, முரட்டுத்தனமாக நடந்து கொள்கி றார்களே. நீங்களும் மௌனமாக பொறுத்துக் கொள்கிறீர்களே. வாள் உருவி தாக்கி இருக்க வேண்டாமா" என்று சொல்ல, விமலாதித்தர் சிரித்தார்.

கையை தூக்க முடியவில்லை. வாளை எப்படி பிடிப்பது. எப்படி வீசுவது. மனம் செத்து விட்டது. உடம்பு எப்படி ஒத்துழைக்கும் என்று யோசித்தார்.

"வலி நீக்க மருந்தில்லையா"

"இருக்கிறது. முகர்ந்து பாரும்"

பிங்கான் ஜாடியிலிருந்து திரவம் எடுத்து துணியில் நனைத்து மூக்கருகே நீட்டினார். மெல்ல அந்த வாசனை மூக்கில் ஏறி தலைக்கு ஏறியது. விமலாதித்தர் கண் சொருகினார். இன்னும் சரிந்து படுத்துக் கொண்டார். அமைதியானார். தன் மீது பிடிப்பு விட்டார்.

அடுத்த கால் நாழிகையில் அமைதியாய் விமலாதித்தர் உயிர் நீத்தார்.

அவருடைய அண்ணன் இறந்து போனவர் வாசலுக்கு வந்து வரவேற்பது தெரிந்தது. தாவிப் போய் அண்ணனை தழுவிக் கொண்டார்.

"கவலைப்படாதே, எல்லாம் சரியாகும். இராஜேந்திரன் வருவான். இந்த இடத்தில் உன் மகன் முடி சூடுவான். கவலைப்படாதே" என்று அழைத்தார்.

அண்ணனும், தம்பியும் கை கோர்த்துக் கொண்டு வானுலகம் நோக்கி போனார்கள்.

இது கீழைச் சாளுக்கியம். இந்த கீழைச் சாளுக்கியம் அவர்கள் தேசம். கோதாவரி என்கிற மிகப்பெரிய நதியும், துங்கபத்ரை என்கிற நல்ல ஆறும் ஓடுகின்றன. அதன் மூலம் பலரும், பல்லாயிரக் கணக்கான நிலங்கள் சமன் செய்யப்பட்டு, உழவு செய்யப்பட்டு நல்ல நெல் விளைச்சல் இருக்கிறது, கரும்பு விளைகிறது. துவரை விளைகிறது. மிகச் செழிப்பான தேசம். இங்குள்ள கறவைகள் மிக முரடாகவும், தடிமனாகவும் இருக்கும். நிறைய பால் கறக்கும்.



இப்படிப்பட்ட தேசத்தை வேறு யாருக்கோ தாரை வார்ப்பது அவர்க ளுடைய எண்ணம் அல்ல. வெகு நிச்சயம் இராஜேந்திர சோழன் வரு வான். இங்கு வந்து இராஜராஜ நரேந்திரனை சிம்மாசனத்தில் அமர்விப் பான். அதற்கு உண்டான காரியங்களை வானுலகத்தில் இருந்தபடி விமலாதித்தனும், அவரது தமையனாரும் நிச்சயம் செய்வார்கள்.

வானுலகத்தில் இருந்தாலும் கீழைச் சாளுக்கியத்தை அவர்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள்.

முன்னூறு தேர்கள் கொண்ட அந்தப் படை கருந்தட்டான்குடியை தாண்டியது. பள்ளி அக்ரஹாரத்தை சேர்ந்த அந்தண மாணவர்கள் கை உயர்த்தி தேரை வேடிக்கை பார்த்தார்கள். மேல்துண்டை விசிறி எறிந்தார்கள். சிலர் ஓடிப்போய் தேரின் பின்பக்கம் ஏறிக் கொண்டார் கள். அவர்களை, "வேண்டாம் போய் விடு" என்று வீரர்கள் அதட்ட அவர்கள் இறங்கி வலப்பக்கம் ஒதுங்கிக் கொண்டார்கள்.

ஒரு பையன் இறங்கத் தெரியாமல் தேருக்கு நடுவே மாட்டிக் கொள்ள தேர் வேகமாக நின்றது. அவனை விலக்கி ஓடச் சொன்னது. பிறகு மெல்ல நகர்ந்தது. தேர் வேகமாக ஓடுவதும் சட்டென்று நிற்பதும் அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"செத்துப் போயிருப்பாயடா. நல்ல வேளை, சோழ வீரர்கள் காப்பாற்றினார்கள்" என்று அந்தண சிறுவர்கள் சொல்ல வானத்தில் இருந்த அண்ணனும், தம்பியும்,

"ஆமாம். இந்த சோழ வீரர்கள் கீழைச் சாளுக்கியத்தை காப்பாற்றுவார்கள். அதை சாவிலிருந்து மீட்பார்கள்" என்று பதில் சொன்னார்கள். அந்த பதில் யார் காதிலும் விழவில்லை.

தேரின் சக்கரத்தடம் வரிவரியாக மணற்பூமியில் படர்ந்திருந்தது. மறுபடியும் தண்ணீர் தெளிக்கப்பட்டது.

ஒற்றைக் குதிரைகளோடும், வேறுவேறு கழுதைகளோடும் குதிரையை பராமரிக்கிறவர்கள் வந்தார்கள். அந்த கழுதைகளின் மீதும் அந்தணச் சிறுவர்கள் ஏறி உட்கார்ந்து கொண்டார்கள்.

"நான் கீழைச் சாளுக்கியம் போகிறேன். போய் வரவா" என்று கை அசைத்தார்கள்.

மெல்ல ஆட்கள் அதட்டி அவர்களை விலக்கினார்கள். அந்தணச் சிறுவர்கள் ஒரு சிறு அதட்டலுக்கும் பயந்து ஓரமாக ஒதுங்கிக் கொண்டார்கள். அவர்கள் குறும்பு செய்கிறவர்களாகவும்

இருந்தார்கள். பயந்த சுபாவமாகவும் இருந்தார்கள்.

பெரிய மாட்டு வண்டிகளில் அரிசி மூட்டைகள் போயின. இன்னொரு மாட்டு வண்டிகளில் ஆடுகள் போயின.

"போய் இந்த வண்டியில் ஆடோட ஆடா ஏறிக்கோடா, கீழைச் சாளுக்கியம் போய் விடலாம்" என்று ஒருவன் சொல்ல, அவன் ஏறுவதற்கு முயற்சித்தான். 'சொடேர்' என்று சவுக்கு சொடுக்குவது கேட்டு அதே வேகத்தில் திரும்பி வந்தான். பையன்கள் வாய் விட்டு சிரித்தார்கள்.

மறவருடைய குழந்தைகள் இந்த நடவடிக்கைகளை சோகத்தோடும், ஒரு வித வேதனையோடும் பார்த்துக் கொண்டிருக்க அந்தண சிறுவர்கள் கும்மாளமாய் இந்த ஊர்கோலத்தை ரசித்தார்கள்.

பள்ளி அக்ரஹாரத்தில் மிகப் பெரிய வேத பாட சாலைகள் மூன்று இருந்தன. அங்கு படிக்கின்ற அந்தண மாணவர்களும் காந்தை தெருவில் தான் இருந்தார்கள். கோமணமும், இடுப்பில் துண்டும், வெறும் மார்பும், மழித்த தலையும், பின்னால் குடுமியும், கழுத்தில் துளசி மாலையுமாய் இருந்த அந்த அந்தணச் சிறுவர்களை மறவர்கள் வினோதமாகப் பார்த்தார்கள்.

"தாண்டிப்போகிறவர்கள் எவர் உயிரோடு வருவார்கள் என்று தெரியவில்லை. நீங்கள் எல்லாம் ஆட்டமா ஆடிக் கொண்டிருக்கிறீர்கள்" என்று சில மறவர் இளைஞர்கள் வாய் விட்டுக் கருவினார்கள்.


"இப்படி ஆடிக் கொண்டிருக்கக் கூடாது. மறவர்கள் முறைக்கிறார்கள். எனவே கைகூப்பி ருத்ரம், சமகம் சொல்லு" என்று ஒரு பெரிய பையன் கட்டளை இட அந்தண பேரும் கைகூப்பி தேர்கள் தாண்டும் போது ருத்ரமும், சமகமும் சொன்னார்கள். சிவனுடைய நாமத்தை துதித்தார்கள்.

அவர்களுக்கு ஒரு கழஞ்சு பொன் ஒரு போர் வீரனால் தானமாகக் கொடுக்கப்பட்டது. தான் ஊனத்தை அடையாமல் வந்தால், மறுபடி இதே இடத்தில் ஒரு அந்தணனுக்கு ஒரு பொன் கழஞ்சு கொடுப்பதாக அவன் உள்ளுக்குள் நினைத்துக் கொண்டான்.

கீழைச் சாளுக்கியம் அற்புதமான தேசம். அதை ஆட்சி செய்ய கொடுத்து வைத்திருக்க வேண்டும். நாங்கள் இருவருமே அதை முழுவதுமாக செய்யவில்லை. ஆனால் இராஜராஜ நரேந்திரன் இதை நிச்சயம் செய்வான். மேலைச் சாளுக்கியத்தை அந்தமாக விரட்டி விட்டு கீழைச் சாளுக்கியத்தை ஸ்தாபிப்பான். மாமன்



உதவியோடு அவன் பெரும் புகழ் பெறுவான். அவன் பெரும்புகழ் பெற வேண்டும் என்று அண்ணனும், தம்பியும் ஆசிர்வதித்தார்கள். அவர்கள் காதிலும் ருத்ரம், சமகம் விழுந்தது.



# 18

விமலாதித்தனோடு தனியே விடப்பட்ட வைத்தியர் கடைசியாக ஒருமுறை முயற்சி செய்யலாம் என்று பார்த்து தன்னுடைய வாயை விமலாதித்தனுடைய வாயில் பொருத்தி முழுவதுமாக காற்று ஊதினார். நுரையீரலை நிரப்பினார். இருதயம் சில நொடிகள் துடித்தது. ஆனால் மறுபடியும் அடங்கிற்று. மறுபடியும் அழுத்தி ஊதினார். மறுபடியும் இரண்டு முறை துடித்து அடங்கிற்று. வாய் முழுவதும் ஒரு அமில வாசனை வந்தது.

இவருக்கு வயிறு சரியில்லை. வயிறு சரியில்லாததற்கு காரணம் மன உளைச்சல். மன உளைச்சலுக்கு காரணம் மனைவியும், மகனும் பாவம். இது பரிதாபமான ஒரு சாவு. ஒரு மன்னர் இப்படி சாகக் கூடாது என்று வைத்தியர் நினைத்துக் கொண்டார்.

வானில் உள்ள விமலாதித்தருக்கு அந்த வைத்தியருக்கு ஏதேனும் காசு தர வேண்டும் என்று தோன்றியது. அவர் இடுப்பு பக்கம் உள்ள வேட்டி மெல்ல நெகிழ்ந்தது. அதிலிருந்து ஆறு கழஞ்சுகள் படுக்கையில் விழுந்தன. வைத்தியர் வாசல்பக்கம் பார்த்தார். வாசல்பக்கம் உள்ள காவல்காரன் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆறு கழஞ்சுகளையும் எடுத்து பெட்டியில் இருந்த சூரணத்திற்கு நடுவே போட்டுக் கொண்டார். அழுத்தி சமன் செய்தார். சூரணத்திற்கு அடியில் இந்த ஆறு கழஞ்சுகளும் இருந்தன. எடுத்து பெட்டியில் வைத்துக் கொண்டார். வேறு என்ன இருக்கிறது என்று பார்த்தார். கட்டிலின் ஓரத்தில் ஒரு முத்திரை

மோதிரம் சூட்டி வைக்கப்பட்டிருந்தது. அந்த மோதிரத்தில் ஒரு பகுதி முட்களால் ஆனது போன்று தெரிந்தது.

ஒரு ஓலையில் அந்த மோதிரத்தை வைத்து அழுத்தினால் அந்த முட்கள் ஒரு சித்திரமாக கீறலை ஏற்படுத்தும். மை தடவினால் அந்த சித்திரம் தெரியும். வேங்கி என்ற எழுத்தோடு சில உருவங்கள் அதில் இருந்தன. அந்த முத்திரை மோதிரத்தையும் பத்திரப் படுத்திக் கொண்டார். மெல்ல வெளியேறினார். வாயிற்காப்போனை நோக்கி விமலாதித்தர் இறந்து விட்டார் என்று சொல்ல, வாயில் காப்போன் வெளியே ஓடினான்.

அவர் வாசல் பக்கம் நின்று கொண்டிருந்தார். உள்ளுக்குள்ளே ஆட்கள் புயலாக நுழைந்தார்கள். இப்பொழுது வேறு வைத்தியரை அழைத்து வந்திருந்தார்கள். அந்த வைத்தியர் பார்த்து விட்டு உதடு பிதுக்கினார்.

"கால் நாழிகை ஆயிருக்கும் போல, என்ன ஏதாவது சொன்னாரா?" என்று இந்த வைத்தியரை நோக்கி விசாரித்தார்கள்.

"ஒன்றுமில்லை. மயக்கமாகி விட்டார். மயக்கத்திலேயே உயிர் பிரிந்து விட்டது" என்று முன்னால் இருந்த வைத்தியர் பதில் சொன்னார்.

"என்ன உதவிகள் செய்தீர்" என்று பெரிய வைத்தியர் கேட்க.

"வாய் வைத்து ஊதினேன். நெஞ்சில் தட்டினேன். எதுவும் சரியாக வரவில்லை" என்று சொல்ல.

"வேறு என்ன செய்வது. விதி முடிந்து விட்டது" என்று பெரிய வைத்தியர் சொன்னார்.

விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கு தகவல் போயிற்று. அவன் வேகமாக வந்து தந்தையினுடைய கட்டிலுக்கு அருகே நின்றான். என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. யாரேனும், ஏதேனும் சொல்லிக் கொடுத்தால் செய்யலாம் என்பது போல காத்திருந்தான்.

பதினைந்தாயிரம் குதிரை வீரர்கள் கருந்தட்டான்குடியை கடந்தார்கள். அந்த படையினுடைய வேகத்தை பார்த்து ஊர் அதிர்ந்து போயிற்று. அந்தண சிறுவர்கள் பின்னடைந்து வீட்டினுடைய திண்ணையில் ஏறி நின்றார்கள். குதிரைகள் எப்படி வேண்டுமானாலும் திரும்பும். எந்த பக்கம் வேண்டுமானாலும் வந்து மோதும் என்று அவர்களுக்கு தெரிந்திருந்தது.



"இடது பக்கச் சேணம் நீளமாகவும், வலது பக்கம் குட்டையாகவும் இருக்கிறது. சமமாக இல்லை" ஒரு குதிரை வீரர் சொல்ல, தோல் தைப்பார் அந்த இடத்திற்கு விரைந்தார். சேணத்தை பரிசோதித்தார். குதிரை வீரரை இறங்கச் சொல்லி ஆசனத்தை எடுத்துவிட்டு சேணத்தை சரி சமமாக்கி வேகமாக நூல் குத்தி இறுக்கத் தைத்தார். சேணத்தில் பொருத்தினார். மேலே ஆசனத்தை வைத்தார்.

"இப்போது உட்கார்ந்து கொள்ளுங்கள்" என்று சொல்ல, அவர் உட்கார்ந்து பார்த்தார்.

"இப்பொழுது மிகச் சரியாக இருக்கிறது" என்று சொன்னார். அந்த நேரத்தில் அவர்கள் வேலையை ஊர் மிக உன்னிப்பாக கவனித்தது.

அரிசி வண்டிகள் கடந்தன. ஆட்டுக்குட்டிகள் ஏறிய வண்டிகளும் கடந்தன.

"ஒரு போர் என்றால் எத்தனை வேண்டியிருக்கிறது" என்று ஒரு வயதான மறவர் சொல்ல, பெண்கள் "ஆமாம், ஆமாம்" என்றார்கள். அவர்களுக்கு போர் பற்றிய கவலையும், உணவு பற்றிய கவலையும், தேசம் பற்றிய கவலையும், எதிர்காலம் பற்றிய கவலையும் ஒரு சேர எழுந்தன.

இரவு நெருங்கும் நேரம் பறை அறிவிப்பாளர்கள் ஒரு பெரிய புளிய மரத்தடியில் தங்கினார்கள். சிறிய குழியை தோண்டினார்கள். கட்டையை உடைத்துப் போட்டார்கள். நெருப்பு பற்ற வைத்தார்கள்.

"மாமிசம் இருக்குமா" என்று கிராமத் தலைவரை கேட்டார்கள்.

"இருக்கிறது" என்று சொல்லி, அன்று அறுத்த ஆட்டினுடைய ஒரு பகுதியை கொடுத்தார். அதில் தொடைகளும் இருந்தன. மிக வேகமாக அதை நறுக்கினார்கள். சுத்தம் செய்தார்கள். களைந்து அரிசி யோடு போட்டார்கள். உப்பிட்டார்கள். மிளகு தூவினார்கள்; காய் கறிகளை நறுக்கி போட்டார்கள். அகப்பை விட்டு கிளறினார்கள். மாமி சமும், அரிசியும் ஒரு சேர வெந்து கமகமவென்ற வாசனையை உண்டு பண்ணிற்று. அரிசி சீக்கிரம் குழைந்தது. மாமிசம் வேக நேரமாயிற்று. காய்கறிகள் வெந்து மென்மை ஆயின. மாமிசம் முக்கால் திட்டம் வேகும் வரை காத்திருந்தார்கள். பிறகு இறக்கி வைத்தார்கள். சூடு ஆற காத்திருந்தார்கள். எல்லோருக்கும் குளத்திலிருந்து தாமரை இலை பறித்துக் கொண்டு வந்து தரப்பட்டது.

பானையிலிருந்து அகப்பையில் மொண்டு கடக்க, கறியும், சோறும் கலந்த உணவை ஒருவன் வைத்தான். தாமரை இலையில்

வைத்தவுடன் சூடு ஆறியது. அவர்கள் இளஞ்சூட்டோடு அந்த உணவை உண்டார்கள். கறி சோறு மிக அற்புதமாக இருந்தது.

"முதல் சோறு நன்றாக வந்து விட்டது. அதனால் வெற்றி நமக்கே" ஒரு பறை அறிவிப்பவன் உற்சாகமாகச் சொன்னான்.

எதிர்காலம் பற்றிய அனுமானங்கள் பலநூறு வகைகள் உள்ளன. அதில் இதுவும் ஒன்று. நன்றாக கறி சோறு அமைந்ததால் வெற்றி நிச்சயம் என்று பறை அறிவிப்பவன் கூறியது அங்குள்ளவர்களுக்கு சந்தோஷம் ஏற்படுத்தியது. அள்ளி அள்ளி உண்டார்கள். தள்ளிப் போய் வாய் கொப்பளித்தார்கள். பிறகு துண்டு விரித்து தலைக்கு கல் வைத்து மெல்ல படுத்தார்கள். வானத்து நட்சத்திரங்கள் மின்னத் துவங்கின.

காடு வெட்டிகளும், கானை வெட்டிகளும் பாடி இறங்கி சமையலுக்கு ஆயத்தம் செய்வது தொலைவிலிருந்து தெரிந்தது. பறை அறிவிப்பாளர்கள் கண் அயரும் நேரம் அவர்களைத் தாண்டி நான்கு குதிரைகள் போயின. அந்த குதிரைகளின் நடுநாயகமாக உள்ள ஈட்டியில் கறுப்புத் துணி கட்டப்பட்டு இருந்தது.

"ஏதோ துக்கச் செய்தி போகிறது"

"எங்கிருந்து. கீழைச்சாளுக்கியமா" திகைத்தார்கள். ஆனால் குதிரைகள் யாருக்காகவும் காத்திருக்கவில்லை. எந்த தகவலும் சொல்லவில்லை.

தேர்களை கிழித்துக் கொண்டு, குதிரைப் படைகளை கிழித்துக் கொண்டு நடுநிசிக்கு சற்று முன்னதாக தஞ்சை அரண்மனையில் போய் நின்று கதவு தட்டியது. திட்டி வாசல் திறக்கப்பட்டது. அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டார்கள். குசுகுசுவென்று பேசினார்கள். உடனடியாக தீப்பந்தங்கள் ஏற்றப்பட்டன. அரண்மனை பிரகாசமாயிற்று. இராஜேந்திர சோழர் எழுப்பப்பட்டார்.

நாளை அவர் பயணப்படுவதான ஒரு எண்ணம் அவருக்கு இருந்தது. ஆனால் நாளை பயணப்பட முடியாது. ஒரு நாள் விட்டு பயணப்பட வேண்டியிருக்கும் என்று அதிகாரிச்சிகள் பேசிக் கொண்டார்கள்.

மெய்காவல் வீரர்கள் பல அரண்மனை கதவுகளை தட்டி உள்ளே தூங்குகிறவர்களை எழுப்பி அழைத்து வந்தார்கள்.

பதினெட்டு படி கொண்ட அரண்மனை வாசலில் இராஜேந்திர சோழர் உட்கார்ந்து கொள்ள சேனாதிபதிகளும், முதல் மந்திரியும் அருகே வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணன் ராமனும் பல்லக்கில் ஏறி



வந்து சேர்ந்தார்.

"இராஜேந்திரா, என்ன சோதனை இது, என்ன சோதனை இது? அரற்றியபடியே அருகே வந்து இராஜேந்திர சோழரின் தோளில் கை வைத்தார்.

இராஜேந்திர சோழருக்கு முதல் முதலாக கண்ணில் ஜலம் கிளம்பிற்று.

"நல்லவன், இனிமையானவன், இதமானவன், அவன் வாழ்க்கையை அவனே பாழ் செய்து கொண்டான்" என்று மெல்ல முணுமுணுத்தார்.

"இப்போது படை எடுப்பின் நிலை என்ன?" வந்தியத் தேவரை கேட்டார்.

"ஒன்றுமில்லை. முன்னிலும் கடுமையாக தாக்க வேண்டியது தான். விமலாதித்தன் அங்கு இருந்தால் நிதானமாக செயல்பட வேண்டியிருக்கும். இனி முரட்டுத்தனம் தான். அடித்து வீழ்த்த வேண்டியது தான்"

"படை எடுப்பின் இறுதி அமைப்பு எப்படி என்பது முடிவாயிற்றா?" பரமன் மழபாடி கேட்டார்.

அருண்மொழி மௌனமாக மன்னரையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"திருவொற்றியூர் வரையில் எல்லோரும் ஒன்றாகப் போவோம். அங்கு போய் படைகள் இரண்டாகப் பிரியும். ஒன்று வடமேற்காக நடந்து மேலைச் சாளுக்கியம் போகும். மனிஜாவிற்கும் ஓலை அனுப்பி இருக்கிறேன். மனிஜாவும் குடகு மலையிலிருந்து பெரிய படையோடு, நான் இருக்கும் இடம் வந்து சேருவான். நாங்கள் [illegible] மானிய கேடயத்தை தரைமட்டமாக்கி, தீக்கிரையாக்கி அங்கிருந்து வேங்கி நோக்கி வருவோம். அரையன் ராஜராஜனை திருவொற்றியூரி லிருந்து கிழக்கு கடற்கரை ஓரமாகவே வேங்கிக்கு போய் அந்த இடத்தை கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

விஷ்ணுவர்த்தன விமலாதித்தனை அங்கு தாக்க வேண்டும் அல்லது வெட்டி எறிய வேண்டும். நேரடியாக எதிர்கொள்ள முடியுமோ அவ்வாறு தாக்க வேண்டும். ஆனால் வேங்கியை கைப்பற்றுவது தான் முக்கியமே தவிர நேரடியாக தாக்குவது முக்கியம் அல்ல. நாம் வருகிறோம் என்று தெரிந்தால் விமலாதித்தன் ஓடி விடுவான் என்பது என் அபிப்ராயம்"

"எப்போது ஊர் திரும்புவதாக உத்தேசம்" கிருஷ்ணன் ராமன் கேட்டார்.

"இப்போதைக்கு இல்லை. ஒரு வருடத்திற்கு நான் அங்கு தான் இருப்பேன். அதற்கு முன் ஜெயங்கொண்டத்திற்கு போய் அரண்மனை வேலைகள், கோவில் வேலைகள் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்த்து விட்டு அங்கிருந்து எண்ணாயிரம், எசாலம் போய் அங்கே என்னுடைய குரு ஈசான சிவ பண்டிதரை பார்த்து விட்டு அவரிடம் ஆசி வாங்கி, அந்த வேத பாடசாலைக்கு ஏதேனும் தானம் கொடுத்து விட்டு அங்கிருந்து வட மேற்காக கிளம்பி விடுவேன்"

"உங்களோடு யார் வருகிறார்கள்"

"என்னோடு வந்தியத்தேவரும், அருள் மொழிப்பட்டனும் வருகிறார்கள். என் மகன் வீர இராஜேந்திரன் அரையரோடு சேர்ந்து கொள்வான். நம்முடைய போர் முறையை வீர இராஜேந்திரன் கற்க வேண்டியது அவசியம்.

என்னால் வீர இராஜேந்திரனை கடுமையாக கோபித்துக் கொள்ள முடியாது. அரையன் போர் முறையில் வேகமாக செயலாற்றுபவன். அந்த வேகத்தை வீர இராஜேந்திரன் கற்றுக் கொள்ள வேண்டும். குடகு மலையிலிருந்து மனிஜா வந்து விட்டால் நமக்கு பெரும் பலம். வெகு சீக்கிரத்தில் மானிய கேடயத்தை நாசம் செய்து விடலாம். இது கிடுக்கித் தாக்குதல்.

இரண்டு பக்கமாக வந்து மேலைச் சாளுக்கியத்தை அழித்து வேங்கியை கைப்பற்றுதல்.

வேங்கியிலிருந்து தப்பித்து மானிய கேடயம் வர முடியாது. மானிய கேடயம் தரைமட்டமாகி இருக்கும். வேறு எங்காவது ஓடிப் போய் தலைநகரை ஸ்தாபித்துக் கொள்ள வேண்டியது தான். ஆனால் அவன் திருடன், எங்கு போவான் என்பது எனக்குத் தெரியும்"

"எங்கு போவான்"

"கல்யாணியை நோக்கிப் போவான், அங்கு போய் உட்கார்ந்து கொள்ளுவான். அது ஒரு பெரிய நகரமல்லவா. அதுதான் தன்னுடைய கோட்டை என்று சொல்லிக் கொள்வான். நாம் கைப்பற்றிய இடங்களில் அவன் உள்ளே நுழைந்திருக்கிறான். வடக்கே பல கிராமங்கள் அவனால் கபளீகரம் செய்யப்பட்டு இருக்கின்றன. அதை துடைக்கத் தான் போகிறேன். அதை நீக்க வேண்டும் என்பதற்காகத் தான் நான்



வடமேற்காக பயணம் செய்து பிறகு வடகிழக்காக திரும்புகிறேன்.

சித்ரதுர்கா வழியாக மானிய கேடயம் நோக்கிப் போகிறோம். சித்ரதுர்காவையும் நாசம் செய்கிறோம். ஒரு பட்டணம் கூட மேலைச் சாளுக்கியத்தில் இருக்கக்கூடாது. கிராமங்களை மட்டும் விட்டு விடலாம்"

"எதற்கு கிராமங்களை விடுவது?"

"அங்கிருந்து நல்ல விளை பொருள்கள் வரும். அவைகளுக்கு நாம் தடை செய்து விடக் கூடாது. நம்முடைய கட்டுப்பாட்டிற்கு அந்த இடங்கள் வந்த பிறகு கிராமங்களை உற்சாகப்படுத்தி விளை பொருள்களை பிடுங்கிக் கொள்ள வேண்டியது நம்முடைய வேலை. கிராமங்களை அழிக்கக் கூடாது. நகரங்களை அழித்து விடுங்கள்"

"விமலாதித்தனுக்கு என்ன செய்யப் போகிறீர்கள்?"

"என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்" இராஜேந்திரர் எதிர் கேள்வி கேட்டார்.

"நிச்சயமாக நாளைக்கு கிளம்ப முடியாது. உங்கள் தங்கையை கொண்டவன். உங்கள் வீட்டு மாப்பிள்ளை, அவனுக்கு நீத்தார் கடன் அனுசரிக்க வேண்டியது அவசியம். எனவே நாளை தலை முழுகி விட்டு ஒருபொழுது உணவை துறந்து விட்டு அமைதியாக உட்காருங்கள். நாளை மறுநாள் போகலாம். நாளை மறுநாளும் கிளம்புவதற்கு உண்டான நேரம் மிக நன்றாக இருக்கிறது"

"படைகள் நகர வேண்டுமே"

"அவை நகரட்டும். அவைகளுக்கும், விமலாதித்தனுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீங்கள் தான் உறவு. உங்கள் படைகள் அல்ல. அவைகள் தொடர்ந்து போய் கொண்டிருக்கட்டும்"

பனிச்சென்று வெளிச்சம் வந்த பிறகு தான் இராஜேந்திர சோழர் எழுந்தார். அவர் மனம் கனத்திருந்தது.

"சரி, எதுவரை போயிருக்கிறது" மெய்க்காவல் படையை விசாரித்தார்.

மெய்க்காவல் வெளியே ஓடிப்போய் அங்கிருக்கின்ற ஒற்றர் நாயகத்தை உள்ளே அழைத்து வந்தார்கள்.

நேற்று இரவு கிளம்பி இருக்க வேண்டிய [illegible] வைக்கப்பட்டிருக்கிறார்கள். இரவு நேரப் பயணம் வேண்டாம் என்று [illegible] ஒன்று. நீங்கள் வேறு ஏதேனும் கேட்பீர்களோ என்ற நினைப்பு இன்னொன்று. எனவே நீங்கள் உத்தரவு இட்டால் [illegible]

அவர்கள் கிளம்பத் தயாராக இருக்கிறார்கள்"

"மருத்துவர்கள் போகட்டும். திருவொற்றியூர் போய் திரட்டும். எத்தனை பேர் மருத்துவர்கள்"

"மொத்தம் எழுபது பேர் மருத்துவர்கள் இருக்கிறார்கள். ரண சிகிச்சை தெரிந்தவர்கள் பதினைந்து பேர்கள் இருக்கிறார்கள். ஆறு வண்டிகளில் அவர்களுக்கு உணவும், மருந்தும் தயாராக இருக்கின்றன"

"எனக்கு வலதுகால் வலிக்கிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை" என்று சொல்ல, உள்ளே சிறிது நேரத்தில் ஒரு வைத்தியர் நுழைந்தார். வயிறு தட்டிப் பார்த்தார்.

"கொந்தளிப்பாக இருக்கிறீர்கள். அமிலச் சுரப்பிகள் அதிகம் வேலை செய்கின்றன. உணவு செரிமானம் சரியாக இல்லை. எனவே காலையில் குதிரை ஏற்றமோ அல்லது நடைபயிற்சியோ செய்வது நல்லது. ஒரு பொழுது என்று கேள்விப்பட்டோம். அதுவும் நல்லது. அடிவயிற்றிலிருந்து வெளியேற வேண்டியவை வெளியேறி விட்டால் வாயு உபத்திரவம் குறையும். வாயு உபத்திரவம் குறைந்தால் தொடை வலியும், மூட்டு வலியும் இருக்காது. உடம்பினுடைய கணக்கூடு வைத்துப் பார்த்தால் மலக்கட்டு இருக்குமோ என்று தோன்றுகிறது. எனவே மலம் இறங்குவதற்கு ஒரு மாத்திரை தருகிறேன். அது மட்டுமல்ல காலுக்கு தைலமும் தருகிறேன். இந்தக் கால்வலி காலால் அல்ல. இடுப்பினால், பிருஷ்டத்தினால் என்று தோன்றுகிறது" எனச் சொல்லி.

அவரை கோமணத்தோடு குப்புற படுக்க வைத்து முதுகிலும், இடுப்பிலும், பிருஷ்டத்திலும் தைலங்கள் வேகமாகத் தடவினார். தொடையை உருவி விட்டார். வலி குறைந்தது போல் இருந்தது. மாத்திரை உடனடியாக வேலை செய்தது.

மாமன்னர் இராஜேந்திரர் பின்பக்கம் போய் வந்தார். முகம் துடைத்துக் கொண்டார்.

"நீங்கள் தலைக்கு குளிக்க வேண்டும். வெந்நீர் தயாராக இருக்கிறது" என்று முற்றத்தில் உட்கார வைத்து மனைவியர் தலைக்கு நீர் ஊற்றினார்கள். சீகைக்காய் தடவினார்கள். உடம்பு முழுவதும் தடவினார்கள். மாறி மாறி நீர் கொட்டி சகலமும் அலசி அவரை பூப்போல எழுப்பி வைத்தார்கள்.

அவர்கள் சந்தனம் தடவினார்கள். நெற்றிக்கு திருநீறு



கொடுத்தார்கள்.

வயிறு இளகியதுமே வலி சரியாகி விட்டது. பசித்தது. ஆனால் உணவு உண்ணாமல் வெறுமே அவர் கிழக்கு பார்த்து உட்கார்ந்திருந்தார். பஞ்சாட்சர ஜபம் செய்தார்.

"நமச்சிவாய நமச்சிவாய நமச்சிவாய" என்று இடைவிடாது ஜபம் செய்தார்.

"குந்தவையை பார்க்கப் போக வேண்டாமா"

"வேண்டாம்" என்று சொல்ல.

"இல்லை. அது முறையில்லை. போய் குந்தவையை பார்த்து விட்டு வாருங்கள்" என்று சொல்ல, மேல் துண்டை போட்டுக் கொண்டு நிதானமாக குந்தவையை நோக்கி நடந்தார்.

குந்தவை வெளியே வந்தாள்.

"மோசம் போய் விட்டேன் அண்ணா. மோசம் போய் விட்டேன்" என்று சொல்ல, குந்தவையை உற்றுப் பார்த்தார்.

"மோசம் போகவில்லை. மோசம் செய்து கொண்டாய். அவனை கொன்றது நீ. மனம் நொந்து இறந்திருக்கிறான். வைத்தியத்திற்கு ஆளின்றி இறந்திருக்கிறான். சரியாக கவனிப்பார் இன்றி இறந்திருக்கிறான். ஒரு மனைவியாக நீ செய்ய வேண்டிய கடமையை செய்யவில்லை. இதற்குண்டான பலனை இந்த வாழ்க்கையில் நீ நிச்சயம் அனுபவிப்பாய். உன்னை துக்கம் விசாரிக்க வந்து விட்டு இவ்வளவு கடுமையாகப் பேசுகிறேன் என்று நினைக்காதே. என் தங்கை என்று நினைக்கவே அருவருப்பாக இருக்கிறது. சாதாரண மனுஷத்துவம் கூட இல்லாத பேயாக நீ இருக்கிறாய். விமலாதித்தனுடைய சோகம் உன்னை சும்மா விடாது. அது நிச்சயம் உனக்கு தொந்தரவு தரும்" என்று சொல்லி விட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

"நன்றாக இருக்கிறது நீங்கள் துக்கம் கேட்ட லட்சணம்" பரவையார் கடிந்து கொள்ள, அவருக்கு பதில் சொல்லாமல் அந்த அரண்மனையை விட்டு வெளியே வந்தார். தன் அரண்மனைக்குள் நுழைந்தார்.

மறுபடியும் கிழக்கு முகமாக உட்கார்ந்து நமச்சிவாய ஜபம் சொல்ல ஆரம்பித்தார்.

மதியத்திற்கு மேல் கஞ்சியும், துவையலும் [illegible] எடுத்துக் கொண்டார். அதில் ஒரு அலுப்பு இருந்தது. [illegible] ஒரு சோர்வு இருந்தது. போருக்கு கிளம்புவதற்கு உண்டான

உத்வேகம் இல்லாது இருந்தது. என்ன செய்வது என்று நினைத்தார். யாரோடு பேசினால் சரியாக வரும் என்று நினைக்க, அவருக்கு வீர இராஜேந்திரன் ஞாபகம் வந்தது. தன்னுடைய மூன்றாவது பிள்ளையான வீர இராஜேந்திரனை ஆள் அனுப்பி வரவழைத்தார்.

வாசல் பக்கம் பதினெட்டு வயது இளைஞன் நெஞ்சில் லேசான முடியும், முகத்தில் மெல்லிய அரும்பு மீசையுமாய் சிரித்தபடி அவர் எதிரே வந்து நின்றான். விழுந்து வணங்கினான். கால்களை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

"அழைத்தீர்களாமே அப்பா. என்ன விஷயம் சொல்லுங்கள்" கைகட்டி நின்று கொண்டான்.

அவர் எதிரே உள்ள ஆசனத்தை காட்டினார்.

"வேண்டாமப்பா நிற்கிறேன்"

"பரவாயில்லை உட்கார். உன்னோடு மனம் விட்டு பேச வேண்டும் போல் தோன்றியது. அதனால் தான் அழைத்தேன்"

"சொல்லுங்கள் அப்பா. கேட்க தயாராக இருக்கிறேன்"

"கிட்டத்தட்ட விமலாதித்தனுடைய மகன் விஷ்ணுவர்தன விஜயாதித்தனுக்கும், நம்முடைய குந்தவைக்கு பிறந்த இராஜராஜ நரேந்திரனுக்கும் உன்னுடைய வயது தான். ஆனால் உன் முகத்தில் இருக்கின்ற பொலிவு, களை, உன் உடம்பில் இருக்கின்ற கம்பீரம் அவர்களிடம் இல்லை. இராஜராஜ நரேந்திரனிடம் சுத்தமாக இல்லை. அவன் சோர்வாக இருக்கிறான். நீதான் அவனை அழைத்துக் கொள்ள வேண்டும். நீதான் அவனை உற்சாகப் படுத்த வேண்டும். நீதான் அவனுக்கு தந்திரங்கள் சொல்லித் தரவேண்டும். நீதான் அவனுக்கு உற்ற தோழனாக இருக்க வேண்டும். இன்றோடு முடிந்து போகிற கதையல்ல.

நான் அவனை அரியணையில் வைத்து விட்டாலும் மறுபடியும் மேலைச் சாளுக்கியத்தின் தொந்தரவு இருக்கத் தான் செய்யும். அதைத் துடைக்க உன் தமையன் இராஜ இராஜித்தனும் உன்னுடைய அண்ணன் இளவல் இராஜேந்திரனும் நீயும் ஒன்றாக முயற்சி செய்து தொடர்ந்து உதவிகள் செய்ய வேண்டும். அவனுக்கு மற்றவர்களைக் கண்டால் கொஞ்சம் பயம். வயதானவர்கள் என்ற மரியாதை உண்டு. உன்னோடு இயல்பாக இருப்பான் என்று நினைக்கிறேன். எனவே இராஜராஜ நரேந்திரனை அரவணைத்துக் கொண்டு அவனுக்கு உற்சாகமூட்டி அவனோடு படைக்கு போவதற்குண்டான ஏற்பாடுகள்



செய்யலாம். இன்றே கிளம்ப வேண்டி இருந்தது. ஒரு நாள் தள்ளிப் போடப்பட்டு நாளை கிளம்புகிறது. இந்த தகவலை நீயே போய் இராஜராஜ நரேந்திரனிடம் சொல்லி அவனை தயார் செய்.

எப்படி குதிரை ஓட்டுகிறான் என்று கவனி. நெடுந்தூரம் தாங்குவானா என்று பார். தேரில் வந்திருக்கிறான். தேரில் போகலாம் என்று நினைத்திருப்பான். இல்லை. தேரில் அவன் ஏறக் கூடாது. தனி குதிரையில் அதுவும் ஆண் குதிரையில் அவன் ஏற வேண்டும். அதை அடக்கி ஆள பழக வேண்டும். மிகக் கம்பீரமான குதிரை அவனுக்கு தரப்படும்.

எனவே அதை ஓட்டுகின்ற தெளிவும், திடமும், பயமற்ற தன்மையும் இருக்க வேண்டும். இதை அவனிடம் சொல்லி விடு.

இன்று ஒரு நாளில் அவன் அந்த குதிரையோடு நல்ல சம்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளட்டும். பிறகு தொடர்ந்து அந்த குதிரை ஓட்டி வர வேங்கி தேசம் போவதற்குள் அந்த குதிரை நன்கு பழக்கப்பட்டு விடும். கம்பீரமான குதிரையில் அவன் வந்தால் கீழைச் சாளுக்கிய மக்கள் சந்தோஷமடைவார்கள். அரசனுக்கு தோற்றம் முக்கியம். அந்த தோற்றத்தை தயவு செய்து நீ அவனுக்கு ஏற்படுத்து" என்று சொன்னார்.

"என்ன இது. தயவுசெய்து என்று சொல்லிக் கொண்டு. கட்டளை இடுங்கள்"

"இது கட்டளை இட்டு வராது. ஒரு சகோதரனைப் போன்றவனை, மருமகனை நாம் அரவணைத்துப் போக வேண்டும். நான் விமலாதித்தனை அப்படித்தான் அரவணைத்தேன். அது போல இந்த வேலை உன்னிடம் தருகிறேன். இது தவிர உன்னிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும்"

"என்ன?"

"இராஜராஜ நரேந்திரனுக்கு திருமணம் செய்ய வேண்டும்"

"ஆஹா, செய்து விடலாமே"

"யார் மனைவி என்று நினைக்கிறாய்"

"என்னையா கேட்கிறீர்கள்? எனக்கு எப்படித் தெரியும்?"

"உனக்கு ஆள் தெரியும் என்று கேட்டேன். இந்த நேரம் உனக்கு தெரிந்திருக்க வேண்டும், யார் அவனுக்கு மனைவியாக இருந்தால் நல்லது"

"என்னுடைய அக்காள், அம்மங்கை தேவி என்று நீங்கள் மனதில் நினைத்திருக்கிறீர்கள். அது எனக்கு புரிகிறது. எனக்கும்

அது சம்மதமே"

"இந்த உறவு ஏற்படுத்திக் கொண்டால் தான் நமது தேசம் பாதுகாப்பாக இருக்கும்"

"அம்மங்கா தேவிக்கு அவனைப் பிடிக்குமா?"

"சோழ ராஜ்ய வம்சத்தில் பிறந்து விட்டால், பிடித்த கணவன் என்று எந்த இளவரசியும் நினைத்துக் கொள்ள முடியாது. தான் விரும்புகின்ற இளவரசன் என்று எந்த இளவரசியும் கற்பனை செய்து விட முடியாது. அரசியல் காரணமாக நடக்கின்ற திருமணங்கள் சில சமயம் நரபலியாகவும் நடந்து விடும். குந்தவையினுடைய திருமணம் நரபலி. ஆனால் பலி ஆனது விமலாதித்தன்.

இந்தத் திருமணம் அவ்விதம் இருக்காது. அம்மங்கை மிகவும் கெட்டிக்காரி. அந்தை குந்தவையால் வளர்க்கப்பட்டவள். வீரமாதேவியால் போற்றப்பட்டவள். அவளுக்கு தெளிவு கனிவுகள் பலதும் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். பரவை நாச்சியார் உடுத்த சுற்றுக் கொடுத்திருக்கிறார்.

எனவே அம்மங்கை பொருத்தமுடையவள். அம்மங்கைக்கு இராஜராஜ நரேந்திரன் கொஞ்சம் குறைவோ என்று தோன்றுகிறது. அவளுக்கு அம்மங்கையை வைத்து சீராட்ட முடியுமா என்ற பயம் இருக்கிறது. ஆனால் அவன் நல்லவன், என்ன சொல்கிறாய்?"

"இது அரசியல் எனில் சரி. என் சகோதரி எனும் போது கொஞ்சம் வருத்தம். அந்தை பாட்டி குந்தவையாருக்கு வந்தியத்தேவர் கிடைத்தது போல, நம் வீட்டு பெண்களுக்கு கிடைக்கவில்லை"



# 19

பிராம்மியம் கடும்பூரி அறுபடி, வரசாறறிதி ஆறுபடி, கோமுத்ராறறிதி ஐந்துபடி, தாழமாறறிதி பத்துபடி, பல்லாதிக எழுபடி அத்தீரம் பதினைந்து படி.



மரப்பட்டைகளால் செய்யப்பட்ட இறுக்கமாக வைத்து சிறிய ஆணிகளால் அடிக்கப்பட்ட திருகு மூடிகள் உடைய வட்ட வடிவமான மரப் பெட்டிகளுக்குள் இருந்த மருந்துகள் சொல்ல சொல்ல ஓரமாக எடுத்து வைக்கப்பட்டன.

பால கோரண்ட தைலம் ஆறுதுாணி.

"இந்த தைலம் எதற்கப்பா" ஒரு பதினைந்து வயது சிறுவன் தனது தந்தையைப் பார்த்து கேட்க, தைலத்தை தொட்டு அவன் மூக்கருகே நீட்டுகிறார். நெடி மண்டையில் ஏறுகிறது. அவன் பின் வாங்கினான்.

"உட்கார்ந்து காலை நீட்டு" என்று சொல்ல,

அவன் உட்கார்ந்து அப்பாவின் எதிரே காலை நீட்டினான். உள்ளங்காலில் வைத்து வேகமாகத் தடவி கணுக்காலிலும் தடவினார்.

மனுஷனாகப் பிறந்த அத்தனை பேருக்கும் அவயத்தில் காலுக்குத் தான் வேலை அதிகம். ஒன்று நிற்க வேண்டும். இல்லை நடக்க வேண்டும். எந்நேரமும் உட்கார்ந்திருப்பது கிழவர்களுக்குத் தான் முடியும். நமக்கு முடியாது. கால்வலிக்கு மருந்து வேண்டாமா. உனக்கு கால் வலிக்கிறது இல்லையா. கணுக்காலில் வலி இருக்கிறது இல்லையா பார். அரை நாழிகையில் வலி ஓடிப்போய் விடும்"

"ஆனால் தைலம் எல்லாம் கல்சட்டியாக இருக்கிறதே. எல்லாவற்றையும் எப்படி ஜாக்கிரதையாக கொண்டு போவது"

"வைக்கோல் சுத்தணும்டா. அதுக்குத் தான் உன்னை அழைத்து வந்தது"

கயிறு போல உறுதியாக திரிக்கப்பட்ட வைக்கோல் பிரி மேல் மெல்ல அந்த கல்சட்டிகள் சுற்றப்பட்டது. அந்த கல்சட்டிகளுக்கும் மரத்தாலான மூடி இருந்தது. அந்த மூடியிலிருந்து எண்ணெய் சிந்தாமல் இருக்க அதற்கு மேல் இன்னொரு மூடி இருந்தது. அந்த மூடியும் அசையாது இருக்க துணி வைத்து கட்டப்பட்டிருந்தது.

பெரிய கூடம் போல அமைந்துள்ள அந்த வீட்டின் வாசலில் ஒரு சிறு தேர் வந்து நின்றது. தேரோட்டி முன்னே அமர்ந்திருக்க பின்னே நின்றபடி வந்த உத்தமசோழ [illegible] இறங்கினார். அவருக்கு அறுபது வயது இருக்கும். இராஜராஜன் காலத்தில் படைத் தளபதி. பல போர்கள் பார்த்தவர். உடம்பு முழுவதும் விழுப்புண் கொண்டவர். அவருடைய விழுப்புண்களாலேயே அவருக்கு இரவுத் தூக்கம் இல்லாது போயிற்று. வெட்டுப்பட்ட இடங்களெல்லாம்

திடம்பாக மாறியிருந்தும் உள்ளே வலி இருந்தது. கை, கால் குடைச்சல் இருந்தது. எனவே அடிக்கடி மருத்துவர்களுடைய உதவியை அவர் நாட வேண்டி இருந்தது. மருத்துவர்களுடைய பழகி மருந்துகள் பற்றிய தெளிவும் அவருக்கு இருந்தது. மருத்துவர்களோடு பழகி உடம்பு சரியில்லை என்றால் உத்தம சோழ மிலாடுடையாரை ஒரு வார்த்தை கேட்டுக் கொள்வார்கள். யாருக்கேனும்

சோழ சேனாதிபதிகள் எப்பொழுதுமே தனித்து செயலாற்ற மாட்டார்கள். வந்தியத்தேவரும், அருள்மொழியும் இணைந்து செயலாற்றுவது போல பரமன் மழபாடியாருக்கு துணையாக அரையன் இராஜராஜன் இருப்பது போல, உத்தம சோழ மிலாடுடையாருக்கு துணையாக இராஜராஜ பிரம்மராயன் என்கிற தளபதியும் துணை இருந்தான்.

இராஜராஜ பிரம்மராயன் திருவெண்காடை சேர்ந்தவன். கடலோடிகளுடன் மிகச் சிறந்த தொடர்புடையவன். மிகச் சிறந்த நிர்வாகி. அந்தணராக பதினாறு வயது வரை நான்கு வேதமும் படித்து வளர்ந்து பதினாறு வயதுக்கு மேல் போருக்கு போக வேண்டும் என்று ஆசைப்பட்டு 'அடிப்படை பயிற்சிகளை கற்றுக் கொள்' என்று தகப்பனார் சொன்னதால் பூம்புகாருக்கு அருகே உள்ள கடிகையில் வாள் பயிற்சியும், வேல் எறிதலும் கற்றுக் கொண்டான். வில் வளைத்து அம்பு தொடுப்பது அவனுக்கு எளிதாக வரவில்லை. எதை முக்கிய பாடமாக கற்றுக் கொள்வது என்று மூன்றாவது வருடம், அவன் தீர்மானிக்க வேண்டி இருந்தது. அப்பொழுது யாரைப் போல கற்று கொள்ளலாம் என்று விவாதித்தபொழுது உத்தமசோழ மிலாடுடையார் மிக நீண்ட கத்தியை இடுப்பில் வைக்காமல் முதுகின் பின்பக்கம் சொருகி வைத்துக் கொள்வார் என்றும், இரண்டு கைகளாலும் ஒரே வீச்சில் கத்தியை எடுத்து நாலாபுறமும் வீசுவார் என்றும் சொல்லப்பட்டது.

சீனர்கள் அப்படிப்பட்ட கத்தியை உபயோகிப்பார்கள் என்று தெரிந்து நாகை புத்த விகாரத்தில் புத்த பிட்சுக்களால் அப்படிப்பட்ட கத்தி ஒன்று செய்யச் சொல்லி, அவர்கள் உருவாக்கி கொடுத்த கத்தியை முதுகில் தரித்தான்.

நாகை புத்த பிட்சுக்கள் எல்லா விஷயங்களிலும் மிக கெட்டிக்காரர்களாக இருந்தார்கள். மருத்துவம் செய்வதிலும், சிலைகள் செய்வதிலும், ஆயுதங்கள் செய்வதிலும், படகுகள் விடுவதிலும், உணவு சமைப்பதிலும் மிக உத்தமமானவர்களாக



இருந்தார்கள். அவர்களை அண்டி மரியாதையாகக் கேட்டால் செய்து கொடுப்பார்கள். விகாரத்துக்கு ஏதேனும் நன்கொடை வேண்டும் என்று கேட்பார்கள். நன்கொடை கொடுத்து விட்டால் அந்த நன்கொடைக்கு ஏற்ப மிகச் சிறந்த விஷயங்கள் அவர்களிடமிருந்து வரும். தன் விளை நிலத்தை விற்று பெரும் பொருள் திரட்டி நாகை விகாரத்துக்குப் போய் இவ்வளவு தான் என்னிடம் இருக்கிறது என்று சொன்னவுடன், அவர்கள் ஒரு குறுவாளும், ஒரு நீண்ட வாளும் செய்து கொடுத்தார்கள்.

நான்காவது வருட படிப்பு முடிந்து இராஜராஜ பிரம்மராயன் உத்தம சோழ மிலாடுடையார் அருகே வந்து வணங்கினான். அவன் முதுகிலும் நீண்ட கத்தி இருப்பது பார்த்து அவர் வியந்தார்.

"என்ன இது எங்கே செய்தாய்?" என்று கேட்டார்.

"உங்களை பின்பற்றினேன். உங்களை முன் மாதிரியாக வைத்துக் கொண்டு இந்த கத்தியை நாகை விகாரத்தில் செய்தேன்" என்று சொல்ல,

"சுழட்டி காட்டு" என்று அவர் உத்தரவிட்டார். அவன் சட்டென்று பின்னடைந்து கத்தியை முதுகிலிருந்து வேகமாக உருவி, உருவிய வேகத்திலேயே எதிரே இருப்பவன் தலையை கொய்வது போல கத்தியை வீசி, நாலாபுறமும் சுழட்டி, மறுபடியும் அதே வேகத்தில் உறைக்குள் வாளை சொருகினான். குனிந்து வணங்கினான்.

"அற்புதம், மிகச் சரியாக இருக்கிறாய். அந்தணனாக இருந்து கொண்டு இவ்வளவு வேகமாக வேலை செய்வது என்பது ஆச்சரியமாக இருக்கிறது. உனக்கு இது என்ன என்று தெரியுமா?" ஒரு மரக்கட்டையை தூக்கிப் போட்டார்.

பட்டையாக இருந்த மரக்கட்டையில் ஒரு வளைவு இருந்தது.

"தெரியும். இது பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்"

"என்ன அது?"

"இது வளை எறி. இதை வளை எறிந்து [illegible] சாகசங்கள் செய்கிறார்கள். உயிரே இருக்கிற [illegible] அடித்து கொன்று விடுகிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்"

"நல்லது. இதிலேயும் பயிற்சி எடுத்துக் கொள். உனக்கு மூன்று வளை எறிகள் தருகிறேன். அவற்றை எப்போதும் [illegible]

www.palsuvainovel.com

போய் வீசி வீசி பழகு. முதலில் வானத்தை நோக்கி வீசு, எவ்வளவு தூரம் வீச முடிகிறது என்று கைகளுக்கு பயிற்சி கொடு. பிறகு, குறி பார்த்து வீசக் கற்றுக் கொள் என்று சொன்னார்"

"நான் உங்களோடு இருக்க விரும்புகின்றேன்" என்று கேட்க அவர் யோசித்து சொல்வதாக பதில் சொன்னார்.

அவன் மிக மரியாதையாக வணங்கினான்.

உத்தம சோழ மிலாடுடையார் கிருஷ்ணன் ராமனை சந்தித்து அந்தப் பையனைப் பற்றி கேட்க.

"நானும் அந்தப் பையனைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். வா, வா என்று அழைத்தால் ஒரு அந்தணன் சரியாக வர மாட்டான். தானாக வருகின்ற அந்தணன் தான் தெளிவாக இருப்பான். எனவே அந்தப் பையனை நீங்கள் ஊக்குவிக்கலாம். எந்த கெடுதலும் வராது"

"சில சமயம் அந்தணர்கள் அந்து மீறுவார்கள். இவன் மீறி விடுவானோ என்ற பயம் எனக்கு இருக்கிறது. அதுவும் அந்தணனாக இருப்பதால் இருக்கிறது"

"அப்படியானால் ஒன்று செய்யுங்கள். அவனை என்னிடம் அனுப்புங்கள். நான் அந்த பையனிடம் ஒரு வாக்கு வாங்கிக் கொண்டு உங்களிடம் அனுப்புகிறேன்"

கிருஷ்ணன் ராமனை இராஜராஜ பிரம்மராயன் சந்தித்தான்.

"மன்னர் இராஜராஜர் மீது உண்டான அன்பினால் உன் தகப்பன் உனக்கு அந்த பெயர் வைத்து விட்டார் போலிருக்கிறது. அந்த பெயர் வைத்ததாலேயே நீ வாள் பிடித்து விட்டாய், நல்லது. உத்தம சோழ மிலாடுடையார் மிக அற்புதமான மனிதர். எப்பொழுதும் உண்மை பேசுபவர்.

மறவர்களுக்கு ஒரு குணம் உண்டு. ஒரு சின்ன சந்தேகம் வந்தால் கூட அதை பெரிதாக்கி பயப்படுவார்கள். அதற்கு சத்தியம் செய்து கொடு. ஒருக்காலும் உம்மை மீற மாட்டேன். உங்களுக்கு கீழ்படிந்து இருப்பேன் என்று சத்தியம் செய்து கொடு. உத்தம சோழ மிலாடுடையார் சகலமும் கற்றுத் தருவார்.

உனக்கு முப்பது வயது. அவருக்கு அறுபது வயது. கற்றுக் கொள்ள நிறைய இருக்கிறது. வளை எறிதல் மட்டுமல்ல,



நீர் கண்டுபிடிப்பதிலும் அவர் வல்லவர். எந்த இடத்தில் நீர் இருக்கிறது என்று அவர் குச்சியை வைத்துக் கொண்டு எளிதாக கண்டுபிடிப்பார். அவருக்கு விசுவாசமாக இருந்து பிழைத்துக் கொள். இப்பொழுது மன்னனாக இருக்கின்ற இராஜேந்திரருக்கு வைதீகமான அந்தணர்கள் பிடிப்பதில்லை. அதைவிட தொண்டை தேசத்து அந்தணர்களை மிகவும் விரும்புகிறார். இப்படி போருக்கு தயாராக இருக்கிற அந்தணன் என்றால் இழுத்து அணைத்துக் கொள்வார்.

எனவே உத்தம சோழ மிலாடுடையாரிடம் சேர்ந்து கொள்" அவன் கீழ் இறங்கினான்.

"நில்" என்று உத்தரவிட்டார்.

"இதுவரை கொலை செய்திருக்கிறாயா?"

"இல்லை" என்று அவன் சொன்னான்.

"விரைவில் கொலை செய்யப் பழகு. வெட்டிக் கொல்லப் பழகு. முதல் கொலை மிகவும் கஷ்டமாக இருக்கும். பிறகு மெல்ல மெல்ல அது பழக்கமாகி விடும்"

அவனுடைய முதல் போரே இராஜேந்திரருடைய மகன் இராஜாதி ராஜன் தலைமையில் கேரளத்தை நோக்கி போவதாக இருந்தது.

கேரளத்தில் காந்தளூர் சாலைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். காவிரி பூம்பட்டினத்தில் உள்ள கீழ்ச் சாலையில் கேரளச் சாலைப் பற்றி மிக பெரிதாக பேசுவார்கள். அந்த நம்பூதிரிகள் எப்படி எல்லாம் அதட்டுவார்கள் என்று சொல்வார்கள். காலில் விழுந்து வணங்கத் தான் வேண்டும். எழுந்திரு என்று சொன்னால் தான் எழுந்திருக்க வேண்டும். கடுமணலில் படுக்க வைப்பார்கள் என்றெல்லாம் சொல்லி இருக்க, அவனுக்கு அந்த சாலையின் (போர் பயிற்சி கல்லூரி) மீது ஒரு வெறுப்பு இருந்தது.

இரவு நேரம் உத்தமசோழ மிலாடுடையார் ஒரு கூடாரம் கட்டி ஒரு மரத்தடியில் படுத்திருந்த பொழுது, காந்தளூர் சாலையில் இருந்து அந்த கூடாரத்திற்கு அறுபது இளைஞர்கள் வந்து நெருப்பு வைத்தார்கள். எல்லோரும் சுற்றி சுற்றி வந்து தாக்கினார்கள்.

அவன் சரட்டென்று படுக்கையோடு மிலாடுடையாரை வெளியே எடுத்து வந்து கூடாரத்தை தரையில் சாய்த்தான். மெல்ல

அவரை அணைத்துக் கொண்டு புதர் பக்கம் போனான். இரண்டு பேரும் வேகமாக ஆயுதங்களை அணிந்து கொண்டார்கள். கவசம் தரித்துக் கொண்டார்கள். என்ன நடக்கிறது என்று பார்த்தார்கள். அவர்கள் சுற்றி வளைக்கப் பட்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் 'இந்த இரண்டு இடத்தை அறுத்து விடுவோம்' என்று அவனுக்கு பின்புறம் உள்ள இடத்தை காட்டினார். பதுங்கி நடந்தார்.

அரைக்கால் நாழிகையில் அவர்கள் அந்த சக்கரத்தை உடைத்தார்கள். எழுந்து நின்று எகிறி மேலே விழுந்து கைகளால் முகத்தில் குத்த முற்பட்ட ஒரு நம்பூதிரியை பளிச்சென்று விலக்கினான். கீழே கிடந்த நம்பூதிரியின் கத்தியை உருவி கூசாமல் நெஞ்சுக்குள் இறக்கினான். திருகினான். இரத்தம் முகத்தில் அடித்தது. காலை முகத்தில் ஊன்றி கத்தியை உருவினான். அடுத்தபடியாக பின்பக்கம் வந்தவனை அடித்து வீழ்த்தினான். ஓங்கி, ஓங்கி, ஓங்கி, வீசி, வீசி பல நம்பூதிரிகளின் வாளையும், கைகளையும், கால்களையும் வெட்டினான். வெறி பிடித்தவன் போல தாக்கினான். வெட்ட, வெட்ட இன்னும் வெட்ட வேண்டும் போல ஆசை இருந்தது.

அவனுடைய வேகம் கண்டு உத்தம சோழ மிலாடுடையார் திகைத்தார். "அடப்பாவி, அந்தணனா நீ. ஆடு அறுப்பது போல அறுக்கிறாயடா" என்று பாராட்டினார். இறுக தழுவினார்.

விடியற்காலையில் இராஜாதிராஜன் தலைமையில் மொத்த படையும் காந்தளூர் சாலை நோக்கி ஓடிப்போய் அதை அங்கே ஒரு மூங்கில்கூட நிற்கவொட்டாது எரியூட்டியது. நம்பூதிரிகளை வரிசையாக நிற்க வைத்து விஷ அம்பு தொடுத்து கொன்றார்கள். இரண்டு நாட்கள் தங்கி இருந்தார்கள். மெல்ல பின் வாங்கினார்கள். அங்கங்கே ஆள் வைத்து வந்தார்கள். பின்வாங்கிய மறுநாளே மறுபடியும் ஓடி ஒளிந்த நம்பூதிரி கூட்டம் அங்கு வந்து சேர்ந்தது என்று தெரிந்ததும் மீண்டும் ஒரே வேகத்தில் படை எடுத்தார்கள்.

அவர்களது வருகையை நம்பூதிரிகள் எதிர்பார்க்கவில்லை. அடித்து நொறுக்கினார்கள்.

"எங்கே ஒளிந்து கொள்வாய், ஒளிந்து கொண்டால் விடுவோமா" என்று பிரம்பால் அடித்தார்கள். பலபேரை கழுத்தில் சுருக்கிட்டு கொன்றார்கள். எல்லோரையும் பின் கையை கட்டி கழுத்தை வெட்டி



கொன்றார்கள்.

இராஜாதிராஜன் அவனை மெச்சி புதிய கேயூரம் அளித்தான். உபதளபதியிலிருந்து தளபதி என்று மாற்றினான். இராஜேந்திர சோழனுக்கும் அவனைப் பற்றிச் சொன்னான்.

வலங்கை வீரர்கள் ஆயிரம் பேரை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குதிரை ஏற்றம் சொல்லிக் கொடுத்து அவன் வைத்திருப்பது போலவே நீண்ட வாளை முதுகிற்கு பின் கட்டச் சொல்லி எல்லோர் கையிலும் வளைஎறி கொடுத்து தனித்த ஒரு படையை அவன் உருவாக்கினான். பல்வேறு சாகசங்களை இராஜேந்திரர் முன்பு அவர்கள் செய்து காட்டினார்கள்.

"பரமன் மழபாடி, வந்தியத் தேவர் போன்றவர்களை எல்லாம் விரட்டி விட்டு என்னைச் சுற்றி பிரம்மராயர்கள் உட்கார்ந்தால் மிகவும் சந்தோஷமடைவேன்" என்று இராஜேந்திரர் வேடிக்கையாகச் சொல்ல, எல்லோரும் வாய் விட்டுச் சிரித்தார்கள்.

"அவ்வளவு தானே நான் இனிமேல் மழபாடி பிரம்மராயன்" என்று அந்த கிழவர் வாய் திறந்து சொல்ல, மறுபடியும் எல்லோரும் எகிறி சிரித்தார்கள்.

"பூணூல் போட்டுக் கொள்ளலாம் என்று கம்மாளர்களுக்கு கொடுத்து விட்டீர்கள். எனவே நான் பூணூல் போட்டுக் கொள்ளக் கூடாதா. நானும் போட்டுக் கொள்ளப் போகிறேன்" என்று அவர் எழுந்து நின்றார்.

எல்லோரும் அவர் தோள் பிடித்து உட்கார வைத்தார்கள். "உயர்வு பூணூல் அணிந்து கொள்வதில் இல்லை. ஒரு படையில் புதியதாக ஒரு ஆயுதம். அதை தான் மட்டும் உபயோகப்படுத்தாமல் ஆயிரம் பேருக்கு கற்றுக் கொடுத்து அந்த ஆயிரம் பேரையும் ஒரு படை ஆக்கி வளைஎறி கொடுத்து ஒரு புதிய வேகத்தை நம்முடைய சேனைக்கு இராஜராஜ பிரம்மராயன் செய்திருக்கிறான். இது தான் சாமர்த்தியம், இது தான் புதிய முயற்சி. இது தான் விவேகம். இந்த விவேகத்திற்குத் தான் நான் பிரம்மராயர்கள் வேண்டும் என்று சொல்கிறேன்.

நான் சீற்றம் அடைந்தாலும் நமது அருண்மொழி பதறுவதில்லை. என்னை எதிர்த்து திடமாக நிற்பான். அப்படி இருப்பவரை நான்

விரும்புகின்றேன். இராஜராஜ பிரம்மராயனுக்கு தனித்த விடுதி, மெய்க்காவல் படையும், தங்கக் கேயூரங்களும், முத்திரை மோதிரமும், பிரம்பினால் அடித்து தண்டனை கொடுக்கக் கூடிய உரிமையும், அரசாங்க பணத்தில் இருந்து ஐம்பது கழஞ்சுகள் வரை எடுத்து அவசரத்திற்கு செலவு செய்து கொள்ளவும், அனுமதி இன்றி புதிய குதிரைகள் நூறு வாங்கவும் நான் உரிமை அளிக்கிறேன்.

என் தந்தையின் பெயர் கொண்டிருப்பதால் இராஜராஜ இங்கு வா என்று அழைப்பது எனக்கு சிரமமாக இருக்கும். எனவே திருவெண்காட்டு நம்பி என அழைப்பேன். நம்பி என்னை நம்பி வரவேண்டும்" என்று சொல்ல, மறுபடியும் சபை சிரித்தது.

"திருவெண்காட்டு நம்பி வாழ்க" என்று உரக்க குரல் எழுந்தது. அவன் இராஜேந்திரருக்கு மட்டும் திருவெண்காட்டு நம்பி ஆனான். மற்றபடிக்கு எல்லோரும் அவனை இராஜராஜ பிரம்மராயன் என்றுதான் அழைத்தார்கள்.

உத்தம சோழ மிலாடுடையாருக்கு மருத்துவம் செய்ய முயற்சி செய்து அவனும் பல மருந்துகள் பேரை கற்றான். உடல் வலிக்காமல் இருப்பதற்கு என்ன உட்கொள்ள வேண்டும். என்ன தடவ வேண்டும் என்று தெரிந்து கொண்டான். மிலாடுடையாரை சோமனம் மட்டும் கட்டச் சொல்லி கால்களில் தைலம் தடவி, வேகமாக உருவிவிட அவர் அயர்ந்து தூங்குவார். மிலாடுடையாரின் கால்வலி பாதிக்கும் மேல் குறைந்ததற்கு இராஜராஜ பிரம்மராயனே காரணம்.

அந்த அன்பு மிலாடுடையாரின் ஒவ்வொரு பேச்சிலும் தெறிக்கும் "தற்கொலை செய்து கொள்ளலாமா என்ற அளவுக்கு கால்வலி இருந்தது. நல்லவேளை இந்த பிள்ளையாண்டான் காப்பாற்றி விட்டான். அந்தணன், காலைத் தொடுகிறானே என்று கூச்சம் இருந்தது. கண்மூடி படுத்திருக்கும் போது காலைத் தொடுவது அந்தணன் அல்ல. என் பிள்ளை. என் பிள்ளை என்று ஒரு பாசமே இவன் மீது வந்து விட்டது" என்று கண்களில் நீர் துளிக்கச் சொல்வார்.

இராஜராஜ பிரம்மராயன் கைகட்டி அமைதியாக நிற்பான். "நான் செத்துப் போனபிறகு என்னுடைய இடத்திற்கு இவன் தான் வர வேண்டும். அந்தப் பதவியை இவன் தான் வகிக்க வேண்டும்.



இது என்னுடைய ஆசை. இதை நான் இராஜேந்திரரிடம் சொல்லப் போகிறேன்" என்று ஒருமுறைச் சொல்ல, "வேண்டாமய்யா, நாம் இரண்டு பேரும் ஒன்றாக செத்துப் போவோம்" என்று இராஜராஜ பிரம்மராயன் சொல்ல, சுற்றி இருந்தவர்கள் திகைத்தார்கள்.

"என்னடா, முப்பது அகவை தானே, சாவு பற்றி இப்போது என்ன பேச்சு" என்று ஆதுரத்தோடு குழறினார்.

"நீங்கள் பிள்ளை என்று என்னை சொன்னீர்கள் அல்லவா. அந்த கணம் முதற்கொண்டு உங்களை தகப்பனாக நான் வரித்து விட்டேன். என் தகப்பனாரின் முகமே எனக்கு மறந்து போயிற்று. அவரும் என்னை தண்ணீர் தெளித்து விட்டு விட்டார். என் மனைவி என்னோடு வர மாட்டேன், என் பிள்ளை வைதீகத்திற்குத் தான் என்று சொல்லி விட்டாள். தஞ்சையில் வந்து குடித்தனம் செய்வது அவளுக்கு பயமாக இருக்கிறதாம். ஒரு கிராமத்தின் அமைதி தஞ்சையில் கிடையாதாம். எனவே வர மறுக்கிறாள். இது எனக்கும் நிம்மதியாகப் போயிற்று"

இராஜராஜ பிரம்மராயன் கொஞ்சம் கவலை தோய்ந்த குரலில் பேசினான்.

"அதனால் என்ன, இப்போது தான் கிளி மாதிரி கிடைத்திருக்கிறாளேடா" என்று வாய் திறந்து அவன் மனைவியை பாராட்டினார்.

பிரகதீஸ்வரர் கோவிலில் நடனமாடிக் கொண்டிருந்த சோழகுல சுந்தரியை அவன் திருமணம் செய்து கொண்டான். சோழகுல சுந்தரி அதற்குப் பிறகு நடனமாடுவதை விட்டு விட்டாள். அவளுக்கு கிடைக்க வேண்டிய ஒரு பங்கை புதிதாக வந்த ஒரு நடனப் பெண்மணிக்கு மாற்றி விட்டாள். வெறும் பதிகம் மட்டும் பாடுகின்ற உரிமை பெற்றாள். அந்த பதிகத்திற்கு அவள் காசு வாங்குவதில்லை.

"கை நிறைய புருஷன் சம்பாதிக்கும் போது எனக்கெதற்கு இந்த காசு, ஆனால் பெருவுடையாரின் மாலை மட்டும் எனக்கு மாதத்திற்கு ஒரு முறை என்னுடைய பிறந்த நட்சத்திரத்தின் போது தர வேண்டும்" என்று கேட்டு வாங்கிக் கொண்டாள்.

அவள் பதிகம் பாடும் அழகில் பலபேர் சொக்கினார்கள்.

சோழகுல சுந்தரிக்கும், இராஜராஜ பிரம்மராயனுக்கும் ஒரு மகன் பிறந்தான். உருவிய பிரம்பு போல மெல்லியதாக இருந்தான்.

"என்னவாக வேண்டும். போர் பயிற்சி எடுத்துக் கொள்கிறாயா?" என்று இராஜராஜ பிரம்மராயன் கேட்டபோது அவன் வேண்டாம் என்று மறுத்து விட்டான்.

"நீங்கள் மருந்து அரைப்பதையும், மிலாடுடையாருக்கு கால் பிடித்து விடுவதையும், எண்ணெய் தேய்ப்பதையும் பார்த்திருக்கிறேன். எனக்கு மருத்துவனாக வர வேண்டும் என்று ஆசை.

நீங்கள் படை எடுத்து போகும் பொழுது நானும் வர வேண்டும் என்பது ஆசை" என்று உற்சாகமாகச் சொன்னான்.

அப்பனும், அம்மையும் திகைத்தார்கள்.

"நன்றாக இருக்கிறதே இவன் பேசுவது" என்று இராஜராஜ பிரம்மராயன் வியந்தான். கிருஷ்ணன் ராமனிடம் போய் கேட்டான்.

"நல்ல விஷயம். அவனுக்கு பிடித்த விஷயத்திலேயே விடு. ஒரு அந்தணன் வைத்தியனாகவும் வர வேண்டும். அது எல்லா நேரமும் சோழ தேசத்திற்கு செய்கின்ற தொண்டு. வெறும் போர் வீரனாக மட்டும் இருந்தால் யுத்தத்தில் மட்டுமே தன் தலையை காட்ட வேண்டும். ஆனால் இங்கே எல்லோருக்கும், எல்லா மக்களுக்கும் அவன் உதவியாக இருப்பான். நீ கொடுத்து வைத்தவன். நல்ல பிள்ளையை பெற்றிருக்கிறாய்" என்று வாழ்த்தினார்.

தஞ்சையிலுள்ள தலைசிறந்த மருத்துவருக்கு ஓலை அனுப்பினார். அந்த ஓலையை அவரிடம் கொடுத்து காலில் விழுந்து வணங்கினான்.

"மெத்த மகிழ்ச்சி, நீ அந்தணப் பிள்ளை. உனக்கென்று சில விஷயங்கள் இருக்கின்றன. அதைத் தவறாது செய்து வா. மூச்சு பயிற்சியும், காயத்ரி ஜபமும், அக்னி ஹோத்ரமும் தினம் நீ செய்த பிறகு தான் இந்த இடத்திற்குள் படியேற வேண்டும். ஒரு நாளும் தவறக்கூடாது" என்று அவனுக்கு கட்டளை இட்டார்.

அவன் 'சரி' என்று ஏற்றுக் கொண்டான்.

விடியற்காலையில் இந்த மூன்று வேலையையும் முடித்து விட்டு அவன் அவரிடம் வந்து உட்கார்ந்து கொள்ள கலுவத்தில்



மருந்தை பொடித்துப் போட்டு நீர் விட்டு அரைக்கச் சொல்லிக் கொடுத்தார். கிட்டத்தட்ட மூன்று வருடங்கள் அவன் அரைத்தபடியே இருந்தான். அவனுடைய கைகளும், கழுத்தும், இடுப்பும், முதுகும் விரிவடைந்தன. தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினமும் அவனுக்குக் கொடுத்தார். அது அவனை சுறுசுறுப்பாக்கிற்று. அவன் நுரையீரலை வளமாக்கிற்று. இரத்த ஓட்டத்தை அதிகமாக்கிற்று.

"கை கட்டை விரல் நகத்தை வளர்த்துக் கொள். அந்த நகத்தால் உடம்பின் சில இடங்களில் அழுத்தி நரம்பை நசுக்கி இரத்த ஓட்டத்தை நிறுத்தி பிறகு விட்டால் வேகமாக இரத்த ஓட்டம் பாயும். அந்த இரத்த ஓட்டம் பல விஷயங்களை சீர் செய்யும். அதை கற்றுக் கொள்" என்று சொல்லி உடம்பில் நரம்புகள் ஓடும் பாகங்களை அவனுக்கு சொல்லிக் கொடுத்தார்.

ஒரு வருடத்தில் அந்த விஷயத்தை அற்புதமாக அவன் கற்றுக் கொண்டான்.

கர்ப்பிணிப் பெண்களின் நாடி பிடித்து பார்த்து அவள் உள்ளுக்குள்ளே இருக்கின்ற குழந்தையின் அமைப்பை சொல்லி விடுவான்.

"பட்டு போட்டு பெண்களுக்கு நாடி வைத்தியம் செய்" என்று அவர் குருநாதர் சொன்னார்.

"எதற்கு பட்டு போட வேண்டும்" என்று அவன் கேட்டான்.

"சிலரை நாம் தொடக் கூடாதல்லவா?" என்று அவர் பதில் சொல்ல,

"சிலரை நாம் தொடக் கூடாதல்லவா?" என்று அவர் பதில் "அப்படி ஒன்றும் இல்லை. தீண்டத்தகாதவர் என்று யாருமே இல்லை. எல்லோருமே மனிதர்கள், எனக்கு உடம்பு தான் முக்கியமே தவிர மனிதருடைய குணங்களோ, மற்ற ஆசாபாசங்களோ முக்கியம் இல்லை. என்னிடம் வருகின்ற நோயுற்றவரின் உடம்பு மட்டுமே என் கண்ணில் தெரிகிறது. அவர் பதவியும், அவர் ஜாதியும் என் கண்ணுக்கு தென்படாது" என்று அவன் தீர்மானமாகச் சொன்னான்.

மிகச் சரியான ஒரு சீடனை எனக்கு கிருஷ்ணன் ராமன் கொடுத்திருக்கிறார் என்று அந்த தலைமை வைத்தியர் குதூகலித்தார்.

ஞான சம்பந்தன் மிகச் சிறந்த மருத்துவனாக விளங்கினான். அவன் வேலையாக இருக்கும் காலம் அதிகம் என்று தான் தோன்றியது. மிலாடுடையாருக்கு வைத்தியம் செய்ய அப்பனும்,

பிள்ளையும் எப்பொழுதும் தயாராக இருந்தார்கள்.

"சோழ தேசத்திற்காக அடிபட்டவர்கள் ஐயா, அதற்காக வாங்கிய வெட்டு உள்ளே வரை பரவி இருக்கும். வெட்டு காயம் வெளியே ஆறினாலும் உள்ளுக்குள்ளே நொய்மையாகத் தான் இருக்கிறது. மெல்ல மெல்ல இரத்த ஓட்டத்தை அதிகரித்துத் தான் உங்களை சரி செய்ய முடியும். எனினும் பாதி தான் செய்ய முடியும். மீது அவஸ்தையை நீங்கள் பட்டு தான் ஆக வேண்டும். நீங்கள் மட்டும் அல்ல, எல்லா மறவருக்கும் இது தான் கதி" என்று மிகப் பெரிய மருத்துவராக ஞான சம்பந்தன் பேசும் பொழுது தந்தையும், மிலாடுடையாரும் வாய் பிளந்து கேட்டார்கள்.

அதனாலேயே இராஜராஜ பிரம்மராயரின் மீது மிலாடுடையாருக்கு காதல் அதிகரித்தது. இன்னும் உறுதியாயிற்று.

அவர்கள் யுத்தத்திற்கு போய் எதிரியை சூறையாடுகின்ற விஷயமட்டுமல்லாது ஒரு யுத்தத்திற்கு போகும் பொழுது என்ன மருத்துகள் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்ற விஷயத்தை கவனித்துக் கொள்ள நியமிக்கப் பட்டார்கள்.

"வேலை தெரிந்தவர்கள் அங்கு இருக்கிறார்கள் என்பது எனக்கு நிம்மதி. வெறும் வைத்தியரை மட்டும் நம்பிக் கொண்டு இல்லாது நம்மோடு படை நடத்துகிறவர்களுக்கும் இந்த விஷயம் தெரியும். வைத்தியரை என்ன செய்ய வேண்டும் என்று சொல்லத் தெரியும் என்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது" என்று இராஜராஜித்தன் மிகவும் சிலாகித்தான்.

இளவல் இராஜராஜித்தனுக்கு ஒரு அம்பு குத்தி காது கிழிந்து போயிற்று. அதை ஞான சம்பந்தன் சீர் செய்து கொடுத்தான். காயம் காதில் பட்டதால் தலைவலி இருந்தது. அதையும் தைலம் தடவி கயிறு போட்டு முறுக்கி இறுக்கி இரத்த ஓட்டத்தை அதிகரித்து அங்கேயும் சரி செய்தான். கண்களுக்கு மருந்து இட்டு நாசியை சுத்தம் செய்தான். நாலைந்து நாள் அலையாது இருக்கச் செய்து, கட்டிலில் படுக்க வைத்து வைத்தியம் செய்து பூரண குணத்தோடு அனுப்பினான்.

சோழகுல சுந்தரிக்கும், இராஜராஜ பிரம்மராயனுக்கும் மிகப் பெரிய மரியாதை தஞ்சையில் இருந்தது.



முழு நெல்லிக்காயை தேனில் ஊற வைத்து சாப்பிடுவது என்பதை தஞ்சையில் அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். எல்லா இளைஞரும் அதை நிச்சயம் உண்ண வேண்டும். தங்களை நோயிலிருந்து காப்பாற்றிக் கொள்ள அது உதவும் என்று சொன்னார்கள். பெரிய நெல்லி தோட்டங்கள் வளர்க்க பண உதவி செய்தார்கள்.

"தலைமை வைத்தியரே, ஒரு வண்டி போதாது. இரண்டு வண்டிகள் வேண்டும். இரண்டு வண்டிகளும் இரண்டு திக்கில் பிரியப் போகிறது. ஒன்று அரையன் இராஜராஜனை பின் தொடரும். இன்னொன்று சக்கரவர்த்தி இராஜேந்திர சோழரை பின் தொடரும். இப்பொழுது இருப்பது போல இன்னொரு மடங்கு மருந்துகள் வேண்டும். வழியே எங்கே மருந்துகள் சம்பாதித்துக் கொள்ளலாம்" என்று கேட்டான்.

அவர்கள் பல இடங்களைச் சொன்னார்கள்.

வெட்டுக் காயத்திற்கு உண்டான மருந்துகளை அதிகம் எடுத்துக் கொள்ள மிலாடுடையார் கட்டளை இட்டார். ஒவ்வொரு மருந்தையும் இராஜராஜ பிரம்மராயன் சோதித்தான். எல்லாம் மிகத்தரமாக இருந்தன.

"தனியாக ஒரு அனுமதி நீங்கள் தர வேண்டும்" தலைமை வைத்தியர் கேட்டார்.

"என்ன?"

"உங்கள் பிள்ளையை நான் காடுகளுக்கு அழைத்துப் போகப் போகிறேன்"

"எதற்கு?"

"அங்கிருந்து தான் மூலிகைகள் கொண்டு வர முடியும். உலர்ந்த காய்களை, விதைகளை, மரப் பட்டைகளை நாம் அங்கிருந்து தான் எடுத்து வர வேண்டும். அப்படி அங்கு போய் அவைகளை இனம் காணுவதற்கு இவர் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே காடுகளின் ஊடே போய் வர வேண்டும். மருந்துகள் வாங்கி வர வேண்டும். யுத்தத்திற்கு போகும் வழியில் பல இடங்களில் நாங்கள் பிரிந்து காடுகளுக்குப் போய் அங்குள்ள வேடர்களை சந்தித்து இன்னின்ன விஷயங்கள் வேண்டுமென்று கேட்கப் போகிறோம். அப்படி கேட்கும் பொழுது அவர்கள் பதிலுக்கு ஏதேனும் வேண்டும்

என்று கேட்பார்கள். பொற் கழஞ்சுகளை அவர்கள் வாங்குவதில்லை.

சோளமோ, கம்போ, கேழ்வரகோ, அரிசியோ அவர்களுக்கு மிகப் பிடித்தமான விஷயம். அரிசியை மிகவும் விரும்புவார்கள். ஒரு கலம் அரிசிக்கு உயிரையே கொடுப்பார்கள். ஒரு கலம் அரிசிக்கு ஒரு நாடி நிறைய தேன் வாங்கி விடலாம்.

எனவே, அவர்களுக்கு கொடுப்பதற்கென்று தனியாக அரிசி வேண்டும். இதற்கு தலைமையாக உங்கள் பிள்ளையை அனுப்பப் போகிறேன்" என்று சொன்னார்.

இராஜராஜ பிரம்மராயன் தன் பிள்ளையை அருகே அழைத்து தழுவிக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான்.

"எந்த வேலை செய்தாலும் சோழ தேசத்திற்காக செய்கிறாய் என்பது மிகப் பெரிய பெருமையாக இருக்கிறது. என் வாழ்க்கை வீணாகப் போயிற்றோ, சரியான பரம்பரையை நான் உருவாக்க வில்லையோ என்று வருத்தப்பட்டேன். அது இப்போது இல்லை.

இந்த முப்பத்தைந்து வயதில் எனக்கு நீ துணையாக இருக்கிறாய் என்பது சந்தோஷமாக இருக்கிறது. நீயும் அரச சேவையில் இருக்கிறாய் என்பது ஆனந்தமாக இருக்கிறது. சமயம் நேரும் போது இராஜேந்திரருக்கு நான் அறிமுகப் படுத்துவேன்" என்று சொல்ல அவன் சரி என்று தலை அசைத்தான்.

பேசாதவனாகவே அவன் இருந்தான்.

வண்டி நிறைய விதம் விதமாக மருந்துகள் ஏறின. எங்கெல்லாம் மருத்துவர்கள் இருப்பார்கள் என்பதையும் மிலாடுடையாரை கேட்டு ஞான சம்பந்தன் தெரிந்து கொண்டான்.

யுத்தம் என்பது வெறும் வாளும், வேலும் மட்டுமல்ல. அது அரிசியும், பருப்பும் நிறைந்தது. அது வலியை நீக்குகின்ற எண்ணெயும், காயத்திற்கு போடுகின்ற மருந்தும் கொண்டது. வலி நீக்குகின்ற தைலத்தை கொண்டது. கல் தச்சர்களையும், கம்மாளர்களையும் கொண்டது.

போருக்கு போய் அங்கு கோட்டை கதவுகளை இடித்து உடைத்த பிறகு அதை சரி செய்ய கொத்தனார்களையும் கொண்டது.

புரவிக்கு முதுகு தேய்த்து விட்டு புற்கள் பிடுங்கி போடுகின்ற பஞ்சமர்களை கொண்டது. யானை மீது ஏறி நின்று எக்காளம்



ஊதுவார், முரசு அறிவிப்பார் என்று பல்வேறு வேலை ஆட்களைக் கொண்டது.

இந்த முறை ஞாபகமாக பொற் கொல்லர்களையும் கூட்டிக் கொள்ள வேண்டும் என்று இராஜராஜ பிரம்மராயன் நினைத்துக் கொண்டான். மிலாடுடையாரின் காதில் சொன்னான்.

"ஆமாம், போன தடவை தவித்துப் போனோம். வெண்கலத்தை தங்கம் என்று நினைத்து எடுத்து வந்தோம். இந்த முறை நிச்சயம் நாம் சரியாக அதை செயல்படுத்த வேண்டும்" என்று சொல்லி தேர் ஏறினார்கள்.

அவர்கள் பொற்கொல்லர்கள் இருக்கும் இடம் நோக்கிப் போனார்கள். கூடை கூடையாய் மருந்துகள் மாட்டு வண்டியில் ஏற்றப்பட்டன. ஞான சம்பந்தன் தலைமை வைத்தியரை விழுந்து வணங்கினான்.

"நான் தொலைதூரம் போகப் போகிறேன். உங்கள் ஆசீர்வாதம் வேண்டும். இன்னும் அதிகம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆசீர்வாதம் செய்யுங்கள். இன்னும் புதிய மருந்துகள் கொண்டு வர வேண்டும் என்று செய்யுங்கள்.

அரசர் கங்கை நீர் கொண்டு வருவதற்காக போகிறாராம். அப்படி ஒரு எண்ணம் அவருக்கு இருக்கிறதாம். எனக்கு புதிய மருந்துகள் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. நல்ல மருந்துகளோடு சோழ தேசம் வருவேன்" என்று அவன் உற்சாகமாகச் சொன்னான்.

அவனை எல்லா வைத்தியர்களும் ஆசீர்வதித்தார்கள்.

ஜாதி மாறாமல் திருமணம் செய்து கொள்வது ஒரு விஷயம். ஜாதி மாறி திருமணம் செய்து கொள்வது ஒரு விஷயம். வெவ்வேறு ஜாதியினரிடையே கலப்பாக பிறந்த பிள்ளை மிகச் செழிப்பாகவும், சிறப்பாகவும், திடமாகவும் இருக்கிறது என்று நம்பினார்கள்.

கலப்பின பிள்ளைகளுக்கு மரியாதை இருந்தது.

ஞானசம்பந்தன் கலப்பின பிள்ளை. சீராகவும், செழிப்பாகவும், திடமாகவும் வளர்ந்த பிள்ளை. அவன் வைத்தியத்தின் புதிய முறைகளை கற்று வருவான். சோழ குலத்தை இன்னும் சுகமாக இருக்க வைப்பான் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருந்தது.



# 20

தஞ்சாவூர் தெற்கு புறம்படியின் பக்கம் பாடி காவல் செய்திருந்த வீரர்களால் அவர்கள் மடக்கப்பட்டார்கள். தஞ்சையைச் சுற்றி மிகப்பெரிய மதில் எழுப்பப்பட்டு ஆழமான அகழி தோண்டப்பட்டு அதை கடப்பதற்கு முன் யாராயினும் தங்களை பற்றி சொல்லி விட்டுத் தான் போக வேண்டும் என்ற நிரந்தர கட்டளை இருந்தது. சில சமயம் வீரர்கள் கடுமையாக சோதித்த பிறகே மக்களை உள்ளே அனுமதித்தார்கள். தினசரி உள்ளே போய் விட்டு வருகின்ற கிராமத்து மக்களும் இருந்தார்கள். குதிரையில் வந்து இறங்கிய, நன்கு உடுத்திய இடையில் வாளும், ஆரமும் கொண்டு பிரபுக்கள் போல் இறங்கிய அவர்களை சோழ வீரர்கள் வரவேற்றார்கள்.

"உள்ளே போக வேண்டுமா" என்று கேட்டார்கள்.

"ஆமாம்" என்று அவர்கள் பதில் சொன்னார்கள்.

"நீங்கள் யார்? உங்களைப் பற்றி விவரம் என்ன, உங்கள் அடையாளம் என்ன சொல்லுங்கள்" என்று மரியாதையாக விசாரித்தார்கள்.

"என் பெயர் நிமலன் அகதீஸ்வரன், ஸ்ரீ விஜயத்து மன்னர் ஸ்ரீ மாறன் விஜயோத்துங்க வர்மனின் மகனான சங்கிராம விஜயோத்துங்க வர்மனின் கன்மி. அதாவது தூதாக அதிகாரி. இது என் முத்திரை மோதிரம். இது எனக்கு என் அரசர் கொடுத்த அடையாள ஓலை"

"வணக்கம் ஐயா, உங்களைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிறேன். என்ன விஷயமாக தஞ்சைக்கு வந்திருக்கின்றீர்கள்?"

"சோழ தேசத்திற்கும், ஸ்ரீ விஜயத்திற்கும் நல்ல உறவுகள் இருக்கின்றன. அதை மேலும் வலுப்படுத்த நான் அரசரை சந்திக்க



...ம்புகின்றேன்"

சட்டென்று வீரர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"நல்ல உறவு இருக்கிறது என்று இன்னும் சொல்லுகிறீர்களா?"

"சிற்சில குழப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். சில முரடர்கள் ...டாள் தனமாக செய்திருக்கலாம். அதற்கும் ஸ்ரீ விஜய ...ளருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இப்பொழுது அந்தப் பகுதி ...ந் கொள்ளையரால் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது. அதை தடுக்க ...ிர நடவடிக்கைகள் எங்கள் மன்னர் எடுத்துக் கொண்டிருக்கிறார். ...ற்படையை பெருக்கிக் கொண்டிருக்கிறார்.

இடையே சோழ தேசத்து வணிகர்கள் சில சிரமங்களுக்கு ...ள்ளாயினர் என்று கேள்விப்பட்டு எங்களை இராஜேந்திர சோழர் ...ழைத்திருக்கிறார். இது அழைப்பு ஓலை" அவர் இராஜேந்திர சோழர் முத்திரையிடப்பட்ட ஓலையை காட்ட, சட்டென்று அவர்கள் ...மிர்ந்தார்கள். அந்த ஓலையை கண்ணில் ஒற்றிக் கொண்டார்கள். ...லையில் வைத்துக் கொண்டார்கள்.

"முதலிலேயே சொல்லக் கூடாதா. இராஜேந்திரர் அழைக்கிறார் ...ன்றால் உடனடியாக அனுப்பி இருப்போமே. நீங்கள் யார் ஐயா" அடுத்தவரை நோக்கி திரும்பினார்கள்.

"நான் கடாரத்து அரசரின் கன்மி, தூதுவ அதிகாரி. என் பெயர் குருத்தன் கேசவன் அக்கரலோகை.

கடாரத்திலும் அரசியல் குழப்பங்கள் இருக்கின்றன. அவை சோழ வணிகர்களுக்கு எதிராகவும் சில விஷயங்களில் ஈடுபட்டு விட்டன. எனவே அதைப் பற்றி விளக்கம் அளிப்பதற்காகவும் என் நண்பரோடு சென்று கொண்டிருக்கிறேன். எனக்கு தனியாக அழைப்பு இல்லை. ஆனாலும் என்னை அழைப்பு விடுவதற்கு முன்பு நானாகவே இராஜேந்திரரை பார்த்து விடலாம் என்று நினைத்து வந்திருக்கிறேன். நீங்கள் அனுமதித்தால் உள்ளே போகிறேன்"

"அனுமதிக்க மறுப்போம் என்று நாங்கள் சொல்லவே இல்லையே, ஏன் தேவை இல்லாத ஒரு வார்த்தையை பேசுகிறீர்கள்"

குருத்தன் கேசவன் அக்கரலோகை இந்த பெயரை நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒரு முறை நாகைப்பட்டினம் கோவிலுக்கு ஆயிரம் சீனக் கழஞ்சுகள் கொடுத்ததாகச் சொல்லி

அந்த கழஞ்சுகளை காட்டினார்கள். சொக்கத் தங்கமாக இருக்க அர்த்தநாரீஸ்வரருக்கு நீங்கள் மாலை அணிவித்தீர்களாம். தங்க மரகத மாலை செய்து கொடுத்தீர்களாம். நீங்கள் அளித்த அ அர்த்தநாரீஸ்வரர் சிலையை நாங்கள் விழுந்து வணங்கினோ உங்கள் பெயர் அப்போது சொல்லப்பட்டது. உங்களைப் அங்கும் குறிப்பு இருக்கிறது"

"ஆமாம். அது நான் நிர்மாணித்தது தான். இராஜேந்திர சோழ மிகவும் சந்தோஷப்பட்டார்"

"ஆனால் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறதே"

"அப்படித்தான் தோன்றுகிறது. அதை சீர் செய்ய வேண்டும் இராஜேந்திரரால் தான் முடியும்"

"செய்தது நீங்கள். சீர் செய்ய வேண்டியது இராஜேந்திரர என்ன அபத்தம் இது" ஒரு அதிகாரி வாய் நிறைய வெற்றிலையுட பேசினார்.

அவர் மௌனமாக இருந்தார்.

"சரி. உள்ளே போய் வாருங்கள். எப்பொழுது திரும்புவதாக உத்தேசம்"

"தெரியவில்லை"

"இதை என்ன பதிலாக நாங்கள் எடுத்துக் கொள்வது"

"ஒருவேளை நாங்கள் திரும்பாமலேயே போகலாம்"

"ஏன் அப்படி சொல்கிறீர்கள்"

"இராஜேந்திரர் எங்களை சிறை பிடித்து காராக்ரஹத்தில் அடைத்து விடலாம். சோழ வணிகர்கள் மீது உண்டான பரிதாபத்தால் எங்களை தண்டிக்க முயற்சிக்கலாம். எனவே திரும்பி வரும் நேரம் பற்றி நான் என்ன ஐயா சொல்வது"

சோழ வீரர்கள் திணுக்குற்றார்கள். அவர் பேச்சில் உண்மை இருக்கிறது என்று புரிந்து கொண்டார்கள்.

"சரி. இருவரையும் அனுமதிக்கிறோம். ஆனால் ஒவ்வொரு நாள் இரவிலும் நீங்கள் தஞ்சையில் உள்ள தொண்டை அந்தண அதிகாரிகள் இருக்கும் இடம் வந்து நீங்கள் எங்கிருக்கிறீர்கள் என்று தெரிவித்தல் வேண்டும். யாருக்கும் தெரிவிக்காமல்



வும் போகக் கூடாது. சந்தேகப்படும்படி நீங்கள் நடமாடினால் காகவும் சிறையில் தள்ளப்படுவீர்கள்"

அவர்கள் மௌனமாக தலை அசைத்தார்கள்.

"நீங்கள் உள்ளே போகலாம்" அகழி மேல் பலகை எடுக்கப்பட்டது. ர்கள் குதிரையில் தாவி ஏறினர்.

"சீனக் கழஞ்சு ஒன்று இருக்குமா. இவர்களெல்லாம் க்கவில்லை என்று சொன்னார்கள்"

"தருகிறேன்" அவர் இடுப்பில் கை வைக்க, "வேண்டாம் ஐயா. ண்டாம். நான் இந்த நண்பர்கள் பார்க்க வேண்டும் என்பதற்காகத் ன் ஆசைப்பட்டேன். மற்றபடி இப்பொழுது வாங்கினால் அதை ஞ்சம் என்று நீங்கள் நினைத்துக் கொள்வீர்கள். சோழ தேசத்தில் ஞ்சம் வாங்கினால் கையை வெட்டி விடுவார்கள். எங்களுக்கு ான் ஒன்றும் பார்க்க வேண்டாம், நீங்கள் போய் வாருங்கள்"

வர் மறுபடியும் கீழே இறங்கினார்.

இடுப்பிலிருந்து பொன் உருவி அந்த உருண்டை பொன்னை சோழ வீரர்களிடம் காட்டினார். சோழ வீரர்கள் கையில் அதை தூக்கி டை போட்டார்கள். கண்ணுக்கு அருகே வைத்துப் பார்த்தார்கள், கன்னத்தில் வைத்துக் கொண்டார்கள்.

"சுத்தப் பொன், எப்படி சில்லென்று இருக்கிறது பார்" என்று சொன்னார்கள். அவரிடமே பொன்னை மிக மரியாதையாக கொடுத்தார்கள்.

"நல்லபடியாக போய் வாருங்கள். நம்முடைய உறவுகள் பலப்பட வேண்டும். அதற்குண்டான முயற்சிகள் செய்யுங்கள். சீன தேசத்தி லிருந்து வருகின்ற பொருள்கள் தஞ்சையை நிறைய அலங்கரிக்கட்டும்" என்று சொல்ல, அவர்கள் வணங்கி விடை பெற்றார்கள்.

"அந்தப் பொன்னை வாங்கிக் கொண்டிருக்கலாமோ" என்று முதலில் கேட்டவனுக்குத் தோன்றியது. ஆனால் தன் கை தன்னிடம் இருக்க வேண்டும் என்ற ஆசையில் அவன் மௌனமாக இருந்தான்.

நிமலன் அகதீஸ்வரன். ஸ்ரீ விஜய தேசத்து கன்பி.

"அழைத்தவுடன் வந்து விட்டாரா. சவுக்கு எங்கே எடுத்து வா"

"மன்னா அவசரப்படாதீர்கள். அவர் தூதுவ அதிகாரி.

அவருக்கும் ஸ்ரீ விஜயத்து விஷயத்திற்கும் அதிகம் சம்[illegible] இருக்காது. முரட்டுத்தனமாக நடப்பதில் எந்த லாபமும் இல்லை"

"முரட்டுத்தனமாக நான் நடக்கப் போகிறேன் என்று [illegible] உன்னிடம் சொன்னது" வழி மறித்த பரமன் மழபாடியை [illegible]மாக இராஜேந்திரர் வினவினார்.

"சவுக்கு எடுத்து வா என்று சொன்னேன். அடிப்பேன் என்[று] சொன்னேன். சவுக்கு அவரை அடிப்பதற்கு அல்ல. வேறு ஒருவ[னை] அடிப்பதற்கு.

அடேய் இங்கு வா. அலறுவாயா?" அருகிலுள்ள காவல[னை] கூப்பிட்டார். விழித்தான்.

"அடித்தால் அலறுவாயா?"

"அடித்தால் அலறத் தானே வேண்டும்"

"ஆக, அடிக்காமல் அலறுவாயா?"

"அடிக்காமல் நான் எதற்கு அலற வேண்டும்"

"அட அலறடா"

"அலறாவிட்டால்"

"நிஜமாக அடிப்பேன், நன்றாக அடிப்பேன். அப்பொழுது நிஜமாகவே அலறுவாய். ஆனால் உன்னை அடிக்க எனக்கு இஷ்டமில்லை. [illegible] அலறுவதில் தான் இங்கு பல முக்கியமான விஷயங்கள் நடைபெறப் போகின்றன. என்ன அடிக்காமல் அலறுவாயா"

"முயற்சிக்கிறேன் மன்னா"

"சரியாக அலறாவிட்டால் அடி முதுகில் விழும்" சவுக்கை கையில் வாங்கி படேர் என்று சொடுக்கினார்.

இராஜேந்திரர் என்ன செய்யப் போகிறார் என்று சபையில் உள்ளவர்களுக்கு தெரிந்து விட்டது. பரமன் மழபாடி வாய்விட்டுச் சிரித்தார்.

சரி ஒரு நாடகம் நடக்கப் போகிறது.

"அடேய், வெற்றிலைப் பாக்கு கொண்டு வாருங்களடா" என்று சொல்லி இளந்தளிர் வெற்றிலையை தொடையில் வைத்து துடைக்க ஆரம்பித்தார்.



குருந்தன் கேசவனும், நிமலன் அகதீஸ்வரனும் உள்ளே நுழைந்தார்கள். இருவர் முகத்திலும் பயத்தின் களை கொட்டிக் கிடந்தது.

தங்களை பரமன் மழபாடியாரிடம் அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். பரமன் மழபாடியார் சரி என்று தலையசைத்தார்.

"அது, கிருஷ்ணன் ராமன் பிரம்மராயர். இது அருண்மொழிப் பட்டன். அவருடைய மகன். இது வந்தியத் தேவர். இது உத்தம சோழ மிலாடுடையார் இது அரையன் இராஜராஜன்" என்று சபையில் உள்ளோர்களை அறிமுகப்படுத்தினார்.

"மன்னர் வரச்சொன்னார் வந்திருக்கிறோம்" அடுத்து பெரும் ஊரில் இருக்கிறாரா"

"தாராளமாக இருக்கிறார். உட்காருங்கள்" அடுத்து பெரும் குரல் கேட்டது.

"அடித்து பிய்த்து விடுவேன். உளவா பார்க்கிறாய். சோழ தேசத்தின் உப்பை தின்று விட்டு சோழ தேசத்திற்கு எதிராகவா வேலை செய்கிறாய்" சொடேர் சொடேர் என்று சவுக்கு வீசப்பட்டன. அடி விழுவது பலமாகக் கேட்டது. அவன் அலறினான். மிக பயங்கரமாக அலறினான்.

"இது போதாது. இன்னும் பயங்கரமாக அலற வேண்டும்" என்று அடிக்குரலில் கட்டளை இட்டார்.

"முயற்சிக்கிறேன் அய்யா"

"முயற்சிக்கிறாயா. இப்பொழுது அலறுகிறாய் பார்" இரண்டடி அவன் முதுகில் விழுந்தது.

அவன் முதுகை பிடித்துக் கொண்டு மீண்டும் பெரிதாக அலறினான்.

"விட்டு விடுங்கள். விட்டு விடுங்கள். இனிமேல் செய்யாதன செய்யேன். விட்டு விடுங்கள். விட்டு விடுங்கள்" என்று கத்தினான்.

பரமன் மழபாடியார் வாய் கொள்ளாமல் சிரித்தார். கிருஷ்ணன் ராமன் பிரம்மராயர் அமைதியாக எந்தவித உணர்ச்சியும் இல்லாமல் இருந்தார். வந்தியத் தேவர் மெல்ல மீசையை தடவிக் கொண்டு எதிரே இருந்த இருவரையும் உற்றுப் பார்த்தார். அருண்மொழிப் பட்டன் இளவரசர் இராஜராஜித்தனோடு குசுகுசு என்று பேசிக்

கொண்டிருந்தான்.

இளவரசர் முணுமுணுப்பாக ஏதோ பேசும் குரல் கேட்டது. குருத்தன் கேசவனை எனக்குத் தெரியும். அவர் உயரமான அர்த்த நாரீஸ்வரர் சிலையை கொடுத்திருக்கிறார். அதை நான் பார்த்திருக்கிறேன். மிக அழகான சிலை. அதனுடைய இடது கையில் கண்ணாடி இருக்கும் அல்லவா. அது வித்தியாசமாக இருந்தது" என்று சொன்னார்.

பரிதாபமாக 'ஆம்' என்று குருத்தன் கேசவன் தலையாட்டினான்.

"அக்நீஸ்வரன் கூட நிறைய பொன் நகைகளை தானம் செய்திருக்கிறார். அவர் பற்றியும் நாகையிலிருந்து செய்திகள் வருவதுண்டு. நாகையை வளமாக வைத்திருக்கிறீர்கள். ஆனால் ஸ்ரீ விஜயம் சரியாக இல்லை போலிருக்கிறதே"

"ஆமாம் சரியாக இல்லை"

"என்ன சரியாக இல்லை" சீற்றத்தோடு அருண்மொழிப் பட்டன் கேட்டான்.

"அங்கு ஸ்ரீமாறன் விஜயோத்துங்க வர்மன் ஆட்சி செய்து வந்தார். அவர் நோய் வாய்ப்பட்டு காலமாகி விட்டார்"

"ஆமாம். கேள்விப்பட்டேன்"

"அவருடைய மகன் சாங்கிராம விஜயோத்துங்க வர்மன் இப்பொழுது ஆட்சி செய்கிறார். அவருக்கு எதிராக வடக்குப் பக்கத்திலிருந்து கலகம் ஏற்பட்டிருக்கிறது"

"யார் கலகம் செய்வது?"

"பொதுமக்கள் தான் கலகம் செய்கிறார்கள். ஆனால் அந்த கலகத்திற்கு ஒரு பின்னணி இருக்கிறது"

"என்ன பின்னணி"

"ஸ்ரீ விஜயம் இந்துக்களுடைய தேசம். இந்துக் கோவில்கள் அங்கு அதிகம் இருக்கின்றன. இந்து வழிபாடுகள் மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. அநேக மக்கள் இந்துக்களாக இருக்கிறார்கள். அங்கு வந்து குடியேறிய பௌத்த மதத்தினர், புத்த பிட்சுக்கள் அதை பௌத்த நாடாக மாற்ற வேண்டும் என்று முயற்சிக்கிறார்கள். ஜனங்களை பௌத்த மதத்திற்கு இழுக்கிறார்கள். அது மட்டுமல்லாது இந்துக்களை நோக்கி படை எடுக்க வேண்டுமென்று



அவர்களை தூண்டுகிறார்கள். கடற் கொள்ளைக்காரர்களை எல்லாம் பௌத்தர்களாக மாற்றி வணிகத்தை தடுத்து நிறுத்த முயற்சிக்கிறார்கள். ஸ்ரீ விஜயத்தை பட்டினி போட முயற்சிக்கிறார்கள்.

சாங்கிராம விஜயோத்துங்க வர்மனால் இதை தடுக்க முடியவில்லை. அவர் புத்த பிட்சுக்களுக்கு பயப்படுகிறார். இந்துவாகவும் இருக்க ஆசைப்படுகிறார்"

"ஆக, மதக்கலவரம் சார்ந்த அரசியல், அரசியலுக்குள் மதக் கலவரம். அப்படியா?"

"ஆமாம்"

"இதை எப்படி தீர்க்கப் போகிறார், புத்த பிட்சுக்களை எப்படி அடக்கப் போகிறார், புத்த பிட்சுக்களை வாள் முனையில் அடக்க முடியாது. அப்படி அடக்குவது பாபம் என்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் புத்த பிட்சுக்கள் அவ்விதம் நினைப்பது இல்லை. அதிகாரிகள் தளரவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்துக்களின் பாடு தான் மிக மோசமாக இருக்கிறது. இந்துக் கோவில்கள் இடிபட்டு விடுமோ என்ற அச்சம் கூட இருக்கிறது.

இவ்வளவு மோசமான நிலையில் என்ன ஆட்டம் நீங்கள் போடுகிறீர்கள்"

"நாங்கள் எந்த ஆட்டமும் போடவில்லையே"

"நன்றாக இருக்கிறதே. உங்கள் கணவாய் வழியாக கப்பல் போனால் நீங்கள் வரி விதிக்கிறீர்களாமே. சீனக் கப்பல் வந்தால் அதற்கும் வரி உண்டாமே. இந்த இரண்டு பேரிடமும் வரி வாங்கிக் கொள்கிறீர்களாம். அது தவிர மரக்கலத்துக்கு உள்ளே ஏறி கண்ணுக்கு பட்ட பொருள்களை நீங்கள் முதலில் எடுத்துக் கொள்கிறீர்களாம். சரக்கு இறக்குபவர்களுக்கு சோறு போடு என்று சொல்கிறீர்களாம். எல்லாம் நீங்கள் வைத்தது தான் சட்டமாம். சகலத்திற்கும் சோழ வணிகர்கள் தலை ஆட்ட வேண்டுமாம்.

சீனர்கள் எதிர்த்தால் அவர்களை வேறு விதமாக சமாளிக்கிறீர்களாம். எப்படி என்று சொல்லட்டுமா"

"நானும் கேள்விப்பட்டேன். பண்டங்கள் சீனர்கள் கலத்திலிருந்து சோழர் கலத்திற்கு மாறிய பிறகு அந்த சோழர் கலத்தை கொள்ளை அடித்து எரியூட்டி, சீனர்கள் மறுபடியும் இங்கு வந்தால் யாரிடமும்

வியாபாரம் செய்ய முடியாத ஒரு நிலையை உருவாக்கி விட்டார்கள்"

"அப்பொழுது உங்களுடைய தேசம் என்னவாகும்"

"வறுமையில் தத்தளிக்கும். அது யாருக்கும் தெரியவில்லை. பயந்து கொண்டு சோழ வீரர்கள், சோழ வணிகர்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள் என்று சரணடைவார்கள். இன்னும் அதிகமாக வரி விதிக்கலாம் என்ற யோசனையில் இருக்கிறார்கள்"

"இராஜேந்திர சோழரை பற்றி அவர்களுக்கு தெரியாதா?"

"எனக்குத் தெரியும். அவர்களுக்கு அதிகம் தெரியவில்லை. நான் தெரியப்படுத்த முயற்சித்தும் நடக்கவில்லை. புத்த பிட்சுக்கள் இராஜேந்திர சோழருக்கு எதிராக பிரசாரம் செய்கிறார்கள். அவன் இவ்வளவு தூரம் வந்து விடுவானா வந்தாலும் உங்களால் சமாளிக்க முடியாதா. இருபதாயிரம் வீரர்களோடு வருவான். இறங்கியவுடன் உதை வாங்குவான். காணாமல் போவான் என்று சொல்கிறார்கள்"

"உங்களுடைய அபிப்ராயம் என்ன"

"இரண்டு லட்சம் வீரர்களோடு இராஜேந்திரர் வருவார் என்று நான் ஓலை அனுப்பியிருக்கிறேன் என்ன ஆயிற்று"

"கிழித்து போட்டு விட்டார்கள்"

"எதை?"

"ஓலையை"

"அப்பொழுது போய் இறங்கினாலொழிய புத்தி வராது. அப்படித் தானே" பரமன் மழபாடியார் சீறினார்.

"ஆமாம். நீங்கள் போய் இறங்கினாலொழிய புத்தி வராது"

"ஆக, நீங்கள் இங்கு தூதுவராக கண்பியாக இருப்பது ஸ்ரீ விஜயத்தின் மீது இராஜேந்திர சோழரை படை எடுத்து வா என்று சொல்வதற்காகவா. நல்ல தூதுவர்ப்பா நீங்கள்"

"நான் ஸ்ரீ விஜயத்தின் மீது படை எடுத்து வரச் சொல்லவில்லை. ஸ்ரீ விஜயத்திலுள்ள இந்துக்களை காப்பாற்ற இராஜேந்திரர் உதவி செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேன். புத்த பிட்சுக்களின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். புத்த பிட்சுக்கள் அடுத்தபடி தம்முடைய படை எடுப்பு நாகைக்கு என்று தீர்மானம் செய்திருக்கிறார்கள். நாகையை நோக்கி புத்த பிட்சுக்கள் வருகிறார்



கள். அதிகம் பேர் வருவதற்காக கூடுதலாக மாட மாளிகைகள் கட்டப் பட்டு வருகின்றன. நாகை விகார் பெரிதாகிக் கொண்டிருக்கிறது"

"இங்குள்ள புத்த பிட்சுக்கள் என்ன நினைக்கிறார்கள்"

"அவர்கள் எதைப் பற்றியும் வாய் திறப்பதில்லை. ஆனால் ஸ்ரீ விஜயத்திலிருந்து புத்த பிட்சுக்கள் வந்தால் வரவேற்று உபசரிக்க தயாராக இருக்கிறார்கள். வரவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்"

"என்ன காரணம்"

"சோழ தேசத்திலும் புத்த மதத்தை பரப்ப வேண்டும் என்று காரணம்"

"என்ன" அத்தனை பேரும் எழுந்து நின்றார்கள்.

"இதுதான் உண்மையான காரணம். இதைப் பற்றி எனக்கு கவலை இருக்கிறது. இந்த கவலையை நான் புத்த பிட்சுக்களின் தலைமை புத்த பிட்சுவிடம் செலுத்தினேன்"

"என்ன நடக்குமோ அது நடந்தே தீரும். நீர் ஏன் கவலைப்படுகிறீர். உம்முடைய வேலையை பார்த்துக் கொண்டிரும் என்று என்னை ஒதுக்கி விட்டார்"

"நீ ஸ்ரீ விஜயத்து கண்பியா அல்லது சோழ தேசத்திற்கான உளவாளியாக இங்கு செயல்படுகிறாயா"

"நான் உண்மைக்கு ஆதரவாக நிற்கிறேன். இராஜேந்திர சோழரின் வலிமையைப் பற்றி சிறிதளவும் தெரியாதவர்களாக ஸ்ரீ விஜயத்து மக்கள் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

அவ்வளவு தொலைவு இராஜேந்திர சோழர் போவாரா என்ற சந்தேகம் அவருக்கு மட்டுமல்ல. எனக்கும் இருக்கிறது. கடாரத்து மக்களுக்கு இராஜேந்திரர் வருவார் என்ற நம்பிக்கை அறவே கிடையாது"

"எதனால் அந்த எண்ணம்"

"ஏனெனில் சோழ தேசத்து மரக்கலன்கள் பலவீனமானவை. அவைகள் காற்றை நம்பி மட்டுமே பயணப்படுகின்றன. காற்று சரியில்லை எனில் நடுவழியில் உடைந்து விடுகின்றன. எனவே ஒரு நல்ல மரக்கலத்தை சோழ தேசத்திலிருந்து நாங்கள் பார்த்ததே இல்லை. படை எடுத்து வர வேண்டுமென்றால் மிகச் சிறந்த மரக்கலன்கள்

வேண்டும். உங்களிடம் இருக்கின்ற மரக்கலன்கள் வெறும் மூட்டை ஏற்றவும், பாத்திரங்கள் ஏற்றவுமே சரியாக இருக்கின்றன. நல்ல மரக்கலன்கள் இல்லாத போது எப்படி படை எடுத்து வர முடியும் என்ற கேள்வி தான் எல்லோர் மனதிலும் இருக்கிறது"

"உங்கள் மனதிலும் இருக்கிறதா"

அவர் மௌனமாக இருந்தார்.

"கேட்கிறேன். உங்கள் மனதிலும் இருக்கிறதா" வந்தியத்தேவர் அதட்டினார்.

"ஆமாம். என் மனதிலும் இருக்கிறது. உங்கள் மரக்கலன்கள் நொய்மையானவை. வெறும் படகுகள், பாய்மரம் விரித்த படகுகள், நாவாய்கள் என்று அவைகளை சொல்லவே முடியாது.

சீனத்துக் கப்பல்களை பார்த்திருக்கிறீர்களா. மிகச் சிறந்த நாவாய்கள், உள்ளே தனித்தனியாக அறைகளும் படுக்கைகளும், மதுபானக் கூடங்களும் இருக்கின்றன. யானைகளும், குதிரைகளும் அதில் வருவதற்கு வசதி செய்யப்பட்டு இருக்கிறது. பருவக் காற்றை மட்டும் நம்பி இராமல் முப்பது முப்பது துடுப்பு போடுகின்ற வீரர்கள் உள்ளே இருக்கிறார்கள். அவர்களாலும் படகு செலுத்தப்படுகிறது. மிக வேகமாக சீனத்திலிருந்து மூன்று நாள் பயணத்தில் ஸ்ரீ விஜயம் வந்து விடுகிறது.

நீங்கள் ஸ்ரீ விஜயத்திற்கு வர கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் ஆகின்றன. அதற்குள் உங்களுடைய வியாபாரிகள் சோர்வடைந்து விடுகிறார்கள். சீனத்துத் தெம்பு உங்களிடம் இல்லை"

"ஆக, நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்"

"அதை இராஜேந்திரர் தீர்மானிக்கட்டும். இங்கு கன்மியாக இருக்க வேண்டுமென்றால் இருக்கிறேன், இல்லையென்றால் நான் உடனடியாக ஸ்ரீ விஜயம் திரும்புகிறேன்"

"திரும்பி"

"அங்கு போய் இராஜேந்திர சோழரின் வலிமையைச் சொல்கிறேன்"

"என்னவென்று சொல்வீர்கள்"

"நல்ல மரக்கலன்கள் கட்டப்படும் என்று சொல்கிறேன்"



"எதை வைத்துக் கொண்டு அப்படி சொல்கிறீர்கள்" அருண்மொழிப் பட்டன் கேட்டான்.

"இராஜேந்திர சோழரால் இயலாதது என்று எதுவுமே இல்லை. வேங்கி வரை படை எடுப்பவர் அதைத் தாண்டி இன்னும் கடற்கரை ஓரமாகப் போனால் பல பெரிய மரக்கலன்கள் இருப்பதை பார்த்து விடலாம். அப்படி மரக்கலன்களை பார்த்து விட்டால் அம்மாதிரியான மரக்கலன்கள் நமக்குத் தேவை என்பதை உணரலாம்.

சேர தேசத்திலிருந்து சமீபத்தில் இராஜராஜாதித்தன் இராஜேந்திர சோழரின் மகன் கொள்ளையடித்து பல கப்பல்களை நாம் இருக்கின்ற மேல்பட்டினத்திற்கு (இப்போதைய இராமநாதபுரம்) அனுப்பி இருக்கிறார். அந்த நாவாய்கள் உங்களுடைய நாவாய்களை விட சிறந்தவை, அதில் பல வீரர்கள் பயணிக்கலாம். குதிரைகள் போக முடியுமா என்று தெரியவில்லை. இப்படி பல்வேறு விஷயங்கள் ஒன்று சேர்ந்தால் ஸ்ரீ விஜயத்தை நோக்கி படை எடுப்பது என்பது இராஜேந்திர சோழருக்கு எளிது. ஆனால்..."

"என்ன ஆனால்?"

"இங்கேயே இராஜேந்திர சோழருக்கு நாலாபுறமும் ஏகப்பட்ட தொந்தரவுகள் இருக்கின்றன. எனவே இராஜேந்திர சோழர் ஸ்ரீ விஜயம் நோக்கி கடற்படை எடுப்பு நடத்துவாரா என்ற கேள்வி எனக்கும் என் நண்பருக்கும் இருக்கிறது"

"மிகச் சரியான நினைப்பு" இராஜேந்திர சோழர் சவுக்கோடு உள்ளே நுழைந்தார். சிங்காசனத்தில் ஏறி அமர்ந்தார்.

இரண்டு கன்மிகளும் எழுந்து நின்றார்கள். அவரின் பாதம் தொட்டு வணங்கினார்கள்.

"இது எங்கள் தேசத்தின் சார்பாக" என்று சொல்லி நிமலன் ஒரு பொற்கிண்ணத்தை நீட்டினார்.

அதை பணிப்பெண் வாங்கிக் கொண்டாள்.

குருத்தன் கேசவன் அக்கரலோகக ஒரு கற்சிலையை நீட்டினான். அது நடராஜர் உருவத்தை மிக அழகாக செதுக்கி இருந்தது. அதையும் பணிப்பெண் வாங்கிக் கொண்டாள்.

"இவையெல்லாம் சரி, சந்தோஷம். உங்களை சிறை பிடிக்கப்

போகிறேன் என்றோ, சவுக்கால் அடிக்கப் போகிறேன் என்றோ நினைக்க வேண்டாம். நீங்கள் பேசியது எனக்கு திருப்தியாக இருந்தது. ஆனால் இராஜேந்திர சோழன் கடல் கடந்து வர மாட்டான் என்ற ஸ்ரீ விஜயத்தின் நினைப்பை அடித்து எறிய உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை எனக்கு உடனடியாக விளக்குங்கள்"

"தாங்கள் ஓலை அனுப்பலாம்"

"கிழித்துப் போடப்படுமே" பரமன் மழபாடியார் சொன்னார்.

"ஆமாம். செவியில் ஏறாது. கிழித்துப் போடப்படும்"

"வேறு என்ன செய்யலாம்?"

"இன்னொரு வணிகக் குழுவை அனுப்பலாம்"

"எதற்கு, கை வெட்டி ஒன்றாகக் கட்டவா"

"இல்லை. அந்த வணிகர்கள் போய் சீனர்களிடத்தில் இந்த விஷயத்தை சொன்னால் சீனர்கள் இந்த விஷயத்தை இன்னும் பக்குவமாக கையாளுவார்கள். சோழர்கள் இல்லாமல் சீனர்களுக்கு வியாபாரம் செத்து விட்டது போல் இருக்கிறது. சீனர்களுடைய துணையோடு சோழ தேசத்து வணிகர்கள். சங்கிராம விஜயோத்துங்க வர்மனை சந்தித்தால் நல்லது நடக்க வாய்ப்பு இருக்கிறது.

ஆனால் அதை புத்த பிட்சுக்கள் தடுக்காது இருக்க வேண்டும். புத்த பிட்சுக்கள் தடுக்காமல் இருக்க.."

"சொல்லுங்கள் தடுக்காது இருக்க"

"இன்னொரு புத்த பிட்சுவை நீங்கள் அனுப்ப வேண்டும். அவர் பேச்சு அவர்களை சமாதானம் செய்ய வேண்டும். நல்ல உறவு வேண்டும் என்று அந்த புத்த பிட்சுவுக்கு நீங்கள் அறிவுறுத்த வேண்டும். அவர் தலைமையில் சோழ தேசத்து வணிகர்கள் போய் சீனர்களுடன் கலந்து ஒட்டு மொத்தமாக எங்கள் வியாபாரத்தை கலைக்காதீர்கள் என்று சாங்கிராம விஜயோத்துங்க வர்மனிடம் சொல்ல வேண்டும்"

"நல்லது. உங்கள் யோசனை நன்றாக இருக்கிறது. இப்போது தலைமை புத்த பிட்சு யார்?"

அவர்கள் குசுகுசுப்பாய் ஒரு செய்தியை சொன்னார்கள்.

"ஸ்ரீ விஜயத்திலிருந்து இது குறித்து ஆட்கள் யாரேனும்



வார்களா"

"வருவதற்கு முகாந்திரம் ஏதுமில்லை. ஆனால் அங்கேயும் லிவான புத்த பிட்சுக்கள் இருக்கிறார்கள். ஸ்ரீ விஜயம் வறுமையில் ம் என்று தெரிந்து கொண்டு, அது அரசியல். தீர்வு நடத்தப்பட ண்டும் என்று சொல்லப்படுகின்ற இளம் புத்த துறவிகள் க்கிறார்கள். ஆனால் அவர்களால் எதுவும் செய்ய இயலாது"

"நல்லது, இது பற்றி யோசிக்கிறோம். உங்களுடைய க்கு நன்றி. அமைதியாக எங்களுடைய தொண்டை மண்டல தணர்கள் இருக்கின்ற அலுவலகத்தில் தங்கி உணவு உண்டு ளைப்பாறுங்கள். ஒவ்வொரு நாளும் அவர்களிடம் உங்கள் ருப்பைச் சொல்லுங்கள். தஞ்சையைக் கூட நீங்கள் சுற்றிப் க்கலாம். எங்கள் படை பலத்தை கூட நீங்கள் கணக்கிட்டுக் ள்ளலாம். வேண்டுமென்ற தகவல்கள் உங்களுக்கு கிடைக்கும். டுக்க வேண்டும் என்று நான் ஓலை தருகிறேன்.

பரமன் மழபாடியாரே அவருக்கு வேண்டுமென்ற உதவியை ய்யுங்கள். அவர்கள் கேட்கின்ற தகவலை கொடுக்க வேண்டும் ன்று அதிகாரிகளுக்கு கட்டளை இடுங்கள்.

அவர்களை இப்போது நான் விடுவிக்கிறேன்" என்று சொல்ல, வர்கள் இருவரும் எழுந்து நின்று கை கூப்பினார்கள்.

"உங்கள் கருணையான மனதுக்கு எங்கள் அன்பான ணக்கங்கள். நான் சிறைச் செல்ல வேண்டி இருக்குமோ என்ற யத்தோடு வந்தேன்"

"அவ்வளவு பெரிய முட்டாள் அல்ல. ஒரு கன்மியை ஒரு தாக அதிகாரியை நான் எதற்காக சிறை செய்ய வேண்டும். சிறை வைத்து என்ன காணப் போகிறேன். எனக்கு பிரச்சனை தீர வேண்டும். இந்த பிரச்சனை தீர நீங்கள் உதவி செய்தால் இன்னும் மரியாதையாக நடத்தப் படுவீர்கள். எங்கள் ஊரில் நில புலன்கள் தருக்கவும். நான் ஏற்பாடு செய்வேன். ஸ்ரீ விஜயத்தை அழிப்பதோ, கடாரத்தை அழிப்பதோ என் நோக்கம் அல்ல. என் வணிகர்கள் மீது கை வைத்தால் நொறுக்கப்படுவீர்கள். இது மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சொல்வது போல இப்போது போகின்ற படைக்கு ஏதேனும் ஒரு சிறு கீறல் விழுந்தால் கூட ஸ்ரீ விஜயம் தரைமட்டமாக்கப் படும். கடாரம் எரியூட்டப்படும். அங்குள்ள அத்தனை பட்டணங்களையும்

நான் பாழடிப்பேன். இது சத்தியம். என் தாய் நிசம்பசூதனியின் ஆணையாக சத்தியம், இராஜராஜரின் ஆணையாக சத்தியம். என் தாய் வானமா தேவியின் ஆணையாக சத்தியம். இந்த சத்தியத்தை இரண்டாம் முறையாக செய்கிறேன். இதிலிருந்து ஒருநாளும் நான் மாற மாட்டேன்.

நீங்கள் போய் வரலாம்" அவர் விடை கொடுத்தார்.

அவர்கள் குனிந்து அவசர அவசரமாக வெளியே போனார்கள். அந்த ஓட்டத்தில் தப்பித்தோம், பிழைத்தோம் என்ற உணர்வு இருந்தது.

இராஜேந்திர சோழர் கவலையோடு உட்கார்ந்திருந்தார். "ஆ... நம்முடைய வாழ்க்கை வேறு பக்கம் திரும்பப் போகிறது இல்லையா மருமகனே" வந்தியத்தேவர் எழுந்து நின்று மன்னருக்கு அருகே போய் கேட்டார்.

"ஆமாம், நான் வேங்கியோடு பல விஷயங்கள் முடிந்து விடும் என்று நினைத்தேன், கலிங்கர்களையும், ஒட்டர்களையும் அடித்து நொறுக்கி விட்டு வரலாம் என்று நினைத்தேன். இப்போது நீங்கள் சொல்வது போல, கிழக்கு திசை நோக்கியும் நாம் போயாக வேண்டும். என்னுடைய கேள்வி அத்தனை தூரம் போக நம்முடைய வீரர்கள் தயாராக இருப்பார்களா. வேங்கிக்கு பிறகு இன்னொரு யுத்தம் என்றால் தயாராக இருப்பார்களா"

"வேங்கியை யுத்தம் என்று எப்படி நினைக்கிறீர்கள்" அருண் மொழிப் பட்டன் கேட்டான்.

"என்ன உளறுகிறாய் அருண்மொழி. வேங்கி, வந்தவுடன் உங்களை வரவேற்கும் என்று நினைக்கிறாயா"

"ஆமாம். வரவேற்கும்"

"என்ன சொல்லுகிறீர்கள் அரையன் இராஜராஜரே"

"எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. படை எடுத்து அங்கு போகப் போகிறோம் என்று தெரிந்தவுடன், ஜெயசிம்மனும், விஷ்ணுவர்தன விஜயாதித்தனும் அந்த இடத்தை விட்டு ஓடி விடுவார்கள். நாம் உடனடியாக அந்த இடத்தில் இராஜராஜ நரேந்திரனுக்கு பட்டம் சூட்டலாம்.

இதற்கிடையில் நீங்கள் சொன்னதாக ஒரு விஷயத்தை அருண்



மொழிப் பட்டன் தெரிவித்தான். அம்மங்கா தேவியை விமலாதித்தன் மகனான இராஜராஜ நரேந்திரனுக்கு நீங்கள் மணமுடிக்க தீர்மானித்திருப்பதாகச் சொன்னான். மிக அருமையான முடிவு.

மேலைச் சாளுக்கியர்கள் எந்த விஷயத்தை செய்ய வேண்டும் என்று நினைத்தார்களோ, அதே விஷயத்தை நாம் செய்யப் போகிறோம். உங்களுடைய மகளை இராஜராஜ நரேந்திரனுக்கு மணமுடிப்பதால் உறவுமுறை இறுக்கமாகிறது. அப்பொழுது மகளை காப்பாற்ற இராஜேந்திரர் எதுவும் செய்வார் என்ற ஒரு பயம் அவர்களுக்கு ஏற்படும்.

உடனடியாக அவர்கள் அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடிப்பார்கள். ஒட்டர்களையும், கலிங்கர்களையும் தான் நாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்"

"ஒட்டர்களுக்கு என்ன அவ்வளவு அக்கறை"

"ஒன்றுமில்லை. தேசம் பிடிப்பு. ஒட்டர்களுடைய தேசம் ஒன்றும் அவ்வளவு வளமானது அல்ல. கீழைச் சாளுக்கியம் வளமானது. கோதாவரியும், துங்கபத்ரைக்கும் நடுவே இருக்கின்ற மிகப்பெரிய வயல்வெளி அது. அடர்ந்த காடுகள் உள்ளது. எனவே அந்த வளத்தை கொள்ளை அடிக்க வேண்டும் என்ற ஆசை. அரிசி சோறு தின்ன வேண்டும் என்ற ஆசை ஒட்டர்களுக்கு வந்து விட்டது. அந்த அரிசியும், அந்த எருமையும், அந்த பசுவும், அந்த கன்றும் அவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும். ஆடுகளை அடித்து வர வேண்டும் என்ற ஆசையில் இந்தப் போர் நடக்கிறது.

தின்ன வேண்டும் என்று தான் ஒட்டர்கள் படை எடுத்து வருகிறார்கள். அடித்து நொறுக்கினால் காணாது போவார்கள்"

"கடுமையான போர் இருக்கும் என்று நினைக்கிறீர்களா"

"ஆமாம். கடுமையான எதிர்ப்பு இருக்கும். அவர்களுடைய இடம். சட்டென்று பரவி காணாமல் போய் மறுபடியும் ஒன்று கூடி அடிப்பார்கள். நமக்கு அந்த இடத்தினுடைய தடம், மேடு, பள்ளம் எதுவும் தெரியாது. எனவே ஒற்றர்கள் துணையோடு தான் நாம் அங்கு முன்னேற முடியும்"

"நன்றாக சொன்னீர்கள். ஒற்றர்களின் துணையோடு தான் நாம் அங்கு போக முடியும். ஒற்றர்களை இப்போதே அனுப்பினால் என்ன?"

"நன்றாக அனுப்பலாம், யார் ஒற்றர்கள் என்பது தான் முக்கியம். சோழ தேசத்து வீரர்களை அவர்கள் எளிதாக இனம் கண்டு கொள்கிறார்கள்.

ஒட்ட தேசத்து முகங்கள் வேறு, கலிங்க தேசத்து முகங்கள் வேறு, ஏன் கீழைச் சாளுக்கியர்கள் முகங்களே வேறு. அந்த முகங்களோடு பார்க்கிறபொழுது சோழ தேசத்து கூர்மையான மூக்கும், மெல்லிய உதடும் அவர்களுக்கு மிக எளிதாக இவன் நம்முடைய ஆள் இல்லை என்று தெரிவித்து விடுகிறது.

எனவே, உளவாளியாக ஒருவன் அவ்வளவு தொலைவு போவது என்பது எளிதல்ல. கீழைச் சாளுக்கியம் வரை போகலாம். உருவ ஒற்றுமை பெரிதாக பாதிக்காது. கீழைச் சாளுக்கியத்தின் மொழியை பேசினால் போதும் அவர்கள் சமாதானம் ஆகி விடுவார்கள்.

கீழைச் சாளுக்கியம் தாண்டி ஒட்ட தேசம் போகும் போது யார் போவது, நம்முடைய சோழ வீரர்களா?" பரமன் மழப்பாடி கேட்டார்.

"அந்தணர்களை அனுப்பினால் என்ன?" இராஜேந்திரர் கேட்க, சபை மௌனமாய் இருந்தது.

**சுபம்**

இந்த நாவலின் அடுத்த புத்தகம் ஆனந்த நாவலில் வெளிவந்துள்ளது. அதுவும் இப்பொழுதே கடைகளில் கிடைக்கிறது.

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHWARYAA PUBLICATION பல்சுவை நாவல், 4, தேவகி நகர் 2வது குறுக்குத் தெரு, பொன்னியம்மன் மேடு, சென்னை-110. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும். செல்: **94453 45067**

**PALSUVAI Naval** Owner & Published by **M.P. Chandra Sekaran** published on behalf **Sri Balaji Publication** at 77, Madhavaram High Road, Perambur, Chennai - 600 011. Printed by **M.P.Chandrasekaran** at Mount Printers, Old No.12, New No.6, Ponnappa Lane, Triplicane, Chennai - 600 005.

**Editor: Pon ChandraSekar**

**www.palsuvainovel.com**